# மீண்டும் பிறக்கலானேன்

## கமலினி கதிர்

# மீண்டும் பிறக்கலானேன்

கமலினி கதிர்

பூவரசி வெளியீடு

# Meendum Pirakkalanen

(Collection of Short Stories )

By

Kamalini Kathir©

First Edition :

Poovarashi : 226

ISBN : 978-93-81322-81-9

Layout : Poovarashi

Wrapper: Athme

Pages :

Price : Rs.

Printed & Published by

**Poovarashi Publications**

No 2, 2nd Floor, 1st Cross Street, Pushpa Colony,

Saligramam, Chennai - 600 093.

Ph : +91 44 4860 4455 / +91 9600131346

Poovarashimedia@gmail.com/www.Poovarashi.com

சமர்ப்பணம்

நன்றி

# என்னுரை

என்னுடைய எழுத்துப் பயணத்தில் நூலுருப்பெறும் ஆறாவது நூல் இந்த சிறுகதைத் தொகுப்பாகும். நல்ல மாதவம் செய்து மானிடராய் பிறந்த நாம் பார்ப்பவற்றையும், கேட்பவற்றையும் எழுத்துக்களால் கோர்த்து ஒரு படைப்பாக வெளிக்கொண்டு வருவதில் பெருமைப்படுகிறோம். ஆனால் அவை எத்தனை பேரின் உள்ளங்களினுள்ளே சென்று இதயங்களைக் கொள்ளை கொள்கின்றதோ அன்றில் வாசித்த வேகத்திலேயே மறக்கப்படு கிறதோ தெரியவில்லை. ஆனாலும் ஒரு எழுத்தாளன் எழுதிக் கொண்டே இருப்பான். ஒவ்வொரு படைப்பாளியும் தன் ஒவ்வொரு படைப்புக்களையும் மிக உன்னதமாகவே நினைக்கின்றான். ஏனெனில் அவை அவர்களது உள்ளத்தோடு ஒன்றி அவர்களி னாலே பிரசவிக்கப்படும் குழந்தைகள். அவற்றில் அவர்களால் குறை காணமுடியாது. எழுத்துக்களை எடுத்துக் கோர்த்த ஒவ் வொரு வார்த்தைகளும் அவர்களுக்கு முத்தாகவே தோன்றும்.

ஆனால் அதற்காக அவை யாவுமே உன்னதமானவை என்று கணித்துக்கொள்ள முடியாது. நூல் மதிப்பீடு செய்யும் அளப் பரிய பொறுப்பு உங்கள் கையில் ஒப்படைக்கப்படுகிறது. குறை இருப்பின் குறை தவிர்த்து நிறை காணுமாறு கேட்டுக் கொள்கிறேன். கவிஞர் வைரமுத்து அவர்கள் எப்போதோ கூறியது இவ்விடத்தில் பொருத்தமாக ஞாபகத்திற்கு வருகிறது. "எத்தனை பேர் சுவாசிக்கிறார்கள் என்று பார்த்து காற்று வீசுவதில்லை. எத்தனை பேர் எனது கவிதைகளை இரசிக்கிறார்கள் என்று கணக்கிட்டு நான் கவிதை எழுதுவதில்லை" என்று. நானும் எழுதிக்கொண்டே போகிறேன். எத்தனை பேர் விரும்புகிறார் களோ இல்லையோ மூச்சு இருக்கும்வரை எழுதிக்கொண்டு இருக்கவே ஆசைப்படுகிறேன்.

எனது சிறுகதைகளை அவ்வப்போது வாசித்து நிறை குறைகளைக் கூறி ஊக்குவித்த எனது நண்பி பத்மலோசினி பத்மநாதனுக்கும், அட்டைப்படம் செய்த கேஷவபிரசாத் மாறனுக்கும் அணிந்துரை வழங்கிய எனது நண்பி பத்மலோசினி யோகநாதனுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நூலை அழகுற அமைத்துத் தந்த பூவரசி பதிப்பகத்துக்கும், குறிப்பாக ஈழவாணிக்கும் நன்றியைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி கொள்கிறேன்.

**கமலினி கதிர்**
**சூரிச், சுவிற்சர்லாந்து, Kamalini.kathirgamam@gmail.com**

# முன்னுரை

**பு**லம்பெயர்ந்து சுவிற்சர்லாந்தில் வாழ்ந்துவரும் கமலினி கதிரின் கூஷகூஷமீண்டும் பிறக்கலானேன்; சிறுகதை தொகுப்பு "பூவரசி பதிப்பக"த்தின் வெளியீடாக அமைந்துள்ளது. இந்நூல் பார்க்கக் கிடைத்தமைக்கு பூவரசி பதிப்பக இயக்குநர் ஈழவாணி நன்றிகள்.

இத்தொகுப்பில் 17 கதைகள் அடங்கியுள்ளது. பெரும்பாலும் பெண்களுக்கு போதனை செய்யும் வகையிலும் பெண்களை சமனாக மதிக்க வேண்டும் என்ற ஆதங்கத்திலும் ஒவ்வொரு கதைகளினதும் களங்கள் அமைந்துள்ளன.

பெண் அடக்குமுறை, வன்முறை, ஒடுக்குமுறை என்றெல்லாம் வாய்ப்பாடு போன்று கூறும் நாம், இன்று புலம்பெயர் நாடுகளின் வாழ்வியலில் பெண் சுதந்திரம் என்ற கொள்கையை நிலை நாட்டவும் உறுதிப்படுத்தவும் போராடுகின்றோம்.

"இங்க என்றால் இப்படித்தான் இங்க இதெல்லாம் ஒரு பெரிய விடயம் அல்ல" என்று கூறுமளவிற்கு மனித மனங்கள் சிதறிப் போய் உள்ளன என்று கூறுவதா? அல்லது எல்லாவற்றையும் கடந்த விடுதலை வாழ்வு என்ற மனநிலை எனக் கூறுவதா?

அதிகமான கதைகளில் கணவன் மனைவி பிரிவு, விவகாரத்து, இரண்டாம் மூன்றாம் திருமணம் என்ற மனநிலைகளின் அல்லல் பாடுகளையும் கதைகளாக கொண்டுள்ளன.

இது எனது ஆறாவது நூல் எனக் கூறும் மாலினி கதிர், "எனது மூச்சு இருக்கும்வரை எழுதிக்கொண்டிருக்கவே ஆசைப்படு கின்றேன்" எனக் குறிப்பிடுவது போன்றே அவரின் ஆசைகளை அந்த எழுத்தின் ஊடாக வெளிப்படுத்தியுள்ளார். எந்த மாற்றுச் சிந்தனையோ எண்ணங்களோ தடைகள் எதுவுமின்றி தான் சொல்ல விரும்புவதை, நினைப்பதனை மட்டுமே சமரசம் இன்றி பழிவாக்கியுள்ளார்.

இலக்கணம் என்ன? சரி ஏழை என்ன? மொழி என்ன? என்ற எந்த தடுமாற்றமும் அவரின் எழுத்துக்களில் இல்லை. சம்பவத் திரட்டுக்களாக கதையும் கதையாடல்களும் நீள்கின்றன.

17 கதைகளிலும் தொகுத்துப்பார்த்தால் நிறைய பாத்திர ஏற்றங்கள் புலத்திலும், நிலத்திலும் என உரையாடுகின்றன. வெளிநாட்டு வாழ்முறை. நமது பண்பாடுகள் சிதைவுறும் இடங்கள், சம்பவங்கள், வழிப்படுத்தல், விழிப்புணர்வூட்டல், போதித்தல் என கதைகள் நகர்கின்றன.

“கயமைகளின் நிறம் ஒன்று” என்ற கதை ஊடாக பல பெண்களின் நட்பையும், உறவையும், வாழ்க்கையையும் கூற விளையும் கமலினி 2009 காலப்பகுதியில் காணாமலாக்கப்பட்ட எழிலன் குறித்தும், சட்டத் தரணியின் காதலன் சுசாந்தன் குறித்தும் நம்பிக்கையுடன் காத்திருப்ப தாக கடவுளை வேண்டுகின்றனர்.

உண்மையில் மால்சி இவ்வளவு தூரம் ஒரு ஈழத்தமிழனை நேசித்தாளா என்ற வியப்பிற்கு அப்பால் காணாமல்போன உயிர்களுக்காக நாம் மட்டுமின்றி வெளிநாட்டவர்களின் மனங்களிலும் தேசியப்போராட்டம் வாழ்ந்துகொண்டிருக்கின்றது என்றே எண்ணிக் கொள்ளலாம்.

முன்னாள் போராளிகள் தொடர்பில் அன்றைய சமூகப் பார்வையும் இன்றைய துன்பியல் வரலாற்றையும் இங்கு பதிவு செய்துள்ளமையும் வரவேற்கத்தக்கது.

“எனக்கு அப்பா வேணும்? எங்கு இருக்கிறார்? அப்பா எப்படி இருப்பார் என்றே எனக்கு தெரியாது, பார்த்ததில்லை” எனக்கு அவரைப் பார்க்க வேண்டும்.

“நான் நினைத்ததன் அப்பாவுக்கு என்னைப் பிடிக்காது என்று அதுதான் விட்டிட்டுப் போயிட்டார் என்று. ஆனால் என்னைக் கொஞ்சிக் கொண்டிருக்கிறாரே! அந்தப் படத்தைக் கையில் எடுத்து ஆசையுடன் முத்தமிட்டாள் மேகா”

அப்பா மோகத்தில் சரி இல்லாதவர்களிடம் மேகா அடிபட்டு சீரழிவதா?... அவளுக்கு தகப்பனை காட்ட வேண்டியது எங்கள் கடமை. ஒரு நாளைக்கு நான்தான் அப்பா என்று யாரும் கூட்டிப்போனால் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை... என மீராவின் பெற்றோர் சிந்திக்கத் தொடங்குவதும்;

ஷஷஎனக்கு அப்பாவின் போன் நம்பர் வேணும். நான் அவரோட கதைக்க வேணும்.

என மேகா விவேகமாக சிந்திப்பதும் இன்றைய சந்ததியின் ஆளுமை எண்ணங்களே தீவிரமானவை.

“எங்கள் காலத்தில் சைல்ட் அபியூஸ் பற்றி ஒன்றும் தெரியாது. பெரியப்பா சித்தப்பா மாமா என்று வீட்டு உறவுகளாலேயே நடந்திருக்கு. இதைப் பிள்ளைகளும் பயத்தில் அறியாமல் பெற்றோருக்கு சொன்ன தில்லை. எனக் கூறும் அளவுக்கு தாய் மீரா தன் கணவனை விட்டு பிரிந்திருந்தாலும் பிள்ளை மேகா தகப்பன் தீபக்கைப் பார்க்கவும் தேடவும் தீவிரமாகின்றாள். அந்த தீவிரமே அவளது பேரன் பேத்திக்கு கேள்விகளைத் தொடுக்க, மேகாவின் எதிர்காலம் குறித்து மீராவுக்கு புரியவைக்கப்படுகின்றது.

பிள்ளையின் எதிர்காலம் பெண்பிள்ளைகள் மீதான பாதுகாப்பு என்பவற்றின் அடிப்படையில் மீரா தீபக் இணைவிற்கான எதிர்வுகூறலாக மேகா தகப்பனைப் பார்க்கச் செல்வதாக கதை நகர்த்தப்பட்டுள்ளது. இன்று ஈழத்தில் பல குழந்தைகள் அநாதரவாக்கப்பட்டு, பேரன் பேரத்தி உடன் என்று போராட்டமான சூழலில் வாழ்ந்து வரும் அவலங்களையும் இவ்வாறான கதைகளின் உணர்வுகள் வெளிப்படுத்துகின்றன.

அமெரிக்காவில் வசித்து வந்த அபிநயா கோகுல் வெளிநாட்டை விட்டு தாயகம் திரும்புவதும் மண்ணையும் மக்களையும் பாதுகாக்கவென அவற்றை தாயகத்தில் செயற்படுத்த விளைவதும், வரவேற்கத்தக்க சிந்தனை “விவசாயப் பட்டப்படிப்பில் பட்டம் வாங்கியபோது இரசாயன கலப்பற்ற நல்ல விவசாயத்தை தன் நாட்டு மக்களுக்கு அறிமுகப்படுத்தி யாவரும் ஆரோக்கியமாக வாழ வேண்டும் என எண்ணியிருந்தோம்;; என்ற அவாவுடன் குடும்பமாக, பெற்றோரிடம் தாயகம் வருவதை ஷஷபசுமையை நோக்கி” என்ற கதை ஊடாக புலப்படுத்துவதனைக் காணலாம்.

“கல்யாணக் கனவுகள்” மிக முக்கியமான கதை. வெளிநாட்டில் குளிர், மழை, வெயில், பனி என்று பல்வேறு காலநிலைகளுடன் கஸ்ரப்பட்டு, விசா இன்றிய நிலையில் ஒழித்து ஒழித்து வேலைக்குப்போய் தாயகத்தில் ஒழுக்கமான பண்பான பெண் வேண்டும் என்று அதனையும் தேடிப்பிடித்து

உழைப்பு முழுக்க அவளுக்கே கொட்டிவிட்டு காத்திருக்கும் ஆண்கள் பலரை நாம் சந்திக்கவும் முடிகின்றது. அதேவேளை அவன் நம்பி அனுப்பும் பணத்தில் இன்னொருவனுடன் உல்லாச வாழ்வு வாழும் பெண்களும், பெண்களை ஏமாற்றும் ஆண்களும் எம் கண்முன் வாழ்ந்தபடி உள்ளனர். அவ்வாறான ஒன்றுதான் கல்யாணக் கனவுகள். வெளிநாட்டில் நிச்சயம் செய்த மாப்பிள்ளையின் அம்மாவிடம் சென்று அம்மாவின் வழிப்படுத்தலுடன் எதிர்கால மாப்பிள்ளையிடம் சென்றவள், அவனை விட்டுவிட்டு தன்னுடைய காதலனுடன் செல்வதாக இக்கதை இருக்கின்றபோதும் கதைநயம் அதிர்ச்சியின்றிய ஆத்திரத்தினையும் ஏற்படுத்துகின்றது. சுதந்திரம் என்ற போர்வையில் நிறையவே குப்பைத்தனங்கள், கலாசாரத்தினை சீர்குலைக்கும் வகையில் நீள்வதும் நிகழ்கின்றன.

அதே நேரம் “தவறுகள் மன்னிக்கப்படலாமா?” என்ற கதையின் ஊடாக பெரும்படிப்பினையை உணர முடிகின்றது. பெரும்பாலான நம்மவர்கள் தமது ஊருக்கு வெளியே கடந்தால் சரி. தாம் எதுவும் செய்யலாம் எப்படியும் வாழலாம் என்ற பண்பாடற்ற எண்ணங்களையும் கொண்டிருப்பதுண்டு. அவ்வாறான எண்ணங்களுக்கு பெரும் சாட்டையடி தான் இந்த கதையும்.

காவ்யா குறித்த எண்ணப்பாடு கௌதம் மனதில் தெளிவாக இருந்திருக்குமாயின் எந்த நட்பினாலும் திட்டமிட்ட சூதுகளுக்குள் தலைகொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. தன் மகனாக இருந்த போதும் அவன் செயல் தமிழ்ப்பண்பாட்டிற்கு ஒவ்வாதது என்பதனை வலியுறுத்துவதுடன் ஒரு பெண்ணாக தாயாக, தாயின் வளர்ப்பும் பெரும்பாதிப்பை ஏற்படுத்திவிடப் போகின்றது என்ற குமுறலும் அந்தத் தாயிடம் வருகின்றது. ஆயினும் எல்லாம் மறந்தும் காவியா கௌதமனை ஏற்க வேண்டும் என்ற பச்சாதாபம் காதல் மீதான நம்பிக்கையும் மகன் மீதான தாயின் ஏக்கமுமாகவே உள்ளது. வெளிநாட்டில் வாழ்ந்தாலும் எனது தமிழ்ப்பண்பாடு சமயம் மொழி எதனையும் நான் விட்டுக்கொடுக்கும் அளவுக்கு இல்லை என்பதனூடாக தன்னை உறுதிப்படுத்துபவளாக உள்ளாள் காவியா.

“போர்க்கால வடு” கதை மிகவும் கனதியான கதை. ஆனால் அவ்வளவு இலகுவில் அதனை மேலோட்டமாக எழுதிவிட முடியாதபோதும் அறிந்த தெரிந்த வகையில் இக்கதை பதிவாகியுள்ளது.

எங்கிருந்து சீரழியுதுகளோ பொம்பிளப்பிள்ளைகள் என்ன பாடுபடுது களோ போராளிக் குடும்பம் என்பதால் சித்திரவதைப்பட்டிருப்பார்கள்... என்ன ஆபத்தெல்லாம் வந்ததோ தெரியேலை என நேசன் மன உழைச்சலுக்குள் ஆட்படுவதும் என்றும் தன்னுடன் போர்க்களத்தில் நண்பனாக விளங்கிய நண்பனையும் குடும்பத்தினரையும் தேடி அவன் அல்லல்படுவதும், குடும்பத்தை கண்டுபிடிப்பதாகவும் அந்த கதை நிறைவுபெற்றபோதும் இன்றும் இந்த வடுக்கள் மிக மோசமாக பல குடும்பங்களை சிதைத்தபடியே உள்ளமை அனுபவிப்பினூடாகவே புரிய முடிகின்றது. காணாமல் ஆக்கப்பட்டோர், கைதுசெய்யப்பட்டோர், தடுப்பில் உள்ளோர் பொருளாதாரமின்மை, எதிர்கால வாழ்க்கை? மாற்றுத்திறனாளிகள், பெண்தலைமை குடும்பங்கள் என எல்லாமே ஓர் நிம்மதியற்ற வாழ்வியலாகவே நகர்கின்றமை ஈழத்தில் மட்டுமின்றி புலம்பெயர் தேசத்தில் வாழும் ஈழவர்களும் இணைந்ததே என்றால் மிகையல்ல.

இவ்வாறு மண்ணின் வாழ்வியலை மண்ணிலும், புலத்திலும் களமாகக் கொண்டு படைக்கப்பட்ட இக்கதைகள் காலத்தின் பதிவுகளான புனைவுகளாக கதைகளை அள்ளிக் கொட்டிவிடப்பட்டிருப்பதை காண முடிகின்றது.

அனைத்து கதைகளிலும் தமிழ்ப்பண்பாடு, தமிழ்மொழி, மதம், கலாச்சாரம் என்பன அடையாளப்படுத்தப்பட்டிருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

குறித்த பெண் எழுத்தாளர் இன்னும் பல பெண்கள் பிரச்சனைகள், வாழ்வியல், உளவியல் தாக்கங்கள், தற்கொலை சம்பவங்கள் என வெளிநாட்டு வாழ்வியலை மிக நுண்மையாக கலைத்துவமாக வெளிப் படுத்துவதும் சிறப்பாக அமையும் என்று எதிர்பார்க்கின்றேன்.

**நன்றி**

**யாழ் தர்மினி பத்மநாதன்**
**பத்திரிகையாளர், அரங்கச் செயற்பாட்டாளர்**
**யாழ்ப்பாணம்**
**0094-776544158**
**jaaltharmini@gmail.com**

## உள்ளடக்கம்

1. கயமைகளின் நிறம் ஒன்று

2. ஓயாமல் இசைக்கும் உறவு

3. அறுந்த பட்டம்

4. கனவாகிப் போன சொந்தம்

5. கலைந்தோடும் மேகங்கள்

6. மீண்டும் பிறக்கலானேன்

7. நினைவுகள் அழிவதில்லை

8. வாசமான நினைவுகள்

9. தவறுகள் மன்னிக்கப்படலாமா

10. வீழ்வேனென்று நினைத்தாயோ?

11. எது அடையாளம்

12. போர்க்கால வடு

13. பசுமையை நோக்கி

14. கல்யாணக் கனவுகள்

15. தோழமைக்கு நிழல் கொடுப்போம்

16. துன்பம் நேர்கையில்

17. மூழ்கடிக்கப்படும் ஓடங்கள்

# கயமைகளின் நிறம் ஒன்று

**முகில்கள்** *சேர்த்து வைத்த துளிகளெல்லாம் உடைந்து சிதறிமுகில்களில்இருந்துகீழேவிழுகின்றன.முகில்கள் அவற்றைக் கவிழ்த்துக் கொட்டியதா தாங்களாகவே விழுகின்றனவா என்று நினைத்தாள் பாரதி. மழைத் துளிகளெல்லாம் தனித்து வராமல் மின்னும் மின்னலை யும், முழங்கும் இடியையும் துணைக்கு அழைத்துக் கொண்டு சேர்ந்தே மண்ணைக் குளிர்விக்க வருகின்றன. அந்த ஒற்றுமை எங்களிடம் ஏனில்லாமல் போய்விட்டது? மனது கனத்தது. மழைத்துளித் துளியாய் துந்துமியாய் கீழே விழுகிறது. நண்பன் என்ற போர்வையைப் போர்த்திக்கொண்டு கயமைக் குணம் தலைதூக்க போராளி என்று காட்டிக்கொடுத்த கணவனின் நண்பன் வரதனை நினைக்க உடலெல் லாம் பதறும். இறுதி யுத்தத்தின்போது எதிரிகளின் வசம் சிக்கக்கூடாது அடிமையாக சரணடையக் கூடாதென்ற நினைவுடன் ஓடிக்கொண்டிருந்த பாதங் களின் சத்தத்தை மெல்லென வீசும் காற்று எடுத்துச் சென்றுவிடுமோ என்று நெஞ்சு படபடத்தபடி ஓடினார் கள். ஆனால் நண்பன் என்ற உருவில் கயவன் வரதனால் காட்டிக்கொடுக்கப்பட்டு எழிலன் பிடிக்கப் பட்டார். பாரதி காட்டுமரங்களிடையே ஒளிந்துகொண்டு தப்பித்தாள். ஆனாலும் தப்பித்தல் நிரந்தரம் இல்லாமல் முட்கம்பி வேலிக்குள் அடைபட வேண்டிய நிலைமைக் குத் தள்ளப்பட்டாள். அவள் கணவன் எழிலனைப் போராளியென்று காட்டிக் கொடுத்து சிறைக்குள் தள்ளி வீட்டு வெஞ்சினம் குறையாமல் பாரதியையும் போராளி யின் மனைவியென்று அவர்களிடம் சிக்கித் தவிக்க வைத்தான். காலங்காலமாய் காட்டிக்கொடுப்பு தமிழரின் இரத்தத்தில் ஊறிப்போய்விட்டது போலும். இராவணனுக்கு சகோதரத்துரோகியாய் ஒரு விபீடணன், பண்டாரவன்னியனுக்கு ஒரு கதிர்காமன்,*

கட்டபொம்மனுக்கு ஒரு எட்டப்பன்... இப்படி துரோகிகளை எண்ணிக்கொண்டே போகலாம். மழை கொட்டி புவியைக் குளிர வைத்தாலும் அவளுடல் தகித்தது. முள்ளிவாய்க் காலில் ஒரு இனமே தலைகுனிந்து எதிரிகளிடம் கையேந்தி சரணாகதி அடைந்த கேவலத்தை நினைக்க உடல் கூசிக் குறுகியது. இப்போது அதற்குள் இருந்து வெளியே வந்து வெளிநாடொன்றில் அகதியாக வாழத்தொடங்கியாகிவிட்டது. இப்போது பாரதி இரவலாகக் கிடைத்த முகவரியை தனதாக்கிக் கொண்டு வாழ்கிறாள். தங்கள் தங்கள் நாடுகளில் வாழ முடியாமல் துரத்தப்பட்ட நிரந்தர முகவரியில்லாத இந்த உலகத்து அகதிகளை எல்லாம் ஒன்று சேர்த்த சுவிஸ் நாட்டில் வாழ்வின் பாதிக்காலம் அடிமையாக இல்லாமல் சுதந்திரமான வசதியான வாழ்க்கை வாழ்ந்தாலும் இறந்த காலத்தையே திரும்பத் திரும்ப நினைக்கும் குரங்கு மனம். சிறைப்படுத்தப்பட்ட கணவன் இப்போது உயிரோடு இருக்கிறானா? இல்லையா? எதுவுமே தெரியாது. தன் உடல் கூட்டுக்குள் உயிரை மட்டும் சுமந்துகொண்டு ஒரு வாழ்க்கை. சிரிப்பை மறந்த முகம். சதா நினைவு மூட்டத்துக்குள் மூழ்கி வயதுக்கு மீறிய தோற்றம். பாரதி என்றகவிஞனின் வீரத்துக்கு அடையாளமான பெயர் வீரத்தை மறந்தாகிவிட்டது. வீரம் தாயகத்திலேயே காவு கொள்ளப்பட்டு விட்டது.

அவளது குடியிருப்புக் கட்டடத்தில் அவளைப்போலவே துன்பம் தோய்ந்த முகத்துடன் வாழ்ந்துவரும் ஹலீமா என்ற ஆப்கானிஸ் தானைச் சேர்ந்த பெண். எதற்கும் பயம், துணிவின்மை. மகளோ மகனோ உரத்துப் பேசினால் அடங்கிவிடும் சுபாவம். அடக்கப் பட்டே வாழ்ந்ததால் முதுகெலும்பே இல்லாமல் ஆமை ஓட்டுக் குள் ஒளிந்து கொள்வதுபோல் தன் மொட்டாக்குக்குள் ஒடுங்கிப் போய்விடுவாள். துப்பரவுத் தொழிலுக்குப் போய்வரு வாள். யாரிடமும் அதிர்ந்து பேசத் தெரியாது. செய்யாத தப்பை செய்ததாக யார் சொன்னாலும் ஏற்றுக்கொண்டு மன்னிப்புக் கேட்கும் சுபாவம். ஏன் அப்படியென்று கேட்டால், 'அவர்களுக்கது மகிழ்ச்சியென்றால் எனக்கது பிரச்சனை யில்லை' என்பாள். மற்றவர்களுக்காக விட்டுக்கொடுத்து மற்றவர்களை சந்தோஷப்படுத்தி தான் முடங்கிப் போவாள்.

சிறுவயதிலிருந்தே தகப்பனுக்கு, சகோதரர்களுக்கு பின் கணவனுக்கு இப்போது பிள்ளைகளுக்கு விட்டுக்கொடுத்தே பழகிவிட்டது. அவள் பெண் அப்படித்தான் இருக்கவேண்டு மென்று ஆணியடித்து சிறுவயதில் சொன்னதை வேதவாக்காக இன்றளவும் நம்புகிறாள். கணவனிடம் அவள் பட்ட வேதனை களைச் சொல்லும்போது இவ்வளவு காலமும் எப்படிச் சகித்து வாழ்ந்தாள் என்பது எல்லோருக்கும் ஆச்சரியமாக இருக்கும். கணவன் விரும்பியதைச் சமைத்து, படு எனும்போது படுத்து, தனக்கெது பிடிக்கும் என்பதே தெரியாது வாழ்ந்தாள். தங்கள் கிராமத்தில் அப்படித்தான் என்பாள். பெண்பிள்ளை கள் பள்ளியை மிதிக்கவே கூடாதாம். படிப்பறிவு இல்லாவிடில் சிந்திக்கவும் முடியாமல் போய்விடுமோ? அப்போது ஏன் பட்டறிவு என்று ஒன்று சொல்வார்கள் என்று பாரதி மூளையைக் குழப்பியது உண்டு. அவனிடம் பட்ட அடிகளும், உதைகளும் இன்னும் தன் மனதில் ரணமாக வலிப்பதைக்கூட சொல்லத் தெரியாத அப்பாவி. தான் நினைத்தது சமைக்காவிடில் காலால் இடுப்பில் உதைவானென்று சொல்லும்போது இப்படியும் பெண்கள் அவதிப் படுகிறார்களா என்று பதறுவாள். கணவன் சீக்கிரத்தில் இறந்து விட வேண்டுமென்று, தான் முன்பு பிரார்த்தித்திருப்பதாகச் சொன்னபோது இப்படியுமொரு வாழ்வா என்று பாரதி கலங்கியிருக்கிறாள்.

இங்கு வந்தும் நிலைமையில் எதுவித மாற்றமுமில்லாமல் அனுபவித்துக் கொண்டிருந்திருக்கிறாள். அடியையும் உதையை யும் சத்தம் போடாமல் அவள் அனுபவித்ததால் இங்கு யாரும் பொலீசை அழைத்ததுமில்லை. சூதாடச் செல்லும் பழக்க முள்ளவன் பணத்தை இழந்தாலும் அடி வாங்க வேண்டியவள் ஹலீமாதான். மகள் வளர்ந்த பின்தான் அவளுக்கு விடிவு காலம் வந்தது. தாயைச் சித்திரவதை செய்தபோது பொலீசைக் கூப்பிட்டபோதும் கணவனுக்குப் பயந்து அப்படி எதுவும் நடக்க வில்லையென்று கூறி கணவனைத் தப்பிக்கவிட்டாள். அதற்காக மகளை முடியைப் பிடித்திழுத்துப்போட்டு அடித்ததில் மகள் சும்மா இருக்கவில்லை. அடுத்தநாளே பொலீஸ் அவனை உள்ளே தள்ளியது. நிம்மதிப் பெருமூச்சு விட்டவளுக்கு நான்கு மாதத்தில் திரும்பியவுடன் மகள் இல்லாத நேரத்தில் சித்திரவதை

தொடர்ந்ததாம். அதன்பின் பதினான்கே வயதான மகளால் சட்டத்தின் உதவியுடன் பிரிந்து விட்டார்கள். ஆனாலுமென்ன? சிலுவை சுமக்க வேண்டியவள் அவளானாள். மகனுக்கும் மகளுக்கும் பயந்து நடக்கின்றாள். அடியுதை இல்லாமல் இருக்கிறாள். அவ்வளவுதான். அவளுக்கு அதுவே போதும். மகன் அவ்வப்போது தகப்பனிடம் போய்வரும்போதெல்லாம் அவனும் தகப்பனைப்போல அதட்டத் தொடங்கினான். ஆனால் மகள் தொடக்கத்திலேயே அதற்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டாள். ஒழுங்காயிருக்காவிடில் அவனையும் வெளியேற்றி விடுவதாகச் சொன்னதில் அவன் அடங்கிவிட்டான். அல்லது அவனும் இன்னொரு ஆணாதிக்க ஆண்மகனாய் வந்திருப்பான். ஹலீமா சொன்னபோது அவர்கள் இனத்து அடுத்த தலைமுறைப் பெண்கள் தன்மானத்துடன் தலைநிமிர்ந்து வாழ்ந் திடுவார்களென்பதில் ஐயமேயில்லையென்று பாரதி கூறுவாள். ஆனால் ஹலீமாவின் மகள் ஹன்சா ஒருமுறை சொன்னாள்: ‘நான் கடைசிவரை எங்கள் நாட்டு ஆம்பிளையைக் கல்யாணம் செய்ய மாட்டேன். ஒரு சுவிஸ் பெடியனைத்தான் கல்யாணம் முடிப்பேன்’ என்று. அடுத்த தலைமுறை இப்படித்தான் போகப் போகிறது. எல்லா இனமும் கலந்து அதுவும் நல்லதுதான். ஆனால் ஹலீமாவுக்கு கவலை தங்கள் மதம் கைக் கொள்ளப்படாதேயென்று. தன் மொழியைவிட அவள் தன் மதத்தை நேசித்தாள். இந்தத் தலைமுறையினர் மதம், இனம், மொழி எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்டவர்கள். பூங்குன்ற னாரின் ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ கோட்பாட்டின் கீழ் வாழப்போகிறார்கள்.

பாரதியுடன் வேலை பார்க்கும் கொசோவா நாட்டுப் பெண் நோவியா. அவளும் பள்ளிக்குச் சென்றதேயில்லையாம். அவர் ஊரில் பள்ளியே இல்லையாம். ஆண்களோ பெண்களோ எல்லோரும் வீட்டுக்குப் பின்னாலிருக்கும் நிலத்தில் காய்கறித் தோட்டம் செய்வதும், வீட்டிலேயே தங்களுக்குத் தேவையான பாண் தயாரிப்பதும்தான் வேலையாம். தங்களுக்குத் தேவை யான ஆடைகளைத் தாங்களே தயாரித்தல், பின்னல் வேலை, நிற்றிங் என்று நாள் முழுக்க வேலையிருக்குமாம். மின்சார

வசதி இல்லாததால் இருட்டியவுடன் படுத்துவிடுவார்களாம். சேர்பியருக்கும் கொசோவா இனத்தவருக்கும் இனப்போராட்டம் நடந்த காலம். சேர்பியர் இனத் துவேஷம் பிடித்தவர்களென்றும் தங்களை அல்பானியன் நாய்கள் என்றுதான் அழைப்பார்கள் என்றும் சொன்னபோது தமிழர்களை பறை தெமிழா என்று தங்கள் நாட்டில் அழைப்பதை பாரதியால் நினைவு கூராமல் இருக்க முடியவில்லை. ஒருகாலகட்டத்தில் தங்கள் இனப்பெண் களைப் பலவந்தமாக சிறைபிடித்துச் சென்று அடைத்து வைத்து சேர்பியர்கள் கற்பழித்தார்களாம். தங்கள் இனம் மட்டுமே இங்கு இருக்கவேண்டும் எங்கள் இனக் குழந்தைகளே இனி இங்கு பிறக்கவேண்டும் எங்கள் கருக்களை நீங்கள் சுமக்க வேண்டுமென்றார்களாம். அவள் கூறியது எவ்வளவு தூரம் உண்மையென்று தெரியாவிட்டாலும் பாரதி புரிந்து கொண்டாள் இனத் துவேஷம் என்பது உலகம் முழுவதும் பொதுதானென்று. ஆனால் எந்த நாட்டில் என்ன துவேஷ மென்றாலும் அதனால் கற்பிழப்பது, மானபங்கப்படுவது எல்லாமே பெண்கள்தான் என்பது கசந்தது. குழந்தைகளைச் சுமந்து இவ்வுலகிற்கு அளிக்கும் புனிதத்தொழில் செய்யும் பெண்கள் மேல் இப்படியொரு வதை சுமத்தப்படுவது எவ்வளவு வேதனை தரக்கூடியது. பால் சுரந்து ஊட்டிய மார்பகங்கள் காமக் குரோதத்துடன் கசக்கி எறியப்படுவதைப் பார்க்கும்போது கடவுள் என்றொருவன் இருக்கிறானா என்று பாரதிக்கு நினைக்கத் தோன்றியது. நோவியாவுக்கு சேர்பியர் மேல் இன்னும் கோபம் போகாமல், இங்கும் அவர்களைக் கண்டால் வெறுப்புடன் இருப்பாள். இங்குள்ளவர்கள் பாரதியைக் கேட்பதுண்டு ‘போர் முடிந்துவிட்டது இப்போதும் ஏன் கவலைப்பட்டுக்கொண்டும் அதைப்பற்றியே பேசிக்கொண்டும் இருக்கிறீர்களே அதற்குள்ளிருந்து வெளியே வர விருப்ப மில்லையா’ என்று. ஓரிரு வருட போர் நினைவுகளுக்குள்ளிருந்து இன்னும் சேர்பியர்களால் (கொசோவாக்காரர்களால்) மீள முடியவில்லை எனும்போது முப்பதுக்கும் மேற்பட்ட ஆண்டுகள் போரால் பாதிக்கப்பட்ட எம்மால் எவ்வாறு அதற்குள்ளிருந்து மீள முடியுமென்று பாரதி நினைத்துக் கொள்வாள். ஆனால் சொல்வதில்லை. இவர்களால் புரிந்துகொள்ள முடியாது.

*நோவியா தங்கள் ஊரில் மதமே இல்லையென்று கூறிய விடயம் பாரதிக்கு ஆச்சரியமாக இருந்தது. தங்கள் பெற்றோர் இஸ்லாமியர் என்றாலும் தங்களுக்கு அந்த மதம் பற்றி எதுவுமே தெரியாதென்றாள். தாங்கள் நோன்பு இருந்ததுமில்லை வேறு மதங்கள் பற்றித் தெரிந்ததுமில்லையென்று. இங்கு வந்த பின்னர்தான் கிறீஸ்து பற்றித் தெரியுமென்றாள். பாரதியுடன் பழகிய பின்தான் இந்துக்கள் என்பது பற்றித் தெரியுமென்றாள். தங்கள் ஊரில் எளிமையான வாழ்வு வாழ்ந்ததாகச் சொல்லும்போது பாரதியும் வியந்தாள் தானும் அப்படியொரு இனத்தைப்பற்றி அறிந்திருக்கவில்லை என்று. ஃபோன் என்றதை தாங்கள் இங்குதான் கண்டதாகச் சொன்னாள். தனது கணவன் தனது பெரியப்பாவின் மகன்தானென்றும் தாயின் சகோதரியின் பிள்ளைகளைத் தாங்கள் திருமணம் செய்யக்கூடாதென்றும் தகப்பனின் வழியில் திருமணம் செய்யலாமென்றும் கூறினாள். பாரதிக்கு புரிந்தது எதுவுமே இப்படித்தான் என்றில்லை, ஒவ்வொரு நாட்டவரும் ஒவ்வொரு பழக்கங்களைக் கைக்கொண்டார்கள் அவ்வளவு தான். நோவியாவின் கணவனுக்கு தோளுக்கும் முதுகுத்தண்டு வடத்துக்கும் இடையில் ஒரு குண்டு இருப்பதாகவும் சத்திர சிகிச்சை சாத்தியப்படாததால் அப்படியேவிட்டதாகவும் சொன்னாள். ஆனால் இப்போது கணவனுக்கு எலும்பு தேய்ந்துகொண்டே வருவதாகவும் உருவம் சுருங்கிச் சுருங்கி கண்ணுக்கு முன்னால் மெல்லமெல்ல இறந்துகொண்டே வருவதாகவும் சொல்லிக் கவலைப்படுவாள். பாரதி நினைத்துக் கொள்வாள் 'இப்படிப்பட்ட நேரங்களில் பற்றிக்கொள்ளத்தான் மதம் தேவைப்படுகிறதோ' என்று. நோவியாவுக்கு பற்றிக்கொள்ள எதுவும் தெரியாததால் எந்நேரமும் அழுதுகொண்டு மன அழுத்தத்தில் இருந்தாள். பாரதி அவரைப் பார்க்கச் சென்றிருந்தபோது அவரிடமிருந்து மெல்ல மெல்ல வழுக்கிச்சென்று கொண்டிருந்த மரணம் என்ற சாத்தானை விரட்ட வழியின்றி விக்கித்துப் பார்த்துக் கொண்டேயிருந்தாள் நோவியா.*

*நோவியா வீட்டுக்குப் போய் வந்தபின் பாரதிக்கு மனம் தாயகத்தையும், கணவன் எழிலனையுமே சுற்றிச்சுற்றி*

வந்தது. இறுதி யுத்த நினைவுகளை நினைக்கக் கூடாது என்று பிடிவாதமாக நினைக்கும்போது சுனாமி நினைவு வந்தது. சுனாமிச் சூறாவளியில் பேய் ஆட்டம் போட்டு சரிந்து விழுந்த முல்லைத்தீவு மரங்களும், கனியாத வாழைக்குலைகளுடன் சாய்ந்த வாழைமரங்களும், தண்ணீரில் அடித்துச் செல்லப்பட்ட மக்களும் நினைவில் வந்து போனார்கள். தாங்கள் அப்போது ஓடியோடி மக்களுக்குச் செய்த சேவைகளும், கடல்தாய் சூறையாடிய தோட்டங்களும், வீடுகளும் நினைவில் வந்து மோதின. பூத்துக் குலுங்கிய வன்னி நிலம் மனதில் வர மறுத்தது. எழிலனும், நானும் மக்களுக்காகவும், குடும்பத்துக்காகவும் செய்த தியாகங்கள் எங்களுக்குத்தான் பெரிதாக இருக்கிறதே ஒழிய மற்றவர்களுக்கில்லை. யாரும் அவற்றைப் பெரிதாக நினைக்கவுமில்லை. எவ்வளவு செய்தாலும் யார் செய்யச் சொன்னது என்று சொல்வதைத் தவிர அவர்களிடமிருந்து எந்தப் பாராட்டையோ, நன்றியையோ எதிர்பார்க்க முடியாது. எழிலன் எதையும் எதிர்பார்க்காத குணமுள்ளவர். ஆனால் எனக்கு சின்னப் பாராட்டு, வெறும் நன்றி என்ற சொல் தேவையானதாக இருந்ததே. ஆனால் அவை எப்போதுமே கிடைத்திருக்கவில்லை. ஆனால் இப்போதும் யாராவது அப்படி எங்களை நினைவு வைத்திருக்கிறார்களா என்று ஒரு சின்ன நப்பாசை." முட்டி மோதிய பலப்பல யோசனைகளுடன் கண்ணயர்ந்தாள்.

பாரதியின் இன்னொரு நண்பி சோனாலி, மும்பையைச் சேர்ந்த பணக்கார மராட்டி குடும்பத்தைச் சேர்ந்தவள். காதல் கண்ணை மறைக்க சரியில்லாத ஒருவனைத் தேர்ந்தெடுத்து கணவனால் பல இன்னல்கள் பட்டு அவனால் சிவப்புவிளக்குப் பகுதிக்கு விற்கப்பட்டவள். அங்கிருந்து எப்படியோ தப்பி அவனுக்குத் தெரியாமல் இரண்டு பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு கனடா வந்து சேர்ந்தவள். இப்போது மகளும் மகனும் தனித்துச் சென்றுவிட தனிமையில் இருப்பவள். அவளது முந்தைய வாழ்க்கை திகில் நிறைந்ததாக இருந்தபோதும் தற்போது சுவிசில் நிம்மதியான வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கிறாள். ஜெனீவாவில் வாழும் அவள் இடையிடையே பாரதியைப் பார்ப்பதற்காகவும் வருவாள். மராட்டியப் பெண்ணான அவளின் நட்பு எதிர்பாராதவிதமாக பாரதி சுவிஸ் வரும்போது ஏற்பட்டது.

ஒரு பாலைவனத்தில் நீர் கிடைத்ததுபோல் கிடைத்த அந்த நட்பு குறுகிய கால நட்பாய் இருந்தும் பாரதியின் கலங்கிய மனதுக்கு ஆறுதல் கொடுக்கும் நட்பாக இருந்தது. கனடாவில் சோனாலியின் நண்பிகள் இருவர் ட்ரெயினில் சந்தித்த ஒரு சுவிஸ் நாட்டவருடன் பேசும்போது மனைவி இறந்து தனித்து வாழ்வதாகவும் கனடாவுக்கு சுற்றுலா வந்திருப்பதாகவும் சொன்னார். அவர் இவர்கள் வேலை செயயும் ஹோட்டலிலேயே தங்கியிருந்தார். ஒரு வாரமாக அவருடன் பழகியதில் அவருக்கு திருமணத்தில் ஆர்வமிருந்தால் தங்கள் நண்பி தனித்து வாழ்வதாகவும் விரும்பின் தாங்கள் பேசிப் பார்ப்பதாகக் கூறினார்கள். அடுத்த வாரமே சோனாலியிடம் கேட்டபோது அவள் மறுத்தாலும் பிள்ளைகள் இருவரும் கட்டாயப்படுத்தி தாயை சம்மதிக்க வைத்தார்கள். இப்போது சுவிஸ் நாட்டில் அந்தப் பணக்காரக் கணவருடன் திருமணம் செய்து வாழ்கிறாள். அவளது கணவன் புரூனர், பாரதிக்கு அகதி அந்தஸ்து கிடைப்பதற்கான பல வழிகளைச் சொல்லிக் கொடுத்து வாழ வழிகாட்டினார்.

மனம் சரியில்லாத ஒரு ஞாயிற்றுக்கிழமை அவளுடன் வேலை பார்க்கும் நிலாவுடன் லுகானோ சென்றிருந்தாள். அவர்கள் முதியோர் பராமரிப்பு விடுதியில் வேலை பார்த்தார்கள். முதியவர்களுடன் ஆறு நாட்களும் வேலைசெய்வதால் கட்டாயம் ஒரு மன ஆறுதல் தேவைப்படும். அந்த இல்லத்தில் வாழ்பவர்கள் அநேகமாக எண்பது வயது கடந்தவர்கள். ஆனாலும் வாழும் ஆசை கொஞ்சமும் குறையாமல் தாங்கள் நினைத்த ஆடைகளை அணிந்து மகிழ்வோடிருப்பார்கள். தாங்கள் நினைத்ததைச் செய்ய இந்த பராமரிப்பவர்களைப் போட்டுக் கசக்கிப் பிழிவார்கள். கை நடுக்கம் இருப்பதால் இவர்களைக் கொண்டே நகங்களுக்கு நகப்பூச்சு பூசுவார்கள். ஒவ்வொருநாளும் ஆடைக்கேற்ற நிறத்தில் பூசுவார்கள். தங்கள் மனதுக்கு அழகாகத் தோன்றுமட்டும் இவர்களைப் போட்டு ஆட்டிவிடுவார்கள்.பின் தங்கள் சக்கர நாற்காலியில் அமர்ந்திருப்பார்கள்.இதற்கா இவ்வளவு ஆர்ப்பாட்டங்களென்று தோன்றும். சிலர் கொஞ்சம் கடுமையாகவும் நடப்பார்கள். இவர்கள் வேறுநாட்டவர் என்பதும் சிலருக்கு பிடிக்காத விஷயமாக

*இருக்கும். அவர்களுக்கு மலங்கழிக்க உதவுவதுடன் சிலருக்கு பாட் மாற்ற வேண்டும்.எல்லாவற்றிலுமிருந்தும் ஒரு பிரேக் தேவைப்படும்.அவ்வப்போது நிலாவும் அவளுமாக எங்காவது கிளம்பி விடுவார்கள். நிலா சுவிஸ் வந்து நீண்ட காலமாகையால் அவளின் உதவி பலவகையிலும் பாரதிக்கு தேவைப்பட்டது. நிலா நல்ல அழகானவள். அதனால் கணவன் கொஞ்சம் தனியே அனுப்பப் பயப்படுவார். கணவன் அழகில் குறைந்தவராயிருந்தாலும் நிலா அதற்கேற்ப அவரைப் புரிந்து அமைதியான வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறாள். குழந்தைகள் இல்லாததைப் பெரிய குறையாக எடுக்காது ஒருவருக்கொருவர் குழந்தையாக வாழ்கிறார்கள். நிலாவைப் பார்க்கும்போது அவள் பிரச்சனைகளைக் கையாளும் விதமும், யாரையும் நோகடிக்காத பேச்சும் பாரதிக்கு பிரமிப்பாக இருக்கும்.*

*இருவரும் பேசியபடியே அந்த ஆற்றின் கரையால் நடந்து கொண்டேயிருந்தார்கள். அந்த நீரின் பச்சைநிறம் மனதைக் கொள்ளை கொண்டது. எப்படி இந்த நீருக்கு மட்டும் இந்த நிறம் சொந்தமானது. தான் இப்படி ஓர் ஆற்றின் நிறத்தைக் கண்டதே இல்லையென்று சொல்லிவிட்டு சிரித்துக் கொண்டாள் "நான் ஏதோ உலகம் முழுக்க சுற்றி வந்ததுபோல் இப்படிப் பார்க்கவில்லையே என்று சொல்கிறேனே". சிறிதுகூட சத்த மின்றி ஆரவாரமே இல்லாமல் காற்றைக்கூடத் தன்னை தொட அனுமதிக்காதது போல் அந்த ஆறு ஓடிக் கொண்டிருந்தது. அந்த அமைதி மனதுக்கு ஆறுதலாக இருந்தது. எழிலனுடன் கையோடு கை சேர்த்தபடி ஒருநாள் நடந்துபோக வேண்டும். கற்பனை அழகாக இதமாக இருந்தது. அப்போது 'பாரதி!' என்று ஒரு குரல் உரத்துக் கேட்டது. இங்கு தனக்கு யாரைத் தெரியும் என்ற சந்தேகத்துடன் திரும்பிப் பார்த்தவள் தன்னை நோக்கி வந்த வெண்பாவைக் கண்டு ஆச்சரியப்பட்டாள். "வெண்பா! நீ எப்ப இங்கை வந்தாய்?" "உலகம் கோளவடிவம் என்பது உண்மைதானென்று நிரூபிக்கிறது. ஏதோ ஒரு புள்ளியில் மீண்டும் சந்திக்கிறோம்." சொன்ன வெண்பாவிற்கு நிலாவை அறிமுகப்படுத்தினாள். பக்கத்தில் வெள்ளைச்சிறுவனும், தள்ளு வண்டியில் ஒரு சிறுமியும். அவள் பார்ப்பதற்கு அழகாக இருந் தாள். கடைசியாக தாயகத்தில் அவளைச் சந்தித்த சூழல்*

ஞாபகத்திற்கு வந்தது. ஆர்மியால் வன் கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு கிழிந்த ஆடையுடன் எழிலன் விட்டுக்கு கூட்டி வந்தான்.அவள் அழுதுகொண்டேயிருந்தாள். எந்த சமாதானமும் அவளை சமாதானமாக்கவில்லை.' என்னை சாகவிடுங்கோ' என்ற வார்த்தையை மட்டும் திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டிருந்தாள். அவளை வைத்தியரிடம் அழைத் துச் சென்று இரண்டு வாரங்கள் வைத்திருந்து மனநல வைத்தியரிடம் ஒப்படைக்கும் வரை அவர்களுடனேயே இருந்தாள். மனம் பழையதை அசைபோட கை அவளை அணைத்துக் கொண்டது. நிலாவைப் பார்த்த வெண்பா' நல்ல வடிவு உங்கடை 'ஃபரண்ட்' என்றாள்.

"பாரதி! அண்ணா எங்கே? பிடிபட்டிட்டாரா? நீங்க எப்போது வந்தீங்க?" சரமாரியாகக் கேள்வி கேட்டாள். இருவரும் ஒரு இருக்கையில் அமர்ந்து தங்கள் தங்கள் கதைகளை பரிமாறிக் கொண்டனர். அவர்கள் பேசட்டுமென்று தள்ளுவண்டியைத் தள்ளிக்கொண்டே நிலா சிறிதுதூரம் நடந்தாள். வெண்பா தாயகத்திலிருந்து புறப்பட்டு மலேஷியா, ஆபிரிக்கா, யூகோசிலாவியா என்று எவ்வளவோ நாடுகளில் நின்று நின்று ஒருவாறு சுவிஸ் வந்ததையும் தன்னை ஒரு உறவினரும் ஏன் சகோதரர்கள்கூட சேர்க்க மறுத்ததையும் ஒரு கதைபோலக் கூறினாள். தான் ஒரு சேர்ச்சில் போயிருந்து அழும் போதெல்லாம் ஒரு வயதான சுவிஸ் பெண் தனக்கு ஆறுதல் கூறியதையும் பின் ஒருநாள் 'விவாகரத்தான தன் மகனைக் கல்யாணம் செய்கிறாயா?' என்று கேட்டபோது தன் கதையெல்லாம் தெரிந்தும் கேட்ட அந்தத் தாயை தான் மதித்து சம்மதம் சொன்னதாகவும் தான் இப்போது நன்றாக இருப்பதாகவும் கூறினாள். தன்னைவிட பதினெட்டு வயது பெரியவர். ஒரு நல்ல பதவியில் இருக்கிறார். சொந்த வீடு. வசதியாக சந்தோஷமாக இருப்பதாகக் கூறியபோது பாரதிக்கு நிறைவாக இருந்தது. ஆரம்பத்தில் தனக்கு மொழியும் தெரியாமல் ஏதோ தெரிந்த ஆங்கில வார்த்தைகளைக் கலந்து ஏதோ புரிய வைத்ததாகவும் மாமியார் மிகவும் நல்லவர் என்றும் கூறினாள். தான் குழந்தை பெற்றபோது சரக்குகறிக்கு

ஆசைப்பட்டதாகவும் அதைக்கூட தன்னிடம் கேட்டு வைத்துத் தந்ததாகவும் கூறிப் பெருமைப்பட்டாள். நல்ல மாமியார், நல்ல கணவன். ஆரம்பத்தில் அந்த சமூகத்தில் பழகத்தான் மிகவும் சிரமப்பட்டதாகவும் இப்போது எல்லாவற்றையும் கற்றுக் கொண்டதாகப் பெருமையுடன் கூறினாள். சமீபத்தில் மாமியார் மறைந்தது தனக்கு பெருங்கவலை என்று எல்லாவற்றையும் ஒரே மூச்சில் கூறி முடித்தாள். “அன்றைக்கு அண்ணா மட்டும் என்னைக் காப்பாற்றி சரியான வழிகளைச் செய்யாமல் விட்டிருந்தால் நான் செத்துச் சாம்பலாகியிருப்பேன்” என்று நன்றியுடன் நினைவுகூர்ந்தாள். கயவர்கள் மத்தியில் எவ்வளவு நல்லவர்கள் இருக்கிறார்கள் என்று இருவருமே சொல்லிவிட்டு ‘இல்லையில்லை நிறைய நல்லவர்களிடையே கயவர்களும் இருக்கிறார்கள்’ என்று முடித்தார்கள். வீட்டுக்கு ஒருமுறை கட்டாயம் வரவேண்டுமென்று கூறியவள் “இல்லை யில்லை. விலாசம் தாங்கோ. நாங்கள் வந்து உங்களைக் கூட்டி வருகிறோம்” என்றாள். எந்தளவு பெருமையுடன் வாழ்ந்த போராளிகளெல்லாம் இப்படிச் சின்னாபின்னமாகி விட்டார்களே என்று கவலைப்பட்டார்கள். மண்ணுக்காய் போராடிக்கடைசியில் குற்றவாளிகளாக நடத்தப்படுவது எவ்வளவு கொடுமை என்பது பற்றிப் பேசி விடைபெற்றார்கள்.

அவர்கள் மாடியிலேயே தங்கியிருக்கும் ஸ்ரீவ் அவன் அம்மாவுடன் தங்கியிருந்தான். ஏழு வயதுச் சிறுவன். சதா துருதுரு என்று சுழலும் வட்டக் கண்களும் சிவந்த நிறமும் பாரதிக்கு அவனை மிகவும் பிடிக்கும். தாய் கணவனைப் பிரிந்து வாழ்கிறாள். இப்போது வேறொருவன் அடிக்கடி வருவதும் தங்குவதுமாக இருந்தான். அவர்கள் கலாச்சாரத்தில் அது தப்பேயில்லை. பள்ளி செல்லும் நேரம் தவிர மற்ற நேரங் களில் தனிமையில் இருப்பதும் அன்புக்கு ஏங்குவதும் அந்தத் தாய்க்கு புரிவதேயில்லை. இடையிடையே தந்தையிடம் போய்வருவான். பாரதிக்கு தங்கள் வாழ்வில் இந்தப் போராட்டங்கள் இல்லாது இருந்திருந்தால் தனக்கும் இப்படியொரு மகன் இருந்திருப்பான் என்று நினைக்கத் தோன்றும். பாரதி வீட்டிலிருக்கும் நேரங்களில் அவளுடனேயே

*இருப்பான். தாய் தனக்கு இடைஞ்சல் இல்லாமல் இருந்தால் சரியென்று விட்டுவிடுவாள். ஒருநாள் கேட்டான் 'உங்கள் வீட்டில் பப்பி (அப்பா) இல்லாவிடில் ஒரு பப்பியை வாங்கலாமே' என்றான். பாரதி சொன்னாள் "பப்பி தூரத்தில் வேலை. கொஞ்சநாள் போக வந்துவிடுவார்' என்று. 'நாங்க புது பப்பி வாங்கப்போகிறோம். என்னோடை பப்பி மம்மிக்கு வேண்டா மாம்' என்றான்.' உனக்கு உன் பப்பியைப் பிடிக்காதா?' என்று கேட்கவும்' எனக்கு பிடிக்கும். மம்மிக்கு பிடிக்காது' என்றான். 'எனக்கு குரோஸ்ஃபாட்டர் (அப்பப்பா) பிடிக்கும். மம்மி அவரையும் புதுசாக வாங்குவாங்களா?' என்று கேட்டான். தந்தையில், பாட்டனிலுள்ள அன்பைக்கூட சொல்லத் தெரியாத வயது. பிஞ்சுகளின் விருப்பு வெறுப்புகள் மதிக்கப்படாமல் இங்கே தூக்கி வீசப்படுவது எவ்வளவு கொடுமையென்று பாரதி நினைத்தாள். தங்கள் விருப்பங்களை வெளியே சொல்லத் தெரியாத வயதில் எத்தனை காயங்கள் அவர்கள் மனதில் விதைக்கப்படுகின்றன என்று கவலைப்பட்டாள். சொல்லத் தெரியாத வடுக்களை சுமந்தபடி வளரும் இவர்கள் வாழ்வில் இதன் பாதிப்பு நிச்சயம் பிரதிபலிக்குமே என்று இப்படிப்பட்ட சிறுவர்களுக்காக வருந்தினாள். மேல்நாட்டு நாகரீகம் குடும்ப வாழ்வையல்லவா பாழ்படச் செய்கிறது. அதுவும் பிள்ளை களையல்லவா பாதிக்கிறது. பெற்றோரிடமிந்து அன்பைப் பெறாத குழந்தையால் அந்த அன்பைத் திரும்ப யாருக்கும் அளிக்கவோ அன்றில் பரிவு காட்டவோ முடியாமல் போய்விடுமே என்று எண்ணித் தவித்தாள்.*

*பாரதியுடன் வேலை பார்க்கும் கமரூனைச் சேர்ந்த லீனா வந்திருந்தாள். கடந்த வாரம் அவளின் ஆறாவது மகள் கமரூனில் பிரசவத்தின்போது இறந்து விட்டாள். குழந்தை சுகமாக இருப்பதாகச் சொன்னாள். ஏற்கெனவே ஒரு மகன் ஒரு மகளைப் பறி கொடுத்த தாய் அவள். முதல் கணவனுக்கு மூன்று பிள்ளைகளும் இரண்டாவது கணவனுக்கு நான்கு பிள்ளைகளும் இப்போதுள்ள கணவனுக்கு இரண்டு பிள்ளைகளும் இருந்தார்கள். கல்யாணத்துக்கு முன்பே ஒரு பிள்ளை இருந்தது. பிள்ளை உள்ளவர்களையே அவர்கள் இன*

ஆண்கள் திருமணம் செய்வார்களாம். அவள் கணவனுக்கும் தனியாக ஐந்து பிள்ளைகள் இருக்கிறார்கள். இப்போது இறந்த மகள் இரண்டாவது கணவரின் மகளாகையால் இந்தக் கணவன் போய்ப் பார்ப்பதற்கு அனுமதியளிக்கவில்லை. லீனா மிகவும் மனப் பாதிப்படைந்து இருந்தாள். பிறந்த குழந்தையைவிட பேத்தியைப் பற்றியே கவலைப்பட்டாள். பேத்தி பதின்மூன்று வயதை அடைந்திருந்ததால் அவளுக்குப் பாதுகாப்பில்லையென்று கவலைப்பட்டாள். தங்கள் இனத்தில் தகப்பனாலேயே மகள் பாதிக்கப்படுவது சாதாரணம் என்றும் அதனால் தான் போய் பேத்தியுடன் இருக்கப்போவதாகவும் சொன்னாள். ஆனால் கணவன் போனால் திரும்ப வரக் கூடாதென்று சொல்கிறானாம். எல்லா நாடுகளிலும் பெண்களின் நிலை ஒன்றுதானென்று இருவருமே பேசிக் கொண்டார்கள்." "இங்கிருக்கும் மகளைப் பற்றி எனக்கு கவலையில்லை. அவள் இருபது வயதுப்பெண். தன் வாழ்க்கையை முடிவெடுக்கிற வயது வந்துவிட்டது. பேத்தி அப்படியில்லை. ஆகவே நான் போக முடிவெடுத்து விட்டேன். எனக்கு கணவனைவிட இல்லாத மகளின் மகளைப் பாதுகாக்க வேண்டியது முக்கியமாகப் படுகிறது. உயிரோடு இல்லாவிட்டாலும் எங்கேயோ இருந்து பார்த்துக் கொண்டுதானே இருப்பாள். நான் போகாவிடில் அம்மாகூட வரவில்லையே என்று நினைக்கமாட்டாளா? போவதாகச் சொல்லி விடைபெறுவதற்காக வந்தேன்" என்று விடைபெற்றாள். அவளது அந்த நினைவு பாரதிக்கு மிகவும் பிடித்திருந்தது.

அன்று சனிக்கிழமை. வேலையில்லை. மால்சியைச் சந்திப்ப தாக சொல்லியிருந்தாள். மால்சி வெகு அற்புதமான பெண். தான் சந்தித்த அத்தனை பெண்களிலும் மால்சியைப் போல ஒரு பெண்ணைத் தான் சந்தித்ததேயில்லையென்று பாரதி அடிக்கடி நினைத்துக் கொள்வாள். பாரதியின் அன்றாடப் பிரார்த்தனையில் கணவன் எழிலனும் மால்சியும் இடம்பெறத் தவறுவதேயில்லை. அவளுக்கான சட்டஆலோசகர். அதையும் தாண்டி நல்ல மனம் கொண்ட சிறுபெண். முப்பதோ முப்பத்திரண்டோ வயதுதானிருக்கும். பாரதியின் மனத்தாக்கங்களை சரியாக

உள்வாங்கிக் கொண்ட சிறு பெண். தனது சொந்தப் பணத்தில் பாரதியை கௌன்சிலிங் அனுப்பி வைத்தாள். கௌன்சிலிங் போனபோதுதான் தெரிந்தது மனக்கோளாறு, மனப்பதற்றம், மனக்குழப்பம், மனத்தடுமாற்றம், மனத்தளர்ச்சி இப்படி எத்தனையோ வகை இந்த மனதுக்குப் பின்னால் இருக்கிற தென்று. அங்கு அவளுக்கு மனத் தெளிவு கிடைத்ததுடன் நாம் ஒவ்வொருவரும் இறுதி மூச்சு நிற்கும்வரை இயங்கிக்கொண்டே உயிர்ப்புடன் இருக்க வேண்டுமென்பதும் தெரிந்தது. மொழி தெரியாத போதே டொய்ச் படிக்க ஊக்குவித்ததுடன் தனக்கு அருகே ஓரிடத்தில் தங்க வைத்து டொய்ச்சை நல்லமுறையில் கற்க உதவினாள். பாரதியின் அம்மா சொல்வாள் “நன்றும் தீதும் பிறர்தர வாரா. நல்லது செய்தால் நல்லதே நடக்கும். எப்போது என்பதுதான் தெரியாதேயொழிய நல்லதே நடக்கும்” என்று. உண்மைதான் போலும். ஏதோ அன்னிய நாட்டில் இப்படி யொரு நட்பு கிடைத்தது எவ்வளவு சிறப்பு. அதுவும் புரூனர் அறிமுகப்படுத்தியதால் கிடைத்தது. மால்சிக்கு ஸ்ரீலங்கன் ஆட் களிடம் ஒரு தனி அக்கறை. ஏனென்று பலகாலம் தெரிய வில்லை. புரூனரும் சொன்னதில்லை. இந்த நாட்டவர் ஒருவரின் சொந்தக் கதைகளில் ஆர்வம் காட்டுவதில்லை.

மனதை வரட்சியாக்கும் ஒரு சந்தோஷமற்ற இலையுதிர்காலம். வறண்ட குளிர்காற்று வீசிக்கொண்டிருந்தது. தமிழர்கள் குளி ரென்றாலும் இதென்ன பேய்க்குளிர் என்பார்கள். நல்ல வெய்யில் என்றாலும் இந்தச் சூரியன் இப்படியேன் கொளுத்து கிறது என்பார்கள். இவர்கள் எதுயெது எப்படியோ அப்படியே ஏற்றுக்கொண்டு மகிழ்வோடு அனுபவிப்பது பாரதிக்கு பிடித்ததாக இருந்தது. பாரதி மால்சியிடம் முன்பே அப்பொயின்மென்ற் வாங்கி இருந்தாள். ஆனால் இவள் போனபோது அதை மறந்து குடித்துக் கொண்டிருந்தாள். அவளது நிலையைப் பார்த்ததும் பாரதி இன்னொருநாள் வருவதாக கிளம்பினாள். ஆனால் அவள் மறுத்து “உன்னோடு பேசினாலாவது மனம் கொஞ்சம் ஆறும்’ என்று அவளைத் தடுத்துவிட்டாள். அவளுடைய வார்த்தையை மறுக்க முடியாமல் பாரதி அமர்ந்தாள். கலங்கிய கண்களுடன் முகம் வாடி இருந்த அவளது தோற்றம் அவளுக்கேதோ கவலை இருப்பதை உணர்த்தியது. எதுவுமே பேசாமல் மால்சியின்

கைகைளைப்பற்றி மெதுவாக ஆதரவாக அழுத்தினாள். அந்த ஒரு ஸ்பரிசத்தில் உடைந்து போன மால்சி குலுங்கிக் குலுங்கி அழுதாள். எழுந்த பாரதி அவளருகே சென்று முதுகை ஆதரவாக நீவிவிட்டாள். அழுகை அடங்குமட்டும் பொறுத்திருந் தாள். சிறிதுநேர மௌனத்தின் பின் மால்சி பேசத்தொடங் கினாள். மேசையில் ஒரு கவரிலிருந்த ஃபோட்டோவை எடுத்தவள் மௌனமாக பாரதியிடம் நீட்டினாள். கவரைத் திறந்து பார்த்தவள் 'இவன் இவன் எப்படி உங்களிடம்?' என்றுதடுமாறினாள். 'உனக்குத் தெரியுமா இவனை?' கேட்டவள் ஆர்வத்துடன் பாரதியை பக்கத்தில் இழுத்து அமரவைத்து 'நானும் இவனும் காதலர்கள். இப்போது இறந்து விட்டான்' என்றாள். அதிர்ந்துபோன பாரதி 'எப்போது இறந்தான்?' என்று கேட்டாள். 'போர்க்காலத்தில்' ஒற்றையாகக் கூறி விட்டுத் தொடர்ந்து கூறினாள். 'இவன் சுசாந்தன் சுவிசில் இருந்தான்.' 'பாரதிக்கு படபடத்துக்கொண்டு வந்தது. என்றாலும் அடக்கிக் கொண்டாள்.'

'எழிலனைப் பார்க்கப் போனபோது சிறையில் பரிதியைக் கண்டேனே' கூற வாயெடுத்தவள் 'முழுக்கதையையும் கேட்டு அவன் இருப்பதை உறுதிசெய்தபின் சொல்வோம்'என்று வாளா விருந்தாள்.

'சுசாந்தன் இங்கு ஐந்து வருடங்கள் வாழ்ந்தான். நான் படித்துக் கொண்டிருந்தபோது அவனிடம் காதல் வசப்பட்டேன். அவனும் காதலித்தான். ஆனால் எந்தநேரமும் தன் நாட்டைப்பற்றியும் அங்கு போய் போராடப்போவதாகவும் சொல்லிக்கொண்டு இருந்தான். அவனால் தன் மண்ணை மறக்க முடியவில்லை. தான் தன் இனத்துக்காக போராடவேண்டுமென்று அடிக்கடி சொல்லுவான். என்மேல் வைத்த காதலைவிட அவன் ஈழ நாட்டை நேசித்தான். போய் போராட்டத்தில் கலந்து வெற்றி பெற்றவுடன் வந்து கல்யாணம் செய்வதாகக் கூறினான். அந்தப் போர் இப்படி முடியுமென்று நான் நினைக்கவில்லை. இரண்டு வருடத்தில் தனிநாடு கிடைத்துவிடும். அவன் வந்திடுவான் என்று நினைத்தேன்." கூறிவிட்டு நிறுத்தியவள் ஃபோட்டோவைத் தடவியவாறு கொஞ்சநேரம் மளனமாயிருந்தாள். பேசப்படாத அந்த மௌனம் பாரதிக்கு ஆயிரம் கதைகளை விளக்கியது."

சுசாந்தன் என்ற பரிதி எங்களுடன் போராட்டத்தில் இருந்தவன். எழிலனுடன் ஒரே படையணியில் இருந்தவன். எழிலனுடனே பிடிபட்டவன். சிறையில் இருப்பானே தவிர இறந்திருக்க மாட்டான்." உங்களுக்கு யார் இறந்ததாகச் சொன்னது? "சுசாந்தனின் ஃபரன்ட் கணேசன். 2009 மே மாதம் கடைசிச் சண்டையில் இறந்ததாகச் சொன்னான்." பாரதிக்கு இதில் ஏதோ குழப்பமிருப்பதாகத் தோன்றியது. சரியாகத் தெரியாமல் மால்சிக்கு ஆசை காட்டக்கூடாது என்று நினைத்து கணேசனைப் பற்றி துருவித்துருவி விசாரித்தாள். அவன் பொய்யாக ஏதோ ஒரு நாடகம் ஆடியிருப்பதுபோல் பாரதிக்குத் தோன்றியது. சுசாந்தன் இறந்ததாகக் கூறிய பின் அடிக்கடி தன்னைப் பார்த்ததாகவும் ஒருநாள் தான் மால்சியைக் கல்யாணம் செய்ய விரும்புவதாகவும் சொன்னானாம். அப்படிக் கூறியபின் தான் அவனைப் பார்ப்பதைத் தவிர்த்துவிட்டதாகக் கூறினாள். இப்போது பாரதிக்குப் புரிந்தது. தங்கள் கயமையை இப்படி அப்பாவி வேற்று இனப்பெண்ணிடம் கூட காட்டியிருக் கிறானே என்று வெறுப்பாய் இருந்தது. "தமிழர் வாழ்விலிருந்த சிறந்த பண்பு என்ற பண்பாடு எங்கே போய்விட்டது? தாயகத்திலும் காட்டிக்கொடுப்பு, துரோகம் இங்குமா?" என்று நினைத்தாள். "எனக்கு சுசாந்தன் என்ற பரிதியைத் தெரியும். இறந்தானா இருக்கிறானா என்றதுதான் தெரிய வில்லை. கவலை வேண்டாம். நான் அறிந்து சொல்கிறேன்" என்றாள். மால்சி மகிழ்ந்துபோனாள். அவளது சந்தோஷத்துக்கு அளவேயில்லை. தங்கள் காதல் கதைகளை மகிழ்வோடு பரிமாறினாள். இப்போது புரிந்தது பாரதிக்கு மால்சி ஏன் ஸ்ரீலங்கன் தமிழரிடம் பரிவோடிருந்தாளென்று.

தன்னுடைய தாய் பதின்ம வயதிலேயே தன்னைப் பெற்றா ளென்றும் பின் ஒவ்வொரு ஆண் நண்பர்களாக மாற்றிக் கொண்டேயிருந்ததால் தான் எவ்வளவு பாதிக்கப் பட்டதாகவும் அதனாலேயே தமிழர்களின் பண்பாடு பிடித்ததாகவும் சொன்னாள். சுசாந்தன் தன்னிடம் மட்டுமே காதலாக இருந்ததில் தனக்கிருந்த பெருமை பற்றியும் அவனது கரிசனம், அக்கறை பற்றியும் தங்களது கனவுகள் பற்றியும் சொன்னாள்.

தனக்கு ஒருமுறை உடம்பு சரியில்லாமல் வந்தபோது அவன் தன்னோடிருந்து தன்னைப் பார்த்த விதம்பற்றி உருக்கத்தோடு சொன்னாள். அப்படியொரு அன்பைத் தான் அனுபவித்ததே யில்லை என்று கண்கலங்கினாள். பாரதியின் கரங்களைப் பற்றி 'எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் விபரம் அறிந்து சொல் பாரதி என்றாள். "கவலையை விடு மால்சி. சீக்கிரம் சொல்கிறேன்" என்று வாக்குறுதியளித்தாள் பாரதி.' சிலவேளை கால் இழந்து, அன்றேல் வேறு உறுப்பு இழந்து...' பாரதி முடிக்கு முன்னே 'எப்படியிருந்தாலும் பரவாயில்லை. என் சுசாந்தன் உயிரோடிருந்தால் போதும்'. அவளை நினைக்க பாரதிக்கு பிரமிப்பாக இருந்தது. ஒருவனுக்கு ஒருத்தி என்ற கலாச் சாரத்துக்குள் வாழ்ந்த தமிழர்களே இன்று அதனை மறந்து ஐரோப்பிய கலாச்சாரத்துக்குள் மூளழ்கி வாழத் தொடங்கும்போது ஐரோப்பியப் பெண் தமிழர் கலாச்சாரத்தைப் பேணி வாழ்வது மலைப்பாக இருந்தது பாரதிக்கு.

"சுசாந்தன் இருக்குமிடம் தெரிந்தால் நான் உடனேயே அங்கு போய் வெளியில் எடுத்துக் கூட்டிவந்துவிடுவேன். உன் கணவனையும் வெளியே எடுத்துக் கூட்டி வருவேன். சுசாந்தன் உயிரோடிருந்தால் மட்டும் போதும். எந்த உறுப்பு இல்லாமல் போனாலுமென்ன? இவ்வளவு காலமும் வெறும் நடைப் பிணமாக இருந்தேன். அம்மா எத்தனையோ தரம் சொல்லி விட்டா. செத்தவனை நினைத்துக் கொண்டு வாழப் போகிறாயா? என்று. இப்போது எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறது தெரியுமா?' நம்பிக்கையுடன் கூறியவளுக்கு 'நல்ல பதிலைக் கொடுக்க வேண்டுமே கடவுளே உதவி செய்யும்' வேண்டியபடி மால்சியின் கைகளைப் பற்றினாள். இருவருமே ஒருவர் கையை ஒருவர் பிடித்தபடி நெடுநேரம் உட்கார்ந்திருந்தார்கள் இருள் வந்து அணைப்பது தெரியாமல்.

❑

# ஓயாமல் இசைக்கும் உறவு

**பாடசாலையால்** *வீட்டுக்கு வரும்போதே மேகாவின் மனம் நன்றாக இருக்கவில்லை. பேரன்ட்ஸ் மீற்றிங்க்கு எல்லாப் பிள்ளைகளினதும் பெற்றோர் வந்திருந்தனர். பிரிந்திருப்பவர்கள் கூட பிள்ளைகளுக்காக ஒன்றாக வந்திருந்தனர். ஒருவரோடொருவர் பேசாமல் தங்கள் பிள்ளைகளுக்காக வந்திருந்தனர். மேகாவின் இதயம் அப்பா என்ற உறவுக்காக ஏங்கியது. அம்மா தனித்து வளர்த்தாலும் கேட்டதெல்லாம் வாங்கித் தந்தாலும் 'அப்பா அப்பா' என்று அடிக்கடி சொல்லிப் பார்ப்பாள். சொண்டும் சொண்டும் ஒன்றையொன்று தொட்டு வரும்போது அப்பாவைக் கட்டிக் கொள்ளவேண்டும் போலிருக்கும். அம்மாவிடம் அப்பா பற்றிக் கேட்டால் அவவின் மூட் மாறிவிடும். காரணமில்லாமல் கோபிப்பாள் அல்லது ஒன்றும் பேசாமல் போய்விடுவாள். தாத்தா, அம்மம்மா இரண்டு வீதி தாண்டி இருக்கிறார்கள். அவர்களும் அப்பா பற்றிக் கதைப்பதில்லை. தாத்தா ஸ்கூலால் கூட்டி வந்து அம்மம்மா வீட்டில் தான் மேகா நிற்பாள். அம்மா வேலையால் வரும்போது மேகாவையும் கூட்டி வருவாள்.*

*தாத்தா கூட்டிவரும்போதும் மேகா ஒன்றுமே பேசாமல் வந்தாள். அம்மம்மா வீட்டுக்கு வந்த பின்பும் சரியாகப் பேசாமல் சோஃபாவுக்குள் முடங்கினாள். தாத்தா கேட்ட கேள்விகள் கூட அவள் காதில் விழவில்லை. 'என்னம்மா! உடம்பு சரியில்லையா?' தொட்டுப் பார்த்து அருகில் உட்கார்ந்த தாத்தா முதுகை இலேசாகத் தடவினார்.' தாத்தா! எல்லாருக்கும் அப்பா இருக்கினம். எனக்கு மட்டும் இல்லை. மேகா பாவமில்லையா தாத்தா? கண்களில் நீர் முட்ட நின்ற பத்து வயதுக் குழந்தையை மெதுவாக அணைத்து 'அம்மா, தாத்தா,*

அம்மம்மா. மாமா. மாமி, சித்தி எவ்வளவு பேர் இருக்கினம் மேகாவுக்கு. ஏன் பிள்ளை அழுவான்?'' "எல்லாரும் இல்லாவிட்டால் பரவாயில்லை. எனக்கு அப்பா வேணும். எங்கை இருக்கிறார் அவர்? என்னோடை பெயரோடு மட்டும் தீபக் என்று போட்டால் போதுமா?" நியாயமான கேள்வி. மனதுக்குள் சொன்ன தாத்தா பேச்சை மாற்ற எண்ணி 'இன்றைக்கு ஸ்கூலில் என்ன படித்தது? நோட்புக்கை காட்டுங்க பார்க்கலாம்' என்றார். பேச்சை மாற்றாதீங்க தாத்தா. எனக்கு இன்றைக்கு அப்பா பற்றி சொல்லியே தீர வேண்டும் அல்லது நான் சாப்பிட மாட்டேன்' பேத்தி பிடிவாதம் பிடித்தாள். "அப்பா எப்படியிருப்பாரென்றே எனக்குத் தெரியாதே. ஒரு ஃபோட்டோ கூட பார்த்ததில்லை. எனக்கு அவரைப் பார்க்க வேண்டும். என்னை அவரிடம் கூட்டிப் போங்கோ. ஏன் என்னை விட்டிட்டு அவர் போனார் என்று கேட்க வேண்டும்.அம்மாவும் சொல்ல மாட்டா. நீங்க சொல்லுங்க தாத்தா அல்லது செத்திட்டாரா?" கண்ணீர் முட்ட குரல் தளதளக்க கேட்ட மேகாவை ஏமாற்ற தாத்தா விரும்பவில்லை. செத்திட்டாரா? என்ற கேள்வி அவரை உலுக்கி எடுத்தது.

"கொஞ்சம் இருங்கோ வாறன்" சொல்லிவிட்டுச் சென்றவர் கையில் ஃபோட்டோ அல்பத்துடன் வந்தார். அதைப் பார்த்த அம்மம்மா 'நீங்க பாட்டுக்கு காட்டுறிங்க. மீரா வந்து பேசப்போறா' என்றா. "எத்தனை காலத்துக்குத்தான் இதுகளை மறைக்கலாம்? பிள்ளைக்குத் தகப்பனைத் தெரிய வேண்டாமோ? அவை தங்கள் வீம்புக்கு பிரிவினம். பிள்ளையை இது பாதிக்கும் என்றது விளங்காது. பிள்ளைகள் என்ன சாமானா? உணர்ச்சிகள் உள்ள உயிர் இல்லையா?" என்றவர் 'மேகா நான் காட்டினது சொல்றது எதுவும் இப்போதைக்கு அம்மாக்குத் தெரிய வேண்டாம். பிறகு தெரியட்டும் என்றார்.' அவர் கையிலிருந்த அல்பத்தை ஆவலுடன் வாங்கியவள் அம்மா அப்பாவின் திருமண ஃபோட்டோ. தன்னை சிறுவயதில் அப்பா தூக்கி வைத்திருப்பது போன்ற பல படங்களை ஆசையுடன் பார்த்தாள். 'நான் நினைத்தன் அப்பாக்கு என்னைப் பிடிக்காது. அதுதான் விட்டிட்டுப் போயிட்டார் என்று. ஆனால் என்னைக் கொஞ்சிக் கொண்டிருக்கிறாரே. அந்தப் படத்தைக் கையிலெடுத்து ஆசையுடன் முத்தமிட்டாள். பார்த்துக்

கொண்டிருந்த தாத்தா. அம்மம்மாவுக்கு கண்கள் கலங்கியன. 'இது என்னட்டை இருக்கட்டும் தாத்தா' என்று அப்பா மேகாவைக் கொஞ்சும் படத்தை தன்னிடமே வைத்துக் கொண்டாள். மீண்டும் மீண்டும் முத்தமிட்டபடி மிகுதிப் படங்களையும் பார்த்தாள். 'இது லண்டன் இல்லையென்ன தாத்தா? எந்த ஊரில் நாங்கள் முந்தி இருந்தனாங்கள்? மலைகளும். ஸ்நோவும். இது சுவிஸ் என்ன தாத்தா?' ம். மேகா கெட்டிக்காரி. ஏதும் ஞாபகம் வருதா பிள்ளைக்கு." "ம் இந்த ஃபோட்டோ, பார்க்க கொஞ்சம் நினைவு வருகுது. அப்பா மேகாக்குட்டி என்று கூப்பிடுறது போல இருக்கு. ஏன் தாத்தா என்னை விட்டிட்டு அவர் எங்கேயோ இருக்கிறார். அவருக்கு என்னைப் பிடிக்கேல்லையா? என்னைப் பிடிக்காததால்தான் போயிட்டாரா? அவருக்கு நான் வேண்டாமா?" அடுக்கடுக்கான மேகாவின் கேள்விகளுக்கு அவரால் பதில் சொல்ல முடியவில்லை.

மேகா சாப்பிட்டுவிட்டு அவள் றூமுக்குள் போகவும் அம்மம்மா மாலா கணவனைக் கேள்விகள் கேட்கத் தொடங்கினாள். "மீராவுக்குத் தெரிந்தால் உங்களைக் கோபிக்கப் போகிறாள். மீராக்கு மட்டும் இப்படித் தனிய இருந்து கஷ்டப்பட ஆசையா? எங்களுக்கு காரணம் சொல்லாவிட்டாலும் ஏதோ வலுவான காரணம் இல்லாமலிருக்குமா? அவளுக்கு இருக்கிற ஒரே ஆதரவு மேகா மட்டும்தான். நீங்க இப்படி தகப்பனைப் பற்றிச் சொல்ல மேகாவுக்கு தாயிடம் இருக்கும் அன்பு குறைந்திடாதா? எங்களுக்குப் பிறகு மேகாவும் தகப்பனைத் தேடிப்போய் விட்டால் மீரா தனித்துப் போயிட மாட்டாளா?நீங்க ஒன்றையும் யோசிக்க மாட்டீங்களா?' கேட்டு முடித்தபின் தாத்தா சொன்னார்.' எல்லாக் கேள்விகளும் முடிஞ்சிட்டுதா? நான் எது செய்தாலும் ஒரு காரணத்தோடு செய்வேனென்று உமக்குத் தெரியாதா? இப்போ மேகா சொன்னதைக் கவனித்தீர்தானே. வளர்ந்தவர்கள் தப்பு செய்வார்கள் என்பது தெரியாத வயது. தன்னைப் பிடிக்காததால்தான் அப்பா போயிட்டாரென்று தப்பாய் நினைத்துக் குழம்புகிறாள். அம்மாவுக்கும் அப்பாக்கும் பிரச்சனை வரும் என்பது தெரியாத குழந்தை. இப்ப கொஞ்ச

நாளாய் மேகா தகப்பனை நினைக்கிறதும் தேடுறதும் நீர் கவனிக்காமல் இருக்கலாம்.நான் கவனித்துக் கொண்டுதான் வாறன். இரண்டு கிழமைக்கு முதல் ராஜேஷ் வீட்டு பேர்த்டேக்கு போனோம்தானே. அங்கு எங்களுக்குத் தெரியாத ஒருவருடன் மேகா நீண்டநேரம் பேசிக்கொண்டு இருந்ததைப் பார்த்து பக்கத்தில் போனால் மேகா தகப்பனைப் பற்றி அவரிடம் விசாரிக்கிறாள். அவரும் இவளிடமே கதைவிட்டு கதை வாங்கித் தனக்கு தீபக்கைத் தெரியுமென்கிறார். அடிக்கடி தீபக் லண்டன் வருவதாகவும் அடுத்த முறை வரும்போது தான் மேகாவைக் கூட்டிப் போவதாகவும் சொல்லிக்கொண்டு இருக்கிறார். அப்பா மோகத்தில் சரியில்லாதவர்களிடம் மேகா அகப்பட்டு சீரழிய வேண்டுமா? உலகம் எவ்வளவு கெட்டுப் போயிருக்கிறது. மேகா எங்களுக்கு குழந்தை. மற்றவர்கள் பார்வையில் எப்படியோ? எங்களிடம் சரியான பதில்கள் கிடைக்காததால்தான் மற்றவர் களை நாடிப் போகிறாள். அவளுக்கு தகப்பனைக் காட்ட வேண்டியது எங்கள் கடமை. ஒருநாளைக்கு யாரும் நான்தான் அப்பா என்று சொல்லிக் கூட்டிப்போனாலும் ஆச்சரியப்பட முடியாது.' வாயடைத்துப் போனாள் மாலா.

தாயில்லாத நேரங்களில் தகப்பனைப்பற்றி தாத்தாவுடன் பேசத் தொடங்கினாள். இப்போது அம்மம்மாவும் அந்தப் பேச்சுக்களில் கலந்து கொள்வாள். மகள் கை பிடித்துச் செல்லும் அப்பாவும் மகளைத் தூக்கிச் செல்லும் அப்பாவும் எங்கே கண்டாலும் மேகா ஏக்கத்துடன் பார்ப்பதை தாத்தா, அம்மம்மா இருவருமே கவனிக்கத் தவறுவதில்லை. ஒருநாள் எல்லோரும் ரெஸ்ரோறன்ரில் உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது ஒரு இரண்டு வயதுக்குழந்தையை அப்பா மடியில் இருத்தி உணவு ஊட்டிக்கொண்டிருந்தார். ஊட்டி முடிந்ததும் அருகில் இருந்த தாயிடம் குழந்தையை நீட்டவும் ஏனோ குழந்தை தாயிடம் போக மறுத்தது. தகப்பன் 'அப்பா காரை எடுத்து ரெஸ்ரோறன்ற் வாசலில் கொண்டு வாறன் அம்மாவிடம் இருங்கோ' என்று கூறியும் தகப்பனுடன் செல்ல அடம் பிடித்தது. தாய் வலோத் காரமாக பிள்ளையை வாங்கியதைப் பார்த்த மேகாவின் கண்ணில் நீர் முட்டியது. மீராவைத் திரும்பிப் பார்த்த மேகா

*"ஏனம்மா அந்த ஆன்ரி ஃபோஸ் பண்ணித் தூக்கிறாங்க. "மேனர்ஸ் இல்லையா அவங்களுக்கு? அப்பாவுடன் போக ஆசைப்பட்டால் ஏன் பறிக்கிறாங்க? பாவம் அந்த பேபி" என்று கூறியது எல்லோருக்கும் நெருடலாகவே இருந்தது. ஒரு சின்ன விடயமே மேகாவுக்கு எவ்வளவு தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பது மீராவுக்கு ஜீரணிக்க முடியாமலிருந்தது. மேகா தந்தைக் காக ஏங்குகிறாளா? தந்தை என்ற வெற்றிடத்தை தாத்தா என்ற உறவு மூலம் சரிசெய்துவிடலாமென்று தான் நினைத்தது தப்பாயிடும் போலிருக்கிறதே என்று தடுமாறித் தவித்தாள்.*

*ஒருநாள் திடீரென்று தாத்தாவிடம் மேகா கேட்ட கேள்வி மீரா வுக்கு இனியும் மறைப்பது நல்லதில்லை என்பதை விளக்கியது. "எனக்கு அப்பாவின் போன் நம்பர் வேணும் தாத்தா. நான் அவரோடு கதைக்க வேணும். நந்தன் அங்கிள் சொன்னார் அப்பா தன்னுடன் கதைக்கும்போது என்னைக் கதைக்க வைக் கிறாராம்." திடுக்குற்ற தாத்தா "அது யார் நந்தன். எங்களுக்குத் தெரியாதே" "அதுதான் ராஜேஷ் அங்கிள் வீட்டில் அப்பா வின் ஃப்ரன்ட் கதைத்தவர் என்று சொன்னேன்தானே' மேகா சாதாரணமாகச் சொன்னாள். "இல்லையம்மா. அவர் அப்பாவின் ஃப்ரன்ட் இல்லை. அவர் பிள்ளையை ஏமாற்றியிருக்கிறார்.ஒருத் தரையும் நம்பக்கூடாது. அப்பாவைத் தெரியும் என்று சொல்லி ஒருநாள் மேகாவைக் கடத்திக்கொண்டு போய் யாருக்கும் விற்று விடுவார். பிறகு மேகா எங்களை எல்லாம் விட்டு யாரோடையோ வீட்டில் வீட்டு வேலை செய்துகொண்டிருக்க வேண்டும். நாங்கள் மேகா இல்லாமல் தேடிக்கொண்டு அழுதுகொண்டிருப்பம். மேகா அப்பாவைப் பார்த்ததும் இல்லை." எங்களுக்கு மேகாவும் இல்லை." தாத்தா கூறவும் மேகா பயந்துவிட்டாள். 'உண்மை யாகவா தாத்தா?' பேத்தியை நம்ப வைக்க வாக்குறுதி வழங்கினார் தாத்தா. 'நான் நிச்சயம் மேகாவை அப்பாவிடம் கூட்டிச்செல்வன். மேகா அவசரப்படக்கூடாது. முதலில் அம்மா வுக்குச் சொல்ல வேண்டும். அம்மாவுக்குத் தெரியாமல் ஒன்றும் செய்யக்கூடாது.'*

*மெதுவாக மீராவிடம் மேகாவின் ஆசையையும் அதைத் தொடர்ந்து மேகாவின் நடவடிக்கைகளையும் விளக்கினார்.*

*இப்படியொரு நிலைமை வருமென்று நினைத்தும் பார்த்திருக்காத மீரா முதலில் திடுக்குற்றாலும் பின்னர் சுதாரித்துக் கொண்டாள். நிலைமையை சமாளிப்பது மட்டுமல்ல, அடுத்து செய்வதையும் நன்றாக யோசித்தே செய்ய வேண்டுமென்பதைப் புரிந்து கொண்டாள். "உமக்குக் கணவர் தேவையில்லாமல் இருக் கலாம். அதற்காக மேகா தகப்பனைத் தேடுவதோ தந்தையின் அன்புக்கு ஏங்குவதோ தப்பென்று சொல்லமுடியுமா?" தந்தையின் கேள்விக்கு பதில் சொல்ல முடியாமல் தடுமாறி னாள். "மேகா என்னைவிட்டுப் போயிடுவாளா அப்பா?" ஏக்கத் துடன் கேட்ட மகளுக்கு எப்படி ஆறுதல் கூறுவது என்று வார்த்தைகளைத் தேடினார். "மீரா! இப்போதுதான் நாங்கள் கவனமாகச் செயல்படவேண்டும். முற்றாகத் தகப்பனைப் பார்ப் பதைத் தடுத்தால் விளைவு பாரதூரமாகப் போய்விடும். மேகா தகப்பனுடன் ரச்சில் இருப்பதால் ஒன்றும் கெட்டுவிடாது. தகப்பனுக்கும் பிள்ளையைப் பார்க்க ஆசையிருக்கும். தீபக்கும் யாரையும் கல்யாணம் செய்ததாகத் தெரியவில்லை. நீங்கதான் டிவோஸ் பண்ணவே இல்லையே. நாங்க தடுக்கத்தடுக்க ஆசை கூடத்தான் செய்யும். போன் நம்பரை எப்படியும் எடுத்துக் குடுப்பம். கதைக்கட்டும். பிறகு என்ன செய்யலாம் என்றதை யோசிக்கலாம்.*

*தந்தையின் பேச்சு சரிபோலத் தெரியவே 'சரியப்பா. நீங்க சொல்றமாதிரிச் செய்வம். எனக்கு மேகா என்னை விட்டுப் போயிடக்கூடாது. அவ்வளவுதான். நான் வாழுறதே அவளுக் காகத்தானே அப்பா அவளில்லாத ஒரு வாழ்வை என்னால் நினைத்துப் பார்க்கவே முடியாமலிருக்கு.' துக்கத்தை மென்று விழுங்கிக்கொண்டு பேசினாள்.'*

*பறவைகள் இவ்வளவு உயரத்தில் பறக்கும்போது விழுந்து விடுவோமோ என்று பயப்படுவதில்லை. வானத்தின்மீது வைக்கும் நம்பிக்கையைவிட அவை தம் இறகுகளையே நம்பிப் பறக் கின்றன. எதிர்காலத்தில் நம்பிக்கை வைக்கவேண்டும். எண்ணங் களுக்கு சக்தி அதிகம். ஆகவே, நல்ல எண்ணங்களை மட்டும் சேமிக்க வேண்டும். நல்ல எண்ணங்கள் நல்ல விதைகளைப்*

*போன்றது. மேகா போயிடமாட்டா என்பதை தீவிரமாக மிக மிகத் தீவிரமாக நம்ப வேண்டும். எதிர்மறை எண்ணங்கள் தோன்ற விடக்கூடாது. அப்படித் தோன்றினாலும் உடனே அழித்துவிட வேண்டும் அல்லது அந்த எண்ணம் மரமாக வளர்ந்து நேர்முக எண்ணங்களை செயல்பட விடாமல் அழித்துவிடும். மேகா உம்மை விட்டுப் போகவேமாட்டா.' மகளின் கைகளை ஆதரவாகப் பற்றி நம்பிக்கை ஊட்டினார்.*

*நாட்கள் இறக்கை கட்டிக்கொண்டு பறந்தன. தீபக்கின் நம்பரை ஒருவாறு வாங்கிய பின்னர் மகளுடன் தனிமையில் பேசினார்.*

*"இதுவரை காலமும் நாங்கள் உம்மை என்ன காரணத்திற்காகப் பிரிந்தீர்களென்று கேட்கவில்லை. எங்கள் மகள் சரியான ஒரு காரணத்திற்காகத்தான் பிரிந்து வந்தீரென்று நினைத்தம். இப்போது தீபக்கைப் பற்றி விசாரிக்கும்போது இரண்டுபேருமே சின்னச்சின்ன கருத்துவேறுபாடுகளுக்காக பிரிந்திருக்கிறீர்கள் போலிருக்கிறது. கணவன் மனைவி உறவு பிரிக்கக் கூடியது. ஆனால், தந்தை மகள் உறவு பிரிக்க முடியாதது என்பது மேகாவைப் பார்க்கும் போது விளங்குகிறது. உமக்கு என்னிட முள்ள பாசத்துக்கு எள்ளளவும் குறையாதது தான் தகப்பன்மேல் மேகா வைத்த பாசமும். நடேசன் மாமா மூலந்தான் நம்பர் வாங்கினேன். அவர் சொன்னார். தீபக்கும் மீராவும் பிரிந்த பிறகு நான் தீபக்கை பார்ப்பதையே தவிர்த்துவிட்டேன். இப்போது அவனைப் பார்க்கும்போது நாங்க எல்லோருமே பிழை விட்டு விட்டோமோ என்று தோன்றுகிறது" என்றார்.*

*மீரா எதுவுமே பேசாமல் மௌனம் காத்தாள். மனம் விட்டுக் கதைக்க வேணுமம்மா. யார் தான் தப்பு செய்யாமலிருக்கினம். செய்தது தப்பு என்று உணர்ந்தால் அதைத் திருத்திக் கொள்வதில் ஒரு தவறும் இல்லை. கல்யாண பந்தத்தில் ஒருவரையொருவர் அவரவர் குணங்களுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஒருவர் தன் கட்டுப்பாட்டுக்குள் மற்றவரை இழுக்க முயல்வதுதான் பிரச்சனைகளுக்கு காரணம். நானும் பிழை விட்டிட்டன்போல இருக்கு. கல்யாணம் செய்தபோது சொல்லவேண்டியதை இப்ப*

*சொல்கிறேன். இப்போதும் ஒன்றும் காலம் கடக்கவில்லை. யோசித்து நல்ல முடிவெடுக்கலாம். நாளெடுத்தாலும் பரவாயில்லை. நடேசன் தீபக்கின் வீட்டுக்குத்தான் போனவர். ஹோலில் உங்கள் ஃபமிலி ஃபோட்டோவும் அங்கங்கே மேகா வின் ஃபோட்டோவுந்தான் மாட்டி வைத்திருந்ததாம். அவருக்கும் மகள்மேல் பாசம் இல்லாமலிருக்குமா? இப்போது மேகா தகப்பனுடன் பேசட்டும்.வெறும் ஈகோவைக் கட்டிப் பிடிப்பதால் ஒன்றும் ஆகப் போவதில்லை. மனதைப் போட்டுக் குழப்பாதேயும். நீங்கள் காதலித்துக் கல்யாணம் செய்தவர்கள். தீபக்கோடு இருந்தபோது நடந்த நல்லதுகளை மட்டும் நினைத்துப் பாரும்." பதில் பேசாது எழுந்து சென்றாள் மீரா.*

*ஒருநாள் மேகா "நான் அப்பாவைப்போலத் தானிருக்கிறேன். என்ன தாத்தா. ஸ்கூலில் என்னுடைய ஃப்ரன்ட் சோபியாக்கு அப்பாடை ஃபோட்டோ காட்டினன். அவ சொல்றா எக்ஸ ாக்ரிலி என்னைப்போல இருக்கிறாரென்று. அப்படியா தாத்தா, ஆவலுடன் கேட்டாள் மேகா.' ம். முற்றுமுழுதாய் அப்படிச் சொல்ல ஏலாது. கண் அம்மாடை. அப்பாடை வாய். என்னுடைய அப்பாடை கால். அம்மம்மாவின் சுருட்டை முடி. அப்பப்பாவின் மூக்கு இப்படி எல்லாமே வந்து மேகாக்குட்டியின் உடம்பில் ஒட்டியிருக்கு'' அதெப்படி தாத்தா"ஓ! அதுவா விஞ்ஞானம் மரபணு ஜெனற்றிக்ஸ் என்று சொல்லும். மெஞ்ஞானம் கடவுள் சக்தி என்று சொல்லும். குணங்கள் கூட அப்படித்தான். அவயவங்கள் மட்டுமல்ல எப்பவோ இறந்த முன்னோர்களின் குணம் கூட ஒட்டியிருக்கும். அதைத்தான் பிறவிக்குணம் என்பார் கள்' விளக்கினார் தாத்தா. "என்னிடம் அப்பாவின் குணம் இருக்கா தாத்தா?" "ஏனில்லாமல் அப்பா அம்மா இரண்டு பேரின் குணமும் சேர்ந்துதான் பிள்ளைகளுக்கு வரும்." எனக்கு அப்பாவிடம் பேச வேணும் தாத்தா. அவரைப் பார்க்க வேணும். பேச வேணும் என்று ஆசையாக இருக்கு தாத்தா. எல்லாப்பிள்ளைகளும் தங்கள் அப்பா அம்மாவுடன் இருக்கும்போது எனக்கு மட்டும் ஏன் தாத்தா? உதடுகள் துடிக்க கோழிகளுக்குப் பின்னால் ஓடும் குஞ்சுகள் போல சதா தகப்பனுக்குப் பின் தன் எண்ண*

ஓட்டங்களை ஓடவிடும் பேத்தியின் விருப்பத்தை எப்படி என்றாலும் நிறைவேற்றிவிட வேண்டும் என்று உறுதி பூண்டார்.

ஒருநாள் 'கர்மா என்றால் என்ன தாத்தா?' என்றாள் மேகா. ஒரு குழந்தை கேட்கிற கேள்வியா இது? திடுக்குற்றுப்போய் கேட்டார்' யார் இதைப்பற்றிச் சொன்னது?' நேற்று என் கிளாஸ்மேற் அனிதாவின் பேர்த்டேக்குப் போனேன் தானே. அப்போது அனிதாவின் பாட்டி சொன்னா" ஏன் சொன்னா? அப்பா எங்கே வேலை பார்க்கிறார்? அம்மா எங்கே வேலை பார்க்கிறார் என்றெல்லாம் கேட்டா. நான் அப்பா சுவிசில் என்று சொன்னேன். ஓ! பிரிஞ்சிருக்கிறாரா என்று சொல்லிற்று அவரவர் கர்மா என்றா' கேட்டுக் கொண்டிருந்த மாலா 'இதுதான் யார் வீட்டுக்கும் போக வேண்டாம் என்றேன்.' சொல்லவும் அங்கு வந்த மீராவின் தங்கை' பார்த்தீங்களா அம்மா? இதுதான் ஸ்ரீலங்கன் ஆட்களின் குணம். நான் சொன்னால் ஸ்ரீலங்கனுக்காக பரிந்து பேசுவீர்களே. இந்த நாட்டுக்காரர் யாராவது இப்படிப் பேசுவார்களா? ஒரு சின்னப்பிள்ளையிடம் எப்படிப் பேசுவது என்பது தெரியேலையே. இனிமேல் பாட்டிமார் இருக்கிற வீடுகளுக்கு மேகாவை அனுப்பா தேங்கோ. நான் முந்திச் சொன்னன் தானே. என்னுடைய ஃப்ரன்ட் டின் ஆன்ரிக்கு குழந்தை பிறந்திருக்கிறது என்று பார்க்கப் போன போது இப்படித்தான் இந்தக்குழந்தை பிறக்கும்போதே தகப்பனை முழுங்கிவிட்டுப் பிறந்திருக்கு என்று அங்கு வந்திருந்த ஒரு பாட்டி சொல்றா.' கேட்ட மாலா சொன்னாள். முழுங்கி என்று நாங்க சொல்றதில்லையே. தமிழ்நாட்டில்தான் அப்படிச் சொல் வார்கள். தமிழ்நாடு, ஸ்ரீலங்கா எல்லாம் ஒன்று தான். தமிழர் எல்லோரும் இப்படித்தான் சொல்றது. அந்தக் குழந்தை என்ன செய்தது. ஒரு குழந்தையைப் பார்த்து இப்படி சொல்லலாமா?' ஒரு பிடிபிடித்தாள் தங்கை. 'சரி. நீங்க பிறகு ஆர்கியூ பண்ணுங்கோ. இப்ப எனக்கு சொல்லுங்கோ. கர்மா என்றால் என்ன?' விடாப்பிடியாகக் கேட்டாள் மேகா.'அது ஒன்றுமில்லையம்மா. நாங்க முந்தின பிறவியில் செய்த பாவம் என்று சொல்லலாம்.' 'நான் பாவம் செய்தனா?' அடுத்த கேள்வி சட்டென வந்தது.' அவ சொல்றதால் அப்படி ஆயிடுமா? நாங்கதான் அப்பாவிடம் போகப் போறோமே' பேச்சை திசை திருப்பினார் தாத்தா.

இப்போதெல்லாம் மேகா தகப்பனிடம் அடிக்கடி ஃபோனில் பேசுவதால் மகிழ்ச்சியோடு இருந்தாள். தனிமையில் மாலா கணவரிடம் சொன்னாள்' மீராவும் உள்ளுக்குள்ளே தீபக்கை நினைக்கிறாளென்றுதான் நினைக்கிறேன். அவவின் கைப் பையில் நேற்று டொக்ரரின் காட் தேடும்போது பார்த்தேன். தீபக்கின் ஃபோட்டோ இருந்தது. சும்மா விருப்பத்தை மறைத்து நாடகமாடிக்கொண்டு இருக்கிறாள். உங்கள் குணந்தான் மீராவுக்கும். நீங்க உங்கள் அக்கா. தங்கச்சியை நொடியில் உதறிவிட்டு வந்த மாதிரித்தான் அவளும் கணவனை உதறி இருக்கிறாள்.''

அதையும் இதையும் ஒப்பிடாதேயும். நான் இப்பகூட அப்படி வந்தது பிழையென்று நினைக்கவேயில்லை. அக்காடை புருசனை வெட்டிச் சாய்த்துப் போட்டு வரேல்லையே என்றது தான் கவலை. அவன் செய்த வேலைக்கு. அவனை விட எனக்கு அவள் மேகலா மேல்தான் கோபம். அவளை என் தங்கச்சி யென்று சொல்லவே வெட்கமாயிருக்கிறது. இருபத்தியாறு வயதில் மூன்று பிள்ளைகளுடன் கணவனைப் பறிகொடுத்து விட்டு தன் காலில் நின்று எங்களை வளர்த்த அம்மாவுக்கு எப்படி அவள் மகளாகப் பிறந்தாள்? அவளுக்கு என்ன குறை. வீடு, சொத்து என்று என்ன இல்லை? கல்யாணம் செய்துவைக்க அண்ணன் நான் இல்லையா? அம்மாகூட இது அறிந்துதானே ஹார்ட்அட்டாக் வந்து இறந்தா. தெரிந்தவுடன் எனக்கு சொன்னால் நான் எப்படி றியக்ற் பண்ணுவேனோ என்று மனதுக்குள் பூட்டி வைத்துத்தானே அந்த அட்டாக் வந்தது. முதல் அட்டாக்கிலே போற வயதா அவவுக்கு? அக்கா கூட புருசனுக்கு சப்போட் பண்ணி எனக்கு மறைத்துவிட்டா. சரி அதுதான் பரவாயில்லை. உடனேயே அவர்களைப் பிரிச்சு விட்டிருக்கலாமே. நான் தெரிந்து கேட்டபோது மனிசியின் சொல்லைக்கேட்டு என் புருசனைக் கெட்டவன் என்கிறாயா? நீயெல்லாம் ஒரு தம்பியா? என்று என்மேல் பாய்ந்தா. எனக்கு இவர்கள் இரண்டு பேர் மேலும் கோபம் செத்தாலும் போகாது.' கோபத்துடன் கூறினார்.'

உங்கள் அக்காவைப் பிழை சொல்ல ஏலாது. அவவும் அடுக் கடுக்காய் பிள்ளைகளைப் பெற்று இலவசமாய் ஒரு வேலைக்காரி கிடைச்சிட்டுது என்று நினைத்திருப்பா. அவள் எவ்வளவு திமிராய் “என்மேல் பொய் பழி சுமத்துகிறாய். நீ நல்லாயிருப்பாயா? என்று எனக்கு சாபமிட்டவள் ஒரு குழந்தையைப் பெற்றபோது கூனிக்குறுகேலையே. நான்தான் கூனிக்குறுகி ஊரை விட்டே வந்தேன். அதற்குப் பிறகு நான் ஊரில் கால் பதிக்கவேயில்லை. பதினாறு வயதில் இப்படிச் செய்வாளென்று யாருக்குத் தெரியும்.'' என்ன செய்கிறது? இப்படி நடக்க வேணுமென்று இருந்திருக்கு. அதுக்குத்தான் அவ தனக்குத்தான் தண்டனையைக் குடுத்துக் கொண்டு வீட்டைவிட்டு வெளிக்கிடாமல் சிறை இருந்தாவே.'' ஊர்தூற்றுவது தன்னுடைய காதில் விழாமல் இருப்பதற்குத்தான் அப்படி இருந்திருப்பாள். ஆனால் இன்றுவரை தன்னுடைய தப்பை அவள் உணர்ந்ததே இல்லை என்று அறிகிறபோது அப்படி ஒரு கோபம் வருகிறது.' என்றார்.' அப்படி உணராமல் இருக்க மாட்டா. ஒப்புக்கொள்ள விருப்பமில்லை. அவ்வளவுதான். பதினாறு வயது. சின்னப்பிள்ளை. ஒன்றும் தெரியாத வயது. எல்லாத்துக்கும் உங்கள் அத்தான்தான் காரணம். ஆனால் நீங்க இப்பவும் மேகலாவின் மகனை வெறுக்கிறது ஞாயமேயில்லை. யாரோ செய்த தப்புக்கு அந்தப் பிள்ளை என்ன செய்தது?'' போதும் இந்தப் பேச்சு. அந்தப் பிள்ளை ஒன்றும் செய்யேலை. அது எனக்குத் தெரியாதா? ஆனால் எனக்கு அவனை நினைத்தால் அந்த ராஸ்கல் செய்த... வேண்டாம் அந்தப் பேச்சு' பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

என்றாலும் மாலாவுக்கு ஒரு விஷயம் கணவனிடம் சொல்ல வேண்டுமென்று ஒரு ஆசை. ஆகவே தொடர்ந்நாள்.' மேகலா வுக்கு என்ன வயது. பதினைந்து வயதில் என்ன தெரியும்? இப்ப வெல்லாம் சொல்கிறார்களே சைல்ட் எபியூஸ் என்று. அதுதான் நடந்திருக்கு. அதை எல்லோரும் கையாளத் தெரியாமல் விட்டது அந்த மனுசனுக்கு வாய்ப்பாக போய்விட்டது. தப்புகள் தொடர்ந்து நடப்பதற்கு நாங்கள் அனுமதித்து விட்டோம். எங்கள் காலத்தில் இந்த சைல்ட் எபியூஸ் பற்றி ஒன்றும் தெரியாது. பெரியப்பா, சித்தப்பா, மாமா என்று வீட்டு உறவுகளாலேயே இந்த துஷ்

*பிரயோகம் நடந்திருக்கு. இதுகள் நடந்த பிள்ளைகளும் அறியாமையாலோ, பயத்தினாலேயோ பெற்றோருக்கு சொன்ன தில்லை. மறைக்க வேணுமென்றில்லாமல் மறைத்தது குற்றம் செய்தவர்களுக்கு வாய்ப்பாகப் போய்விட்டது. சில பேருக்கு இந்த சேஷ்டைகளுடன் முடிந்திருக்கு. மேகலா மாதிரி சிலபேர் அதற்கும் மேலேயே போய் மாட்டுப்பட்டிருக்கிறார்கள். ஆனால் பாவம் மேகலா அதை உணர்ந்ததால்தான் தன்னை சிறைப்படுத்தி வாழ்ந்திருக்கிறா'' அவள் தன்னை சிறைப்படுத்தி ஒரிடமும் வெளிக்கிடாமல் இருந்தாளே ஒழிய அந்த மனிசன் வெட்கமேயில்லாமல் வெளியில் நடமாடித்தானே திரிந்தான். இப்பவும் திரிகிறான்.' என்றார்.'ஓம்தான். பெரிய உத்தியோகத்தில் இருந்தும் அவரால் சமூக அக்கறையுடன் நடந்து கொள்ளத் தெரியவில்லையே. அவர் கல்யாணம் செய்யும்போது மேகலா வுக்கு என்ன வயதிருக்கும். ஒன்பதோ பத்தோ தானே இருந் திருக்கும். எவ்வளவு வக்ரபுத்தியிருந்தால் இப்படிச் செய்திருப்பார். ஆம்பிளை இல்லாத வீட்டில் எவ்வளவு பொறுப்பாய் இருந்திருக்க வேண்டும். உங்கள் அம்மாவுக்கு எவ்வளவு நம்பிக்கைத்துரோகம் செய்திருக்கிறார்'' சரி மேகலாவுக்கு தெரியாத வயது. அம்மா இறந்தபிறகு ஹொஸ்ரலில் தானே சேர்த்துவிட்டது. பிள்ளை களைப் பார்க்க யாருமில்லையென்று பொய் சொல்லிக் கூட்டிப்போனபோது இவளுக்கு எங்கே புத்தி போனது? இப்ப நினைத்தாலும் இரத்தம் கொதிக்கிறது. ஒரு குழந்தை வந்தபிறகு கூட என்னுடன் வேலை பார்த்தவன் தான் அவளைக் கல்யாணம் செய்கிறன் என்றான். அவன் ஒரு விடோயர். அதற்கு அக்காவும் தங்கையும் இரண்டாந்தாரமாய் கொண்டு போய் தள்ளப் போகிறாயா? என்றார்கள்.'' "சரி காலம் கடந்து போச்சு. பேசி என்ன பயன்.'' மாலா! அதனால்தான் நான் மேகாவைப் பற்றிக் கூடக் கவலைப்படுகிறேன். பார்ப்பதற்கு அவளைப்போல அழகாக வயதுக்கு மீறிய தோற்றத்தில் இருக்கிறாள். அப்போது வீட்டுக்குள்ளேயே நடந்திருக்கிறது. இங்கு வெளியில் நடப் பதற்கு நேரம் வேண்டுமா? அப்போது நாங்க கண்ணுக்குள் வைத்துக் காப்பாற்ற வேண்டாமோ? அப்பா என்ற மாயக் கண்ணாடியைக் காட்டி யாரும் ஏமாற்றிவிடக்கூடாது. நான்*

*மீராவுக்கு எதுவும் காட்டிக் கொள்வதில்லை. ஆனால் எனக்கு சதா அந்தப் பயம். இப்போது அதற்குச் சந்தர்ப்பங்கள் நிறையவே இருக்கிறது.'*

*அடுத்து அடுத்து வரும் மாதங்களில் தாத்தாவும் பேத்தியும் சுவிஸ்க்குப் பயணம் ஆனார்கள் தீபக்கைப் பார்ப்பதற்கு. மீராவும் தடை சொல்லாமல் அவர்கள் போவதற்கு அனுமதித்ததில் இருந்து அவளின் மனமும் மாறிக் கொண்டு வருகிறது என்பதை உணர்ந்தார்கள். வண்ணவண்ணக் கனவுகளுடன் ஓயாமல் இசைக்கும் அப்பா என்ற புனிதமான உறவைத்தேடி மேகா என்ற குழந்தை மேகத்தினூடே பறந்து செல்கிறாள். பிரிக்கப்பட்ட இரு உறவுகள் சேரக் காலம் கனிந்து வந்தது.*

❑

# அறுந்த பட்டம்

**இன்று** *நளாயினியின் நண்பி சுந்தரி அக்காவின் நினைவு நாள். இரண்டு நாளாகவே நளாயினிக்கு சுந்தரி அக்கா வின் ஞாபகமாகவே இருந்தது. பேத்தி ஆதிரை "ஏன் அம்மம்மா கவலையாக இருக்கிறீங்க" என்று இரண்டு முறை கேட்டுவிட்டாள். மகளுக்குத் தெரியும் தாய் சுந்தரி ஆன்ரியின் நினைவாக இருப்பது. இன்று குளிரு மில்லாமல் வெயிலும் இல்லாமல் மிதமாகக் காலநிலை இருந்ததால் காலையிலேயே கோயிலுக்குச் செல்ல நினைத்தாள்.நளாயினிக்கு தனிமை தேவைப்பட்டது. தனிமையிலிருந்து தன் நண்பியைப்பற்றிய நினைவு களில் மூழ்க எண்ணி முதலில் கோயிலுக்குப்போய் அப்படியே நடந்துவரத் தீர்மானித்தாள்." சரியம்மா. மறக்காமல் ஃபோனை எடுத்துப் போங்கோ. கவனம்" கூறியபடியே மகள் அலுவலகத்துக்குக் கிளம்பினாள்.*

*நளாயினி ட்ராம் பிடித்து ட்ரெயின் ஏறி அடில்ஸ்வில் முருகன் கோயிலுக்குப் போனாள். யாழ்ப்பாணத்தில் இருந்த காலங்களில் நல்லூர் முருகனிடமும் பின்னர் கொழும்பில் வாழ்ந்த காலங்களில் சிலேவ் அயிலென்ட் முருகன் கோயிலிலும் சென்று வழிபட்டவள் சுவிஸ் வந்தபின் இந்த அடில்ஸ்வில் முருகனிடம் வரத் தொடங் கினாள். மனம் சரியில்லாத நாட்களிலெல்லாம் இந்த முருகனிடமே வருவாள். மத்தியானம் இரண்டு மணி வரை நிம்மதியாகக் கும்பிடலாம். இன்று வியாழக்கிழமை யாதலால் ஆட்கள் இருக்காயினம். ஆட்கள் நிறையப் போகும்நாளான வெள்ளிக்கிழமைகளில் அவள் கோயில் போவதைத் தவிர்த்து விடுவாள். ஆற்றங்கரையோடு இருக்கும் ஆலயம். எங்கே தான் சத்தத்துடன் ஓடி தன்னிடம் வாழும் அன்னங்கள் பயந்து ஓடிவிடுமோ என்று போலும் இந்த ஆறு சத்தமேயில்லாமல்*

அமைதியாக ஓடிக்கொண்டிருந்தது. சுவிசில் காற்றடிப்பது குறைவாக இருப்பதால் ஆறுகள் சலனமேயில்லாமல் அமைதி காப்பது வழக்கம். சுவிஸ் அமைதியான நாடென்பதை இந்தச் சிறு ஆறு கூட பிரகடனப்படுத்திக்கொண்டு இருப்பதுபோல் இருந்தது. ஒரு வாரமாக மழையும் குளிருமாக இருந்து வெயில் அடிப்பதால் ஆங்காங்கே ஆண்களும் பெண்களும் வெயிலின் இதமான சூட்டை அனுபவித்துக்கொண்டு இருந்தனர். தாயகத்தில் மாரிக்காலத்தில் மழை ஓய்ந்து வெயில் அடிக்கும்போது கோழிகள் செட்டையை விரித்து அவற்றின் ஈரத்தைக் காயவைப்பது நினைவுக்கு வந்தது. ஆறு ஓடும் பாலத்தருகே நின்று ஆற்றின் அழகை ரசித்தவள் அங்கொன்றும் இங்கொன்றுமாய் நின்ற குஞ்சு அன்னங்களுக்கு உணவிட எங்கிருந்தோ நீர்க்காக்கைகள் வந்து நிறைந்து ஆற்றின் அமைதியைக் கெடுத்தன. அங்கிருந்த அன்னங்களை சாப்பிடவிடாமல் இரைச்சல் சத்தத்துடன் பறித்து உண்ட நீர்க்காக்கைகளைப் பார்த்து ‘சில மனிதர்களைப் போலதான் இந்த நீர்க்காக்கைளும். பறித்து உண்பதே இதன் வேலை’ எண்ணியபடி கோயிலை நோக்கிச் சென்றாள். ஆற்றின் மணத்தை அள்ளிக்கொண்டு வீசிய தூய்மையான இனிய காற்றைத் தன் நுரையீரல் முழுவதும் நிரப்பிக்கொண்டு மனதைப் பாரமாக்கிய சுந்தரியக்காவின் நினைவிலிருந்து வெளியேற முயற்சித்தாள். மகள் சொல்வது நினைவுக்கு வந்தது.” “சுந்தரி ஆன்ரி இறந்து இரண்டு வருடமாகியும் அவவின் நினைவுகள் என்ற சுமையைத் தூக்கிக்கொண்டு திரிகிறீங்களே. எப்பதான் இறக்கிவைக்கப் போறீங்களோ” மகளின் ஆதங்கம் புரிந்தாலும் இந்த நினைவுகள் என்ற கொடும் பிடிக்குள் அகப்பட்டு அல்லாடுவதும் வெளியேற முடியாமல் திணறுவதும் புரிந்தது. சுந்தரியின் துன்பச்சுமைக்கு தான் எள்ளளவும் காரணமாக இல்லாமலிருந்தாலும் அத்துன்பம் தன்னையும் சுற்றிச் சுழன்று வருவதைத் தடுக்க முடியாமலிருந்தது.

கோயிலருகே சோ என்ற சத்தத்துடன் நீர் பாய்ந்து கொண்டிருந்தது. அந்த இடத்தில் நின்று அந்த இரைச்சலை உள்வாங்கிக்கொண்டு ஆலயத்துள் சென்றாள். முருகன்

அலங்காரத்துடன் அழகாகக் காட்சியளித்தான். நிம்மதியாக மனஅமைதியுடன் கும்பிட்டுவிட்டு சுந்தரியின் ஆத்மசாந்திக்காய் வேண்டி நெய் விளக்கேற்றி விட்டு அஙகேயே உட்கார்ந்தாள். மனம் தாயகத்தை நோக்கி ஓடியது.ஐரோப்பா செல்லும் விரைவுத் தொடருந்து போல் நினைவுகள் நீண்டு கொண்டு சென்றது. சிறுவயதுக்காலத்தில் தொடங்கி ஓடிய மனம் இன்று வரை தங்கள் நட்பை நினைத்துப் பார்த்தது. இருவருக்கும் இடையே பத்து வயது வித்தியாசம். ஆனாலும் தோழிகள். எல்லோரும் அதிசயப்படுவார்கள் இவ்வளவு வயது வித்தியாசத் தில் தோழிகளாக இருக்க முடியுமா என்று. நளாயினியும் சுந்தரியும் அடுத்தடுத்த வீடுகளில் இருந்ததும் நெருங்கிய சினேகிதிகளாக இருந்ததற்கு ஒரு காரணமாயிருக்கலாம். நளாயினி சிறுமியாக இருந்தபோதே சுந்தரிதான் அவளுக்கு எல்லாம். ஸ்கூல் கூட்டிப் போவது தொடங்கி பாடம் சொல்லிக் கொடுப்பது வரை எல்லாமே சுந்தரிதான். ஏதேனும் சிற்றுண்டி சாப்பிட்டாலும் இரண்டு பேரும் ஒருவருக்கொருவர் கொடுத்தே சாப்பிடுவார்கள். எங்கேயாவது கோயிலுக்கென் றாலும் இருவருமே சேர்ந்தே போவார்கள். இருவரையும் தனி யாகப் பார்க்கவே முடியாது. நளாயினியும் சுந்தரியிடம் கேட் காமல் எதுவுமே செய்ய மாட்டாள். அது நட்பா. அக்கா தங்கை உறவா யாருக்கும் புரியாது. சுந்தரி தன் சொந்த தங்கையைப் போல அறிவுரை கூறுவாள். என்ன படிப்பு படிக்க வேண்டும் எந்த யுனிவசிற்றிக்கு போக வேண்டும் என்று எல்லாமே சுந்தரியின் வழி காட்டலின்படியே படித்தாள். சுந்தரிதான் நளாயினிக்கு றோல்மொடல். சுந்தரியைப் போலவே தானும் ஆசிரியையாக வேண்டும் என்பதில் மிகவும் பிடிவாதமாக இருந்தாள். நளாயினி யின் தந்தை எப்படியும் தன் மகளை கணக்காளராக்க வேண்டு மென்று எவ்வளவோ பிடிவாதமாக இருந்தும் அதை நிராகரித்து ஆசிரியையானாள்.

வெவ்வேறு காலகட்டத்தில் படித்து பட்டம் பெற்று ஆசிரியை களாக வாழ்க்கைப் பயணத்தைத் தொடர்ந்தனர். வெவ்வேறு பாடசாலைகளில் கடமையாற்றினாலும் கடிதம் அவர்கள்

இருவரையும் இணைத்தபடியே இருந்தது. வாரம் ஒரு கடிதமென் றாலும் எழுதி விடுவார்கள். திருமணம் என்ற பந்தத்துக்குள் நுழையும்வரை அவர்களிடம் எந்த இரகசியமும் இருந்த தில்லை. நளாயினியின் கணவர் எந்தத் தடையும் விதிப்ப வரல்ல. ஆனால் சுந்தரிக்கு அப்படிப்பட்ட வாழ்க்கை வாய்க்க வில்லை. கெடுபிடியான கணவர். இத்தனைக்கும் அவரும் ஒரு பாடசாலை அதிபராக இருந்தார். பெண் சுதந்திரம் என்பது அங்கு வெறும் ஏட்டளவிலேயே இருந்தது. சுதந்திரப்போக்கும் எதற்கும் அஞ்சாமல்சரியென்றுதனக்குத்தெரிந்ததைச்செய்யும்ஆற்றலும் வாய்ந்த சுந்தரியக்கா கணவனுக்கேற்ற மனைவியாகத் தன் வாழ்க்கையைச் சுருக்கிக் கொண்டாள். கடிதத்தொடர்பு முற்றாகவே முடங்கியது. நளாயினியின் கடிதங்களுக்கு பதில் வருவது குறைந்து கொண்டே போனது. நளாயினியும் ஆரம்ப காலங்களில் யாழ்ப்பாணத்தில் வேலை பார்த்தாலும் திருமணத் தின்பின் கணவர் கொழும்பில் வேலை பார்த்ததால் தானும் அங்கேயே மாற்றலாகி வந்துவிட்டாள். பாடசாலை. குழந்தை என்று இயந்திரகதியானாள். கொழும்பில் அம்மாவின் துணை இன்றி வேலைக்குப்போய் வீட்டுவேலைகளையும் பார்ப்பது இலகுவான காரியமில்லை. சுந்தரியிடமிருந்து வருடமொரு முறை பிறந்தநாளை மறக்காமல் வாழ்த்து மடலும் நீண்ட கடிதமும் வரும்.நான்கு பிள்ளைகளுடன் அவளுக்கும் எதற்குமே நேரம் இருப்பதில்லை. ஆனாலும் கடிதங்களில் கணவனைப் பற்றி குறைகூறி எதுவுமே எழுதமாட்டாள். ஆனாலும் அதற்குள் மறைந்து நிற்கும் சோகம் நளாயினிக்கும் புரியும். யாருக்குமே தீங்கு நினைக்காத எல்லோருக்கும் நன்மை மட்டுமே செய்த சுந்தரியக்காவுக்கு ஏன் இப்படியொரு வாழ்க்கை அமைந்தது என்று அவ்வப்போது கவலைப்படுவாள்.

சுந்தரியும். அவள் கணவரும் ஒரே பாடசாலையில் படிப்பிப் பதால் ஒன்றாகவே போய் ஒன்றாகவே வருவார்கள். யாழ்ப் பாணத்தில் வேலை பார்த்தபோது கூட நளாயினியும் சுந்தரியும் சந்திக்கும் வாய்ப்பும் குறைவு. நீண்டகாலத்துக்குப் பின் இரண்டாவது மகன் படிப்பிற்காக அமெரிக்கா போகப்போவதாக

*கடிதம் எழுதினாள். ’மேல் படிப்புக்கு என்றால் பரவாயில்லை. ஏ.எல்லுடன் ஏன் வெளிநாடு அனுப்புகிறீர்கள். இரண்டும் கெட்டான் வயது. என்ன அவசரம்?” நளாயினியின் கடிதத்துக்குப் பதில் வரவில்லை.கால ஓட்டத்தில் நளாயினி அதை மறந்தும் விட்டாள்.*

*சுந்தரியின் மூத்த மகனின் திருமணத்துக்குப் போனபோது இரண்டாவது மகன் லோகன் யாரையோ காதலிப்பதாகவும் அதை பிரேக் பண்ணத் தான் தகப்பன் அவனை அமெரிக்கா அனுப்பியதாகவும் சொன்னாள். நல்ல குடும்பம் என்றாலும் தன்னை மீறி அவன் விரும்பியதுதான் சுந்தரியின் கணவரின் பிரச்சனை. இப்படியும் ஆட்கள் இருக்கிறார்களே என்று நளாயினி தன் கணவனிடம் கூறி குறைபட்டாள். நளாயினியின் மாமனார் இறப்பு, கணவனின் தங்கையின் திருமணம் என்று பல பொறுப்புக்களால் சுந்தரியின் விடயங்கள் எல்லாமே மறந்து விட்டிருந்தாள் நளாயினி.*

*நீண்டநாட்களின் பின் சுந்தரியின் கணவனின் இறப்பு வீட்டுக்குச் சென்றிருந்தபோது சுந்தரியின் மூன்று பிள்ளைகளும் திருமண மாகி வெளிநாடுகளில் இருப்பதும் லோகன் படிப்பைக் குழப்பி நாடு திரும்பியதும் தெரிந்தது. அவனின் பிரச்சனையால் தான் கணவனுக்கு இப்படியாகிவிட்டது என்று கூறினாள். சுந்தரி அன்று கூறியவை நளாயினியின் மனதில் அடிக்கடி முட்டி மோதிக்கொண்டு வருவதை தடுக்க முடியாமலிருந்தது.’ லோகனை மேற்படிப்புக்காக அமெரிக்கா அனுப்பப் போவதாக அவர் சொன்னபோது அதற்குப் பின்னால் இப்படியொரு சூழ்ச்சியிருக்குமென்று நினைக்கவேயில்லை. முழுதாக அவரின் பேச்சை நம்பினேன். அவனின் கெட்டித்தனத்தை நினைத்துத் தான் அனுப்புகிறாரென்று நினைத்தேன். ஆனால் என்னையும் மகனுக்கு எதிராக்கிப் போட்டுப் போய்ச் சேர்ந்திட்டார்’ விரக்தி யுடன் கூறினாள். சுந்தரியக்காவுக்கு ஆறுதல் கூறி விட்டுத் திரும்பியவள் ஒரு வருடத்தின் பின்தான் போக முடிந்தது. சுந்தரி அக்காவின் வாழ்க்கையே தடம்புரண்டு சரிபண்ண*

முடியாத அளவுக்கு இருந்தது விளங்கி விக்கித்துப் போனாள் நளாயினி. தான் தொடர்பு இல்லாமலிருந்ததை நினைத்துக் குற்ற உணர்ச்சிக்கு ஆளானாள்.

எல்லோரையும் வழிநடத்தத் தெரிந்த சுந்தரியக்கா இப்படி ஒரு மகன் விடயத்தில் தப்புத் தப்பாய் முடிவெடுத்ததில் வாளாயிருந்ததினால் இப்போது தவித்துக்கொண்டு நிற்பது வேதனையைத் தந்தது. சுந்தரியக்காவின் கணவர் மனைவி சொல்வதைக் கேட்காமல் மகனின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாது எல்லாவற்றையும் தலைகீழாக்கி விட்டுப் போய் சேர்ந்துவிட்டார். சுந்தரி அக்காவின் கணவர் வெறும் ஈகோவாலும் தான் அமெரிக்கா போய்ப் படிக்க முடியாமல் தன் கனவு வீணாய்ப்போனதனால் தன் கனவுகளை மகன் மேல் சுமத்தியதாலும் லோகனின் காதல் அவரின் காலுக்குள் நசுக்கப்பட்டு சின்னாபின்னம் ஆகியது. தன் காதலில் தான் வெற்றி பெறாமல் போனதற்கு தன் பெற்றோரே முழுக்காரணம் என்ற எண்ணம் அவனை மோசமானவனாக ஆக்கியது. அதில் தாயின் பங்கு எதுவும் இல்லையென்பது அவன் உள்ளுணர்வுக்கு புரிந்தாலும் அதை மூளையில் பதிய வைக்க அவன் விரும்ப வில்லை. தன் ஆற்றாமையின் வெளிப்பாடாக இப்போது தன்னுடன் இருக்கும் தாயைக் கொடுமைப்படுத்தி தன் வெறுப்பு உணர்ச்சிக்கு வடிகால் தேடிக்கொண்டான். அதனால் பெற்றதாய் படும் துன்பம் அவன் கண்களுக்குத் தெரியாமல் போய்விட்டது.

சுந்தரியக்கா சொல்லி அழுததைவிட சொல்லாமல் மனதுக்குள் பூட்டி வைத்துக் குமுறியது நளாயினிக்கு நன்றாகவே புரிந்தது. மூன்று பிள்ளைகளும் நல்லபடியாக வளர்ந்து நல்வாழ்க்கை வாழ இவன் மட்டும் இப்படிக் குரூரபுத்தியுடன் வளர நான் காரணமாய் இருந்திட்டேனோ? தப்பாய் வளர்த்திட்டேனோ? மற்றவர்கள் மனதைக் காயப்படுத்தாமல் இருக்க வேண்டுமென்பதைச் சொல்லிக்கொடுக்க மறந்திட்டேனோ?' சொல்லிச் சொல்லி வேதனைப்பட்டாள். அவள் கண்களிலிருந்து கண்ணீரும் வற்றி விட்டது போலும். விரக்தியுடன் பேசிய சுந்தரியக்காவின்

நடவடிக்கை மகனின் குறைகளை மற்றவருடன் பங்குகொள்வது பெரிய குற்றம் என்பது போல் இருந்தது அறுந்த பட்டமாய் மேலே பறக்க முடியாமல் லோகன் அல்லாடுவது அந்தத் தாயின் மனதை வேதனைப்படுத்திக் கொண்டே இருந்தது. அத்துடன் மகன் லோகன் வீடடுக்கு வரும் நேரமென்று கூறி அவளை வீட்டைவிட்டு அகற்றிடவே முனைவது நளாயினிக்குப் புரிந்தது. இரண்டொரு நாளில் சுந்தரியிடமிருந்து நீண்ட ஒரு கடிதம் வந்தது. அன்பு நளா! அன்று உன்னிடம் மனந்திறந்து பேச முடியவில்லை. ஏனென்பதை நீ புரிந்துகொண்டிருப்பாய் என்று எனக்குத் தெரியும். லோகன் விடயத்தில் இவர் எடுத்த தப்பான முடிவு அவனைக் கொடூரமானவனாக மாற்றிவிட்டது. இதற்கு நான் உடந்தையாக இல்லாவிட்டாலும் தடுக்க முடியாத கையாலாகாதவளாய் இருந்தது உண்மையே. அவருக்கு அடங்கியே பழகியிருந்த நான் அவரை மீறி எதுவும் செய்யாமல் இருந்துவிட்டேன். லோகன் காதலித்த அந்தப் பிள்ளை வீட்டுக்கு இவர் போய் கடைசிவரை தான் கல்யாணம் செய்ய விடவே மாட்டன் என்று சொல்லிப்போட்டு வந்திட்டார். ஆனால் இது எனக்குத் தெரியாதென்பதை இன்னும் லோகன் நம்பத் தயாராயில்லை.

அதற்குப்பிறகு அவர்கள் அந்தப்பிள்ளைக்கு கல்யாணத்தை செய்து விட்டார்கள். யாரோ ஃபரன்ட் மூலம் கேள்விப்பட்டு படிப்பையும் குழப்பிக்கொணடு வந்து தகப்பனிடம் சண்டை போட்டான். அவளைக் கல்யாணம் செய்து தருவேன். படித்து விட்டு வா என்றுதான் படிக்க அனுப்பினவர். கண்ட பாட்டுக்குத் தர்க்கம் பண்ணியதில் அவருக்கு பிரஷர் கூடி ஸ்ரோக் வந்து ஒரு பக்கம் செயலிழந்துவிட்டது. வாயும் பேசமுடியாமல் போய் விட்டது. செய்த பாவத்திற்குத்தான் அவருக்கு இப்படியாகிப் போனதென்று சொல்லிக் காட்டி பேசியபடியே இருந்தான். என்னிலும் கோபம் நானென்றாலும் தனக்கு இங்கு நடந்ததை அறிவிக்கவில்லையென்று. அவன் என்மேல் கோபப்பட்டதும் நியாயம் தானே. ஆனால் எனக்கு இவர் அந்தப்பிள்ளை ராக-னியின் வீட்டுக்குப் போனதோ இவர் சொன்னதோ எனக்குத்

தெரியாது. ஆனால் கல்யாணம் என்று கேள்விப்பட்ட போது லோகனுக்கு அறிவிக்கத் தைரியம் வரவே இல்லை. அமெரிக்கா போக இரு வாரத்துக்கு முதல் 'நான் ராகினியை றிஜிஸ்ரர் பண்ணிவிட்டுப் போகட்டா' என்று லோகன் கேட்ட தற்கு நான் 'அவசரப்படாதை. அப்பா படித்து முடிய கல்யாணம் செய்யலாம் என்று தானே சொன்னார். ஆனபடியால் நீ நல்ல படியாய் போய்ப் படித்துவிட்டு வா' என்று நான் சொன்னது எவ்வளவு தப்பாய் போனது. எப்படியிருந்த சுந்தரியக்கா எப்படி இவ்வளவு கோழையானா என்று நீ நினைப்பாய். எனக்குத தெரியும். கல்யாணத்துடன் நான் மாறி விட்டேன். அம்மா அப்பாவிடம் எனக்கு கிடைத்த அன்போ சுதந்திரமோ என் கணவரிடம் எனக்கு கிடைக்கவில்லை ஆணாதிக்கம் நிறைந்த. தொட்டதற்கெல்லாம் கோபமும் சணடையும் பிடிக்கும் இவரின் கோபத்துக்கு முன்னால் நான் தைரியமில்லாதவளாகி விட்டேன். லோகனின் காதல் விடயம் எனக்குத் தெரிந்தவுடனே தடுத்து இருக்கவேண்டும் அல்லது அவர்கள் சேர உதவியிருக்க வேண்டும். இரண்டும் செய்யாதது என்னுடைய பெரிய பிழை. இதுவும் ஒரு பெரிய நம்பிக்கைத்துரோகந்தான். மனைவியை விட்டு ஒரு கணவன் வேறொரு பெண்ணுடன் உறவாடுவதோ அன்றி ஒரு பெண் கணவனை விட்டு இன்னொரு ஆடவனுடன் உறவு கொள்வது மட்டும் துரோகம் இல்லை. ஒரு தாய் நம்பிய மகனுக்கு எதுவுமே செய்யாமலிருப்பதும் துரோகந்தான். அப்பாவைவிட என்னை முழுவதுமாக அவன் நம்பியிருந்தான். அவனுடைய நம்பிக்கையைப் பாழாக்கிவிட்டேன். மற்றப் பிள்ளைகளை கட்டுப்பாட்டுடன் வளர்த்த என்னால் லோகனைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அவன் முழுக்க முழுக்க அப்பா வின் குணம்.ஆனால் அறிவிலும் படிப்பிலும் வலு கெட்டிக்கார னாக இருந்தான். அவனுடய கெட்டித்தனத்தைப் பார்த்துத்தான் அமெரிக்கா அனுப்புகிறார் என்று நினைத்தன். ஆனால் அவர்களைப் பிரிக்க அவர் செய்த சூழ்ச்சி என்பது எனக்குத் தெரியாத அப்பாவியாக இருந்து விட்டேன். அவனைத் தகப்பன் கையாண்ட விதம் மோசமான விளைவுகளைக் கொண்டுவந்து விட்டது. நானும் தன்னைக் கைவிட்டது அவன் மனதைப்

*பெரிதும் பாதித்துவிட்டது. தகப்பனுக்கு ஸ்ரோக் வந்ததால் தான் அவருக்குத் தண்டனை கொடுத்துவிட்டதாக நம்பினான். என்னைத் தண்டிப்பதாக நினைத்து என்னைக் கைகளாலும் வார்த்தைகளாலும் காயப்படுத்தத் தொடங்கினான். டொக்ரரிடம் ஒரு கௌன்சிலிங் போகலாமென்றால் ஒத்துக் கொள்ளவில்லை. எனக்கு விசரா என்று கேட்டுச் சண்டை பிடிப்பான். மூத்தமகன் வந்து பார்த்து எவ்வளவோ சொல்லியும் கேட்காததால் 'அவன் விதிப்படி நடக்கட்டும். நீங்க இப்படிக் கஷ்டப்பட வேண்டாம். நீங்க என்னோடு வாங்கோ' என்று எவ்வளவோ வாதாடினான்.*

*ஆனாலும் நான் போக பிடிவாதமாக மறுத்துவிட்டேன். நான் எனக்கான தண்டனையை அனுபவிக்க வேண்டுமென்பதில் உறுதியாக இருந்தேன். இன்பமும் துன்பமும் அவரவர் கர்ம பலனின்படியே நடக்குமென்பதில் முழுமையாக நம்பிக்கை கொண்டிருந்தேன். மௌனமாக அவனுடைய ஏச்சுக்களை தாங்கப் பழகிக்கொண்டேன். நான் எந்தப் பிறவியில் செய்த பாபமோ இப்படியொரு வேதனையை அனுபவிக்க வேண்டி வந்துவிட்டது.இதை முழுமையாக அனுபவித்து என் பாவக் கணக்கைத் தீர்க்கவேண்டுமென்று இருந்தேன். இதிலிருந்து தப்புவதற்காக மற்றப் பிள்ளைகளோடு போய் இருப்பதோ அல்லது வேறிடத்துக்குச் செல்வதோ தீர்வாகாது என்பதில் உறுதியாக இருந்தேன். என்னுடைய விதி முடியும்வரை அனுபவிப்பேன் என்பதில் கடுமையாக இருக்கிறேன். என் மூத்த மகன் சொல்வதுபோல் கல் போலத்தானிருக்கிறேன். என் பாவக் கணக்கு விரைவில் தீர்ந்து அடுத்த பிறவி நல்லதாக அமைய வேண்டுமென்று உன் சுந்தரியக்காவிற்காக வேண்டு என்று கடிதத்தை முடித்திருந்தாள். அவள் சொன்ன விடயங்களை விட சொல்லாத விடயங்களை நளாயினியால் ஊகிக்க முடிந்தது. அதுதான் அவளிடம் இருந்து வந்த கடைசிக் கடிதம்.*

*நினைவுகளை மீட்டதில் மனம் இலேசாகிப் போயிடவில்லை. மகள் அடிக்கடி கூறுவாள்." நல்ல பொசிற்றிவ் எண்ணங்களைத் திரும்பத் திரும்ப நினைப்பது மன ஆரோக்கியத்திற்கு நல்லது.*

*ஆனால் எங்களால் மாற்றி அமைக்க முடியாத நெகற்றிவ் எண்ணங்களைத் திரும்பத் திரும்ப நினைவில் கொண்டு வருவது யாருக்கு என்ன நன்மையைத் தரப் போகிறது? அந்த நினைவுகள் வந்தால் உடனே அதிலிருந்து வெளியே வாங்கம்மா. உங்களுக்கு சந்தோஷம் தருகிற எத்தனை விஷயங்கள் உங்கடை பேரப்பிள்ளைகளிடம் காண்கிறீங்க. அவர் களுடன் சிரித்து விளையாடி மனதை லேசாக வைத்திருங்கோ. ஒருவரின் துன்பத்தை ஒருவர் தாங்க முடியாது. எங்களுக்குச் சொல்வீங்க அழுதாலும் பிள்ளை அவளே பெறவேண்டு மென்று. நீங்க மட்டும் தேவயற்ற நினைவுகளைச் சுமந்து கொண்டு. நினைவுகள் போறன் என்றாலும் நீங்க விடமாட்டீர் கள் போலிருக்கே.' உண்மை புரிந்தது. சுந்தரியக்காவின் துன்பத்தைக் குறைக்கவோ அல்லது இல்லாமல் செய்திடவோ முடியாத கையறுந்த நிலையில் தான் நின்றது இப்பவும் வலித்தது. நான் வாழும்வரை இந்த எண்ணம் வலிந்து நிற்கும் போலிருக்கிறதே. தொடர்ந்து இதையே நினைக்கா விட்டாலும் அவ்வப் போது வருவதைத் தடுக்க முடியாமலிருக் கிறதே. பெருமூச்சுடன் நினைவுகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டு மீண்டும் முருகனைக் கும்பிட்டு விட்டு எழுந்தாள் நளாயினி. அறுந்த பட்டமாக இல்லாமல் லோகனின் வாழ்வு மாறவேண்டுமென முருகனிடம் பிரார்த்தித்து விட்டு வீட்டுக்குக் கிளம்பினாள்.*

❑

# கனவாகிப்போன சொந்தம்

**அப்பாவின்** *மரணவீட்டுக்கு வந்த நான் வீட்டை ஒதுக்கி அம்மாவை அழைத்துச் செல்லப் போகிறேன்.நான் ஒரே பிள்ளை. அம்மாவுக்கு அந்த வீட்டைவிட்டு என்னுடன் வெளிநாட்டுக்கு வருவதற்கு மனமேயில்லை. "இன்னும் எவ்வளவுகாலம் நான் வாழப்போகிறேன். இந்தப் போர்க் காலத்தில் எல்லாம் எவ்வளவு பிரச்சனைகளைத் தாங்கி யிருந்தோம். "அப்பா வாழ்ந்த வீடு இதை விட்டுவிட்டு என்னால் வரமுடியாது" என்று பிடிவாதம் பிடித்தா. ஆனால் என்னால் அப்படி விட்டுவிட்டு வருவதற்கு முடியவில்லை. அம்மா ஒரு சுகத்தையும் அனுபவித்த தாக எனக்கு ஞாபகமில்லை. அப்பா அம்மாவிடம் பேசுவதுகூட அபூர்வம்தான். அலுமாரியை ஒதுக்கும் போது எழுதப்பட்ட நிறையத் தாள்கள் இருந்தன. அதைப் பிரித்தால் அம்மாவின் கையெழுத்து என்னை வாசிக்கத் தூண்டியது. அம்மா கதைகள் கூட எழுதுவாவா? எனக்கு அதிசயமாக இருந்தது. வாசிக்க உட்கார்ந்த எனக்கு அப்பாவின் மறுபக்கமும் அம்மா வாழ்ந்த புது அத்தியாயமும் தெரிந்தது. அப்பாவுக்குள் இப்படியொரு சோகமா? அப்பாவைப் புரிந்து வாழ்ந்த அம்மா எனக்கு பெருமையாக இருந்தது இப்படிப்பட்டவர் களுக்கு நான் மகளாகப் பிறந்ததை எண்ணி. தாள்களில் ஓடியது அம்மாவின் எழுத்துக்கள் இல்லை, அவை அம்மாவின் எண்ணங்கள். அவ வாழ்ந்த வாழ்க்கை. மனசு பாரமாக தெரியாத ஒரு பக்கத்தை அறிய வாசிக்கத் தொடங்கினேன்.*

*திருமணமாகி கணவன் வீட்டுக்கு வந்தவுடனேயே கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டது போலிருந்தது ஈஸ்வரிக்கு. கல்யாணத்துக்கு முதலே ஒரு முறை கோயிலில் சந்தித்து தன் வாழ்வில் ஏற்பட்ட காதல் தோல்வி பற்றி கூறிவிட்டான் மகேஸ்வரன். தன்னால்*

தன் காதலி மகாராணியை வாழ்நாள் முழுக்க மறக்க முடியா தென்பதை தெட்டத்தெளிவாகக் கூறிவிட்டான். கல்யாணத் துக்குப் பின் ஈஸ்வரியை ஒரு குறையுமில்லாமல் பாரத்துக் கொள்வதாகவும் சொன்னான். தாயில்லாமல் சித்தியின் கொடுமைகளுக்குள் வாழ்ந்தவளுக்கு அங்கிருந்து வெளியேறி னாலே போதுமென்றிருந்தது. இருக்க ஒரு இடமும் சாப்பாடு உடையும் யாரும் கொடுத்தாலே போதும் என்று இருந்த ஈஸ்வரியும் சம்மதித்தாள்." "அம்மாவின் கரைச்சலால் தான் நான் திருமணத்துக்கு சம்மதித்தேன். என்னால் இன்னொரு பெண் ணைக் காதலிக்க முடியாது. பாதுகாப்பும் ஒரு சாதாரணமான அன்பும் மட்டுமே என்னால் தரமுடியும். நிறைய எதிர்பார்ப்பு களுடன் வரவேண்டாம். விருப்பம் இல்லாவிட்டால் சம்மதிக்க வேண்டாம்" என்றான். எதிர்பார்ப்புகள் இல்லா விட்டாலும் முன்பின் தெரியாத ஆணுடன் அதுவும் அன்பு, அன்னியோன்யம் இல்லாமல் எப்படி வாழ்வதோ என்று திகிலாகவே ஈஸ்வரிக்கு இருந்தது.

வீட்டுக்கு வந்த அன்றே தங்கள் அறைக்குள் அழைத்துச் சென்று ஒரு அலுமாரிக்கு அருகில் அழைத்துச் சென்றவன் "இதில் நான் மகாவுக்காக வாங்கி வைத்திருந்த உடைகள், நகைகள் எல்லாம் இருக்கு. ஆனாலிதை யாரும் தொட அனுமதிக்க மாட்டேன். உங்களுக்குத் தேவையானவற்றை நீங்கள் வாங்கிக் கொள்ளலாம். நான் மானசீகமாக மகாவுடன் வாழ்ந்துகொண்டு தானிருக்கிறேன். என்னை எதற்கும் தொந்தரவு செய்யாமலிருந் தால் போதும். நீங்க சுதந்திரமாக இங்கு இருக்கலாம்''

ஆ. எவ்வளவு அருமையான காதலன். அந்த மகாவுக்கு இவருடன் வாழக் கொடுத்துவைக்கவில்லையே என்ன காரணமா யிருக்கும் இவர்கள் பிரிவதற்கு. அவருடைய அக்காவிடம் கேட்டறிவம்' என்று நினைத்தாள். மாமியார் நல்ல அன்பாகவே இருந்தார். 'அவன் கனக்க கதைக்க மாட்டான்.என்ன வேணு மென்றாலும் என்னிடம் சொல்லும. கொஞ்ச நாள் போகப்போக எல்லாம் சரியாயிடும் அன்பாய் இருந்தால் மட்டும் போதும்.' என்றா. வேலைக்குப் போவான். கொடுத்ததை சாப்பிடுவான்.

தாயுடன் கூடக் கதைப்பது குறைவு. வேலையால் வந்தபின் தனிமையில் போயிருந்து பழைய பாடல்கள் கசற்றில் போட்டுக் கேட்டுக் கொண்டிருப்பான். எல்லாமே இனிமையான காதல் பாட்டுக்கள் அல்லது காதல் தோல்விப் பாட்டுக்கள்.' நான் பாட நீ ஆடு கண்ணே, நான் பேச நினைப்பதெல்லாம் நீ பேச வேண்டும், ஆகா இன்ப நிலாவினிலே, மனம் என்னும் மேடை மேலே முகம் ஒன்று ஆடுது, தென்றல் உறங்கிய போதும் திங்கள் உறங்கியபோதும், மலரோடு தனியாக ஏனிங்கு நின்றேன். அன்றொருநாள் இதே நிலவில். எல்லாமே தனக்கும் பிடித்த பாடல்களாக இருப்பதை உணர்ந்து சந்தோஷப்பட்டாள். எப்படி எங்கள் இரண்டு பேருக்கும் ஒரேவிதமான ரசனை. 'ஒரு ராகம் பாடலோடு காதில் கேட்டதோ' என்ற மகிழ்ச்சிப் பாடலும் சோகப் பாடலும் மாறி மாறிக் கேட்ட வண்ணமேயிருப்பான். கண்கள் மூடியபடி அந்தப் பாட்டுடன் ஒன்றிப்போவதைப் பார்க்கும்போது முகந்தெரியாத அந்தப் பெண்ணின்மேல் பொறாமை ஏற்படுவதைத் தவிர்க்க முடியாமலிருக்கும்.' எங்கே சென்றபோதும் மனம்போல வாழ்க வாழ்க' என்ற வரிகள் பாடும்போது கை கூப்பி வேண்டுவது அவளின் மனதைப் பிசையும்.

அவனது பேர்சுக்குள் ஒருநாள் அந்த மகாவின் ஃபோட்டோவைப் பார்த்தவள் மெய்மறந்து போனாள். இப்படியொரு அழகா? தெய்வீக அழகு என்று சொல்வார்களே. அது இதுதானோ? இப்படியொரு அழகை யார்தான் ஆராதிக்க மாட்டார்கள்? இப்போது எங்கு இருக்கிறா? ஏன் கல்யாணம் செய்ய முடியவில்லை. அடுக்கடுக்கான கேள்விகள் எழுந்தாலும் அந்த கேள்விகளுக்கான விடை கேள்விக்குறியாகவே இருந்தது. 'வெளியில் எங்கும் கூட்டிப்போறதுதானே. கோயில். சினிமா எங்கையாச்சும்' அம்மா கூறவும் ஆவலுடன் கணவன் முகத்தைப் பார்த்தாள். ஈஸ்வரியின் பக்கமே திரும்பாமல் 'நீங்க கூட்டீற்றுப் போங்கோ. காசு வைச்சிட்டுப் போறன் ரவுனுக்கு கூட்டிப்போய் சீலையோ வேறு உடுப்புகளோ வாங்கிக்குடுங்கோ தாயால் எதுவுமே பேசமுடியவில்லை? கல்யாணம் நடந்து இரண்டு மாதம் முடிந்தபிறகும் இப்படி விட்டேத்தியாக இருக்கும் மகனைப்

பார்த்து 'அவசரப்பட்டு ஒரு பெண்ணின் வாழ்க்கையைப் பாழாக்கிவிட்டேனோ' என்று குற்றஉணர்ச்சியில் சிறுத்துப் போனா.

ஒருநாள் தனிமையில் இருந்த மகனிடம் போய் 'தம்பி கொஞ்சம் உன்னோடு பேசவேணும்' பீடிகையுடன் அமர்ந்தாள். கண்மூடி யிருந்த மகேஸ், என்ன என்பதுபோல் விழித்துப் பார்த்தான்.' தம்பீ! எனக்குப்பிறகு தனிச்சுப் போய்விடுவாயென்றுதான் கல்யாணத்தை செய்து வைத்தேன். இனி மகாவைக் கல்யாணம் செய்யவே முடியாதென்ற பிறகுதானே நான் இப்படி முடிவெடுத்தன். மகா துணிஞ்சு தாய்தகப்பனை விட்டிட்டு வந்து இருக்கலாம். அந்தப்பிள்ளைக்கும் அந்தத் துணிச்சலில்லை. ஆரம்பத்தில் சப்போர்ட்டாயிருந்த தாயும் பிறகு தகப்பன் சொல்லைக்கேட்டு மாட்டன் என்றிட்டா. அதோடு பொலீஸ் கோர்ட்டு என்று உன்னையும் அலையவிட்டு தகப்பனுக்குப் பயந்து தூக்கியெறிஞ்சிட்டுது அந்தப்பிள்ளை. இனியென்ன தான் செய்கிறது. கிடைச்ச வாழ்க்கையை வாழுறதுதான் புத்தி. நம்பி ஒரு பிள்ளை வந்திட்டுது. அதோடை பேசாமலிருந்தால் எப்பிடி? தாயில்லாத பிள்ளை. சித்திக்காரியிட்டை இருந்து வதைபட்ட பிள்ளை. நீயும் திரும்பிப் பார்க்காவிட்டால் பெரிய பாவமெல்லே. மகாவைப்போல் வடிவில்லை என்றாலும் குணமான அமைதியான பிள்ளை பெண்பாவம் பொல்லாதது. எல்லாருக்கும் பிடித்த வாழ்க்கை அமைகிறதில்லை. ஏதோ வாழத்தானே வேணும்' அம்மா சொல்லிக்கொண்டு இருக்கும் போதே எழுந்து சேர்ட்டைப் போட்டுக்கொண்டு வெளியில் போனான். அம்மாவுக்கு ஈஸ்வரியின் முகத்தைப் பார்க்கவே முடியாமல் சாமியறைக்குள் போனா.

ஈஸ்வரி எதையும் எதிர்பார்ப்பதில்லை. தேவையான பொருட் களின் லிஸ்ற் மேசையில் வைத்தால் பின்னேரம் வேலையால் வரும்போது வாங்கி வந்துவிடுவார். அம்மாவுக்காக ஒரே அறையில் தூங்க வேண்டியதாக இருந்தது. அப்போதுகூட ஒரு வார்த்தை பேசியதில்லை. அநேகமாக அவள் தூங்கிய பிறகே படுக்கைக்கு வருவான் அல்லது வந்தாலும சின்னதாக

ரேடியோவில் கசட் போட்டுப் பாட்டுக் கேட்டபடி தூங்கிப் போவான். அவன் இல்லாத நேரங்களில் அந்தப் பாட்டுக்களைக் கேட்பாள். அருமையான பாடல்கள். கணவனின் மனநிலையில் அவற்றைக் கேட்டுக் கண்கலங்குவாள் ஈஸ்வரி. அவருடைய ஒவ்வொரு மூச்சுக் காற்றும் மகா மகா என்று சொல்லிக் கொண்டுதான் உள்ளே போகிறது போலும். தான் திருமணம் செய்தாலும் இன்னும் காதலியின் நினைவோடு வாழ முடிகிறது என்றால் அது எப்பேர்ப்பட்ட காதலாக இருக்க வேண்டும். அம்பிகாபதி- அமராபதி. லைலா-மஜ்னு. ரோமியோ ஜூலியட் ரேன்ஜூக்கு இருக்கக் கூடியதுதான் இந்த மகேஸ் மகா காதல். இப்படிப்பட்ட ஒருவர் எனக்கு கணவனாக வாய்த்திருப்பது எவ்வளவு பெருமை. ஒருநாள் மாமியுடன் பேசும்போது யதார்த்தமாக இப்படிக் கூறிவிட்டாள். ஈஸ்வரியைக் கட்டிக் கொண்டு மாமி அழுது தீர்த்துவிட்டாள். இப்படிப்பட்ட பெண் கிடைத்தும் அவளைப் போற்றி வாழ அவனுக்குத் தெரிய வில்லையே என்று 'பரவாயில்லை மாமி. இப்படிப்பட்ட வருக்கு சமைத்துக்கொடுத்து உடுப்பு தோய்த்துக் கொடுத்து உங்களைப் பார்த்துக் கொண்டு நான் வாழ்ந்து விட்டுப் போகிறேன். சித்தியின் ஏச்சுப்பேச்சு இல்லை. வீட்டுவேலை குறைவு. எவ்வளவு அடி வாங்கியிருப்பன் சித்தியிடம். அதோடை அப்பாவிடம் இல்லாதது எல்லாம் சொல்லி அவர் வேறை அடிப்பார். இப்ப அது ஒன்றுமில்லையே. இங்கு சுதந்திர மாக இருக்கிறேன். எனக்கு அவரைப் பிடிச்சிருக்கு. அவர் என்னை வெறுக்கேலையே ஈஸ்வரி அப்பாவியாகப் பேசினாள். "வெறுக்கவில்லை. ஆனால் விரும்புகிறானும் இல்லையே" "பரவாயில்லை மாமி. அவர் எவ்வளவு மகாவை நேசித் திருந்திருக்கிறார். அப்படியிருக்க நினைத்தவுடன் எப்படி மாமி மாற முடியும்?" மாமிக்குத் தான் பொறுக்க முடியவில்லை. தான் இறக்க முதல் ஈஸ்வரியை வாழ வைத்து ஒரு பேரக் குழந்தை யைப் பார்த்திட வேண்டும் என்று ஆவல் பட்டாள். வழிதான் புலப்படாமல் தொய்ந்துபோனாள்.

ஒருமுறை மகேசின் அக்கா வந்திருந்தபோது ஏன் அவரால் மகாவைக் கல்யாணம் செய்ய முடியாமல் போய்விட்டது என்று

*கேட்டாள். "இனி அதைத் தெரிந்து என்ன செய்யப்போறீர்' என்று கேட்டா. ஆனாலும் சொன்னா." "அவர்கள் காதலிக்கும் போது மகாவின் அம்மாவும் விருப்பமாய்த் தானிருந்தா. மகா அவவின் அப்பா வேலை செய்த இரத்தினபுரி போகும் வரை. அங்கு அவரின் மேலதிகாரிக்கு மகாவைப் பார்த்ததும் ஆசை வந்துவிட்டது. தான் மறி பண்றன் என்று கேட்டிருக்கிறார். மகாவின் அப்பாவுக்கும் அது பெரிய இடமென்று விருப்பமாய் போயிட்டுது. மகாவை வற்புறுத்தி இருக்கிறார். இது தெரிந்து மகேஸ் இரத்தினபுரி போய் அவருடன் கதைத்த போது பொய் எல்லாம் சொல்லி மகளுக்கு விருப்பமில்லாமல் மகேஸ் கடத்திப் போக வந்திருப்பதாக என்ரி போட்டு பொலீஸ் அவனை அரஸ்ற் பண்ணினதும் அல்லாமல் போட்டு அடித்துப்புரட்டி எடுத்து விட்டார்கள். நாங்களும் அப்பா இல்லாத குடும்பம். மகேஸ் வந்து சொல்லு மட்டும் எங்களுக்கும் அங்கு நடந்தது எதுவுமே தெரியாது. தகப்பன் தந்திரமாகத்தான் மகேசை அங்கு வரவழைத்து பொலீசில் மாட்டிவிட்டு இருக்கிறார். மகாவும் அவரது வஞ்சகம் தெரியாமல் ஏமாந்தது மட்டும் இல்லை. தகப்பனுக்குப் பயந்து தனக்கு மகேசைத் தெரியாது என்று சொல்லி விட்டா. மகேஸ் எவ்வளவோ சொல்லியும் அவங்கள் நம்பவில்லை. தகப்பன் மகேசை பொலீசைக் கொண்டு கொன்றாலும் என்று பயந்து மகா அப்படிச் சொல்லி யிருக்கலாம். மகேஸ் உடைஞ்சு போனான். அப்ப மட்டும் துணிச்சலாய் மகா ஓம் நாங்க காதலர்கள் என்பதைச் சொல்லி யிருந்தால் அவங்களே சேர்த்து வைச்சிருப்பாங்கள். திரும்பி இங்கு வந்த பிறகு அம்மாவும் கோபத்தில் இனி மகாடை பேச்சே வேண்டாம் என்றிட்டா. மகாவையும் தகப்பன் அங்கேயே ஒரு வருஷம் போல நிற்பாட்டிவிட்டார். மனதளவில் மகேஸ் பாதிக்கப்பட்டு விட்டான். அவனால் வேலைக்குக்கூட போக முடியவில்லை. அதிலிருந்து அவனை மீட்டெடுக்க நாங்க பட்டபாடு கொஞ்ச நஞ்சம் இல்லை. பிறகு தான் அம்மா எவ்வளவோ பாடுபட்டு அவனை சம்மதிக்கப்பண்ணி உம்மைக் கல்யாணம் செய்து வைத்தா. அதுவும் தான் செத்திடுவனென்று இமோஷனல் பிளெக்மெயில் செய்துதான் சம்மதிக்க வைத்தா. ஆனால் நீர்தான் பாவம். கல்யாணம் செய்திட்டால் மாறுவா*

னென்று நாங்க நினைத்து ஏமாந்திட்டம். நீரும் எவ்வளவோ ஆசைகளுடன் வந்திருப்பீர்.உம்முடைய வாழ்க்கையையும் பாழாக்கீற்றமோ என்றிருக்கு.” நீளமாகப் பேசி முடித்தா.

‘இப்ப மகா மறி பண்ணிவிட்டாவா?’ ‘இல்லை. பிறகுதான் அவையின் அப்பாவுக்குத் தெரிந்ததாம். அந்த மேலதிகாரி நல்லவனில்லையாம். இப்படி வடிவான பிள்ளைகளை மறி பண்றம் என்று சொல்லி ஏமாற்றித் தன் பிஸினெஸ் பார்ட்னர்களை சந்தோஷப்படுத்த அனுப்புவானாம். ஒருநாள் அவவின் அப்பா அப்படி ஒரு பிள்ளையை அனுப்பினதைப் பார்த்துப் பயந்து உடனே மகாவைக் கூட்டிக்கொண்டு இங்கை வந்துவிட்டார். அப்ப உங்களுக்கு கல்யாணம் ஆயிட்டுது. அவர்களுக்கும் எங்களில் முழிக்க முடியாமல் போயிட்டுது. எல்லாம் கடவுள் போட்ட திட்டமாக்கும். என்ன செய்யலாம்? ’என்றா. இப்போது மகாவின் அப்பாவும் இறந்துவிட்டார். மகாவின் தங்கச்சி தான் விரும்பினவனைக் கல்யாணம் செய்திட்டா. தம்பியும் தான் விரும்பின பெண்ணைக் கல்யாணம் செய்யப்போவதாகக் கேள்விப்பட்டேன். தம்பியும் தங்கையும் கொழும்பிலிருக்கினம். மகாதான் தாயைப் பார்த்துக் கொண்டிருக்கிறா. தாயைப் பார்க்க அவர்களுக்கு ஆள் கிடைச்சிருக்கு. இப்போதுதான் மகாவுக்கு விளங்கியிருக்கும். எல்லோரும் நினைத்த வாழ்க்கையை வாழ தான்மட்டும் கோழையாய் வாழ்வைத் தவற விட்டது. மகாவுக்கு இப்போது கல்யாணம் செய்து வைக்கவும் யாருமில்லை. எல்லோரும் சுயநலமாய் தங்கள் வாழ்க்கையைப் பார்த்துக்கொண்டு போய்விட்டார்கள். ஈஸ்வரிக்கு மகாவை நினைக்க கவலையாக இருந்தது. இப்பவும் இவர் விரும்பினால் அவர்களும் ஓமென்றால் மகாவை கல்யாணம் செய்யட்டும். நான் வீட்டு வேலைகளைச் செய்துகொண்டு இருக்கிறன் என்னை சித்தி வீட்டுக்கு அனுப்பாமலிருந்தால் போதும்’ என்றாள். அக்காவுக்கு கோபம் வந்தது. இப்படி ஏமாளியாக இருக்கிறீரே. மகா செய்த தப்புக்கு தண்டனை அனுபவிக்கட்டும். நீர் எதுக்குப் போக வேணும்?’ என்றா.

காலம் தன்பாட்டுக்கு உருண்டது. ஈஸ்வரி ஒரு பெண் குழந்தைக்குத் தாயானாள். ஈஸ்வரியால் நம்பவே முடியவில்லை.

எப்படி இந்த மாற்றம் நிகழ்ந்தது என்பது. மகேஸிடம் கேட்ட போது மகா சொன்னதற்காகவே தான் ஒரு குழந்தையைக் கொடுக்க வேண்டுமென்று முடிவெடுத்ததாகச் சொன்னான். மகாவின் கடிதமொன்றை ஈஸ்வரியிடம் கொடுத்தான்.

என் அன்பான ஆருயிர் மகேஸ்! நீங்க வாழும் வாழ்க்கையைப் பற்றி அன்றைக்கு மாமி என்னிடம் கோயிலில் கண்டு சொன்னா. நான் செய்த தவறுக்கு நீங்க உங்கள் மனைவியை எப்படித் தண்டிக்கலாம்? நான் உங்கள் நினைவுகளுடன் வாழலாம். ஆனால் நீங்கள்? உங்கள் மனைவி பாவமில்லையா? அவவுக்கு ஒரு குழந்தையைக் கொடுக்க வேண்டியது உங்கள் கடமை தானே. தயவுசெய்து மனைவியுடன் சந்தோஷமாக இருங்கோ. உங்கள் இருவரையும் பார்த்து நான் சந்தோஷப்படுவேன். எனக்காக உங்கள் மகாவுக்காக. சரியான நேரத்தில் சரியான முடிவு எடுக்காததால் நான் வாழ்நாள் முழுவதும் துன்பச் சுமையைச் சுமக்கிறேன். நீங்க ஒரு குழந்தையைப் பெற வேணும். உங்கள் மனைவிக்குத் தாய்மைப்பேற்றைக் கொடுக்க வேணும். ஒரு பாபமும் அறியாத அந்தப் பெண்ணுக்கு ஒரு தாய் என்ற அந்தஸ்தைக் கொடுங்கோ. உங்கள் மகாவின் ஆசையை நிறைவேற்றுவீர்களா? நான் இப்படிக் கடிதம் எழுதுவது தப்பு. ஆனால் மாமி நீர் சொன்னால்தான் கேட்பான் என்று சொன்னதால் இதை எழுதுகிறேன். என்றும் உங்கள் மகா' என்று முடித்திருந்தா.

எனக்குத் தாய்மைப் பதவியைத் தந்ததற்காக நான் காலம் முழுவதும் என் கணவருக்கும் மகாவுக்கும் நன்றியுள்ளவளாக இருப்பேன். ஒரு குழந்தையைத் தந்தாரே ஒழிய அவரின் நடவடிக்கைகளில் எந்த மாற்றமுமில்லை. ஆனால் எனக்கு இந்தக் குழந்தை போதும். மாமிக்கும் பெரிய சந்தோஷம். இப்போது அவவும் குற்ற உணர்வு இல்லாமல் இருக்கிறா. இப்படியே காலம் போயிருக்கக் கூடாதா? எத்தனையோ வருடங்களின் பின் ஒருநாள் கோயிலில் தற்செயலாக மகாவைக் கண்டிருக்கிறார். அழகெல்லாம் குறைந்து நோயாளிபோல் தோற்றம் அளித்தவளைப் பார்த்து பேசாமல் போக இவரால் முடியவில்லை. பேசியிருக்கிறார். தாய்படுக்கையில் இருப்பதாக

வும் தங்கை. தம்பி வருவதேயில்லையென்றும் கூறியிருக்கிறா. மகா சொல்லாவிட்டாலும் வாழ்வதற்கு வருமானமும் இல்லாமல் இருப்பதுபோல் மகேசுக்குத் தெரிந்தது. அப்போது தன்னிடம் இருந்த பணத்தைக் கொடுத்துவிட்டு தான் வங்கியில் பணம் போடுவதாகவும் எடுத்து உடம்பைக் கவனிக்கும்படியும் சொல்லி விட்டு வந்துவிட்டார். சில வருடங்களின் பின் இது மகாவின் தம்பிக்குத் தெரிந்து வீட்டுக்கு வந்து கீழ்த்தரமாகத் தரக் குறைவாகப் பேசியது மட்டுமன்றி ‘இப்படி மானத்தை வாங்காதை. இப்படி அவனிடம் பணம் வாங்கி உடம்பை வளர்க்க வேணுமா? இப்படியொரு வாழ்க்கை வாழ்வதற்கு சாகலாமே’ என்று கையும் நீட்டிவிட்டானாம். பிறகுதான் இந்தக் கதை வெளியில் வந்தது. தம்பி போய் அடுத்த நாளே எலிக்கு வைக்கும் மருந்தைக் குடித்து உயிரை மாய்த்துவிட்டா. இறந்த அன்று நீண்டநேரம் கோயிலில் உட்கார்ந்து அழுதுகொண்டிருந்ததாகவும் ஐயர் ‘என்னம்மா கவலை. அம்பாளிடம் விட்டுவிடு. அவ பார்த்துப்பா’ என்று சொன்னதாகவும் சொன்னார்கள். இறப்பு வீட்டுக்குப் போகக்கூட மகேசை மற்றவர்கள் விடவில்லை. போன இடத்தில் அவமானப்படுத்துவார்களோ என்று. மகேசால் தாங்க முடிய வில்லை. பைத்தியம் பிடித்தவன்போல் எதுவும் பேசாமலே இருந்தான். எந்த அவமானத்தையும் தான் தாங்குவதாகவும் ஒரேயொரு முறை மகாவின் முகத்தைப் பார்த்துவிட்டு வருவ தாகக் கெஞ்சியும் அவனைப் போகவிடவில்லை. கடைசியில் மகாவின் சாவிற்குத் தானே காரணமாய் போய்விட்டேனே என்று அழுதழுது மாய்ந்து போனான். முன்பு காதலித்ததற்காக மனிதாபிமான முறையில்கூட உதவுவது குற்றமா? எங்கள் சமூகம் இவ்வளவு கீழ்த்தரமாகத் தரங்குன்றி போய்விட்டதா? குற்ற உணர்ச்சியில் தவித்துத் தவித்து நடைப்பிணமாய்ப் போனான்.

இறப்பதற்கு முடிவெடுத்தவுடன் மகேசிற்கு ஒரு கடிதம் எழுதி போஸ்ற் பண்ணியிருந்தாள். ஈஸ்வரி அக்கடிதத்தை அவனிடம் காட்டாமல் மறைத்துவிட்டாள். கணவனும் மனமுடைந்து தற்கொலை முடிவெடுத்தால் என்று பயந்தாள். மூன்று மாதங்கள் முடிந்தபின் அதை எடுத்துக் கொடுத்தாள்.

ஆருயிர் மகேஸ்! எனக்காக இந்த உலகில் செய்வதற்கு யாருமில்லை உங்களைத்தவிர. எனக்காகத் துடிப்பவர் நீங்கள் ஒருத்தர்தான். அப்பா உங்களை ஏதும் செய்து விடுவதாகப் பயமுறுத்தியதால்தான் நான் உங்களைத் தெரியாதென்று அன்று கூறினேன். நாங்கள் கல்யாணம் செய்வதைவிட நீங்க உயிருடன் மாமிக்குப் பிள்ளையாக இருக்க வேண்டுமென்று நினைத்தேன். நான் ஏதோ காரணத்துக்காகத்தான் அப்படிச் சொல்லியிருப்பேன் என்று நீங்கள் புரிந்திருப்பீர்கள் என்பது எனக்குத் தெரியும். ஏனென்றால் எங்கள் காதல் அப்படிப் பட்டது. சொல்லித்தான் புரிய வைக்க வேண்டுமென்றில்லை. தங்கள் தேவைகளுக்காக உறவாடும் உறவுகள்தான் எனக்கு வாய்த்திருந்தது நான் செய்த பாவம். எனக்காகவே வாழக் கூடிய காதலர் கிடைத்திருந்தும் எனக்கு வாழக் கொடுத்து வைக்கவில்லை. என்னால் இனியும் அவர்களுடன் மானங் கெட்டு வாழ முடியாது. நான் எடுத்த முடிவு சரியானதென்று நீங்கள் ஒப்புக்கொள்வீர்கள். நான் உயிருடனிருந்து உங்களுக்கும் அவமானத்தைத் தர விரும்பவில்லை. நான் போகிறேன். எனக்கு கிடைத்த தெய்வீகமான உன்னதமான உறவுடன் வாழ எனக்கு கொடுத்து வைக்கவில்லை. அடுத்த ஜென்மத்திலென்றாலும் சேர்ந்து வாழ்வோம். ஈஸ்வரிக்கும் குழந்தைக்கும் எனது அன்பு அபிமானங்கள். உங்களையே நினைத்துக்கொண்டு மரணிக்கும் உங்கள் மகா.

வாசிக்கும்போதே கண்கள் குளமாக சிறுகுழந்தைபோல் தேம்பித் தேமபி அழுதான். எல்லோருமே அழுது தீர்க் கட்டுமென்று விட்டுவிட்டார்கள்.

கதை முடிந்திருந்தது. இப்போதுதான் எனக்கு யாவும் விளங் கியது. அப்பா அம்மாவுக்கிடையே இருந்த உறவின் விரிசல் புரிந்தது. அப்பா. அம்மா. அந்த மகா எல்லோருமே மிகப்பெரிய உன்னதமானவர்களாகத் தெரிந்தார்கள். எத்தனையோ முறை நான் அப்பாவை ஈரமில்லாத அன்பேயில்லாத மனிதராக நினைத் திருக்கிறேன். இப்போது அப்பா என்ற உன்னதமான உயிரிடம் மானசீகமாக மன்னிப்புக் கேட்டு அப்பா அப்பா என்று

அழுகின்றேன். அதோடு ஒரு கவிதையும் அலுமாரியில் இருந்து கண்டெடுத்து வாசித்தேன்.காதல் எப்படிப்பட்டவனையும் கவிதை எழுத வைத்துவிடும் போல இருக்கிறது. உயிரோட்ட மான அந்தக் கவிதை,

இதுதான் காதல்
இளமை எம்மில் ஊற்றெடுத்த வேளையிலே
என் நித்திரையைப் பறித்தவளே என்மகா
கண்ணால் கதை பேசி கனவுகள் பல கண்டு
காலத்தின் கோலத்தால் இணையாமல் போனோமே

காலங்கள் கரைந்தோடி டினும் நான்
தொலைக்காமல் வைத்திருக்கும் உன்
நல்நினைவுகள் என் உள்ளத்தினுள்ளே
நைல்நதிபோல் நீண்டு வருகின்றதே

என் மனது ஒட்டாத உறவுடனே
ஏனென்று தெரியாமல் வாழுகின்றேன்
உன்னிடத்தில் வைத்த அன்பை இடம்
மாற்றமுடியாமல் தவிக்கின்றேன் இன்றளவும்

யாரோடும் பகிர்ந்ததில்லை மனதின் ஏக்கம்
ஈர்முப்பது ஆண்டுகள் போயிட்டாலும்
ஒருநாளும் உன்னை நான் மறந்ததில்லை
தீராது நம்கவலை மறந்திடவும் முடியலையே

காலத்தின் கட்டாயத்தில் நீ எனை மறுத்தாலும்
காதலர்கள் நாம் தோற்று விட்டோம் ஆனால்நம்
காதல் தோற்கவில்லையே என் நினைவில் நீயும்
உன் நினைவில் நானும் என்றென்றும் வாழ்ந்திருப்போம்.

அம்மா பத்திரமாக ஒரு கவரில் போட்டு வைத்திருக்கிறா. அப்பா தன் காதலிக்காக எழுதிய கவிதையாக இருந்தாலும் அம்மாவுக்கும் அது பொருத்தமாகவே இருந்தது.அம்மாவும் அப்பாவை ஒரு எதிர்பார்ப்புமின்றி நேசித்திருக்கிறா.அது நேசமோ காதலோ ஏதோ ஒன்று.ஒரு தூய்மையான காதல்

*கருகிப் போனதில் அந்த மகாவின் தகப்பன் மட்டுமே முற்று முழுதான காரணகர்த்தாவாக இருந்திருக்கிறார்.ஆனால் யார் அதை அழித்தாலும் இருவருமே ஒருவரை ஒருவர் நேசித்தபடியே வாழ்ந்து மறைந்திருக்கிறார்கள்.இதுவும் கிருஷ்ணன் மீரா போல் தெய்வீகக் காதல்தான்.ஒரு புனிதமான காதலராக அப்பா இருந்ததில் எனக்கு பெருமையாக இருந்தது.அம்மாவும் ஒன்றும் குறைந்துவிடவில்லை. தன்னை நேசிக்காத ஒருவரைக் காலம் முழுவதும் நேசித்து தானும் உயர்ந்து விட்டா. என் நெஞ்சம் பெருமையால் விம்மியது.*

❑

# கலைந்தோடும் மேகங்கள்

**கலைந்த** *கேசத்தை ஒதுக்கியபடி வைத்தியசாலையை விட்டு பிருந்தா வெளியேறினாள். களைப்பாக இருந்தாலும் அப்படியே வீட்டுக்குச் செல்லாமல் உடலில் பல்வேறு குறைபாடுகளுடன் மற்றவர்களை நம்பி வாழும் குழந்தைகள் இல்லத்துக்குச் சென்றாள். அவளைக் கண்டதும் குழந்தைகள் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் ஓடி வந்தார்கள். தனது வேலைநேரம் போக மிகுதி நேரத்தை பிருந்தா பயனுள்ளதாகக் கழிக்க விரும்பி குறைபாடுகளுடன்பிறந்தகுழந்தைகள்காப்பகத்தில்தன்நேரத்தைச் செலவிடுவாள். அப்படி அவள் சென்ற நாட்களில் அங்கு தன் தாயை இழந்து தந்தையால் புறக்கணிக்கப்பட்ட ஒரு மூன்றுவயதுப் பெண் குழந்தை அவள் கவனத்தை ஈர்த்தது. அவள் போகும் நாட்களிலெல்லாம் அந்தக் குழந்தையை உற்று அவதானிப்பாள் பிருந்தா. எப்போதும் தனிமையில் வானத்தைப் பார்த்தபடி உட்கார்ந்திருக்கும். அந்தக்குழந்தையின் கண்களில் தென்படும் ஏக்கம் பிருந்தாவின் நெஞ்சைப் பிழிந்து தன் கடந்த காலவாழ்க்கையைநினைக்கவைக்கும்."எனக்குஅருமையான தந்தையைக் கடவுள் தந்திருந்தார். என்னை விட்டு விட்டுச் சென்ற தாயின் இடத்தை தந்தை நிரப்பிவிட்டார். தாயாயும் தந்தையுமாய் என்னைத் தன் நெஞ்சில் சுமந்தார். வயிற்றில் சுமக்கவில்லையே தவிர தன் மார்பிலும் தோளிலும் சுமந்து வளர்த்தார். எனக்கு விபரம் தெரியாத வயதில் நான் அம்மாவுக்கு ஏங்கியதாக ஞாபகமேயில்லை விபரம் தெரிந்தபின்னும் ஒருநாளும் அம்மா என்ற உறவுக்கு ஏங்கினதேயில்லை. அந்தக் குறையே தெரியாமல் அப்பா இருந்தாரே".*

*பிருந்தாவுக்கு அப்பாவை நினைத்தால் மனம் பனிக்கட்டியாய் உருகும். எப்ப வானத்தில் முகில்களைப் பார்த்தாலும் மழைத்துளிகளைத் தாங்கி அங்குமிங்கும்*

*அலையும் அழகு ஒரு தாயைப் போன்ற தன் தந்தையாய் தெரியும். ஆனால் மழைத்துளிகளைச் சுமக்காத கலைந்தோடும் மேகங்களில் தான் தன் தாயைப் பார்ப்பாள். அவளின் உருவம் பிருந்தாவின் ஞாபகத்தில் இல்லை. ஏக்கத்துடன் உட்கார்ந் திருக்கும் அக்குழந்தையைத் தான் ஏன் தத்தெடுத்து வளர்க்கக் கூடாது என்று நினைத்தாள். நினைவைத் தந்தையிடம் பகிர்ந்த போது "ஓம் நல்ல நினைவுதான். ஆனால் திருமணம் செய்கிற நினைவில்லையா உமக்கு? என்று கேட்டார். "அது செய்யும் போது பார்த்துக்கலாம். இப்ப அந்தக் குழந்தைக்குத் தாயாய் இருக்க நான் ஆசைப்படுகிறனப்பா. அந்தக் குழந்தையில் என்னைப் பார்க்கிறனப்பா" என்றவளுக்கு மறுப்பேதும் இன்றி அனுமதி கொடுத்தார் சுந்தர். முறைப்படி அக்குழந்தையை தத்தெடுத்தவள் வேறு ஏதோ நாட்டைச் சேர்ந்த குழந்தையாயிருந்தாலும் முகிலா என்ற அழகான தமிழ்ப்பெயர் சூட்டி மகிழ்ந்தாள். தன் தந்தை தன்னை உருவாக்கியதுபோல் முகிலாவையும் நாட்டுக்குப் பய னுள்ள ஒரு பெண்ணாய் மாற்ற வேண்டுமென்று உறுதி பூண்டாள்.*

*ஒரு அழகான மாலைநேரத்தில் அதுவும் ஒரு இலைதுளிர் காலத்து மனதை சிலிர்க்க வைக்கும் சில்லென்று காற்று வீசும் தருணத்தில் ஒரு மூன்று வயதுக்குழந்தையுடன் ஓடி விளையாடும் 26வயதுக்குழந்தையான பிருந்தாவைப் பார்த்து பிரமித்துப் போனான் பிரணவன். சுருண்ட முடிகள் நெற்றியைச் சொந்தம் கொண்டாட றோஸ்நிற சல்வாரில் வானத்திலிருந்து இறங்கி வந்த தேவதையைக் கண்டு தன் மனதைப் பறிகொடுத் தான். அவன் முதல் பார்வையிலேயே காலம் காலமாக அவளுடன் வாழ்ந்த உணர்வைப் பெற்றான். ஆனால் அக் குழந்தை அவனைத் தடுமாற வைத்தது. ஒரு குழந்தையின் தாயின்மேல் காதல் ஏற்படுவது மிகப்பெரிய தவறென்று மனம் இடித்துரைக்க அவளைப் பார்ப்பதைத் தவிர்த்தான். பின்பு எத்தனையோ தடவை அவளைச் சந்தித்தாலும் சிறகடிக்கும் தன் மனதை தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க பெரும்பாடு பட்டான். அவளுடன் பழகுவதற்கு அக்குழந்தையே ஒருநாள் வழிவகுத்துக் கொடுத்தது. கற்குவியலுக்குள் விழ இருந்த*

குழந்தையை விழாமல் காக்கப்போய் பிருந்தாவுடன் நட்புக் கொள்ள முடிந்தது. நன்றி கூறியவளுடன் பேச்சுக்கொடுத்து கொஞ்சம் கொஞ்சமாக நட்பை வளர்த்துக்கொண்டான். அவனது நண்பன் அகிலன் "திருமணமான பெண்ணின்மேல் அன்பை வைக்கிறாய். ஒருநாள் அந்தப் பெண்ணின் கணவனிடம் அடி வாங்கப் போகிறாய் பிரணவா" என்று எச்சரித்த வண்ண மிருந்தான்.

அகிலன் சிறுவர் சீர்திருத்தப் பாடசாலையில் ஆசிரியராக இருப்பவன். அவன் இந்தக் காதல் கல்யாணங்களில் எல்லாம் ஆர்வமில்லாதவன். அவனுடைய அம்மாவுக்கு மகன் திருமணம் செய்யாததில் கொஞ்சம் மனக் கஷ்டமாகவே இருந்தது. வயதுபோகிற காலத்தில் தனித்து கஷ்டப்பட வேண்டி வருமோ என்று. அதற்கு மகன் சொன்ன பதிலை ஏற்றுக்கொண்டு பேசாமல் இருந்து விட்டார். "மரங்கள் போல் பூத்துக் காய்ச்சுக் குலுங்க வேண்டாமோ? "என்று கேட்ட அம்மாவுக்கு" அம்மா என்னை நினைத்து கவலைப்படாதீங்க. நான் ஒரு ஆலமர மாகவோ அரசமரமாகவோ இருந்துவிட்டுப் போகிறேன். எல்லா மரங்களும் பூத்துக் காய்ச்சு கனிகள் தருவதில்லை. ஆலமரங் களும் அரசமரங்களும் நிழல் தருவதற்கும் மருத்துவத்திற்கு மாகவே வாழ்கின்றன. நான் கல்யாணம் செய்து சந்ததி பெருக்க பிறக்கேல்லையம்மா. இனவிருத்தி செய்வதுதான் வாழ்க்கையா? அதைவிட பயனுள்ள வாழ்க்கை வேறு இல்லையா? மற்றவர்களால் குற்றவாளிகளாக ஆக்கப்பட்டு சமூகத்தில் நிராகரிக்கப்பட்டவர்களை திருத்தி புனர்வாழ்வு வாழச்செய்வதைவிட வேறு நல்ல செயல் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. உங்களுடைய முருகன் அதற்கு என்னைத் தேர்ந்தெடுத்திருக்கிறார். பெருமைப்பட வேண்டிய விஷயம் இல்லையா?" என்று தாயை சமாதானப்படுத்தி விடுவான். சிறுவர்களைத் திருத்தி நல்லவர்களாக சமூக அக்கறையுள்ளவர் களாக வாழ வைப்பதில் தன் முழுக் கவனத்தையும் செலுத்து பவன். சிறுவர்கள் நலன் மட்டுமன்றி கான்ஸர் நோயாளிகள், மரணத்தை எதிர்நோக்கிக் காத்திருக்கும் எத்தனையோ நோயாளிகளின் துன்பங்களுக்கு வடிகாலாயிருப்பவன். அவனது

*நண்பர்கள் அதுவும் வைத்தியசாலையில் பணிபுரியும் நண்பர்கள் மரணத்தோடு போராடுபவர்களுக்கு அகிலனை அறிமுகப்படுத்தி விடுவார்கள். அகிலன் தன் வேலை நேரம் போக மற்ற நேரங்களில் பல சமயம் தன் வேலையில் விடுப்பு எடுத்துக் கொண்டும் அவர்களுக்குத் துணையாக அவர்கள் மனங் களுக்கு ஆதரவாக இருப்பான். கடைசிக் காலத்தில் உறவினர் களால் விலக்கி வைக்கப்பட்டவர்களெல்லாம் அகிலனின் சொந்தக்காரர்கள் ஆகி விடுவார்கள். எத்தனையோ பேரின் மரணச்சடங்குகளைக்கூட தானே செய்து முடித்திருக்கிறான். கடைசி நிமிடத்தில் எத்தனையோ பேருக்கு தெய்வமாகக் காட்சியளித்திருக்கிறான். எதையுமே எதிர்பார்க்காமல் பற்றின்றி அவனைப்போல யாராலுமே இருக்க முடியாது. இன மத பால் வேறுபாடின்றி அவர்களுக்கு ஆறுதலாயிருப்பான். பிரணவனும் அவன் நண்பர்களும் "ஆயிரத்தில் ஒருத்தனடா நீ" என்று எத்தனையோ தடவைகள் அகிலனைப் பார்த்து ஆச்சரியப் பட்டிருப்பார்கள். "இந்த 33 வயதுக்குள் இப்படி ஒரு பக்குவமா? கேட்பவனுக்கு வயதுக்கும் செயலுக்கும் என்னடா தொடர்பு? எல்லாவற்றுக்கும் மனந்தான் காரணம் என்பான். நண்பர் களின் காதல்களுக்கு தன்னால் இயன்ற எல்லா உதவி களும் செய்வான். காதலர்களைச் சேர்த்துவைப்பதில் முன்னுக்கு நிற்பவன். பிரணவனின் காதல் தீவிரத்தைப் பார்த்து பிரணவா எதுக்கும் கொஞ்சம் கவனமாகவே இரு. யாரிடமும் விசாரி. திருமணமாகாதவளா என்பதை உறுதிப்படுத்திவிட்டு சைட் அடி. யார் வேண்டாம் என்பார்கள்" என்பான். அகில் எனக் கென்னவோ அந்தப் பெண்ணுக்குத் திருமணம் ஆகியிருக்காது என்றுதான் மனசு சொல்கிறது. எனக்காகவே பிறந்து எனக் காகவே காத்திருக்கும் பெண் என்றுதான் தோன்றுகிறது. ஒருநாளைக்குப் பார் நாங்க கல்யாணம் செய்வதை என்று பிரணவன் சொல்லவும் "தற்சமயம் பிழைத்துவிட்டால் மனசை யெல்லாம் சாட்சிக்கு கூப்பிட ஏலாது. ஏன் அப்படிச் சொன்னாய் என்று சண்டை பிடிக்கேலாது. கவனம். ஏதோ "நீ ஆசையை வளர்த்துப் பிறகு ஏமாறாட்டிச் சரி நீ நினைத்தது நடந்தால் சந்தோஷம்" என்று அகிலன் கூறுவான்.*

கற்குவியலில் தவறி விழப் பாரத்த குழந்தையை விழாமல் தடுத்துவிட்டதில் நன்றி சொன்ன பிருந்தா அதன்பிறகு காணும் நேரங்களில் சினேகமான புன்னகை செய்வாள். அதையே சாக்காக வைத்து அடிக்கடி பிருந்தாவைச் சந்தித்து நட்பு தொடரவே கொஞ்சம் கொஞ்சமாக அவள் வாழ்க்கை யைப் பற்றி அறிந்து இப்படியும் ஒரு பெண் இருப்பாளா என்று அதிசயித்தான். அவளைச் சந்திப்பதற்காகவே அவள் செல்லும் குழந்தைகள் காப்பகத்துக்கு பிரணவனும் அடிக்கடி செல்லத் தொடங்கினான். முகிலாவைப்போல் எத்தனையோ குழந்தைகள் அங்கிருந்தார்கள். பிரணவனுக்கும் அவர்களுடன் இருப்பது, அவர்களுக்கு பாடம் சொல்லிக் கொடுப்பது என்று மனதுக்கு பிடித்ததாகவே இருந்தது. அவனது ஈடுபாட்டைப் பார்த்து பிருந்தாவுக்கும் பிரணவனிடம் நட்பையும் தாண்டி ஏதோ ஒரு ஈர்ப்பு உண்டாகியது. கொஞ்சம் கொஞ்சமாக பிருந்தா அவனுக்கு நெருக்கமாகத் தொடங்கினாள். அப்போது தான் அவளுக்கு திருமணம் ஆகவில்லையென்றதும் முகிலா அவளது தத்துக்குழந்தை என்றதும் தெரிந்து அதிசயப்பட்டான். பிறந்த குழந்தை குறைபாட்டுடன் இருந்து விட்டால் எங்காவது காப்பகங்களில் விட்டுவிட்டு திரும்பிப் பார்க்காத இந்தக் காலத்தில் இப்படியொரு பெண்ணா? ஒரு குறைபாட்டுக் குழந்தையைத் தேடி வளர்க்க ஆசைப்பட்டிருக்கிறாளே. அப்போதுதான் பிருந்தாவும் ஒருகாலத்தில் ஒட்டிசம் என்ற குறைபாட்டுடன் இருந்திருக் கிறாள் என்று தெரிந்தது. தான் பட்ட வலியை இன்னொரு குழந்தை அனுபவிக்கக்கூடாது என்று எத்தனைபேர் நினைப் பார்கள். தாயகத்தில் இருக்கும்போது அம்மா கூறியது ஞாபகத் துக்கு வந்தது. தாத்தாவின் நினைவுநாளுக்கு தாங்கள் ஒரு உடற்குறைபாடுள்ள சிறுவர்கள் இல்லத்துக்கு சென்றபோது அந்த நிர்வாகியுடன் உரையாடும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. அப்போது அவர் கூறினார். எத்தனையோ பெற்றார் தங்கள் குழந்தைகளைச் சேர்த்துவிட்டு பொய்யான விலாசங்களைத் தந்துவிட்டுப் போய்விடுவார்களென்றும் தங்களால் அவர்களுடன் தொடர்புகொள்ள முடியாமல் அவர்களின் முழுச்செலவையும் தாங்களே பொறுப்பெடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படு வதாகவும். அப்படிப்பட்டவர்கள் மிகுதியாக உள்ள உலகத்தில்

*பிருந்தாவைப் போன்றவர்களும் வாழவே செய்கிறார்கள் என்பது ஆச்சரியமான விடயமாக இருந்தது. அதன்பிறகு பிருந்தா அவனது இதயத்தில் சிம்மாசனமிட்டு நிரந்தரமாகக் குடியேறி விட்டாள்.*

*ஒரு விடுமுறை நாளில் பிரணவனிடம் மனம் திறந்து தன் கதையைக் கூறினாள். தொடங்கும்போதே “என்னுடைய அப்பா தாயுமானவர் என்று ஆரம்பிக்க” அது என்ன புதுச்சொல்லா யிருக்கு என்றவனுக்கு எல்லா அம்மாவுமே தாயாக இருப்பார் கள். ஆனால் ஒரு தந்தை தாயாக மாறுறது சிலபேருக்குத்தான் கிடைக்கும். இவ்வளவுநாளும் நீங்க எனக்கொரு நண்பனாய் மட்டுந்தான் இருந்தீங்க. எப்பநாங்கஒருத்தரைஒருத்தர் நேசிக்கத் தொடங்கினமென்று தெரியேல்லை. இப்ப நாங்க வாழ்க்கையில் இணைய யோசிக்கிறம் என்றதால் என்னைப்பற்றி முழுவதும் உங்களுக்குச் சொல்ல வேண்டியது என்னுடைய கடமை என்றாள். “என்ன பெரிய இன்றடக்சன் குடுக்கிறீர்?” என்ற பிரணவனுக்கு சின்னச்சிரிப்புடன் பதிலளித்தாள் பிருந்தா.*

*“ம். நிறைய இருக்கு. அதில் சந்தோஷக்காற்று வீசவில்லை. மாறாய் போராட்டம் மட்டுமே வாழ்க்கையாயிருந்தது. அப்பா மட்டும் எனக்கு கிடைக்காமலிருந்திருந்தால் கிழிந்த பட்டமாய் பறக்கவே முடியாமல் நிலத்தில் விழுந்திருப்பன். ஒட்டிசம் என்ற குறைபாட்டுடன் எல்லோராலும் ஒதுக்கப்பட்டிருப்பன். அப்பா என்று உச்சரித்தாலே என்னுடலில் ஒரு வேகம் வரும். என் நாடி நரம்பெல்லாம் அப்பா அப்பா என்று உச்சரித்தபடியே இருக்கும். அப்பாதான் எனக்குத் தெய்வம். அப்பா என்றதுதான் எனக்குத் தெரிந்த மந்திரம்.*

*“கண்கள் கலங்கக் கூறிய பிருந்தாவின் கைகளை மென்மை யாகப் பற்றி வருடினான் பிரணவன். பிருந்தாவின் அண்மை அவனுக்கு மிருதுவான குளிர்ந்த தென்றல்காற்று தன்னைத் தொட்டுச் செல்வது போலிருந்தது. தன்னை நம்பித் தன்னுடைய கடந்தகாலச் சுமையை தன்மேல் இறக்கி வைத்தபோது பிரண வனுக்கு உலகமே தன் காலடியில் விழுந்து கிடப்பது போல் தோன்றியது. ஒரு அழகு சாம்ராஜ்யம் தன்னிடம் வசப்பட்டது*

ஆச்சரியத்தை விட தன்னைவிட அதிர்ஷ்டசாலி உலகத்தில் யாருமே இருக்கமாட்டார்களென்று நம்பினான்.

“என்னுடைய இரண்டு வயதில் ஒட்டிசம் என்ற முத்திரை குத்தப்பட அன்றிலிருந்து என்னைக் கவனித்து படிப்பித்து புத்திசாலியாக்கி இன்று உலகில் மருத்துவத்துறையில் என்னை சாதிக்க வைத்த என் அப்பா எத்தனை போராட்டங்களைச் சந்தித்திருப்பார். தன்னந்தனியாய் தன்னுடைய வேலையுடன் என்னையும் சகல திறமையுடன் சாதிக்க வைத்திருக்கிறார். பேச்சுத்திறன் குறைந்திருந்த என்னை இவ்வளவு கதைகள் எத்தனை மொழிகளில் பேச வைத்திருக்கிறார். இப்ப யாரென்றாலும் நான் ஒரு ஒட்டிஸ்ரிக் குழந்தையாயிருந்தன் என்று சொன்னால் நம்ப மாட்டினம். என்னுடைய குறைபாடு தெரியாமல் என்னை உருவாக்கியவர் என் அப்பா. எனக்கு இன்ஸ்பிரேஷனாக ஹெலன்கெலர், எடிசன் என்று கதை கதையாகச் சொல்லி ஒட்டிசத்தில் நான் முடங்கிப்போகாமல் என்னைச் செதுக்கியவர். என்னைக் குழந்தையாய், தாயாய், தெய்வமாய் கொண்டாடியவர் என் அப்பா.தன்னம்பிக்கை, அறிவு, விடாமுயற்சி என்று என்னிடமுள்ள அத்தனை நல்ல குணங்களுக்கும் விதை போட்டவர். ஏன் சொந்தக்காரர் என்றும் சொல்லலாம். என்னுடைய இதய நாற்காலியில் அழுத்தமாய் உட்கார்ந்திருக்கும் ஒரேயொரு ஆண். அவரை யாருடனும் ஒப்பிட முடியாது” கண்களில் அன்பு கனியத் தந்தையைப்பற்றிக் கூறிக்கொண்டே போனாள். பிரணவனுக்கு இலேசாகப் பொறாமை ஏற்படுவதைத் தடுக்க முடியாமலிருந்தது.

பிருந்தா கூறுவதில் எந்த மிகைப்படுத்தலும் இல்லையென்பது ஒருநாள் அவள் தந்தை சுந்தரைச் சந்தித்தபோது தெரிந்தது. மிகவும் எளிமையாக இருந்ததுடன் பழகுவதற்கும் இனிமை யானவராக இருந்தார். தந்தையும் மகளும் ஒரே குணஇயல்பு களுடன் இருந்தார்கள். அறிவும், அடக்கமும் தந்தையிட மிருந்தே அவளுக்கு வந்திருக்கிறது என்பது பிரணவனுக்குப் புலனாகியது. எவ்வளவு பரந்த அன்பும், அறிவும் இருந்திருந்தால் திருமணமாகாத தன் மகள் ஒரு குழந்தையைத் தத்தெடுக்க அனுமதித்திருப்பார். தன் மகளின் மீதிருந்த பிரியமும், இன்னொரு

குழந்தைக்கு நல்லது செய்யவும் எத்தனை பேரால் முடியும். நினைத்த பிரணவன் "எல்லாப் பெருமையும் அப்பாவுக்குத் தானா? அம்மாவுக்கு மிச்சம் மீதியிருக்கா?" என்று கிண்டலாகக் கேட்டான். பிருந்தாவின் முகம் வெம்பிய பழமாய் மாறியதைக் கண்டவுடன் "ஓகே ஓகே. எல்லாப்புகழும் என் மாமனாருக்கே" என்று கூறிச் சிரித்தான். அன்றலர்ந்த பூவைப் போல இருந்த அவளின் வதனம் கூம்பிப்போவதை அவனால் இரசிக்க முடிய வில்லை. பேச்சை அவசரம் அவசரமாக முடித்துக் கொண்டு வீடு திரும்ப பரபரத்தாள். அவனும் அவளது செயலை வித்தியாசமாக எடுக்காமல் விடைபெற்றான்.

இரண்டு வாரங்கள் அவனைச் சந்திப்பதைத் தவிர்த்தாள் பிருந்தா. அப்போது ஏதோ இடிப்பதாக நினைத்த பிரணவன் தானே அவளைப் பார்க்கச் சென்றான். அவளை எதுவுமே கேட்க வில்லை. அவளாகச் சொல்லட்டும் என்று காத்திருந்தான். ஒரு நாள் தானாகவே ஆரம்பித்தாள். "உங்களுக்குக் கிடைத்தது போல் எனக்கு நல்ல அம்மா கிடைக்கவில்லை" கண்களில் வெறுப்புத் தெரிய "உங்களுக்கு இவை தேவையில்லையென்று இவ்வளவு நாளும் சொல்லவில்லை.நாங்க திருமணம் செய்ய முடிவெடுத்த பிறகு நான் இதைக் கட்டாயம் உங்களுக்குச் சொல்ல வேண்டும்." என்றவள் சொல்வதற்கு சொற்களைத் தேடுபவள் போல் கொஞ்சநேரம் மௌனம் காத்தாள். எதுவுமே கேட்காமல் அந்த மௌனத்தை மதித்து லேசாக அவள் கைகளை வருடியபடி இருந்தான் பிரணவன். அவளே பேச்சை ஆரம்பிக்கட்டும் என்பதில் கவனமாக இருந்தான். கொஞ்சநேர மௌனத்துக்கு விடை கொடுத்த பிருந்தா சொற்கள் கோர்வையாக வராமல் தடுமாறி ஒருவாறு சுதாரித்துக்கொண்டு "நான் குழந்தையாக இருந்தபோதே என்னை வளர்க்கப் பிடிக்காமல் எங்களை விட்டுவிட்டு தனக்கு ஒரு துணையைத் தேடிக்கோண்டு போய்விட்டா." கூறும்போதே அவமானத்தால் சுருங்கிப் போனாள். அம்மா என்ற சொல்லையே உச்சரிக்காமல் அவள் கூறிய இந்த விடயம் பிரணவனுக்கு அதிர்ச்சியாக இருந்தாலும் காட்டிக்கொள்ளாமல் "அவவுக்குத்தான் கொடுத்து வைக்கவில்லை இப்படியொரு மகளுடனும் கணவனுடனும்

வாழ” என்று விபரங்கள் எதுவுமே கேட்காமல் பேச்சுக்கு முற்றுப் புள்ளி வைத்தான்.

நாட்கள் விரைந்தோட பிருந்தாவின் தாயைப்பற்றி தன் வீட்டிற்கு மறைத்துவிட்டான். தன்னுடைய அப்பா அம்மா இதை ஒரு பெரிய விஷயமாக எடுத்து தடுத்து விட்டாலும் என்று பயந்தான். ஒரு குழந்தைக்குத் தாயாய் இருப்பதை பெரிதாக எடுக்காத பெற்றோர் இதைப் பெரிது படுத்த மாட்டார்களென்று தன்னை ஏமாற்ற விரும்பவில்லை.ஆனால் பிருந்தா “பிரணா இதை அவர் களுக்கு மறைக்கிறது சரியில்லையென்று எனக்கு தோன்றுகிறது. சொல்லிடுங்க “என்றாள். இரண்டு நாட்கள் கழித்து “சொல்லிவிட்டேன்” என்று ஒரு பொய்யைச் சொல்லி முடித்தான். இவ்வளவு காலமும் வராத தாய் இனி வரவா போகிறா என்று நினைத்தான். ஆனால் பிருந்தாவின் மனத்தில் இருந்த ஆசையைக் கேட்டவன் நிச்சயமாக அவவைத் தேடிப்பிடித்து கூட்டிப்போவதாய் வாக்குறுதியளித்தான். அதை யாருக்கும் தெரியாமல் நிறைவேற்றத் தயாராயிருந்தான்.

நண்பன் அகிலுக்குக் கூறியபோது “பிருந்தாவின் ஆசை நியாய மானது. இப்ப கூட்டிப் போகாமல் கல்யாணம் முடிந்தபிறகு கூட்டிப்போ: என்றான். “ஏனடா அப்படிச் சொல்கிறாய்” என்ற வனுக்கு சிலவேளை உனக்கு அவவைப் பிடிக்காமல் போய் விட்டால் எதற்கும் ஆறுதலாகவே போ. போய் பிருந்தா ஆசைப் பட்ட மாதிரி அப்பாவையும் மகளையும் புகழ்ந்து தள்ளிவிடு. வேண்டுமென்றால் நானும் வாறன் புகழ்ந்து தள்ள” என்றான்.

எவ்வளவோ தன்னடக்கத்துடனிருக்கும் பிருந்தா ஏன் தாயைப் பார்த்து தான் பெருமையுடன் வாழ்வதை நிரூபிக்க வேண்டும் என்று வியந்தான் பிரவணன். “எங்களுக்கெல்லாம் அந்த வலி தெரியாது பிரணா. பிருந்தா குழந்தையாக இருந்தபோது தாய்ப் பாசத்துக்கு ஏங்கி இருக்கலாம். என்னதான் தகப்பன் தாயில்லாக் குறை தெரியாமல் வளர்த்திருந்தாலும் சில தருணங்கள் தாயை நினைத்து ஏங்க வைத்திருக்கும். பெண் மட்டுமே உணரக்கூடிய சில தருணங்களும் உண்டு. அதன் ஆழம் எங்களுக்கு புரியாதிருக்கலாம். பிருந்தாவைப் பார்த்து

எல்லோரும் தாய் யாருடனோ ஓடிவிட்டா என்று சொல்லிச் சொல்லி எவ்வளவு புண்படுத்தியிருப்பார்கள். அதற்குப் பதில் கொடுக்க வேண்டாமா? வேதனையில் தள்ளிவிட்டு சுயநலமாய் ஓடிவிட்ட தாயைப் பார்த்து சூடாய் நாலு வார்த்தை கேட்க மனம் துடிக்காதா? நீங்க ஓடினாலும் என்னை எவ்வளவு உயரத்துக்கு அப்பா கூட்டிப் போய்விட்டார். நீங்கள் இல்லாதது எங்களுக்கு ஒரு பொருட்டேயில்லை என்று நிச்சயம் சொல்லிக் காட்டத்தான் வேணும். எனக்கே அந்த வேகம் வருகிறது. பிருந்தாவுக்கு வராவிட்டால் எப்படி?" என்றான் அகில்.

ஓய்வுபெற்ற தந்தை தாயகத்தில் பிருந்தாவின் பெயரால் பல்வேறுபட்ட குறைபாடுகளுடன் பிறந்த பிள்ளைகள் காப்பகம் ஒன்றைத் தொடங்கி அதை நிர்வகிப்பதிலும் தொண்டு செய்வதற்குமாய் அடிக்கடி தாயகம் போய்விடுவது வழக்கம். இப்போது மகளின் திருமணத்துக்காய் கனடாவில் மகளுடனே தங்கியிருந்தார். அப்போது ஒருநாள் பிரணவனைச் சந்தித்து "என் மகளை நல்லாய் வைத்திருங்க தம்பி. எனக்குப் பிறகு அவளுக்கு உம்மை விட்டால் துணை யாருமில்லை. எனக்கும் ஒரு இறப்பு வருமென்று பிருந்தா ஒருநாளும் நினைக்கிறாள் இல்லை. நான் ஏதோ காலம் முழுவதும் தன்னுடன் இருக்கப் போவதாய் நினைத்துக்கொண்டிருக்கிறாள். என்னுடைய இறப்பை அவளால் தாங்கவே முடியாது. என்னுடைய இடத்தை நீர்தான் நிரப்ப வேண்டும். பிருந்தாவுக்கு ஒரு தகப்பனாய், தாயாய், தோழனாய் இருப்பீரென்று நம்புகிறேன். உம்மைப் பார்த்த பிறகு எனக்கு நம்பிக்கை வந்துவிட்டது. உம்முடைய அன்பால் என் பிரிவு அவளுக்குத் தோன்றாமல் செய்ய வேண்டும். என்னுடைய பிரிவை அவ பழக வேண்டுமென்றுதான் நான் அடிக்கடி தாயகம் செல்றது. "கண்களில் நீர் தளும்ப உடைந்து போன குரலில் பிரணவனின் கைகளைப் பற்றியபோது பிரணவன் நொறுங்கிப்போனான். "மாமா உங்களுக்கு பிருந்தா குழந்தை, மகள், தாய் என்று கொண்டாடுவீங்க.எனக்கு பிருந்தா என் தேவதை, என்னுயிர் மாமா உங்களைப்போலவே பார்த்துக் கொள்வன். நான் எப்படிப் பார்த்தாலும் பிருந்தாவின் மனத்தில் உங்களின் இடத்தை நான பிடிக்கவே முடியாது. ஆனால் நான் ஒரு கணவனாய், ஒரு தாயுமானவனாய் இருப்பன். இது சத்தியம்

*மாமா" என்று அவரது கையைப் பிடித்து உறுதி கூறினான். 'முகிலா...' என்று இழுத்த சுந்தருக்கு "கடைசிவரை எங்கள் குழந்தையாகவே பார்ப்பன். கவலையே படவேண்டாம்" என்றான். கொஞ்சம் தயங்கிவிட்டு "தம்பி பிருந்தாவின் அம்மா... என்று அவமானத்தால் முகம் சுருங்க எப்படிப் பேச ஆரம்பிப்பது என்று தடுமாறியவரைத் தடுத்து" எனக்கெல்லாம் தெரியும் மாமா. அந்தப்பேச்சு வேண்டாமே. என்னுடைய பெற்றோருடனும் நீங்க இதைப் பேசவேண்டாம்" என்று பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்தான். அவமானத்தால் சிவந்த முகம் கொஞ்சம் தெளிவாக கையைப்பிடித்து "நன்றி சொல்ல எனக்கு வார்த்தைகளே இல்லை தம்பி." நீர் எனக்கொரு மகனாகத்தான் தெரிகிறீர். சரியான ஒரு துணையைத்தான் பிருந்தா தேர்ந்தெடுத்திருக்கிறா. இப்பதான் எனக்கு மனம் ஆறுதலாக இருக்கிறது என்றார்.*

*திருமணம் முடிந்ததும் ஏற்கெனவே தேடி வைத்திருந்த விலாசத் திற்கு பிருந்தாவின் அம்மாவிடம் அழைத்துச் சென்றான். கூடவே அகிலனும் போனான். முன்பே பிருந்தாவிடம் சொல்லி அவளை ரென்ஷனாக்காது போகும் வழியிலேயே சொன்னான். எதிர்பார்த்தது போலவே பிருந்தா கொஞ்சம் பதற்றமானாள். அவளது கைகளை லேசாக அழுத்தி தைரியம் கொடுத்தான் பிரணவன். நான்கு மணிநேரப் பயணம். போகும் வழியெல்லாம் பிருந்தாவின் பதற்றத்தைக் குறைக்க அகிலன் ஏதோ விடயங்களைப் பேசியவண்ணமே வந்தான். குற்றங்கள் புரிந்து தண்டனை அனுபவிக்கும் சிறுவர்களின் நலன் பற்றியும், அவர் களின் குற்றங்களுக்குப் பொறுப்பான பொறுப்பற்ற பெற்றோர் பற்றியும் மூவருமே ஒருவிதமான ஈடுபாட்டுடன் பேசிக்கொண்டு போனார்கள். பேச்சின் கவனத்தில் பிருந்தா தாயை மறந்தாள்.*

*அகிலன் கூறிய அத்தனை வாக்கியங்களும் உண்மை தெறிப்ப தாகவே இருந்தன. "முக்கால்வாசிப்பேர் ஒரு குழந்தை வேண்டு மென்ற ஆசையுடன் தேடிப் பெற்றவர்களில்லை.அவர்கள் சல்லா பத்தின் விளைவாய் குழந்தைகள் பிறந்தார்கள். அப்போது எப்படிப் பிள்ளைகளை நன்றாக வளர்ப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியும்? பிள்ளைகளுக்காக தங்கள் சந்தோஷத்தையோ, நேரத்தையோ பங்குபோட விரும்பாதவர்களால் எப்படி நல்ல*

*குழந்தைகளை உருவாக்க முடியும். வாகனத்தை ஓட்டிய வண்ணம் உரையாடினான். அவனுக்கு சாதகமாக பிரணவன் “ஓம் சில நல்ல விதைகள் எந்த மண்ணில் விழுந்தாலும் நல்ல செடிகளாக வளர்வதுபோலத்தான் சில குழந்தைகளும். அதில் பெற்றவர்கள் பங்கு எதுவுமேயில்லை. பெற்றவர்கள் தங்கள் பிள்ளைகள்மேல் அன்பு காட்ட மறந்து தங்கள் வாழ்க்கையையே பெரிதாக நினைக்கத் தலைப்பட்டதால் தான் எல்லாம் என்றான் பிரணவன். “எங்களுடைய தமிழ்ச்சமூகத்திலை முன்பு இப்படிப் பெற்றோர் இருந்ததில்லை. ஆனால் இப்ப வெளிநாட்டு வாழ்க்கை மேல்நாட்டாரைப் பார்த்து தாங்களும் மாறுகினம். என்ன” என்றாள் பிருந்தா. அவர்களுடைய எத்தனை நல்ல பழக்கங்களைப் பழகத் தெரியேலை. அவர்கள் எங்களிடம் பார்த்து ஆசைப்படுகிற பேரன்ரிங் அதை விட்டுட்டு போகிறது எவ்வளவு வேதனைப்பட வேண்டிய விஷயம்? என்று கவலையுடன் கூறினாள் பிருந்தா.*

*“பெற்றோரால் புறக்கணிக்கப்பட்ட பிள்ளைகள்தான் தவறான பாதையைத் தேர்ந்தெடுத்து குற்றவாளிகள் ஆகிறார்கள். இதில் கொடுமை என்னவென்றால் எப்போது அந்தச் சிறுவர்கள் பிழையான பாதையில் போகத் தொடங்குகிறார்கள் என்பது அநேகமான பெற்றோருக்குத் தெரிவதில்லை” அகிலன் கூறவும் “ஓம் அகிலண்ணா சொல்றமாதிரி பிள்ளைகளுக்காக விட்டுக் கொடுக்க எத்தனை பெற்றார் தயாராயிருக்கினம்? ஏதோ நாங்க கஷ்டப்பட்டு வளர்த்தம். நாங்க சொல்றபடி கேட்க வேண்டும். நாங்க நினைக்கிற படிப்பு படிக்க வேண்டும். திருமணம் கூடி நாங்க சொல்கிற துணையைத்தான் செய்ய வேண்டும் என்று தங்கள் ஆசைகளை அவர்கள் மேல் திணித்து தாங்கள் உருவாக்காத ஒரு செயலுக்கு எவ்வளவு உரிமை கொண்டாடு வினம் என்றாள் பிருந்தா. “எங்களைப்போல கொஞ்சப்பேருக்குத் தான் பாசம் மட்டுமே தந்து எங்களை நாங்களாகவே வாழ விடுகிற பெற்றோர் வாய்த்திருக்கு. எங்களுக்கெல்லாம் அப்பா, தான் தந்தையென்று தள்ளிப்போய் நிற்காமல் எப்பவும் தயக்க மில்லாமல் நாங்க எல்லா விஷயங்களையும் பகிர்ந்துகொள்ளக் கூடியவராய் நாங்க மிச்சம் கொடுத்து வைத்தவர்களென்ன?*

அன்பு கிடைக்காதவர்கள் எவ்வளவு பாவம் செய்தவர்கள் தொடர்ந்து கூறினாள் பிருந்தா. பெற்றோர் பிள்ளைகளை உருவாக்கவில்லை. அவர்கள் வழி வந்தவர்கள் என்பது அவர் களுக்கு விளங்குவதில்லை. தாங்கள்தான் உருவாக்கினமாதிரி கதைப்பினம்.

“ஓமோம் நிறையப் பெற்றோர் நாங்கள் வளர்த்தம் படிப்பித்தம். நாங்க நினைத்தபடி நாங்க நினைத்தவரைத்தான் திருமணம் செய்ய வேண்டுமென்று ஏன் பிடிவாதம் இருக்கிறார்களென்று விளங்கேல்லை. கல்யாணம், பிள்ளைகள் என்பது உணர்வுகள் சம்பந்தப்பட்ட விஷயங்கள் என்று ஏன் அவர்களுக்குப் புரிகிறேல்லை. மற்ற எல்லா விஷயங்களையும் பெற்றவர்கள் தீர்மானிக்கலாம். காதல் மென்மையான ஒரு உணர்வு இல்லையா? கேட்டு வாங்குறதும் கொடு என்று கேட்பதும் காதல் இல்லை என்பது அவர்களுக்கு ஏன் விளங்குவதில்லை? “தொடர்ந்தும் பேசினான் அகிலன். ஒவ்வொருத்தரும் போகும் வழியிலெல்லாம் அன்பை விதைத்துக்கொண்டு செல்வார்களே யானால் இந்த உலகம் எவ்வளவு அழகாயிருக்கும். நாங்கள் அன்பை விதைத்துக்கொண்டே போனால் யாரென்றாலும் எப்பவென்றாலும் அறுவடை செய்வார்கள். எங்கள் முன்னைய சான்றோர் எப்படி ஒரு குழந்தை பெறவேண்டுமென்று மிக நீண்ட விளக்கங்கள் எழுதிவைத்து விட்டுப் போயிருக்கினம். அதன்படி பெற்றால் ஒவ்வொரு குழந்தையும் சாதனைக் குழந்தை யாயிடுமே.”

“ஏன் அகிலண்ணா இவ்வளவு விஷயம் தெரிந்த நீங்க கல்யாணம் செய்து நல்ல குழந்தைகளைப் பெற்று சாதனைக் குழந்தை களை உருவாக்கலாமே. ஏனண்ணா அதைச் செய்கிறீங்க இல்லை?” கேட்டாள் பிருந்தா. “நானும் முதல் அப்படித்தான் நினைத்திருந்தன். ஆனால் இந்த வேலைக்குள் வந்தபிறகு அந்த ஆசையே போயிட்டுது. திசை மாறிப் பயணிக்கும் சிறுவர்களுக்கு சரியான பாதையைக் காட்டுவது எல்லாவற்றையும்விட முக்கியம் என்பது புலனாகியது” என்றான் அகிலன். “நீ பெறாவிட்டால் விடு. எங்களுக்கு அவற்றைச் சொல்லித் தந்திடு அகில்.” என்றான்

பிரணவன். பேசிக்கொண்டே சென்றதால் தொலைவு தெரியா மலும் பிருந்தாவின் பதற்றம் மறைந்தும் பயணம் நன்றாக அமைந்தது.

வீட்டைச் சென்றடைந்து காலிங் பெல்லை அமுக்கியதும் வீட்டினுள்ளே விசித்திரமான ஒலிகள் கேட்டன. கதவைத் திறந்த பெண் இவர்கள் யாரென்ற கேள்விக்குறியுடன் உற்று நோக்கினார். “உள்ளே வரலாமா? உங்களுக்கு எங்களைத் தெரியாது. எங்களுக்கோ பிருந்தாவுக்கோ உங்களைத் தெரியாது. ஆனால் பிருந்தாவின் அப்பா சுந்தருக்கு நீங்க தெரிந்தவர்கள். அதுதான் ஒருமுறை உங்களைப் பார்க்கலாமென்று வந்த னாங்கள். நான் பிரணவன். இவ டொக்ரர் பிருந்தா பிரணவன், அதாவது மிஸ்ரர் சுந்தரின் மகள். இவர் எங்கள் நண்பன் அகிலன்.

“அறிமுகத்தால் முகம் உடைந்து போக “வாங்க இருங்கோ” என்றாள். அகிலன் பேச்சை ஆரம்பித்தான். “ஒரு ஒட்டிஸ்ரிக் குழந்தையாக இருந்த பிருந்தா இப்ப ரொறன்ரோவில் பெரிய வைத்திய நிபுணர். அவவின் அப்பா கிறேற். மகளை வெற்றியின் உயரத்துக்குக் கொண்டு போய்விட்டார் அதுவும் தன்னந்தனி யாளாய். பிருந்தாவுக்கு அம்மா கிடையாது குழந்தையாயிருக்கும் போதே தவறிவிட்டார். அங்கிள் நிறையத் தொண்டுகள் செய்கிறார். நீங்க கேள்விப்பட்டிருப்பீங்க அவரின் சேவையைப் பற்றி. ரொறன்ரோவில் ஏன் ஐரோப்பாவிலுந்தான் அவரைத் தெரியாத ஆட்களேயில்லை. ஏன் தாயகத்திலுந்தான். பிருந்தாவின் உழைப்பில் தாயகத்தில் உடற் குறைபாடுகளுள்ள குழந்தைகள் இல்லம் நடைபெற்று வருகிறது. இந்தக் குழந்தை முகிலா. தாயால் நிராகரிக்கப்பட்ட பிருந்தாவால் தத்தெடுக்கப் பட்ட குழந்தை. நீங்க எப்படி இருக்கிறீங்க?” எல்லாவற்றையுமே ஒரேயடியாகப் பேசினான் அகிலன்.

நீண்ட நேரம் அங்கிருந்து பிருந்தாவை சங்கடப்படுத்த அவர்கள் விரும்பவில்லை. இவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போதே சக்கர நாற்காலியில் ஒரு இளைஞன் பார்த்தவுடன் தெரிந்தது மூளைக்

குறைபாடு உள்ளவனென்று. பேச்சும் அவ்வளவாக வராமல் வாயில் நீர் ஒழுக ஏதோ பேசினான். எதுவும் விளங்கவில்லை.

"உங்கள் மகனா?" அகிலனின் கேள்வியில் கூசிக் குறுகிப் போய் "ஓம்" என்ற ஒற்றை வார்த்தையில் பிருந்தாவைக் குற்ற உணர்ச்சியுடன் பார்த்தாள். எவ்வளவோ பேசவேண்டுமென்று நினைத்து வந்த அகிலனாலேயே பேசமுடியவில்லை. பிருந்தாவைத் திரும்பிப் பார்த்தான். மனதிலே ஒட்டாது நின்ற அந்தப் பெண்ணைப் பார்த்தபடி நின்றாள். அங்கே கதவை இழுத்துச் சாத்தினாற்போல ஒரு மௌனத் தோற்றம். யாவருமே பேச வார்த்தைகளைத் தேடுவது போல் மௌனித்து நின்றனர். நிறையச் சொல்ல வேண்டுமென்று நினைத்துவந்த அகிலன் வாய்க்குள் சொற்கள் மாட்டிக்கொண்டு வெளியே வரமுடியாது திணறுவது போல் நின்றான். துயரப்பட்டவர்களுக்குத்தான் வலிகளைச் சுமந்தவர்களுக்குத்தான் மற்றவர்கள துயரப்படக் கூடாதென்ற எண்ணமிருக்கும். முகிலாவை அணைத்தபடி உணர்ச்சிகள் அற்று கலைந்தோடிய மேகங்களைப் பார்ப்பது போல் என்றோ தன்னை விட்டுச் சென்ற மனதிலே ஒட்டாது நின்ற அந்தப் பெண்ணைப் பார்த்தபடி நின்றாள் பிருந்தா.

❑

# மீண்டும் பிறக்கலானேன்

*மழைத்துளிகளைச் சேமித்து காத்திருந்த கருமுகில்கள் எல்லாம்தம்மைவிடுவித்துக்கீழேநீரைக்கொட்டுவதற்கு ஒன்றோடொன்று மோதின. ஓ! போர்க்குணம் என்பது அங்கேதான் உருவாகியதோ? ஒருவரையொருவர் கீழே தள்ளிவிடும் கயமையும் உருவாகிய இடம் அதுதானோ? தாங்கள் முந்திக் கொள்வதற்காக யாரையும் கீழே தள்ளிவிடுவதை முகில்களிடம் இருந்துதான் மனிதன் கற்றுக்கொண்டானோ? அத்தனை உயரத்திலிருந்து விழுந்து உடைந்து சிதறிய மழைத்துளிகள் நிலமங்கை யைக் குளிர வைத்தன. இரண்டு வீடுகள் தள்ளியுள்ள ஓலைக்குடிசையில், விழுந்து விழுந்து நெளிந்த அலுமினியப் பானைகள் அடுக்கடுக்காய் விழும் மழைத்துளிகளை ஆவலாய் ஏந்துகின்றன. அங்கிருந்து ஒரு சிறுமி பொலித்தீன் உறைக்குள் தன் தலையை நுழைத்துக்கொண்டு என் வீட்டுக்கு ஓடி வந்தாள்.' 'அம்மா! நீங்க கழித்துவிட்ட பிளாஸ்ரிக் குடமோ வாளியோ இருந்தால் தாங்கோ. வீடு நல்லாய் ஒழுகுது. அதை வைத்தால் வீடு கொஞ்சம் நனையாது' என்றாள். எடுத்துக் கொடுத்துவிட்டு பழைய சேலை இரண்டையும் கொடுத்தேன். நிலத்தில் போட்டால் கொஞ்சம் நிலம் ஊறாது. கோடை மழை இப்போது விட்டுவிடும். அதற்குள் அவர்கள் வீட்டை நனைத்துவிடுமே. இந்தப் போர் எத்தனை பேரின் வாழ்வில் விளையாடி அன்றாடங் காட்சிகளாய் ஆக்கிவிட்டது. அங்கு எல்லோருமே கணவனை இழந்து பிள்ளைகளுடன் வாழும் பெண்கள் தான். வயல்களில் கூலி வேலைக்குப் போகும் குடும்பம் அது. இரண்டு பொம்பிளைப் பிள்ளைகள். மிஞ்சுகிற உணவு, தேங்காய் என்று அவர்களுக்குக் கொடுப்பது வழக்கம். ஓட்டைக்குடிசைகளில் இனி இரண்டு நாட் களுக்கு அம்மாக்கள் ஈரவிறகுகளுடன் போராடுவார்கள்.*

'வானத்தில் ஒட்டை வந்திட்டுதா?' என்று கடைசி மகள் அருள் கேட்டாள். பதில் சொல்லும் மனநிலை எனக்கில்லை.

சுரேன் படையினரால் கொல்லப்பட்டு நான் அவர்களால் வன் கொடுமைக்கு ஆளாகி எல்லாமே மரத்துப் போய்விட்டது. சிரிப்பு என்பதையே மறந்தாச்சு. ஏதோ பிள்ளைகளுக்காய் வாழ வேண்டிய கட்டாயம். இப்போது என் மகன் அறிவு ஓ.எல் சோதனையில் ஒன்பது டி சித்தி பெற்றது மட்டுமன்றி இலங்கை யிலேயே முதலாவது மாணவனாக வந்திருக்கிறான்.என் தாயுள்ளம் மகிழ்ச்சியில் ஆரவாரித்தது. எப்படியாப்பட்ட குழந்தை களைக் கடவுள் எனக்குத் தந்திருக்கிறார். இதையெல்லாம் விட்டிட்டு பத்து வருடங்களுக்கு முன் சாகத் துணிந்தேனே. அப்போது பெரிய விடயமாக இருந்தது இப்போது தூரத்தில் ஒரு புள்ளியாக மாறியிருந்தது. முதல் சிஸ்ரர் அன்புக்குத்தான் இதைச் சொல்ல வேண்டுமென்று பரபரத்தேன். அப்போது அங்கு வந்த மகன் 'முதல் சிஸ்ரருக்கு நான் ஃபோன் பண்ணிச் சொல்லிவிட்டேன். எனக்குத் தெரியும். அதுதான் உங்கள் விருப்பமென்று' என்றான். மகனைக் கட்டித்தழுவி மனசறிஞ்சு நடக்கிற பிள்ளை. இப்ப அப்பா இருந்திருந்தால் எவ்வளவு சந்தோஷப்பட்டிருப்பார். நாங்க குடுத்துவைத்தது அவ்வளவு தான்' என்று கண்கலங்கினேன்." நான் வயலுக்குப் போய் தாத்திக்குச் சொல்லிவிட்டு வரட்டா?அவர் இந்தக் குடும்பத்துக் காக எவ்வளவு பாடுபடுகிறார். ஒரு காலை வைத்துக்கொண்டு எங்களுக்காக நாள்முழுவதும் வயலுக்குள்ளும் தோட்டத்திற் குள்ளும் மாடாய் உழைக்கிறார்.அவரால்தான் நான் சிங்களத் திலும் டி எடுத்தது.' சரி. ஓம் சொல்லிப்போட்டு கெதியாய் வந்திடு. நான் பிள்ளையளுக்கு ஏதும் ஸ்வீற்றும் பாயாசமும் செய்து வைக்கிறேன்.'

சமையலறைக்குச் சென்ற எனது மனம் பதினைந்து வருடங் களுக்கு முன் போர்க்காலத்துக்கு வெகு வேகமாக ஓடியது. கணவன் சுரேன், அறிவு, ஆற்றல், மூவருடனும் எவ்வளவு சந்தோஷமாகக் காலம் ஓடியது. அப்போது அம்மாவும் எங்களுடன் இருந்தா. என் கணவர் சுரேன் ஆரோவணம் சிறுவர்

இல்லத்தில் வளர்ந்தவர். சிறுவயதிலேயே எண்பத்தி மூன்றாம் ஆண்டு இனக்கலவரத்தில் பெற்றோரை இழந்தவர். கொழும் பிலிருந்து வந்த சுரேனின் தகப்பனின் நண்பர் மூலம் ஆரோவணத் துக்கு வந்து ஃபாதர் யேம்ஸ்சால் வளர்க்கப்பட்டவர். ஃபாதரின் அத்தனை நல்ல குணங்களையும் பார்த்துப் பார்த்து வளர்ந்தவர். ஃபாதர் யேம்ஸ் உயிரிழந்த சிங்கள இராணுவத்தினருக்காகவும் மன்றாடுவார். 'ஏழைகள் சம்பளத்துக்காக இந்த வேலைக்கு வந்தவர்கள், அவர்களை வெறுக்கக்கூடாது' என்பார். அவரிடம் வளர்ந்ததால் அந்த நல்ல குணங்களெல்லாம் சுரேனிடம் குடி கொண்டுவிட்டன. ஃபாதர் ஒரு ஃபாதராக வாழ்ந்ததைவிட ஒரு சமூக சேவையாளராக வாழ்ந்தார் என்றே சொல்ல வேண்டும். சுரேனின் அறிவாற்றலால் அவரை நோர்வே நாட்டவரான ஐகில் என்பவர் தத்தெடுத்து, ஆரோவணத்தில் வளர்ந்து பட்டதாரி யானான். ஐகில் யுனெஸ்கோ நிறுவனத்தில் டாக்டராகப் பணி புரிந்தவர். அவரும் வேலை நிமித்தம் இலங்கையில் பணி புரிந்ததால் தமிழர்கள் மேல் அனுதாபப்பட்டு பல சிறுவர்களுக்கு உதவி புரிந்திருக்கிறார். அவருக்கு சுரேனிடம் மிகுந்த பிரியம். அவர் திருமணவாழ்வில் தோற்று விவாகரத்து பெற்றவர். அவரது மகன் மனைவியுடன் வாழ்வதால் தன் புத்திர பாசம் முழுவதையும் சுரேன் மேல் கொட்டினார். சிறுவயதிலிருந்தே அவருடன் பழகியதால் சுரேன் ஆங்கிலத்தில் சரளமாகப் பேசும் ஆற்றல் பெற்றதுடன் அங்கு வரும் வெளிநாட்டவர்களுக்கு மொழிபெயர்ப்பாளனாகவும் இருந்தான். ஃபாதர் எத்தனையோ சிறுவர்களுக்கு இப்படியான பெற்றோரைத் தேர்ந்தெடுத்து வாழ வழிகாட்டியவர். உயர்வுதாழ்வு, மதவேறுபாடு என்பன ஃபாதரிடம் இல்லாதது போலவே சுரேனிடமும் அந்தப் பேதத்தைக் காண முடியாது. கணவன் சுரேன் விவசாயத் திணைக் கழகத்தில் நல்ல உத்தியோகத்தில் இருந்தான். அவர்கள் வயலை குத்தகைக்கு விட்டு இருந்தனர். கொஞ்சம் கொஞ்சமாக போர் மேகம் சூழ கஷ்டங்களும் ஆரம்பமாகியது. பிள்ளைகளுடன் தேவையான பொருட்களையும் சுமந்துகொண்டு இடப்பெயர்வு என்று நிரந்தர மில்லாமல் அலைந்ததும் இன்னும் மனதைவிட்டு அகலவில்லை. இடப்பெயர்வின் போதுதான் அருள் பிறந்தாள்.

*மனிதர்களுக்கு மட்டுமா துன்பம்? மிருகங்களும் ஏன் பறவைகளும்கூட இடம்பெயர்ந்தன. புதுப்புதுப் பெயர்கள் சூடிக்கொண்டு எத்தனை குண்டுகள் வீசப்பட்டன. பொஸ்பரஸ் குண்டுகளால் தாக்குண்டு உடல்கள் தீப்பற்றி எரிய ஓடியோடி ஓலமிட்டுச் செத்தவர்கள் எவ்வளவுபேர். உடல்கள் சிதறிச் சின்னாபின்னமாகிச் செத்தவர்கள் எத்தனைபேர். வானமும், மண்ணும் மட்டுமே சாட்சிகளாக வெறுமையாகப் பார்த்துக் கொண்டிருந்தன. அவையும் எமக்கு நியாயம் வழங்க, சாட்சி கூற வரவா போகின்றன? எலும்புகள் கூடி மிச்சமின்றி எரிந்து சாம்பலானவர்கள் எத்தனை ஆயிரம். குற்றுயிரும் குலை உயிருமாய் துடிதுடித்து மாண்டவர்கள் எத்தனைபேர்.வேட்டை நாய்களாய் வெறிகொண்டு பெண் உடல்களை மேய்ந்து தின்ற கேவலம் மறக்கக்கூடியதா? பிணமாக்கப்பட்ட பெண்களைக்கூட விட்டுவைக்காமல் உறவுகொண்ட கொடுமை வேறு நாடுகளில் நடந்திருக்குமா என்று தெரியவில்லை. சாகடிக்கப்பட்ட ஆயிரக் கணக்கான மக்களின் உயிர்களெல்லாம் அணுத்துகள்களாய் காற்றில் கரைந்தன. யுத்தம் என்ற அரக்கன் ஓய்வுபெற்ற பின்னும் ஆற்றுவாரின்றி மனநலம் பாதிக்கப்பட்டவர்களும், தாங்கமுடியாமல் தற்கொலை செய்தவர்களும் இன்னும் சாகாமல் செத்து சீரழிந்து கொண்டு இருப்பவர்களும் எவ்வளவு பேர்.*

*சுரேனும் துப்பாக்கிக்குண்டுக்கு இரையாக நிர்க்கதியாய் நின்ற என்னைக் காப்பாற்றுவார் யாருமின்றி கசக்கி எறியப் பட்டேனே. பயத்தில் அறைக்குள் ஒடுங்கியிருந்த பிள்ளைகள் சத்தமெல்லாம் ஓய்ந்தபின் அம்மாவைச்சுற்றி நின்று அழுதது கண்ணுக்குள்ளேயே இன்னும் நிற்கிறது. உயிரற்ற அப்பாவின் உடலைக்கூட எரிக்க யாருமின்றி நால்வரும் பட்ட துயர் வார்த்தைகளால் சொல்ல முடியுமா? கணவனின் இறப்பைத் தாங்குவதா எனக்கு நடந்த கொடுமையைத் தாங்குவதா? செய்ய வகையின்றி ஆமி ட்ரக்குள் விழப் போன என்னைக் காப்பாற்றி சிஸ்ரேசின் மடத்தில் ஒப்படைத்தான் பியசேன என்ற ஆர்மி. என்னைக்கண்ட சிஸ்ரர் அன்பு என்னிடம் எதுவுமே கேட்காமல் ஆசுவாசப்படுத்தி அன்று முழுவதும் அங்கேயே*

*தங்கவைத்து அடுத்தநாள் என்னுடைய வீட்டில் கொண்டு போய்ச் சேர்த்தார். என்னைக் காணாமல் ஓடியோடித் திரிந்து களைப்புற்ற பிள்ளைகள் என்னைக் காணாத களையாலும், பசிக்களையாலும் மூலையில் சுருண்டு படுத்திருந்தனர். மூவரும் ஒருவரையொருவர் கட்டிப்பிடித்த வண்ணம் தூக்கத்திலிருந் தனர். பிரமை பிடித்தவள் போல் தன்னிலை உணராமல் எங்கேயோ வெறித்துப் பார்த்தபடியிருந்த எனக்கு என் வீட்டு விலாசம் கூடச் சொல்லத் தெரியவில்லை. பியசேன சொன்ன அடையாளங்களை வைத்தே சிஸ்ரரால் வீட்டைக் கண்டு பிடிக்க முடிந்தது. என்னைச் சீரழித்தவர்களில் பியசேனவும் ஒருவன் என்பது மங்கலாக நினைவில் வந்தது.*

*அதன்பின் ஒவ்வொருநாளும் சிஸ்ரர் அன்பு எங்கள் வீட்டுக்கு வரத்தவறியதே இல்லை. எனக்கு நடந்த அவலத்தை நினைத்து அழாத நாளில்லை. என்னுடம்பில் இருந்து ஒரு பகுதி கழன்று போய்விட்ட உணர்வு. வலிக்கும் எண்ணங்கள் புண்ணாய் குத்த நெருப்பிலிட்ட புழுவாய் துடித்தது எனக்கு மட்டுமே தெரியும். சுரேன் செத்துச் சுண்ணாம்பாய் போனபின்பும் அதை ஏற்க முடியாமல் என்னை சாகடிக்கும் அந்த நரக எண்ணங்களில் இருந்து வெளியே வரமுடியாமல நான் தவித்த தவிப்பு. கண்ணுக்கு முன்னால் காற்றோடு கரைந்து போன சுரேனை நினைத்து அழுவதா? சூறையாடப்பட்டு காற்றோடு கரைந்த என் கற்பை நினைத்து அழுவதா? இப்படி ஒரு சீரழிவுக்குப் பின் வாழத்தான் வேணுமா என்று இருந்தது.சிஸ்ரர் அன்பு சொன் னார்.' அழுகிறதால் எல்லாமே மறைஞ்சு போயிடுமென்றால் நல்லாய் அழுங்கோ. அழுகை நடந்தது எதையும் மாற்றி விடாது. எல்லாவற்றையும் இழந்துவிட்டேனே என்று அழுகிறீங்களே. உங்கள் பிள்ளைகளின் எதிர்காலம் என்று ஒன்று இருக்கிறது என்பதை மறந்திடாதீங்கோ. இனி நடக்கப் போவதைப் பார்க்க வேண்டும். மூன்று பிள்ளைகளையும் வளர்க்கவேண்டும். உங்கள் கணவரின் பென்ஷன் கிடைக்க என்ன செய்யவேணுமோ அதைப் பார்க்க வேண்டும். அது போதுமென்று நான் நினைக்க வில்லை. நீங்க ஒரு வேலையைத் தேட வேணும். பிள்ளைகளை நல்ல படியாக வளர்க்க வேணும். படிப்பித்து ஒரு நிலைக்கு*

*கொண்டுவர வேணும். நீங்க இறந்துவிட்டால் எல்லாம் சரியாகிடுமா? பிள்ளைகள் ஆதரிப்பாரில்லாமல் பிச்சை எடுப்பார்கள். சாகிறதில் காட்டுகிற துணிச்சலை வாழ்வதில் காட்டலாமே. நான்கூட பன்னிரண்டு வயதில் பெற்றோரை இழந்து நடுரோடிற்கு வந்தவள்தான். இருக்க இடமில்லாமல் கிறிஸ்தவ மடத்தில் தஞ்சம் புகுந்தேன். வயிற்றுக்கும் பெண்ணுக்கும் இனமத பேதமில்லை. போர்வெறியர்களிடம் இருந்து என் மானத்தைக் காப்பாற்ற நான் அவர்களிடம் சேர்ந்தேன். மதம் மாறினேன். விரும்பி நான் அங்கு போய்ச் சேரவில்லை. ஆனால் கிடைத்தது இது தான் எனக்கான வாழ்வு என்று முடிவெடுத்து நிம்மதியாக வாழ்கிறேன். எங்கள் மேல் எது திணிக்கப்படுகிறதோ அதையேற்று வாழ்ந்தால் எந்தக் கவலையும் இல்லை.'*

*அவரின் ஆறுதல் வார்த்தைகள்தான் எனக்கு தூண் போல இருந்தது. அவருக்கும் என்னுடைய வயதுதானிருக்கும். எவ்வளவு பக்குவம். எவ்வளவு தெளிவு. அவரைப் பார்க்க ஆச்சரியமாக இருக்கும். ஒரேயொரு அண்ணன் வெளிநாட்டில். தூரத்துத் தண்ணி தாகத்துக்கு உதவாது என்பதுபோல் ஒரு பலனுமில்லை. அண்ணா எவ்வளவு பாசமாயிருந்தாலும் அண்ணிக்கு அது பிடிக்காது. அடிக்கடி அண்ணா காசு அனுப்புவது அவவுக்கு தெரிந்தால் சண்டை பிடிப்பா. எனக்குத் தெரியும். வீட்டிலிருந்தே அண்ணா போன் கதைப்பதில்லை. சில நேரங்களில் அண்ணி ஃபோன் பண்ணி காசு கேட்டீங் களா? எங்களுக்கு எவ்வளவு கஷ்டம்.உங்களுக்கு சும்மா சும்மா அனுப்ப ஏலாது என்பா. அண்ணா அவவுக்குத் தெரியாமல்தான் அனுப்புறனான். அண்ணி கேட்டால் அனுப்புவது இல்லை யென்று சொல் என்பார். வேண்டாமென்று சொன்னாலும் கேட்க மாட்டார். சுரேன் மறைந்த பிறகு நான் படிக்காமல் பாதியிலேயே விட்ட படிப்பைப் பற்றி நினைப்பேன். ஏ.லெவலில் கலைப்பிரிவில் தேர்ந்தெடுக்கப்பட்ட போது தமிழில் படிக்கும் கலைப்பிரிவுப் பட்டத்தை வைத்து என்ன செய்கிறது? சும்மா பட்டதாரி என்று சொல்லலாம்.வேறு ஒன்றும் பயனில்லை யென்று என்னை மட்டந்தட்டிய உறவினர்களின் பேச்சால்*

படிக்கும் வாய்ப்பை இழந்தேன். அம்மா அப்பா எவ்வளவோ சொல்லியும் கேட்காமல் மட்டந்தட்டிய உறவுகளின் பேச்சுக்கு முக்கியம் கொடுத்தது இப்போது காலங்கடந்து உறைத்தது. ராகிங் பயத்தில் இருந்த நான் அவர்கள் பேச்சை எனக்குச் சாதகமாக்கியதன் விளைவு இப்போது என்னை மட்டுமே பாதித்தது. பழைய நினைவுகள் ஒருபக்கம் ஓட ஸ்வீற் செய்து வடையும் செய்துவிட்டேன்.

அறிவுடன் சேர்ந்து பியசேனவும் வந்துவிட்டார். எல்லோரும் சாப்பிட்டு மகிழ்வோடு இருந்தனர். எப்போதோ மறைந்து விட்டிருந்த கூடைச்சிரிப்பு இன்று வீட்டை நிரப்பியது. ஆற்றலிடம் நீயும் நல்லாய்ப் படித்து அண்ணாபோல் றிசல்ட்ஸ் எடுக்க வேணுமென்று பியசேன உட்பட நானும் சொன்னோம். நீண்ட நாட்களுக்குப் பிறகு அங்கு சந்தோஷம் விளையாடியது.'

மாமாவுக்கும் ஒருக்கா போனில் சொல்லிவிடு. சந்தோஷப் படுவார்' என்றேன். பத்து வருடங்களுக்கு முன் அண்ணியுடன் பேசியது. எனக்கு எடுக்க விருப்பமில்லை. பத்து வருடங்களுக்கு முன்பு சுரேன் இறந்துபோய் கொஞ்ச மாதங்களால் ஆலோசனை கேட்டு கடிதம் எழுதினேன்.அண்ணி கடிதத்தை உடைத்து வாசித்துவிட்டு தாறுமாறாக என்னைப் பேசியது மறக்க முடியவில்லை. 'வெட்கமில்லையா உனக்கு எங்கள் இனத்தை அழித்த இனத்தில் ஒருவனைக் கல்யாணம் செய்ய அதுக்குள்ளை புருசனை மறந்து நீயெல்லாம் ஒரு பொம்பிளையா? என்று கேட்கக் கூடாததெல்லாம் கேட்டதோடு வீட்டுக்கு இனி ஃபோன் எடுப்பதில்லையென்று முடிவெடுத்தேன். அண்ணா அவவிடம் எனக்கு நடந்த கொடுமைகளைச் சொல்லா மல் மறைத்தது சரியாகவே பட்டது. நான் பியசேனவைத் திருமணம் செய்தால் தங்கள் மானம் போய்விடும் என்பதுபோல் குதித்தா. ஃபோன் பண்ணி பேசக்கூடாத வார்த்தை எல்லாம் பேசி நோகடித்தா.அதன்பின் நான் எப்பவுமே கடிதம் போட்டதுமில்லை. ஃபோன் பேசியதுமில்லை. தாழ்ந்தாலும் குற்றம் வாழ்ந்தாலும் குற்றம் என்பதுபோல் என்னைக் கரித்துக் கொட்டிக் கொண்டேயிருந்தா.

ஆனால் அண்ணா 'இது சரியான முடிவு. உனக்கும் பிள்ளை களுக்கும் ஒரு பாதுகாப்பு வேணும். இயக்கம் இருந்தபோது இருந்த சூழல் வேறு. இப்ப இருக்கிற சூழல் வேறு. முன்பு பெண்களுக்கு அவ்வளவு பாதுகாப்பு இருந்தது. இப்போது எங்கள் நாட்டில் பெண்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பு மில்லை. சந்தர்ப்பம் கிடைத்தால் வயதானவர்கள் கூட தப்பாக நடக்கிற காலமிது. தமிழர் சிங்களவர் பேதமில்லை. யாரையும் நம்பமுடியாதிருக்கிறது. வேலி இல்லாத பயிரை கடித்துக் குதறி எறிந்து விட்டுப்போக ஓநாய்க்கூட்டம் காத்திருக் கிறது. ஆம்பிளைப் பிள்ளைகளை குடிவகை, போதைப்பொருள் இன்னும் ஆயிரம் கேடுகள் கெடுத்து விழுங்கக் காத்திருக் கிறது. உனக்காக இல்லாவிட்டாலும் பிள்ளைகளைக் கட்டுப் பாட்டுடன் வளர்க்க அப்பா என்றொரு துணை தேவை. பியசேன தவறை உணர்ந்து மன்னிப்புக் கேட்கும்போது மன்னித்து ஏற்றுக்கொள்வதுதான் மனிதப்பண்பு. கலக்க மில்லாமல் செய். நீ யாருக்கும் விளக்கம் சொல்லத் தேவை யில்லை. மகரிஷி வேதாத்திரி சொன்னார், 'கடந்த காலமென்பது உடைந்துபோன பானை. எதிர்காலம் என்பது மதில் மேல் பூனை. ஆனால் நிகழ்காலம் என்பது உன், கையில் கிடைத்த வீணை. அதனை அழகாக மீட்டு' என்று. அது மிகப் பெரிய உண்மை. கையில் கிடைத்த வாழ்க்கையைத் தவற விட்டிடாதை. அதுவும் ஃபாதர் சொல்றாரென்றால் தைரியமாகச் செய்யலாம். அவர் நல்லதென்றால் மட்டுமே சொல்லுவார். என்னுடைய ஆசீர்வாதங்கள்' என்று கூறினார். வேதனைகளும் வலிகளும் முதலில் கஷ்டத்தைக் கொடுத்தாலும் போகப்போக அவற்றைத் தாங்கும் சக்தி தானாகவே வந்துவிடுகிறது. பியசேனவைத் திருமணம் செய்தாலும் நாங்கள் நாங்களாகவே வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எனக்கு ஒரு பாதுகாப்பு என்பது உண்மைதான்.

அறிவு, மாமா அரவிந்துக்கு ஃபோன் பண்ணி தான் 9 டி எடுத்த மகிழ்ச்சிச் செய்தியைக் கூறினான். அவனுக்கு பெருமையாக இருந்தாலும் தான் ஒரு உதவியும் செய்யாமல் இருந்தது மனதை உறுத்தியது. தங்கை சொல்லாதது கொஞ்சம் வருத்தமாக

இருந்தது. ஆனாலும் மனம் தங்கையுடன் வாழ்ந்த பழைய நினைவுகளில் மூழ்கியது. தாங்கள் வன்னியில் வாழ்ந்த காலம் மனத்திரையில் ஓடியது. அவர்கள் குடும்பம் சிறியது. தாய், தந்தை, அரவிந், அகிலா. அன்பான அடக்கமான சிறிய குடும்பம். யாழிலிருந்து வன்னிக்கு இடம்பெயர்ந்தவர்கள். வயதிலே வன்னிக்கு வந்ததால் யாழ்ப்பாணம் பற்றி எதுவுமே தெரியாது. வன்னி மண்தான் அவர்கள் உலகம். வயல்களும், குளங்களும், வாய்க்கால்களும் கொக்குகளும், நாரைகளும், பாடும் பறவைகளும், தூக்கணாங்குருவிக்கூடுகளும். தாலாட்டும் தென்றல் காற்றும், நீர் நிறைந்த குளங்களும், தென்னையும், மாவும், வேம்பும், இன்னோரன்ன மரங்களும், சலசலப்புடன் பேசிக்கொள்ளும். சுரேன் என்னுடைய நண்பன். அவனைப் பார்ப்பதற்காக அடிக்கடி ஆரோவணம் இல்லத்திற்கு செல்வது பழக்கம். ஃபாதருடன் சேர்ந்து வேப்பஞ்செடிகளைத் தேடி நட்டது, தோட்டத்தில் அவருடன் வேலைகள் செய்தது எல்லாமே மனதின் ஓரத்தில் இன்னும் பசுமையைத் தருகின்றன. அங்கு இருக்கும் சிறுவர்களுக்கு தன்னம்பிக்கை ஊட்டும் முகமாக அவர்களை தோட்ட வேலையில் ஊக்குவித்து சவர்க்காரம், தும்புத்தடி, விளக்குமாறுகள் செய்யப் பழக்கி அதற்கான ஊதியத்தைக் கொடுத்து அவர்கள் செலவை அவர்களே பார்த்துக் கொள்ளுமாறு செய்வார். யாரையும் சாராது வாழப் பழக்கி விடுவார். ஃபாதரைப் பார்க்கும் போதெல்லாம் ஜேசு இப்படித்தான் இருந்திருப்பாரோ என்று நினைக்கத் தோன்றும். உலகிலுள்ள எல்லா ஃபாதர்களுக்கும் ஓர் உதாரண புருஷராக விளங்கினார். அப்பாவாய், நல்வழிப்படுத்தும் குருவாய், ஏன் ஒரு அம்மாவாயும் இருந்தார். அவரிடம் சமய பேதமோ, சாதி பேதமோ, அந்தஸ்து பேதமோ இருந்ததில்லை. கனிவான கண்கள், எனக்கு எப்போதும் என் அம்மாவைப் பார்ப்பதுபோல் இருக்கும். அவர் அணைப்பில் சகல கவலைகளும் மறந்துவிடும். ஜேசுவிடம் ஒட்டிக் கொள்ளும் ஆட்டுக்குட்டிகள் போல் எல்லா சிறுவர்களும் அவரிடம் ஒட்டிக்கொள்வோம். அம்மா சொல்வார் அவர் ஒரு தாயுமானவர். பன்றிக்கு பிரசவம் பார்த்த சிவபெருமான்போல் என்று.பயமின்றி எங்கும் ஓடித்திரிந்த நாட்களும் இன்னும்

மணம் குறையாமல் வாசமான நினைவுகளாக மனமெங்கும் வியாபித்திருந்தன. வன்னியில் புலிகளின் கைகள் ஓங்கியிருந்த காலம். பள்ளியால் வரும்போது பாலப்பழங்கள்,கொய்யாப் பழங்கள், நாவற்பழங்கள் பொறுக்கி உண்டுகொண்டு வருவது, விளையாட்டும், சிரிப்பும் மட்டுமே தெரிந்த பருவம். காடுகளுக்குள் கூட பயமின்றித் திரிய முடியும். திருடர், காடையர் என்ற பயமேயில்லை.பெண்கள் எந்தப் பயமுமின்றி இரவில் கூட நடமாடலாம். எந்த நேரத்திலும் போராளி அண்ணாக்கள்,அக்காக்கள் உதவிக்கு ஓடி வருவார்கள். சிரித்த முகத்துடன் அவர்களைப் பார்ப்பதே எல்லோருக்கும் சக்தி தரும் ஒரு விடயமாகும். என்ன ஒரு பொற்காலம். உலகத்திலேயே அப்படி ஒரு நாடு இருந்திருக்க முடியாது. ஆனால் அவற்றை அனுபவிக்காத யாரும் சொன்னால் நம்பக் கூட மாட்டார்கள். ஆனால் அந்த மகிழ்ச்சியும் சுதந்திரமும் நிலைக்கவில்லையே. வன்னி நிலைமை மாறிக்கொண்டே இருக்க அப்பா என்னை நாடு கடத்த தீர்மானித்தார். அவர் கனை விட்டுப் பிரிவது கொஞ்சம் கவலையாக இருந்தாலும் வெளிநாட்டு மோகம் அதனை வென்றது. பதினெட்டு வயதில் சுவிஸில் இறங்கி கால் பதித்தபோது இந்த நாட்டின் அமைதி என்னவோபோல் இருந்தது. குண்டுச் சத்தங்களுக்குள்ளும் அவலக் குரல்களுக்குள்ளும் பழக்கப்பட்டுப் போன காதுகள் ஏனோ நிசப்தத்தை ரசிக்கவில்லை. சுதந்திரக்காற்றை இங்கு இழுத்து சுவாசித்தபோது மூச்சு முட்டியது. ம். எத்தனை ஆண்டுகளாகி விட்டன. ஆனாலும் அவ்வப்போது மனதிலிருந்து எடுத்து மீட்டி அவற்றின் சுகத்தை அனுபவித்துக் கொள்ளுவான். மருமகனின் கெட்டித்தனம் மனதை நிறைத்தது. ஆனாலும் மனைவிக்கு அதனைச் சொல்லாமலே இருந்தான். அவள் பொறாமைப்படுவாளே ஒழிய மகிழ மாட்டாள். ஆகவே தானே எடுத்து தங்கையின் சந்தோஷத்தில் பங்கெடுத்துக் கொண்டான்.

எனக்கு சிஸ்ரர் அன்பைப் பார்க்க வேண்டும் போலிருந்தது. நான் துவண்டு போன தருணங்களில் எல்லாம் என்னைத் தன் பேச்சுத்திறனால் தூக்கிவிட்டவர். நான் இந்த உலகத்தில்

வாழவே தகுதியில்லாதவளென்று தற்கொலைக்கு முயன்ற போதெல்லாம் என் மனதுக்கு உரமூட்டி பட்ட இழப்புகளுக்குப் பின்னும் ஒரு வாழ்க்கை இருக்கிறதென்பதை புலப்படுத்தியவர். அவரை நான் நட்பாகக் கொள்ளவில்லையென்றால் நான் இறந்தவளாகிப் போயிருப்பேன். எல்லாம் இழந்து விட்டேனென்று கலங்கியபோது அறிவு, ஆற்றல், அருள் என்ற மூன்றுகுழந்தை களின் எதிர்காலம் என் கையில் ஒப்படைக்கப்பட்டு இருப்பதை அறிவுறுத்தியவர். என் வாழ்வில் ஏற்பட்ட ஒவ்வொரு சம்பவமும் எனக்கோர் பாடத்தைக் கற்றுத்தந்து இருக்கிறது என்பதை விளக்கியவர். எத்தனை பேரிடம் என்னை இழந்தேனென்று தெரியாமல் மயக்கத்தில் இருந்த எனக்கு உயிரூட்டியவர் அந்த சிஸ்ரர். அன்று அவர் சுடுபட்டு விழ என்னைச் சீரழித்து வெளியே குழந்தைகள் அப்பாவின் உயிரற்ற உடலைக் கட்டிக்கொண்டு அப்பா அப்பா என்று கதற. எப்ப நினைத்தாலும் உடல் நடுங்கும். ஆயிரம் குண்டுகள் தலைக்குள் டமாரமடிக்கும். மயங்கிச் சாய்ந்திடுவேன். அன்றைய நிகழ்ச்சி ஆணியடித்ததுபோல் மனதைவிட்டு அகலவேயில்லை. சிஸ்ரர் அன்பு மட்டும் இல்லை யென்றால் நானின்று இல்லை. பிள்ளைகள் அநாதரவாய் யாரிடம் அவஸ்தைப்பட்டிருப்பார்களோ? கனிவான முகம், அன்பான வார்த்தை தவிர வேறெதுவும் பேசத் தெரியாத உதடுகள், கருணை பொழியும் கண்கள். ஒரு தாயாய், சகோதரியாய், உற்ற தோழியாய் உடலுக்கும் மனதுக்கும் மருந்தாய் வானத் திலிருந்து எனக்காகவே இறங்கி வந்த தேவதையாய் சிஸ்ரரைப் பற்றி சொல்லிக்கொண்டே போகலாம். மயிலிறகுச் சொற்களால் இதமாக என் மனதை வருடி, மனஉளைச்சலிலிருந்து மீட்க சைக்கோலஜிஸ்ற்றிடம் அழைத்துச் சென்று புண்ணான என் மனதைப் பண்படுத்தியவர். சிலர் சொன்னார்கள் இப்படி உதவி செய்துவிட்டு மதம் மாற்றி விடுவார்களென்று. ஆனால் இதுவரை அவர் சமயம் பற்றிப் பேசியதேயில்லை. எங்களுக்குள் மதம் ஒரு பிரச்சனையாகவேயில்லை. என்னை என் சமயத்தோடு அன்பாக ஏற்றுக் கொண்டார். கடவுள் ஒருவரே என்பதில் எங்களுக்கு எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. எனது புண்பட்ட மனதுக்கு மருந்தாக மட்டுமே இருந்தார். கற்பழித்தவனில் ஒருவனே மனம்

*திருந்தி பிராயச்சித்தமாக என்னைக் கல்யாணம் செய்வதாகக் கூறியபோது வெறிபிடித்தவள் போல் கூச்சலிட்ட என்னை ஆசுவாசப்படுத்தி புத்திசாலித்தனமாக வாழ வழிகாட்டியவர் அவர் தான். பியசேன ஒரு ட்ரக் அக்ஸிடென்ற்றில் ஒரு காலையும் தன் ஆண்மையையும் பறிகொடுத்து ஃபாதரிடமும் சிஸ்ரரிடம் வந்து பாவமன்னிப்பு கேட்டு அழுதுதான் என்னைக் கல்யாணம் செய்து பிள்ளைகளை நல்லபடியாக படிப்பிப்பதாக வாக்குக் கொடுத்திருக்கிறான்.*

*இந்த நேரத்தில் ஆரோவணம் ஃபாதர் ஜேம்ஸ் பத்திநாதன் நினைவும் வருவதைத் தவிர்க்கவே முடியாது. அவர் கடவுளால் கிளிநொச்சி மக்களுக்காய் அனுப்பப்பட்ட பிரத்தியேக மனிதர். பெற்றவர்களை இழந்து நிர்கதியாய் நின்ற சிறுவர்களை அரவணைத்து அன்பையும். அறிவையும் ஊட்டியவர். ஆரோ வணத்தை ஆலமரமாக்கியவர். ஒரு சிறு உயிருக்கும் துன்பம் இழைக்கத் தெரியாதவர். அவர் போகும் வழியில் ஆடுகள் போனால் அவை போகுமட்டும் தன் வண்டியை நிறுத்தி அவற்றை போக அனுமதித்துவிட்டுத்தான் தான் செல்வார். சக உயிர்களை நேசிக்க மற்றவர்களுக்குக் கற்றுக் கொடுத்தவர். மற்றவர்களின் துன்பச்சுமையை தன்மேல் சுமத்தி அவர் களுக்காக பிரார்த்தித்தவர். பியசேன என்ற மிருகத்தை பரிகாரம் செய்யத் தூண்டியவர். கால் இழந்ததால் அவன் திருந்தவில்லை. திருத்திச் செதுக்கியவர். புத்தரின் கொள்கை அவராலேயே பியசேனவுக்கு புரியவைக்கப்பட்டது. ஃபாதரின் அறிமுகத்தால் தன்னைச் சுத்திகரித்து பாவமன்னிப்புத் தேடிக்கொண்டான். இப்படி எத்தனை பேர்களின் வாழ்வில் ஒளியூட்டினாரோ?' ஃபாதரும், சிஸ்ரர் அன்பும் போகும் இட மெல்லாம் அன்பை விதைத்துச் செல்லும் உத்தமர்கள். எனக்கு ஃபாதர் கூறிய அறிவுரைகள் கொஞ்சமில்லை. வாழ்க்கை முடிவது எங்கள் கையில் இல்லை அது ஆண்டவன் கையில் என்பதை என்னைக் காணும் போதெல்லாம் கூறுவார். நீ மூன்று பிள்ளைகளாலும் வருங்காலத்தில் பெறப்போகும் உயர்வை மட்டுமே நினைக்க வேண்டும் என்பதுதான் அவர் எனக்கு அடிக்கடி கூறும் அறிவுரை. சுரேன் எங்கேயும் போக*

வில்லை. உங்களைச் சுற்றியே சுவாசக் காற்றில் கலந்திருக் கிறார் என்று அவர் கூறுவது முற்றிலும் உண்மை.

ஒரு ஞாயிற்றுக்கிழமை. வேலையில்லை. வெளிமுற்றத்தில் உட்கார்ந்து வெறுமையாய் யோசித்தபடியிருந்தேன். நனைய விட்ட ஓலைகள் பின்னுவதற்காகக் காத்திருந்தன. ஆனால் கண்கள் தங்கள் பிள்ளைகளாம் தேங்காய்களை விழுந்து விடாமல் அணைத்தபடி காற்றில் அசையாமல் நிற்கும் தென்னை மரங்களைச் சுற்றியே இருந்தன. எங்களை மீறி எங்கள் பிள்ளைகளை உங்களால் பிடுங்கிவிட முடியுமா என்று வீராப்புடன் கேட்பதுபோல் நிமிர்ந்து நின்ற தென்னைகளை நானாகவே உருவகப்படுத்திக் கொண்டு மெதுவாக 'நானும் இந்த மரங்கள் போலத்தான். என்னைமீறி யாரும் என் பிள்ளை களைத் தீண்டமுடியாது' என்று வாய்க்குள் முணுமுணுத்த போது இரண்டு நாட்களுக்கு முன் சிஸ்ரர் பேசியது மூளை யைக் குடைந்தது. பியசேன திருந்தி செய்த பாவத்திற்கு பிராயச்சித்தம் செய்ய விரும்பினால்? பிள்ளைகளுக்கு ஆதரவாக ஒரு உறவு கிடைத்தால் அதை ஒதுக்குவது சரியாக இருக்குமா? துயரம் தரும் சுமையை குழந்தைகளைச் சுமக்க விடுவது சரியா? குழந்தைகளின் குதூகலத்தை களவாடுவது தப்பில்லையா?' அவரின் கேள்வி புரியாமல்' என்ன சிஸ்ரர். நான் பிள்ளை களுக்கு என்ன குறை வைத்தேன்? ஏன் இப்படிச் சொல்றீங்க? கேட்ட எனக்கு 'நான் உங்களுக்கு நல்லதுதான் செய்வே னென்று நம்பிறீங்களா? என்று சிஸ்ரர் பீடிகையுடன் ஆரம் பித்தார்' உங்களுக்குச் செய்த கொடுமைக்கு அந்த ஆண்டவன் பியசேனவுக்கு தண்டனை கொடுத்துவிட்டார். அவன் ஒரு அக்ஸிடென்ரில் தன் ஒரு காலையும ஆண்மையையும் பறிகொடுத்துவிட்டு குற்ற உணர்ச்சியில் ஒடுங்கிப் போயிருக் கிறான். ஃபாதர் ஜேம்சிடம் ஞானஸ்நானம் பெற்று ஜேம்ஸ் பியசேனவாகி அவர்களுக்குப் பாதுகாப்பாக அந்தக் குழந்தை களுக்குத் தகப்பனாக மட்டும் இருப்பதாகக் கெஞ்சுகிறான். நிச்சயம் அந்தத் தாய்க்கு கணவனாக இல்லை. பாவமன்னிப்பு கேட்கிறேன் என்று சேர்ச்சில் போய் நிற்கிறான். கட்டாய ஓய்வு பெற்றுவிட்டானாம். இப்போது செயற்கைக்கால்

*போட்டிருக்கிறான். தனக்கு கிடைத்த பணத்தை மூன்று பிள்ளைகளின் பெயரில் ஃபிக்ஸ்ற் எக்கௌன்ரில் போட்டிருக் கிறான். தன்னால் முடிந்த வேலைகளைச் செய்து அந்தக் குடும்பத்தைக் காப்பாற்றுவேன்' என்று சொல்கிறான்.' இதென்ன சிஸ்ரர். பெரிய குண்டாகத் தூக்கிப்போடுகிறீர்கள். என்னைப் பாழாக்கியவனை நான் கல்யாணம் செய்வதா? என்னால் என் பிள்ளைகளை தனித்து வளர்க்க முடியாதா?' சீற்றத்துடன் கத்தினேன்.' ஒன்றும் அவசரமில்லை. இது உங்கள் வாழ்க்கை. ஆனால் உங்கள் மகன் ஆற்றலுக்கு பியசேனவிடம் ஏதோ அன்பு இருக்கும்போல. அடிக்கடி கண்டு கதைப்பதாகச் சொன்னான். இந்தச் சிறுவனின் முகம் என்னைப் பாடாய் படுத்துகிறதுஎன்றுஅழுகிறான்.சொத்தியோ,முடமோஎவனென் றாலும் புருசன் என்றிருந்தா ஒரு பாதுகாப்பு. இப்படி ஒரு சந்தர்ப்பம் வந்து தானாகவே கதவைத் தட்டும்போது அதை நழுவவிடுவது புத்திசாலித்தனம் இல்லை. நிலமைகள் மாறும் போது எம் எண்ணங்களை மாற்றிக்கொள்வதில் தப்பு இருப்ப தாக எனக்குத் தோன்றவில்லை. உங்கள் அண்ணாவுடன் கதைத்து நல்ல முடிவெடுங்கோ. கோட் பிளெஸ் யு'*

*திக்பிரமை பிடித்து நின்ற அந்த உணர்வு இன்னும் போக வில்லை. எண்ணங்களின் முடிச்சுகள் அவிழாமல் இன்னும் சிக்காகவே இருந்தது.அப்போது ஆற்றலின் கை பிடித்தபடி அங்கு வந்த பியசேன என் காலில் விழுந்து 'அம்மே என்னை மன்னிச்சிடு' மீண்டும் மீண்டும் அரற்றியபடி கீழேயே கிடந்தான். எனக்குள் ஆவேசமும் வெறியும் வந்தது. அருகில் கிடந்த தென்னை மட்டையை எடுத்துக் கை ஓயுமட்டும் அவனை அடிஅடியென்று அடித்தேன். அவன் மரக்கட்டைபோல் கிடந்தான். அம்மா வேண்டாமம்மா. விடுங்கோ. அவருக்கு ஒரு காலும் இல்லை. பாவம்' என்றான் ஆற்றல்.' இந்த வீட்டுக்கு காவற்காரனாய் ஒரு பள்ளா போல இருக்கிறேன்' தள்ளாடியபடி கை கூப்பிக்கெஞ்சினான். ஆற்றல் என் முகத்தைத் தடவி கண்ணீரைத் துடைத்து, 'அம்மா! என்ன அடிச்சாலும் அப்பா வரமாட்டாரம்மா. பியசேனவை மன்னிச்சிடுங்க அம்மா. இந்த வீட்டிலேயே இருக்கட்டுமம்மா. நீங்க தானே சொல்வீங்க தப்பை உணர்ந்தால் மன்னிக்கவேணும் என்று நீங்கமட்டும்*

*மன்னிக்கக்கூடாதா?” எனக்கே உபதேசம் சொல்லும் தாயுமானவராக ஆற்றல் தெரிந்தான். எதுவுமே சொல்லாமல் கண்ணீர் வற்று மட்டும் அழுது தீர்த்தேன்.*

*யோசிக்க யோசிக்க அவன் வீட்டில் சும்மா வந்திருக்க முடியாது. உலகம் பழிக்கும். அவச்சொல் ஏற்பட்டால் மாற்ற முடியாது. இப்போதே உதவுகிறேன் என்ற சாக்கில் தப்பான எண்ணத்துடன் வருபவர்களை இவ்வளவு நாளும் கண்டது மறக்கவில்லை. பெண்ணென்றாலே ஆண்களுக்கு வெறும் உறுப்புக்களும், சதையும் தான் தெரிகிறது. ஆர்மியால் வன்முறைக்கு ஆளாக்கப்பட்டவள் என்பதால் பல ஆண்கள் என்னை ஒருமாதிரிப் பார்ப்பது எனக்குத் தெரியும்.காவலில்லாத மரம் கட்டாக்காலிகள் மேயலாம் என்ற நினைவு. மண் தின்னுற உடம்பை மனிதன் தின்றால் என்ன தப்பு என்று என் காதுபடக் கூறியதைக் கேட்டு குறுகிக் கூசியிருக்கிறேன். இப்படிப் பாதிக்கப் பட்ட எத்தனை பெண்கள் இந்த ஆண்களின் வக்கிரத்தால் இப்போது சீரழிந்து அதை தமக்குத் தொழிலாகக் கொண்டு இருக்கிறார்கள். சிஸ்ரர் சொன்னா ‘சந்தர்ப்பம் வரும்போது பயன்படுததிக்கொள்ள வேண்டும். வீட்டில் அவன் தங்குவ தென்றால் ஒரு லைசென்ஸ் வேணும். வேறு இனத்தவன் என்று நினைப்பதைவிட எவனொருவன் மனித நேயத்தோடு நடக்கிறானோ அவனை ஏற்றுக் கொள்வதில் தப்பில்லை என்றே தோன்றுகிறது. ஏமாற்றுக்காரனாக இருந்தால் எங்களிடம் வந்து உறுதிமொழி தந்திருக்க மாட்டான்.’அவரது கூற்றும் ஏற்றுக் கொள்ளத்தக்கதாகவே இருந்தது.எல்லாமாகச் சேர்ந்து இன்று நான் பியசேனவின் மனைவியாகி விட்டேன்.*

*எனக்குள் சதா ஓலமிட்டுக் கொண்டிருந்த உணர்வுகளுக்கு வடிகாலாக எழுதத் தொடங்கினேன்.எனக்குள் இப்படியொரு எழுத்துத் திறமை இருந்தது எனக்கே இப்போதுதான் தெரிகிறது. சிஸ்ரர் ஆச்சரியப்பட்டுப் போனார். ‘எழுதுங்கோ புத்தகம் ஆக்கலாம்’ என்ற அவரின் ஊக்குவிப்பு என்னை ஒரு எழுத்தாளினியாக்கியது. என்னுடைய ‘போருக்குள் நான்’ என்ற நூலுடன் பியசேனவால் சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டு*

*"யுத்தயக் அத்துல மங்" என்ற நூலும் ஒன்றாகவே வெளியிடப்பட்டு தமிழ், சிங்களப் பேராசிரியர்கள், அறிஞர்கள் பலராலும் பாராட்டப்பட்டது மிகவும் பெருமையாக இருந்தது. ஃபாதர் வாழுங்காலத்தில் என் நன்றியை வெறும் வார்த்தை களால் மட்டுமே கூறிய எனக்கு இந்த நூல் மூலம் அவருக்கும், சிஸ்ரர் அன்புக்கும் சமர்ப்பணமாக அர்ப்பணிக்கும் சந்தர்ப்பம் கிடைத்ததை மகிழ்ச்சியுடன் தெரிவித்தேன். மதம் என்ற பெரிய விலங்குக்குள் என்னை இழுக்காமல் என்னை நானாகவே வாழவிட்ட இரு நல்லுள்ளங்களுக்கு காணிக்கையாக இந் நூலைச் சமர்ப்பிக்கின்றேன் என்றும் நான் கூறியபோது அரங்கமே என்னைப் பாராட்டியது. என் எழுத்தாற்றலையும், ஒரு போரினால் ஏற்படும் அவலங்களைச் சொன்ன விதத்தையும் எல்லோருமே மெச்சினார்கள். இந்தப் போரினால் தமிழர்கள் மட்டுமே பாதிக்கப்பட்டனர் என்று சொல்ல முடியாதென்றும் சிங்கள, முஸ்லீம்களும் தங்கள் குடும்ப உறுப்பினரை இழந்திருக்கிறார்கள் என்று நான் எழுதியதை எல்லோரும் ஒப்புக்கொண்டார்கள். உலகத்தின் எந்தப்பகுதியில் போர் நடந்தாலும் அதில் வேட்டையாடப்பட்டு சீரழிவது பெண்கள் மட்டுமே என்பதை நான் வலியுறுத்திக் கூறிய விதம் எல்லோரையும் கண்கலங்கச் செய்ததாக ஒருவர் தன் பேச்சில் கூறினார்.*

*ஒரு பேராசிரியை நான் எழுதிய ஒரு பந்தியை வாசித்தார். ஒரு பெண் குழந்தை சகோரியாய், மனைவியாய், தாயாய், பாட்டியாய் பரிமளிக்கும்போதும் இந்தக் குட்டித்தீவில் மட்டும் வேதனையைச் சுமந்து தன் சகோதரங்களுக்காய், தந்தைக்காய்,கணவனுக்காய்,பேரப்பிள்ளைகளுக்காய் அவர்கள் ஆயுளுக்காய் பிரார்த்தித்துக் கொண்டிருக்க வேண்டிய பாவப் பட்ட ஜென்மங்களாய் பிறந்து இருக்கிறார்கள். இத்தீவில் பிறந்த ஒவ்வொரு பெண்ணும் தங்கள் தங்கள் உறவுகளுக்காய் தமிழ், சிங்கள, முஸ்லீம் என்ற வேறுபாடின்றி முருகனையோ, புத்தரையோ, காளியையோ, யேசுவையோ, அல்லாவையோ மன்றாடிக்கொண்டுதான் இருக்கிறாள். இது எங்களுக்கு ஏற்பட்ட சாபமோ தெரியவில்லை' என்று நூலில் வரும் ஒரு பெண்*

கதாபாத்திரம் புலம்புவதாக இருப்பதைக் கூறியபோது இங்கிருந்த அத்தனை பெண்களும் கண் கலங்கினார்கள். போர் எந்தக் காரணங்களுக்காக ஏற்பட்டிருந்தாலும் பாதிப்பு என்னவோ பெண்களுக்கு மட்டுந்தான். புத்தகத்திலிருக்கின்ற எழுத்துக்கள் எல்லாமே எழுந்து நின்று துள்ளிக் குதித்து வாழ்த்துவது போலிருந்தது எனக்கு. ஒரு நாட்டின் இனவெறிக்கு சாட்டையடி கொடுப்பதாகவும், சக இனத்துக்கு இது ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்த உதவும் என்றும் யாவருமே பேசிக் கொண்டது பெருமையாகவும் மீண்டும் நான் புதிதாய் பிறந்தது போலவும் இருந்தது. சிங்கள நூல் சிங்கள மக்களுக்கு ஒரு புரிந்துணர்வைக் கொடுக்கும் என்று பலரும் சிலாகித்துக் கூறியது என் உடம்பைச் சிலிர்க்கச் செய்தது.

ஒரு பேராசிரியர் சொன்னார் 'எழுத்தில் கொண்டு வராத எத்தனையோ காவியங்கள் இன்னும் எங்களிடம் இருக்கின்றன. ஒரு ஆணை விட ஒரு பெண்ணால் அவற்றை வெளிக்கொண்டுவர முடியும் என்பதற்கு இந்த போருக்குள் நான் என்ற நூல் தவறு காவியம் ஒரு சான்று. அவை இப்படிப்பட்ட எழுத்தாளர்களால் வெளியே கொண்டுவரப்பட வேண்டும். இன்றைய காலத்தில் ஆனந்த காவியங்களை விட அவலக் காவியங்களே நிறைந்து இருக்கின்றன. அவை காலத்தின் கட்டாயம்.போர்க் கொடுமை களை அனுபவிக்காதவர்களுக்கு எங்கள் கதைகளோ நாவல் களோ வெறும் அழுகுணிக்கதைகளைப் பற்றிக் கூறும் ஒரு நூலாக இருக்கலாம்.ஆனால் எங்களுக்கு நாங்கள் அனுபவித்த கடந்து வந்த பாதை. இதை நாங்கள் நினைக்காமலோ, எழுதாமலோ இருக்க முடியாது. ஆகவே எழுதக் கூடியவர் களெல்லாம் எழுதுங்கள். அதுவும் பெண்களால் எழுதப்படும் போது உயிர்ப்புடன் காலத்தை எல்லாம் தாண்டி நிற்கும். எழுதப்படாதவை கால ஓட்டத்தில் கரைந்து போய்விடும். அவரது பேச்சுக்கு அரங்கமே எழுந்து நின்று கரகோஷம் செய்தது. அங்கே அரூபமாக என் கணவன் சுரேனும், சமீபத்தில் இறைவனடி சேர்ந்த ஃபாதரும் ஆசீர்வதிப்பது மனக்கண்ணில் விரிந்தது. இச்சிறு தீவில் மூவினங்களும் ஒருத்தரையொருத்தர் அடித்துக்கொள்ளாமல் ஒற்றுமையாக இனியென்றாலும்

*வாழவேண்டுமென்ற ஒருமித்த எண்ணத்துடன் எல்லோரும் விடை பெற்றனர். இத்தருணத்தில் அறிவு ஏ.எல் பரீட்சையில் நான்கு பாடங்களிலும் ஏ தரத்தில் சித்தி பெற்று இலங்கையில் கூடிய புள்ளிகள் பெற்ற மாணவர்களில் மூன்றாவது இடத்தைப் பெற்றிருந்தது என்னைப் பரவசப்படுத்தியது. தொடர் தொடராய் நானும், சுரேனும் படரவிட்ட கனவுகள் மெய்ப்பட்டு வருவது மனதுக்குத் தெம்பைக் கொடுத்தது.எனது இலட்சியம் வெற்றி பெற்று என் மூன்று பிள்ளைகளும் மேலே மேலே உச்சத்துக்குப் போவதுபோல் எண்ணங்கள் விரிய ஒரு தாயாக உயர்ந்து நிற்கிறேன். என் சுவாசக் காற்றிலே கலந்து என் மூச்சோடு மூச்சாக ஒன்றிணைந்த என் கணவன் சுரேன் அரூபமாக என்னோடு நிற்பதாக உணர்கிறேன்.*

❑

# நினைவுகள் அழிவதில்லை

**தூக்கத்தைத்** *தொலைத்துவிட்டு படுக்க மனமின்றி திரைச்சீலையை விலக்கி ஜன்னலூடாக வெளியில் பாரக்கிறான் நவீன். கனடாவுக்கு வந்த இந்தப்பதினைந்து ஆண்டுகளில் முதல் மூன்று வருடமும் தன்னை இந்த நாட்டில் நிலைநிறுத்துவதில் கடந்துவிட பின் நான்கு வருடங்கள் உழைப்பு உழைப்பு என்று காலத்தில் கரைந்து தம்பியைக் கூப்பிட்டு, பல்கலைக்கழகப் படிப்பை முடித்த அக்காவின் திருமணத்தைச் செய்துவிட்டு நிமிர்ந்து தன்னைப் பற்றியும், கடைக்குட்டி யாமினியின் எதிர்காலம் பற்றிய கனவிலும் நாட்கள் மெல்லென ஊரந்தன. கோடி கற்பனைகளை மனதிலே சுமந்திருந் தான்.*

*அவன் நாட்டைவிட்டு கனடா வருவானென்று கனவிலும் நினைக்கவில்லை. அக்காவைப்போல தானும் படிப்பு படிப்பு என்று சிகரத்தை எட்டிப் பிடிக்கவே அவன் ஆசைப் பட்டான். யாழ்பப்பாணத்தில் நிறைய பிள்ளைகளின் கனவு பல்கலைக்கழகம்தான். அப்பாவும் விஞ்ஞான ஆசிரிய ராக கடமையாற்றியதில் பிள்ளைகள் எல்லோருக்குமே படிப்பைத் தவிர வேறு எந்த நாட்டமுமில்லை. இன்றும் எண்ணியெண்ணீ மகிழ்ச்சி தருகின்ற ஒன்று பாடசாலை நாட்களே. கடந்த கால எண்ண ஓட்டகங் களை மனதில் ஓடவிட்ட வண்ணம் இருட்டைத் துழாவு கின்றன அவன் கண்கள். பெரிய பெரிய பெட்டிகள் அடுக்கி வைக்கப்பட்டது போலிருந்த வீடுகள் அங்கு வாழ்பவர்களுக்கு மகிழ்ச்சியையோ ஆறுதலையோ கொடுத்துக் கொண்டிருந்தன. நாட்டைவிட்டு திக்குத் திசை தெரியாமல் ஓடிவந்த எத்தனையோ நவீன்களுக்கு நிம்மதியைக் கொடுத்துக் கொண்டிருந்தன.*

கன்னங்கரேலென்ற வானம். எட்டாம் மாடியிலிருந்து பார்க்கும்போது மின் விளக்குகளின் ஒளி கண்களைக் கவர்ந்தாலும் அதற்குப் பின் எதையோ வைத்துவிட்டு எடுக்க மெதுவாக ஊரும் கரிய இருளே அவனைப் பயமுறுத்தியது. கரிய மேகங்கள் மெதுவாக நகர்வது கூடத் தெரியாதபடி மிகமிக மெதுவாக நகர்ந்து கொண்டிருந்தன. தாய்நாட்டில் எதையோ வைத்துவிட்டு விரைந்து எடுக்கச் செல்வதுபோல் ஓடும் மேகங்களைப் பாரத்துப் பழகிய கண்கள் இதை வெறுமையாகப் பாரத்துக் கொண்டிருந்தன. யானை போலவும் குதிரை போலவும் எத்தனையோ நாடுகள் போலவும் அடிக்கடி தன்னை மாற்றிக்கொண்டு ஓடும் மேகங்களின் அழகையே ரசித்துப் பார்த்துப் பழகிய மனம் அதையே நினைத்து ஏங்கியது. தாயக மேகங்களிலிருந்து மனம் யாழ் ஆஸ்பத்திரி வீதியிலும் ஒட்டுமடத்தைச் சுற்றியும் வலம் வந்து கொண்டிருந்தது.

வேப்பமரங்கள் நிறைந்த முற்றத்தில் அம்மா பெரிய துணியைப் பரப்பி வேப்பம் பூக்களைச் சேகரிப்பா. இந்த வேப்பம்பூக்களின் வாசனை அப்படியே மூக்கை அள்ளும். சேர்த்து வைத்த பூக்களெல்லாம் வடகமாகி உணவுத் தட்டுகளில் உட்கார்ந்திருப்பது அக்காவுக்கு பிடிக்காது.' டெய்லி இது வந்து உட்கார்ந்திடும். பப்படம், உருளைக்கிழங்கு சிப்ஸ், மிளகாய்பபொரியல், வாழைக்காய்ப்பொரியல் என்று மாற்றி மாற்றி செய்யமாட்டீங்களா?' என்று சாப்பிடும்போது எப்போதும் முணுமுணுப்பா. நவீனுக்கு வடகம் பிடிப்பதால்' 'ஏன் இதற்கு என்ன குறை?' என்று கேட்டு வடகத்தை முகர்ந்து பார்த்து அக்காவை வெறுப்பேற்றுவான். அக்காவுக்கு இலுப்பைப் பூ மணம் மிகவும் பிடிக்கும். அவ பள்ளியில் படிக்கும்போதே தன்னுடன்படிக்கும்சுரேனை லவ்பண்ணத்தொடங்கீற்றா. சுரேன் வேறு யாரோ அல்ல. அம்மாவின் ஒன்றுவிட்ட அண்ணாவின் மகன். அக்காவைப்போலவே படிப்பில் கெட்டிக்காரன். இவர் கள் விஷயம் இரு வீட்டாருக்குமே தெரிந்தேயிருந்தது. சுரேன் வீட்டுக்குப் போகும் வழியில் ஒழுங்கையில் இலுப்பைப்பூக்கள் கொட்டி இருக்கும். அதன் அழகும் மணமும் அக்காவைக்

*கிறங்க அடிக்கும் நவீனுக்கும் அந்த வாசனை பிடித்து இருந்தாலும் அக்காவை வெறுப்பேற்றுவதற்காக ‘அதெல்லாம் ஒரு மணமே. வேப்பம்பூ மணத்துக்கு கிட்டவர ஏலுமே’ என்று அக்காவைச் சீண்டுவான். என்றைக்கு இந்திய இராணுவம் யாழ்ப்பாணத்திற்குள் கால் வைத்ததோ அன்றைக்கே எத்தனையோ ஒழுங்கைகள் தத்தம் பொலிவை இழந்தன.இந்திய இராணுவத்தினரின் சப்பாத்துக்களில் நசிபட்டு வேப்பம்பூக்களும் இலுப்பம்பூக்களும் தம் அழகை இழந்து சின்னாபின்னமாகின. தமக்கென வழிகள் அமைப்பதற்காய் மரங்களை வெட்டிப் பாதை அமைத்ததில் எத்தனையோ ஒழுங்கைகள் தம் இருப்பை பறைசாற்ற முடியாமல் மௌனித்தன. அமைதி காத்த ஒழுங்கைகளில் இராணுவத்தினருக்குப் பயந்து பெண்கள் கூட்டித் துப்பரவு செய்யாததினால் விழுந்து சேர்ந்த இலைகளெல்லாம் சரசரவென்று நடக்கும் இராணுவத்தினரின் பூட்ஸ் கால் பட்டு அமைதி இழந்தன. பொலிவிழந்தவை வேப்பம் பூக்களும். இலுப்பம்பூக்களும் மட்டுந்தானா? பூவையரும் நசிந்து சின்னாபின்னமாயினரே.*

*நல்ல காலத்திற்கு அக்கா பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகிப் போனதில் அப்பாவும் அம்மாவும் ஆறுதலாகி நவீன் எங்கே இராணுவத்தினருக்கு பலிகடாவாகிப் போய்விடு வானோ என்று அஞ்சி அஞ்சித் துடித்தனர். பாடசாலை முடிந்து அவன் வர சிறிது நேரமானாலும் துடிதுடித்துப் போவார்கள். ஏ.எல் பரீட்சை நெருங்கவே கூடிய நேரம் பாட சாலையிலும் நண்பர்கள் கூடிப் படிப்பதிலும் ஈடுபட அம்மாவின் நிம்மதி தொலைந்தது. எப்போதும் வாசலைப் பார்த்தபடி நெஞ்சு துடிக்க நிற்பதைப் பாரத்த அப்பாவும் நவீனை நாடுகடத்த தீர்மானித்தார். அவன் உயிரைக் காபப்ாற்றத் துணிந்து அவசரம் அவசரமாகக் கொழும்புக்கு அனுப்பி பாஸ்போட், பயண முகவர் என்று அலையவிட்டனர். ஏ.எல் படிப்பில் தீவிரமாயிருந்தவனை தீவிரவாதியென்று இராணுவத்திடம் தாரைவார்த்துக் கொடுக்கவேண்டி வந்துவிடுமோ என்று பயந்தனர். அவனது இலட்சியத்திலிருந்து திசை மாற்றி எந்த*

நாட்டுக்கு என்றாலும் அனுப்பிவிட துடிதுடித்தனர்.திசை மா–றிப் பறந்த பறவையாய் சிறகை விரித்த ஒரு விமானத்தில் பறந்து எவ்வளவோ அல்லல் பட்டு கனடாவில் கால் பதித்தான்.

கனடாவில் கால் பதிப்பதற்குள் அவன் பட்ட பாடு கொஞ்ச நஞ்சமல்ல. மலேசியாவில் ஒரு வருடம் ஒளிந்து இருந்த போதெல்லாம் நான் இப்ப ஏ.எல் முடித்திருப்பேனே என்று எண்ணியெண்ணி வெதும்பியிருக்கிறான். பெற்றோரின் உணர்வுகள் புரிந்தபோதும் அவர்கள்மேல் கோபமும் வருவதைத் தவிரக்க முடியாமலிருந்தது. பின் ஏஜென்சிக்காரன் அவனைப்போல பத்துப் பேரை அங்கேயே விட்டுவிட்டு மறைந்ததும் உணவுக்கும் இருப்பிடத்துக்கும் பட்ட அவஸ்தை இப்போதும் மறக்க முடியாமலிருந்தது. மலேசியப் பெண்ணை மணந்த ஒரு இந்தியன் மட்டும் உதவவில்லையென்றால் இன்று உயிருடனே இருந்திருப்பேனா என்று அடிக்கடி நினைத்துக் கொள்வான். அவரின் வங்கி இலக்கத்துக்கே அப்பா பணம் அனுப்பியதும் அவர் தன்னைப் பாதுகாத்ததும் அம்மா சொல்வதுபோல் முருகனின் அருள்தான். என்னுடன் இருந்தவர்களெல்லாம் விசா இல்லாமல் இருந்ததற்காய பிடிபட்டு சிறையில் அடைக்கப்படவும் நான் கஷ்டப்பட்டாலும் ஏதோ ஒரு வழியில் கனடா சேர்ந்ததும் அம்மா கும்பிடுகிற முருகனால்தான்.மலேசியச் சிறை என்பது வார்த்தைகளில் சொல்ல முடியாத கொடுமையான இடம். அங்கு வந்தவர்களை மனிதர்களாகவே பார்க்க நினைக்காத அதிகாரிகள் நிறைந்த கொடூரமான ஒரு சிறை. உலகப்பார்வைகளின் கண்களில் இருந்து தப்பி இருக்கும் ஒரு சித்திரவதை முகாம். தாயகக் கொடுமைகளுக்குத் தப்பி ஓடிவந்த இளைஞர்களை உடலாலும் உள்ளத்தாலும் காயப்படுத்தி மகிழும் ஒரு வர்க்கம் குடியிருக்குமிடம். தன்னுடனிருந்த நண்பர்களைப் போய்ப் பார்க்கவும் முடியாமல் உதவவும் முடியாமல் அவன் பட்ட தவிப்பு. இப்போது அவர்களெல்லாம் எங்கிருக்கிறார்களோ என அடிக்கடி நினைத்துக் கொள்வான்.

நவீனும் சொகுசாக விமானத்தில் பறந்து வந்து கனடா சேர்ந்துவிடவில்லை. ஆயிரம் சிரமங்களுக்கு மத்தியில எவ்வளவோ பண இழப்புகளுக்குப் பின்தான் கனடாவில் கால்

*பதிக்க முடிந்தது. தான் தாயகத்தில் படிக்க முடியாது தவற விட்ட பல்கலைக்கழகப் படிப்பை பகுதிநேரமாகப் படித்து பட்டம் வாங்கிய போதும் கல்வியிலிருக்கும் தீராக் காதலினால் மேலும் மேலும் படித்துக்கொண்டே இருந்தான். தங்கை யாமினியும் நன்றாகவே படிக்கக் கூடியவள். ஏ.எல் பரீட்சை நன்றாகவே எழுதியிருப்பதாக எழுதியிருந்தாள்.அவளை ஒரு டாக்ராக்க வேண்டுமென்ற கனவு கனவாகவே போய்விட்டது. யாமினியைப் பற்றிய நினைவு நெஞ்சமெல்லாம் கனத்தது. "என்னைவிட எட்டு வயது இளையவள். என்னுடைய செல்லத் தங்கை. அவளில் நாங்க எல்லோருமே உயிரையே வைத்திருந்தோம்." உள்ளே திரும்பி யாமினியின் போட்டோவையே பார்த்துக் கொண்டிருந்தான். செதுக்கி வைத்த சிலைபோல. கதைகள் பல பேசும் கண்கள். அவனைப் பாரத்து 'என்ன அண்ணா?' என்று கேட்பது போலிருந்தது. படத்தை லேசாக வருடினான்.*

*'யாமினி என் செல்லமே! எப்படியம்மா எங்களை விட்டுப் போக மனசு வந்தது? உன்னுடைய வேதனையை நாங்கள் தீர்க்க மாட்டோம் என்று நினைத்தாயா? எல்லாவற்றையுமே மறைத்து எங்களை வேதனைக்குள் மூழ்கடித்துவிட்டுக் கோழை போல் போய்ச் சேர்ந்துவிட்டாயே. அப்பா அம்மா அக்கா அண்ணண்மார் யாரையுமே நினைக்கத் தோன்றவில்லையா உனக்கு? ஒரு நிமிடம் ஒரேயொரு நிமிடம் எங்களை நினைத்துப் பார்க்கத் தவறிவிட்டாயே செல்லம். உன்னை நினைத்து நாங்கள் எப்படியெல்லாம் தவிப்போம் என்ற நினைவே உனக்கு வரவேயில்லையா?' கண்கள் குளமாக கண்ணீர் பெருக கிடைத்த தனிமையில் தேம்பித் தேம்பி அழுதான்.*

*'எனக்கு ஏற்பட்ட காதலைக்கூட நான் விலக்கிவிட்டு உன்னைப் படிப்பித்து உனக்கு கல்யாணம் செய்த பிறகுதான் நான் திருமணம் செய்வதென்று இருந்தேனே. என்னைக் காதலித்த நிலானிக்கு நான் கொழும்பு பயணமாகுமுன் சொன்னது, யாமினியின் கல்யாணத்துக்குப் பிறகுதான் எனக்கு வாழ்க்கை.*

அதுவரை விரும்பினால் இரும்.உம்முடைய பெற்றோர் விரும்பினால் எனக்காகக் காத்திருக்க வேண்டாம். உம்முடைய வாழ்க்கையை நீர் தேர்ந்தெடும். எனக்கு யாமினியின் எதிர்காலந்தான் முக்கியம்.' நிலானிக்கு சொன்னதை நினைத்தவுடன் அவளை நிராகரித்ததற்குத்தான் இந்த் தண்டனையோ?' மனம் எதையெதையோ நினைத்துக் கலங்கியது.' ஏனம்மா இப்படி எங்களைத் தண்டித்தாய்? உன் கஷ்டத்தை எனக்கு சொல்லியிருந்தால் நான் தீர்த்து வைக்கமாட்டேனா? இந்த அண்ணனின்மீது நம்பிக்கை இல்லாமல் போய்விட்டதா? தனிமை அவனை விம்மி அழத் தூண்டியது. தம்பி கவின் வீட்டில் இல்லாதது அவனுக்கு மனம் விட்டு அழக்கூடியதாக இருந்தது. கவின் இருந்திருந்தால் அவனையும் கவலைப் படுத்தி விடக்கூடாதென்று எல்லாவற்றையும் மனத்துள் போட்டு மூடிவைத்துவிடுவான். இருவரும் மனம் விட்டுப் பேசியோ சிரித்தோ ஒருவருடம் ஆகிவிட்டது. அழுது ஓய்ந்தபின் அங்குமிங்கும் நடந்தபடியிருந்தான். அம்மா அப்பா கூட இந்த வேதனையில்தானே அடுக்கடுக்காய் போய்ச் சேர்ந்திட்டினம். இந்த வேலையும் படிப்புந்தான் அவன் மனநிலை பாதிக்கப் படாமல் காத்து வருகிறது. யாரையும் பார்ப்பதைத் தவிர்த்தான். யாரோடு பேசுவதும் பிடிப்பதில்லை. மயிர்கொட்டி தனக்கெனக் கூடமைத்து வண்ணத்துப்பூச்சியாய் பறக்கும்வரை வாழ்வது போல தானும் வாழப் பழகிவிட்டான். நண்பர்கள் போன் பண்ணினாலோ வந்தாலோ இவன் புறக்கணிப்பதால் அவர்களுடனான தொடர்புகளும் குறைந்துகொண்டே போனது. உறவினர்கள் நண்பர்கள் என்று எல்லோரிடமிருந்தும் விலகி தன்னைத்தானே தனிமைப்படுத்திக் கொண்டான். அவன் காதுகளில் யாமினியின் அண்ணா என்று அழைக்கும் ஓசை மட்டுமே நிரந்தரமாகத் தங்கிவிட்டது.

யாமினியின் இறப்பு வீட்டுக்குப்போய் பெற்றோருக்கு ஆறுதலாக இருக்கமுடியாமல் தனக்கு ஆறுதல் சொல்ல வேண்டிய நிலைக்கு அவர்களை இழுத்து விட்டான். யாமினியை இழந்தது போல் நவீனையும் இழக்க வேண்டிய நிலை வந்துவிடுமோ என்று பயந்து நவீனை விரைவில் கனடாவுக்கு திருப்பி அனுப்பி

*விட்டார்கள். அதனால்தானோ என்னவோ துயரம் முழுவதை யும் மனதுக்குள் அழுத்தி மூடிக்கொண்டு இன்னும் அவதிக் குள்ளாகின்றான். கவின் மாதக்கணக்கில் நின்று கொஞ்சம் தேறியே வந்திருந்தான். அவனது ஆவேசம் முழுவதும் யாமினி எதனால் இப்படி முடிவெடுத்தாள். அதற்கு காரணமானவனை பழி தீர்க்கவேண்டும் என்ற ஒரே நினைவுதான். யாமினியைத் தொடரந்து பெற்றவர்களும் மரணித்துவிட தான் ஒருவரு மில்லாத அநாதையாகப் போனது போல் தவித்தான் நவீன். வாழ்க்கையை அர்த்தமற்றதாக்கி விட்டு கண்களை மூடி மீளா நித்திரையில் உறங்கச்சென்ற தங்கையின் நினைவை அவ னால் மறக்கவே முடியவில்லை. கவின் நவீனை மாற்றுவதற்கு எவ்வளவோ முயற்சித்தும் தோற்றே போனான். படிப்பு ஒன்று தான் அவனைத் தங்கையின் ஞாபகங்களிலிருந்து காப்பாற்றிக் கொண்டு வருகிறது. அதற்காகவே மேலும் மேலும் படித்துக் கொண்டே இருக்கிறான்.*

*நவீனின் அக்கா அடிக்கடி போனில் கதைப்பா. அவ கணவன், குழந்தைகளென்று யாமினியை மறக்கப் பழகிவிட்டா. ஒரு முறை போன் பண்ணும்போது "நவீன்! என்னுடைய சின்னவள் யாமினிதான். யாமினி எங்களைவிட்டுப் போகவேயில்லை. ஒரு முறை வந்துபார், உனக்கே விளங்கும். யாமினியின் அதே கண்கள். சிரிக்கும் உதடு, நிறம் எல்லாமே யாமினியைத்தான் நினைவுப படுத்துகிறது. யாமினி என்றே பெயரும் வைத்திருக்கிறோம். ஒருமுறை வா நவீன், வந்து பார். வந்தால் உனக்கு மனதும் ஆறும்." அக்கா அடிக்கடி சொன்னபடி. நவீனுக்குப் போக விருப்பம் கொஞ்சமிருந்தாலும் யாமினியின் தற்கொலைக்கு யார் காரணம்? என்ன காரணம்? காதல் காரணமாக இருந்தால் அது யார்? ஏன்? இந்தக் கேள்விகளே அவனைச் சுற்றிச் சுற்றி வந்தன. எப்போதுமே அந்தக் கேள்விகள் அவனை விடாமல் துரத்திய வண்ணமேயிருந்தன. யாமினியின் இறப்புக்குப் போனபோது அவளின் டைரியை எடுத்து வந்திருந்தான். பல பக்கங்கள் கிழிக்கப்பட்டிருந்தன. சிலபக்கங்கள் எழுத்துக் களெல்லாம் கண்ணீர் பட்டு அழிந்திருந்தன." யாமினி! என்*

*தங்கமே காதல் வலையில் சிக்கி ஏமாந்தாயா? அன்றேல் வஞ்சிக்கப்பட்டாயா? அவன் யார் என்று அடையாளம் காட்டா மல் போய்விட்டாயே" தெரிந்த பெடியன்களின் முகங்களெல லாம் அவன் முகத்திரையில் வந்துவந்து போயின. யார் ஏமாற்றி இருப்பார்கள்? யாரிடம் நம்பி ஏமாந்தாள்? உறவினர்கள், நண்பர்கள் என்று எல்லோரையுமே சந்தேகப் பட்டான். காதலைத்தவிர அவள் இறப்புக்கு வேறு ஏதும் காரணம் இருப்பதாக அவனுக்குத் தெரியவில்லை. அவன் கனடா வந்த பிறகு அவளின் நண்பிகளையும் அவனுக்கு ஞாபகமில்லை. புதுப்புது நண்பிகள் கிடைத்திருக்கலாம். நண்பிகளுக்கு ஏதும் தெரிந்திருக்கலாம். அவள் இறப்பிற்குப் பின் வந்த ஏ.எல் மதிப் பெண்கள்மருத்துவத்துறைக்குசெல்லக்கூடியதாக வந்திருந்தது. அப்போ மதிப்பெண்கள் குறைந்திடுமோ என்று பயமிருந்திருக்க ஞாயமில்லை. வண்டு குடைவதுபோல் அவன் மனதைக் குடையும் கேள்விகளுக்கு விடை தெரியாமல் நித்திரையைத் தொலைத்து அரை மனிதன் போலாயினான்.*

*இரண்டு நாட்களுக்கு முன் தம்பி கவின், யாமினியின் ஒரு நண்பியைக் கண்டதாகக் கூறினான்." நான் காரில் வரும்போது யாமினியின் நெருங்கிய தோழி செல்வியைக் கண்டேனண்ணா. இங்கு எங்கேயோதான் இருக்க வேண்டும். கிட்டடியில்தான் கல்யாணமாகி இங்கு வந்திருக்க வேண்டும். நான் எப்படியும் அவள் வீட்டைக் கண்டுபிடித்துவிடுவேன். முந்தி அடிக்கடி வீட்டுக்கு வாறது அந்தப் பிள்ளை. ஆனால் யாமினியின் இறப்புக்கு வரவேயில்லை. அம்மா நெடுகச் சொன்னபடி, 'செல்விக்கு எல்லாம் தெரிந்திருக்கும். போய்க் கேள்' என்று. செல்வியின் வீட்டுக்குப் போனபோது அவ கொழும்புக்குப் போயவிட்டதாகச் சொன்னார்கள். அந்தப்பிள்ளை இருந் திருந்தால் யாமினி இப்படிச் செய்ய விட்டிருக்க மாட்டா. செல்விக்கு யாமினியின் முழுக்கதையும் நிச்சயம் தெரிந் திருக்கும். தற்கொலை செய்த காரணமும் தெரிந்திருக்கும். யாரென்று மட்டும் தெரியட்டும். பிறகு பாருங்கோ இந்த கவின் யாரென்று" கூறியவனின் முகத்தில் தெரிந்த*

ஆவேசம் நவீனை சிந்திக்க வைத்தது." நான் கவலையை மனதுக்குள் போட்டு குமைகிறேன். கவின் அப்படியில்லை. யாமினியின் தற்கொலைக்கு காரணமானவனை பழி வாங்க வேண்டுமென்று வெறிபிடித்தவன் போலிருக்கிறான். அவனை யும் நான் இழந்துவிடக்கூடாது. கவினுக்கு முதல் நான் அந்த செல்வியைப் பாரக்க வேண்டும். காரணத்தை நான் முதலில் அறிந்திட வேணும் ஆனால் அதை கவினுக்கு மறைத்திட வேணும். இனி நாங்க என்னதான் செய்தாலும் யாமினி திரும்ப வரப்போறதில்லை. ஆனால் எந்தவிதத்தில் என்றாலும் அவனுக் குத் தண்டனை குடுக்க வேணும்." தன் எண்ணத்தில் உறுதியாக இருந்தான்.

சூல் கொண்ட மேகங்கள் தஙக்ள் செல்வங்களை மண்மாதா வுக்கு தாரை வார்த்திட அம்மழையிலிருந்து தன்னைக் காக்க ஓடோடி ஒரு கடைக்குள் நுழைந்தான். "நவீனண்ணா!" என்றழைத்தபடி தன் முன்னாள் வந்தவளை அடையாளம் தெரியாது முழித்தான்." "நான் யாமினியின் ஃப்ரன்ட் செல்வி அண்ணா." என்று தன்னைத்தானே அறிமுகப்படுத்தியவள் "உங்கடை ஃபோட்டோ எல்லாம் யாமினி காட்டுவாள். உங்களுக்கு என்னைத் தெரியாது. எனக்கு நல்லாய் தெரியும் உங்களை. கவின் அண்ணாவுக்கு என்னைத் தெரியும். யாமினி போனபிறகு கவினண்ணா வீட்டை வந்ததாக அம்மா சொன்னவ. நான் உங்கடை வீட்டை போனனான். எனக்கு உங்கடை அம்மா அப்பாவை பாரக்கவே முடியேல்லை. என்னாலையும் யாமினியின் பிரிவைத் தாங்கவே முடியேல்லை. ஆக அழுதுவிட்டு வந்தன். ஒன்றும் பேசமுடியேலை" நீண்டகாலம் பழகியவள்போல் படபடவென்று பேசிய செல்வியில் யாமினியைக் கண்டான்.

'உங்களுக்கு அவசரமில்லையென்றால் எங்காவது இருந்து கொஞ்சம் கதைப்போமா?' படபடவென்று கேட்டான் நவீன். ஓமண்ணா. எனக்கும் உங்களோடை கதைக்க வேணும். உங்கள் அட்ரஸ் தெரியாததால் தொடரப் கொள்ளவும் முடியேலை'கூறியவளை அழைத்துக்கொண்டு பக்கத்திலிருந்த

*றெஸ்ரோறன்ருக்குள் நுழைந்தான். இருக்கையில் அமர்ந்து கொண்டே ‘யாமினியைக் காதலித்து ஏமாற்றியவன் யாரென்று நீங்க தெரிந்திருக்க வேணும்.நான் எவ்வளவு சொன்னன். அவன் ஏமாற்றினால் போகட்டும். நீ படிப்பில் கவனமாயிரு. அவன்தான் உலகத்திலேயே ஒருத்தனா? உன்னுடைய அழகுக்கும். குணத்துக்கும். பணத்துக்கும் அவனெல்லாம் ஒரு பொருட்டேயில்லை. தூக்கியெறிந்தவனைத் தூக்கிப் போடு என்று கூறிக்கொண்டேயிருந்தன்.நான் கொழும்புக்குப் போன அந்த ...................... அவள் இப்படி செய்திட்டாளே. இப்படிச் செய்வாளென்று நான் கனவிலும் நினைக்கவில்லையண்ணா. இன்னுமே எனக்கு மனம் ஆறுதில்லை.” கூறியவள் சிறிது நேரத்துக்குப் பின் “அண்ணா! பெண்களோடு படித்தவனோ அல்லது எங்களுக்குத் தெரிந்தவனோ இல்லையண்ணா. எல்லாம் உங்கடை சொந்தக்காரர் தினேஷ்தான்.’ நெஞ்சில் இடியென இறங்கியது நவீனுக்கு. கொஞ்சம்கூடி அவன் நினைத்திருக்கவில்லை.’ படிப்பு படிப்பு என்று இருந்தவளை துரத்தித் துரத்தி காதல் அது இதுவென்று சொல்லி அவளுடைய மனதைக் கலைத்து விட்டு அவள் மனம் மாறிக் காதலிக்கத் தொடங்க வேறு ஒரு எங்களோடை பழகத் தொடங்கிவிட்டான். யாமினியால் அதைத் தாங்க முடியேல்லை. நீர் பெரிய வடிவு. பணக்காரர் என்று உங்களுக் கெல்லாம் திமிர். பெரிய படிப்பாளிகளென்று உங்கடை அப்பா. அம்மா. அண்ணா. அக்கா என்று எல்லாருமே எங்களை மதிக்கிறேல்லை. அதுதான் காதலிக்கிறதுக்கு படிப்பு ஒன்றும் முக்கியமில்லை. படிக்காதவனும் காதலிக்கலாம். ஏமாற்றலா மென்றுஉங்கடைகுடும்பத்துக்குகாட்டத்தான்உம்மைவிரும்பின மாதிரி நடிச்சன். இப்ப எப்படி நாங்க யாரென்று காட்டீற்றன் என்றானாம்.அவனும்இப்பகனடாவில்தான்இருக்கிறானண்ணா. கல்யாணமும் செய்து நல்லாயிருக்கிறானாம்’ செல்வி கூறக் கூற நவீனுக்கு உடம்பு அதிரந்தது. படிக்காமல் றோட்டுச் சுற்றியவன் என்ரை தங்கச்சியை இப்பிடி ஏமாற்றினானே. தினேஷைப் பார்த்து அடித்து நொருக்க வேண்டுமென்ற வெறி ஏற்பட்டது.*

*அவனது முகத்திலேற்பட்ட ஆவேசத்தைக் கண்ட செல்வி ‘றிலாக்ஸ் அண்ணா. உங்கடை கோபம் நியாயமானதுதான். ஆனால் யோசித்துச் செய்யுங்கோ.*

*இனி என்ன செய்தாலும் யாமினி எங்களுக்கு கிடைக்கப் போறதில்லை. ஆனால் இதை முதலே உங்களிட்டை சொல்லியிருந்தால் அவனுக்கொரு பாடம் படிப்பிச்சிருக்கலாம். எனக்கு நேரமாயிட்டுது. நான் வாறனண்ணா’ கூறியவள் விடைபெற்றபோது யந்திரத் தொனியில் நன்றி தெரிவித்தான். எப்படி அவனைப் பழி தீர்க்கலாமென்று வந்த ஆவேசத்தை மென்று விழுங்கிய நவீன் எப்படி அவனை அவமானப்படுத்தி குற்றவுணர்ச்சியில் துடிக்க வைக்கலாமென்று யோசிக்கத் தொடங்கினான்.*

❑

# வாசமான நினைவுகள்

**கடந்த** ஒரு வாரமாக அகல்யாவின் மனம் தழும்பிக் கொண்டிருந்தது. இனம் புரியாத ஒரு உணர்வு மனதை நெருடிக் கொண்டேயிருந்தது. ஆறுதலா அல்லது குழப்பமா விளங்கவில்லை.மகளுடன் வந்து தங்கிய நாட்களெல்லாம் பசுமையாகத்தானிருந்தன. பேரப்பிள்ளைகள் அகஸ்தியன், அரவிந் இருவருடனும் மகிழ்வாகவே பொழுது போய்க் கொண்டிருந்தது. மகளும் மருமகனும் இரண்டு வருடங்கள் மேற்படிப்புக் காக நியூயோர்க் செல்ல வேண்டி வந்தபோது, தான் அவர்களுக்கு பிரச்சனையாக இருக்க விரும்ப வில்லை. மகள் இந்த வாய்ப்பை உதறித்தள்ளத் தயாரானபோது அகல்யா தான் சொந்தமாக முடி வெடுக்க வேண்டிய தருணம் வந்ததை உணர்ந்தாள். மகளின் முன்னேற்றத்துக்குத் தான் தடையாக இருக்கக் கூடாதென்பதில் உறுதியாக இருந்து ஒரு எல்டேஸ் ஹோமில் தனக்கு இடம் பார்க்கச் சொன்னாள். மகள் விவேகாவுக்கு இதில் கொஞ்சமும் விருப்பமில்லை. கணவன் மட்டும் போகட்டும். தான் அம்மா பிள்ளை களுடன் லண்டனில் வாழ்வதாகச் சொன்னாள். கணவர் பிரவுணுக்கு இதில் உடன்பாடில்லை. கிடைத்த சந்தர்ப் பத்தைத் தவற விட்டுவிடக் கூடாதென்று வாதிட்டார். தன்னால் இருவரும் வாதிடுவது அகல்யாவுக்கு கஷ்ட மாக இருந்தது.

இங்கிலாந்து நாட்டவரான பிரவுண், தான் எதிர் பார்த்ததைவிட மிக மிக நல்லவராக அமைந்ததில் அகல்யாவுக்கு மனநிறைவும் மகிழ்ச்சியும் இருந்தது. தன்னால் ஏற்படும் விவாதம் பெரிய விவகாரமாக மாறிவிடுமோ என்று பயந்தாள்.மகளைத் தனியே அழைத்து புரியவைக்க முயன்றாள். விவேகாவும் பிடிவாதமாகவே இருந்தாள். கடைசியில் அகல்யா

வென்றவள் ஆனாள்.” இளமையிலேயே லண்டன் வந்து வேலை பார்த்து அப்பாவின் உதவியிருந்தாலும் வேலைக்கும்போய் உம்மையும் வளர்த்த என்னால் இரண்டேயிரண்டு வருடங்கள் சமாளிக்க முடியாதா? நான் ஆரோக்கியமாக இருக்கிறேன்” என்று எவ்வளவோ உறுதிமொழிகள் அளித்தபின் விவேகா சம்மதித்தாள். விவேகாவின் சம்மதத்தைக் கேட்ட பிரவுண் அகல்யாவுக்கு தன் நன்றியையும் இருவருமே போய் படிப்பை முடித்துவிட்டு வந்தால் கிடைக்கப்போகும் பொருளாதார முன்னேற்றத்தையும் பற்றிக் கூறினார். வெகுவிரைவில் பயண ஏற்பாடுகளும் அகல்யாவின் முதியவர்களுக்கான இடம் தேடுதலும் முடிவடைந்தன. அடுக்குமாடி குடியிருப்புகளில் தனி வீடாகத் தேடாமல் ஒரு முதியோர் இல்லத்திலே விட்டுச்செல்ல விரும்பினார்கள் விவேகாவும் பிரவுணும். அது அகல்யாவுக்கு பாதுகாப்பைத் தருமெனவும் பலருடன் சேர்ந்து இருப்பது மகிழ்ச்சியைத் தருமெனவும் பிரவுண் கூறியது ஏற்றுக் கொள்ளக்கூடியதாகவே இருந்தது.

மகள்,பேரப்பிள்ளைகளைப் பிரிவது அகல்யாவுக்கு கவலையாக இருந்தாலும் வருவதை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கணவர் சத்தியன் அடிக்கடி சொல்வதை நினைவுகூர்ந்தாள். ‘கடவுள் எதைத் தந்தாலும் மகிழ்ச்சியாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.மாம்பழம் தந்தால் மகிழ்ச்சியும் எலுமிச்சம்பழம் தந்தால் மனவருத்தமும் கொள்ளக்கூடாது. இரண்டையுமே சமமாகப் பார்க்க கற்றுக்கொள்ள வேண்டும்.’ அவர் காதருகே சொல்வது போலிருந்தது. ‘இதுவும் ஒரு அனுபவம்.சந்தோஷ மாக அனுபவிப்போம். அங்கு என்னை விட முதியவர்களாக இருப்பவர்களுக்கு உதவ இது ஒரு சந்தர்ப்பம்.’ மகிழ்வோடு அந்த நாளுக்காய் காத்திருந்தாள். பேரப்பிள்ளைகள் அமெரிக்கா போவதில் ஆரவாரப்பட்டாலும் அம்மம்மாவைப் பிரிவதில் கவலைப்பட்டார்கள். பாடசாலை நேரம் போக மிகுதி நேரம் பெற்றோரை விட அம்மம்மாவுடனேயே கழித்ததால் அவர் களுக்கு அம்மம்மாவை விட்டுப் பிரிவது சிரமமாகவே இருந்தது. விவேகாவும் கொஞ்சம் கவலையுடனேயே இருந்தாள். “அப்பா என்னிடம் விட்டுச்சென்ற கடமையை நான் தட்டிக்

*கழிக்கிறேனோ என்றிருக்கிறது அம்மா. கவனமாக இருங்கோ. எப்ப இந்த இரண்டு வருடமும் முடியுமோ என்றிருக்கிறது." கண்கள் கலங்கக் கூறிய மகளுக்கு" இதென்னடா நான் ஆரோக்கியமாய் இருக்கிறேன்.எனக்கு ஒரு வருத்தமுமில்லை. இதுஒருசேன்ஜ்.வேறுபட்ட ஆட்களுடன்பழகஇதுஒருசந்தர்ப்பம். கவலையை விடும். இரண்டு வருஷம் இந்தா என்று போய்விடும்.' மகளை ஆறுதல்படுத்தி இல்லத்தில் சேர்ந்தாள். முதலிரண்டு நாட்கள் என்னவோ போல்தான் இருந்தது. பெரிய வீட்டில் வளைய வந்தவளுக்கு ஒரு சிறிய அறை, ஒரு சிறிய மேசை, சிறிய கப்பேட். தேவைகள் குறைக்கப்பட்டு கொஞ்சம் கடினமாகவே யிருந்தது.*

*இல்லத்தில் இருப்பவர்கள் பலர் எதையோ இழந்தவர்கள் போலத்தான் இருந்தார்கள். பிள்ளைகளை ஆளாக்கி விட்டு முதுமையில் வலிந்து தனிமைக்குத் தள்ளப்பட்டவர்கள். பயன் முடிந்தபிறகு தூக்கி வெளியே எறியப்பட்டவர்கள். யதார்த்தத்தை புரிந்து கொள்ளமுடியாமல் சுய பச்சாதாபத்தில் மூழ்கிப் போனவர்கள். விரக்தி முகங்களையும், கவலை தோய்ந்த முகங்களையும் தான் அங்கே பார்க்க முடிந்தது.கண்பார்வை குறைந்ததினால் ரீ.வி பார்க்கவோ புத்தகங்கள் படிக்கவோ முடியாமல் ஒதுங்கி இருப்பவர்கள் பலர் அங்கே பரவலாக இருந்தார்கள். சிலர் வலிய வந்து பேசினார்கள். சிலர் பேசலாமா என்று தயங்கினார்கள். அங்கு பல நாட்டவர்களும் இருந்தது வித்தியாசமான சூழலை ஏற்படுத்தியது. எல்வோரிடமும் புன்னகை விரிந்த முகத்துடன் வளைய வந்தாள் அகல்யா. காலை மாலை நடப்பவர்களுடன் தானும் சேர்ந்து நடந்துவரத் தீர்மானித்தாள்.*

*ஒருநாள் நடந்து விட்டு வெளியில் போட்டிருந்த இருக்கையில் அமர்ந்தவள் அருகே ஒருவர் வந்தமர்ந்து 'உங்கள் முகம் மிகவும் பரிச்சயமானதாக இருக்கிறது. யாரென்று நினைவு வரவில்லை. ஆனால் எனக்கு உங்களைத் தெரிந்திருக்கிறது.' என்று பேச ஆரம்பித்தார். அவரை உற்றுப் பார்த்த அகல்யா' எனக்குத் தெரிந்தவராகத் தெரியவில்லையே' என்றாள்.' நான் ராஜேந்திரன்.ஸ்ரேஷன் மாஸ்ரராகப் பல இடங்களில்*

*இருந்தனான். எங்கேயாவது சந்தித்திருப்பம். ஒருநாள் சந்தித்ததாகத் தெரியவில்லை. கனகாலம் பழகிய மாதிரி ஒரு உணர்வு' கூறிவிட்டு மீண்டும் அகல்யாவின் முகத்தை உற்றுப் பார்த்தார்.' ஆ!எனக்குத் தெரிந்துவிட்டது. நீங்க அகல்யா தானே'ஆவலுடன் ஏறிட்டு நோக்கினார்.' ஓம். அகல்யாதான். நீங்க' என்று இழுத்தாள்.' நீங்க வட்டுக்கோட்டைதானே. வட்டு ஹின்டுவிலை படிச்சனீங்கள்தானே. நான் ராஜேந்திரன். உங்களை சைட் அடிச்சுக்கொண்டு திரிந்த ராஜேந்திரன். நீங்கதான் எனக்குச் சரியான மறுமொழி சொல்லவே இல்லையே. என்னை முன்னும் பின்னும் திரியவிட்டு அலக் கழிச்சீங்க. எத்தனை கடிதங்கள். கவிதைகள் தந்திருப்பன். பதிலே போட்டதில்லை. ஆனால் என்னைப் பார்ப்பீங்க. அவ்வளவுதான்'. அகல்யாவுக்கு ஞாபகம் வந்தது.' ஓ! அந்த ராஜேந்திரனா? இப்ப தெரியுது. அந்தக்காலத்தில் காதலிக் கிறதற்கு எல்லாம் எங்கே துணிச்சல் இருந்தது பார்க்கிறதோடை சரி. நீங்க இங்கு கனகாலமாய் இருக்கிறீங்களோ?'' ம். ஒரு நான்கு வருஷமாயிருக்கிறன்.மனைவி இறந்துபோக மகனிடம் வந்தன். ஒரு ஆறுமாதத்தில் மனைவியின் பேச்சைக் கேட்டு இங்கு கொண்டுவந்து விட்டிட்டான். ஆனால் அடிக்கடி வருவான். தேவையானதெல்லாம் கேட்காமலேயே வாங்கி வந்துவிடுவான்" நீங்க என்னமாதிரி?" எனக்கு ஒரேயொரு மகள் தான்.இரண்டுவருஷம்அமெரிக்காபோனதால்நான்குநாளைக்கு முதல்தான் இங்கு வந்தனான். மகளவை வருமட்டும் இங்கு இருப்பேன். ஏன் உங்களுக்கும் ஒரு பிள்ளைதானோ?'' இல்லை. எனக்கு மூன்று பிள்ளைகள்.ஒரு மகள். இரண்டு மகன். ஒரு மகனை ஈழப்போரில் பறிகொடுத்திட்டேன். மகளுடன்தான் அவள் மாமன் மாமியும் இருக்கினம். நான் அவையுடன் எப்பிடி இருக்கிறது. அதுதான் மகன் கூப்பிட வந்திட்டன். இருந்த மாதிரி தனியவே இருந்திருக்கலாமோ என்று இடைக்கிடை தோன்றும்" 'வீணாகக் கவலைப்படாதேங்கோ. இங்கு இவ்வளவு பேர் இருக்கினம். கதைத்து சந்தோஷமாக இருக்கிறது தானே. பிடிக்காத மருமகளுடனிருந்து வேதனைப்படுவதைவிட இங்கு சுதந்திரமாக மனநிம்மதியுடன் இருக்கலாமே." ஓமோம். மகனும் அப்படித்தான் சொன்னவன். நெடுக அவளுடன்*

*சண்டை பிடிக்கேலாது அப்பா. நான் அடிக்கடி வந்து பார்க்கிறன் என்றான். வரும்போது கவலையாக இருந்தது. நான் என்னுடைய வீடு, எங்கள் மண், நண்பர்கள் என்று எல்லாவற்றையும் மிஸ் பண்ணுகிறேன். அதைப்பற்றி நினைத்தாலே சுகம். இப்போது நினைவுகளுடன் வாழப் பழகி விட்டேன். என்னுடைய ஃபிரன்ட் பாலாவும் வந்தபிறகு ஓகே.இப்போது உங்களைக் கண்டது இன்னும் சந்தோஷம்.மகன் வரும்போது இன்ரடீயூஸ் பண்றன். வாசமான பழைய நினைவுகள்தான் இப்ப எங்களுடைய ரொ–னிக்."*

*இப்போதெல்லாம் இருவரும் அடிக்கடி சந்தித்துக் கொள் வார்கள். மணிக்கணக்காகப் பேசிக்கொள்வார்கள். ராஜேந்திரன் நன்றாகக் கவிதைகள் எழுதுவார். தான் எழுதியவற்றை அகல்யாவுடன்பகிர்ந்துகொள்வார். இலக்கியம்பற்றி, கவிதைகள் பற்றி உரையாடும்போது அவரின் அறிவு கற்பனைத்திறன் அவளை வியக்க வைக்கும்.' நான் கவிதைகள் எழுதுவதற்கு உந்துசக்தியாக இருந்ததே நீங்கதான். என்னுடைய காதல் கவிதைகள்தான் இப்போது வேறு பரிமாணத்தில் விரிவடைந் திருக்கிறது.*

*கவிதைகள் எனக்கு சுவாசம் மாதிரி. எதைப்பற்றியென்றாலும் எழுதிக் கொண்டேயிருப்பேன். என்னுடைய கவிதைப் புத்தகங்கள் என்னிடம் இருக்கிறது. அடுத்தமுறை சந்திக்கும்போது தாறன். உங்களைச் சந்தித்ததில் எனக்கு எவ்வளவு சந்தோஷம் தெரியுமா? அதற்காக என்னைத் தவறாக நினைக்க வேண்டாம். முன்பொரு காலம் நான் காதலித்த பெண். ஆனால் சத்தியமாக இப்போதில்லை. ஆனால் மனதின் ஒரு ஓரத்தில் உங்களுக்கான ஒரு இடம் அப்படியேயிருக்கு. ஆனால் காதலியாக இல்லை.*

*"கண்கள் மின்ன ராஜேந்திரன் கூறியதுஅகல்யாவுக்கு ஒரு மாதிரியிருந்தாலும் சின்னதாக ஒரு பெருமை எட்டிப் பார்ப்பதை விலக்க முடியவில்லை." "நட்பு காதலாக மாறலாமென்றால் காதல் ஏன் நட்பாக மாற முடியாது?காதல் என்றது நட்பு என்ற பரிமாணத்துக்குச் செல்லலாந்தானே.நட்பு என்றது*

*இலக்கணத்துக்குள் உட்பட்டுத்தான் இருக்க வேண்டுமா?நட்பு என்பதும் அன்பின் இன்னொரு வடிவந்தானே. காதலுக்கும் நட்புக்கும் நடுவில் மெல்லியதான ஒரு சின்னக்கோடு. அன்பு ஒரு வரையறைக்குள் இருக்கும்போது ஒவ்வொரு பெயர். அவ்வளவுதான்."*

*"உங்களுக்கு வார்த்தைகளால் சொல்லத் தெரியும்.எனக்கு அந்தக்கலை தெரியவே தெரியாது. நான் உங்களைத் தப்பாகவே நினைக்கவில்லை' என்றாள் அகல்யா.*

*'உங்கள் மனைவிக்குத் தெரியுமா?'*

*சிறிது தயங்கிவிட்டுச் சொன்னார் "ம். தெரியும். கல்யாணத் தன்றைக்கே சொல்லிவிட்டேன். வீட்டுச் சாமியறையில் குத்துவிளக்கு ஏற்றுவதில்லை.மண்ணால் செய்த அகல்விளக்கு தான் ஏற்றுவது. எப்போது சுத்தம் செய்யும்போதோ புதியது மாற்றும்போதோ பத்திரம் அப்பாவுக்கு அகல் என்றால் உயிர் என்று என் மனைவி பிரேமினி சொல்ல மறப்பதேயில்லை. என்னுடைய மகளுக்குக் கூட அகல்யா என்று தான் பெயர். பிள்ளைகளுக்கும் கொஞ்சம் தெரியும்'அகல்யாவுக்கு கொஞ்சம் வெட்கமாகவேயிருந்தது. மகள் காதலித்தபோதுகூட பிரேமினி*

*'நாளை இழுக்காமல் சட்டுப்புட்டென்று உன் காதலை அடுத்த லெவலுக்கு கொண்டு போயிடு அல்லது அப்பாடை மாதிரி ஊத்திப் போயிடும்' என்று வேடிக்கையாகச் சொல்லுவாள். என்னை நன்றாகப் புரிந்துகொண்டவள். என்னை எனக்காகவே நேசித்தவள்.நான் இன்னொரு பெண்ணை நேசித்ததால் என் மனைவியைக் காதலிக்காமல் இருக்க வேண்டுமென்று இல்லைதானே. புரிகிறதா நான் சொல்றது?' இலேசாகத் தலையசைத்து அவரது கூற்றை ஆமோதித்தாள்.*

*ராஜேந்திரன் கொடுத்த கவிதையில் தான் ரசித்த கவிதையை மீண்டும் மீண்டும் வாசித்து ரசித்தாள். வரவேண்டுமா? என்ற தலைப்பில் வெகு அருமையாக இருந்தது.*

*வர வேண்டுமா?*
*கவிலவஸ்துவில் பிறந்து*
*கௌதமபுத்தரானவர் ஒருநாள்*
*இலங்கையைப் பார்ப்பதற்கு*
*ஆவலுடன் வந்தார்.*

*முன்பொருகாலும் இங்கு*
*கால் மிதிக்கவில்லை இப்போ*
*என் பெயர் சொல்லியிங்கு*
*என்னதான் நடக்கிறது?*

*பார்ப்பதற்கு ஆவலுற்று*
*பறந்து வந்தார் இலங்கைக்கு*
*பார்க்குமிடமெலாம் தன்சிலை*
*பெருமிதம் வரவில்லை வாட்டமுற்றார்*

*புத்தர் என் பெயர் சொல்லி*
*எத்தனை அட்டகாசம்*
*அத்தனையும் ஏமாற்று அறமில்லை*
*அன்பில்லை அகிம்சையில்லை*

*ஐயகோ என்பெயர் சொல்லி*
*ஆயிரமில்லை லட்சத்தில் கொலைகள்*
*போயினவே நான் சொன்ன போதனைகள்*
*தீயிலவை வெந்து நீறானதோ*

*கடவுளைத் தேடிய எனைக் கடவுளாக்கி*
*இடங்களை என்பெயர் சொல்லி உடமையாக்கி*
*கெட்டுப்போன இலங்கையைத் தூக்கிநிறுத்த*
*சட்டென நான் பிறந்து வரவேண்டுமோ?*

*தான் வாசித்தது மட்டுமன்றி அங்குள்ளவர்களுடனும் பகிர்ந்து கொண்டாள். ராஜேந்திரனுடன் பேசுவது ஆரோக்கியமான பொழுதுபோக்காக அமைந்தது. அவரது உலக மாதா*

உண்மையைக் கொஞ்சம் எள்ளலுடன் உரைத்தது.
உலக மாதா

கர்ப்பக்கிரகத்தில் இருவிழிகளையும்
அகலமாக விரித்துக்கொண்டு
அருள்மழையைக் கண்களில்தேக்கி
கருணையே வடிவினளாய் வசீகர
புன்னகையை உதடுகளில் தேக்கி
அமர்ந்திருந்தார் உலகமாதா.

கூடியிருந்த அத்தனை பக்தர்களும்
கூவியழைக்கும் வியாபாரிகளாய்
பிரார்த்தனை என்ற பெயரில்
தத்தம் வேண்டுகோள்களை
மெல்லியகுரலில் ஒப்படைக்கிறார்கள்
எல்லாமே நீளமாக இருக்கின்றன

வேண்டுதல்கள் மட்டுமே பக்தியாக
அர்ச்சனைத் துண்டுகள் மூலம்
வியாபாரப் பொருட்களாகி விட
யார் யாருக்கு எதையெதை
எப்போது கொடுக்கவேண்டுமென்பதில்
தடுமாறிப் போய்விடுகிறார் உலகமாதா
ஏற்றிவைத்த விளக்குகளில்
கொட்டிவிட்ட வேண்டுதல்களை
தேடி யெடுக்க முடியாமல்
வசீகரப் புன்னகை மறைந்திட
அருள்பொழியும் விழிகளை மெல்லெனமூடி
தூங்கத் தொடங்குகிறார் உலகமாதா.

பலருக்கும் வாசிக்கும்படி கொடுத்து நிதர்சனமான உண்மையை வெளிப்படுத்திய விதத்தைப் பற்றிக் கூறி பெருமிதப்பட்டாள். ராஜேந்திரனின் தோழமை அகல்யாவுக்கு மட்டுமன்றி ராஜேந்திரனுக்கும் இதமாகவே இருந்தது. பலப்பல விஷயங்களை

விவாதித்தனர். கடவுளைப்பற்றி நிறையவே பேசினார்கள். மனிதன் கடவுளிடம் பேசும் மொழி மௌனம் என்றும் பிறக்கும்போது கொண்டுவந்த மொழி அதுதானென்றும் ராஜேந்திரன் கூறியதை இவ்வளவு காலமும் தான் உணராமல் இருந்துவிட்டேனே என்று வருந்திய அகல்யா வாரத்தில் இரண்டு நாள் மௌனவிரதம் இருக்கத் தொடங்கினாள். ராஜேந்திரன் பல ஆண்டுகளாக இதைக் கைக்கொண்டு வருவதாகக் கூறினார். மௌனத்தில் நிறைய யோசிக்க முடியும் என்பதும் ஏதாவது தவறுகள் விட்டிருந்தால் திருத்திக்கொள்ள முடியு மென்பதும் அங்கு பலருக்கு ஏற்புடையதாக இருந்தது. நாளுக்குநாள் ராஜேந்திரன் அந்த இல்லத்தில் பிரபலமாகினார்.

கடவுள் நம்பிக்கை இல்லாத பலரை தன் கருத்துக்களை ஏற்கச் செய்வதில் ராஜேந்திரன் வித்தகராகவேயிருந்தார்.இந்த விஞ்ஞான யுகத்தில் மனிதரால் செய்ய முடியாதது எதுவுமில்லை என்று வாதாடியவருக்கு “மா மரமோ புளிய மரமோ எங்களால் எத்தனையும் வைக்க முடியும். ஆனால் அதில் இனிப்புச்சுவையையோ புளிப்புச்சுவையையோ வைப்பது எங்களால் முடியாத காரியம்” என்பதைப் புரிய வைத்தார். எத்தனை கடவுள்கள் இந்து சமயத்தில் என்று கூறியவருக்கு ‘மக்களுக்கு பிரச்சனைகள், ஆசைகள் கூடிக்கொண்டு போகும் பட்சத்தில் தெய்வங்களின் எண்ணிக்கையும் கூடிக்கொண்டு போவது தவிர்க்க முடியாததாகி விடுகிறது. அவர்களின் துன்பத்துக்கு தீர்வு சொல்கிறோம் என்ற தோரணையில் புதுப்புது வழிபாடுகள் முளைத்துக்கொண்டே போகின்றன. இன்பமும் துன்பமும் கர்ம பலனின்படியே என்று சொல்ல வேண்டியவர்கள் தம் வருமானம் ஒன்றே குறிக்கோளாய் தோஷநிவாரணம் என்ற பெயரில் எதுவெல்லாமோ செய்யத் தூண்டுகிறார்கள். கடைசியில் இந்தப் பணமென்ற அடுத்த உலகுக்கு எடுத்துச்செல்ல முடியாத வெற்றுத்தாள் வென்று விடுகிறது. கடவுள் அங்கே தோற்றுப் போய்விடுகிறார் போலத் தோன்றுகிறது.’ அவரின் பேச்சை எல்லோருமே மகுடிக்கு மயங்கிய பாம்பு போல கேட்டு ஒப்புக்கொண்டார்கள்.

பக்தியைப் பற்றிய உண்மையான கோணம் எல்லோருக்குமே

*திரை நீக்கிப் பார்க்கும் வெளிச்சம் போல் தெரியத் தொடங்கியது. "எங்கள் ஆழ்மனமும் மேல் மனமும் இரண்டறக் கலக்கும் போதுதான் இறைவனைக் காணலாம். வேதப்புத்தகங்கள் எவ்வளவுதான் படித்தாலும் இறைவனை உணரமுடியாது. நாம் ஆழ்ந்த மௌனத்தில் மூழ்கும்போதுதான் பக்தி மலரும். பலருடைய பக்தி தம்மையோ தம்மைச் சார்ந்தவர்களையோ பாதுகாக்கவும், தமக்குத் தேவையானவற்றை அடையவுமே செய்யப்படுகிறது. வாழ்க்கையைப் பற்றிய பயம், இறப்பு பற்றிய பயமே இவர்களை பக்தி செய்யத் தூண்டுகிறது. இது பக்தி யில்லை. பக்தியின் பெயரால் செய்யப்படும் ஏமாற்றுவேலை' தொடர்ந்து கூறிக்கொண்டே போனார். நான் வாசித்தனான். சுவாமி இராமகிருஷ்ணர் சொன்னதாக பஞ்சாங்கத்தில் இந்த மாதம் மழை வந்து பயிர் விளைச்சல் நன்றாக இருக்கு மென்று போட்டிருந்தால் விவசாயி பாடுபடாமல் பஞ்சாங்கத் தைக் கசக்கிப் பிழிந்தாலும் விளைச்சல் வராது' என்று கூறினாள் அகல்யா. சரியாகச் சொன்னீங்க. எங்களுக்கு கடவுளின் தேடல் இருக்க வேண்டும்' என்றார். அதுமட்டுமல்ல. எங்களுக்கு கடவுள்பால் ஈடுபாடு இருப்பதுபோல் கடவுளுக்கும் எங்களுடன் ஒரு ஈர்ப்பு இருக்க வேண்டுமல்லோ. நாங்க எங்களுக்குப் பிடித்த தெய்வ உருவங்களை செலக்ட் பண்ணும் போது அவர் இவர் தகுதியானவன்தான் என்று எங்களை செலக்ட் செய்யக்கூடாதா? கடவுள் என்ற உணர்வு எங்களுக்கு ஆனந்தத்தைத் தரவேண்டும். மனம் உருக வேண்டும். ஆன்மீகத் தேடல்கள் அவரது உரையாடல்கள் மூலம் கிடைக்கும் வாய்ப்பை எல்லோருமே பெற்றனர். "அகல்யா இங்கு வருமட்டும் இதெல்லாம் இவர் பேசுவார் என்பதே எங்களுக்குத் தெரியாதே" என்று எல்லோரும் பேசிக் கொண்டார்கள். ராஜேந்திரனிடம் இருந்த வாக்கு வல்லமை கேட்பவர்கள் எல்லோரையும் எதிர்ப்புத் தெரிவிக்கவோ மாறான கருத் துக்கள் கூறவோ முடியாதவர்கள் ஆக்கி விடுகிறது. அத்தோடு கடவுளைப் பற்றிய புதிய பரிமாணம் அங்கே அலசப்பட்டது.*

*ஒருநாள் எல்லோரிடமும் சொன்னார். "ஒரு பேப்பரில் உங்களுக்கு விருப்பமானவர்கள் பெயர்களை நம்பர் போட்டு*

பட்டியலிடுங்கோ. ஐந்து பெயர்கள் மட்டுமே எழுத வேண்டும். எல்லோருமே தமிழர்கள் மட்டுமன்றி அங்கிருந்த அனைவருமே எழுதி வந்து காட்டினார்கள். எல்லோரும் கணவனோ மனைவி பிள்ளைகளின் பெயர்களையே எழுதியிருந்தார்கள். சிலர் நண்பர்களின் பெயர்கள். இருவர் மட்டுமே கடவுள் என்று எழுதி இருந்தனர்.உடனே சொன்னார், நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள். இதில் இருந்து என்ன விளங்குகிறதென்று? அகல்யா ஆச்சரியப்பட்டாள் நல்ல ஒரு உண்மையை எப்படி வெகு எளிதாக விளங்கப்படுத்தியிருக்கிறார் என்று.

அங்கு இருந்த பெண்களில் ஒருவரை அகல்யா அடிக்கடி பார்ப்பாள். தனிமையில் இருப்பதும் அடிக்கடி அழுவதும் பார்ப்பதற்கு பாவமாகவும் இருந்தாள். அகல்யா அவளிடம் வலியச் சென்று தன்னை அறிமுகப்படுத்தி சினேகமானாள். அவள் தான் எவ்வளவு கஷ்டப்பட்டு தன் இரண்டு பிள்ளை களையும் வளர்த்ததாகவும் இப்போது ஒரு மகன் தன்னை இங்கு கொண்டுவந்து விட்டதாகச் சொல்லி வருத்தப்பட்டாள். பிள்ளைகள் சிறுவர்களாக இருந்தபோதே தான் கணவனைப் போர்க்காலத்தில் பறி கொடுத்ததாகவும் அவர்களை வளர்க்கப் பட்ட பாடுகளும் அவமானங்களும் என்று அடுக்கிக் கொண்டே போனாள். 2008ல் வீட்டில் வந்து சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட தன் கணவன் காணாமல் போனோர் லிஸ்ரில் சேர்க்கப்பட்டதாகவும் அதன்பிறகு பிள்ளைகளை வளர்க்கத் தான் பட்ட கஷ்டங்களை அவர்கள் மறந்தது பற்றியே பேசிக் கொண்டிருந்தாள். இங்கு வந்து தான் ஒன்றுக்கு இரண்டு வேலை செய்து பிள்ளைகளை வளர்த்து ஆளாக்கினதாகச் சொன்னாள். தன்னைக்கொண்டு தங்கள் பிள்ளைகளை வளர்த்து முடித்தபின் கைகழுவி விட்டதாக நொந்து பேசினாள். முதல்நாள் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த அகல்யா அடுத்தடுத்த நாட்களில் பேசத் தொடங்கினாள்.

'நாங்கள் இந்தப்பிள்ளைதான் வேணுமென்று தெரிந்தெடுத்துப் பெற்றதும் இல்லை. அவர்கள் எங்களைத் தேர்ந்தெடுத்து எங்களிடம் வந்து பிறக்கவும் இல்லை. அப்படியிருக்க அவர்கள் எப்படி வாழ வேண்டுமென்று நாம் எப்படித் தீர்மானிக்க

*முடியும்? நல்லது கெட்டது சொல்லிக்கொடுத்து வளர்த்தாச்சு. அவர்கள் விருப்பப்படி அவர்களுக்கான வாழ்க்கையை வாழ்ந்துவிட்டுப் போகட்டுமே. எங்களை வைத்துப் பார்க்க வேண்டுமென்று நாங்கள் ஏன் எதிர்பார்க்க வேண்டும்? பார்த்தால் சந்தோஷம். பார்க்காவிட்டால் கவலையில்லை என்று வாழ்வோமே. பறவைகள். மிருகங்கள் எல்லாம் தங்கள் குஞ்சுகள். குட்டிகளிடம் எதையாவது எதிர்பார்க்கின்றனவா? ஐந்தறிவு என்று சொல்கிற அவையே இப்படி வாழும்போது ஆறறிவு என்று பீத்திக் கொள்கிற நாங்கள் எப்படியிருக்க வேண்டும்? அதோடு நினைத்துப்பாருங்கோ வேண்டாத விருந்தாளியாக இருந்து உதாசீனப்படுத்தப்படுவதற்கு இங்கு சுதந்திரமாய் எங்களோடு ஒத்தவயதினருடன் பழங்கதை கதைத்துக்கொண்டு சந்தோஷமாக இருக்கலாமே. எங்கேயோ எந்தவிதமாயோ வளர்ந்த உங்கள் மருமகள் தன் கணவனையும் அனுசரித்து மாமியாரையும் அனுசரிக்க வேண்டும் என்று எதிர் பார்ப்பது கொஞ்சம் அபத்தமாயில்லை? உங்கள் மகன்கூட அம்மா தன் மனைவியிடம் பேச்சு வாங்காமல் சந்தோஷமாக வாழட்டுமே என்று நினைத்து உங்களை இங்கு சேர்த்திருக் கலாந்தானே.*

*அகல்யாவின் பேச்சு அந்தப் பெண் மனதுக்குள் சென்று உண்மையை விளக்கியிருக்க வேண்டும். அதோடு கவலைப் படுவது குறைந்து சாதாரணமாக இருந்தாள். அடிக்கடி மகனை யும் மருமகளையும் சாபமிட்டவள் இப்போது மகனை நல்ல விதமாக நினைக்கத் தொடங்கினாள். எல்லாவற்றுக்குமே இரண்டு பக்கங்கள் இருப்பதைப் புரிந்து கொண்டாள்.*

*ராஜேந்திரனின் நண்பர் பாலா அவருடன் வந்து தானும் அவர்கள் பேச்சில் கலந்து கொள்வார். பாலாவைப் பற்றித் தெரிந்தபோது இப்படியானவர்களும் இந்த உலகத்தில் வாழ்வதால்தான் தர்மம் இன்னும் நிலைத்திருக்கிறதோ என்று நினைப்பாள். அவர் இலங்கையில் பெருந்தெருக்கள் திணைக்களத்தில் வேலை பார்த்தவரென்றும் ஒரு சிங்களப் பெண்ணை காதலித்ததாகவும் குடும்பத்தவர் எதிர்ப்பைத் தாங்கமுடியாமல் காதலைத் தியாகம் செய்துவிட்டு இன்றுவரை*

*பிரமச்சாரியாகத் தன் வாழ்க்கையைத் தொடர்வதாகவும் அறிந்து அவரின்மேல் பெருத்த மரியாதை ஏற்பட்டது. அதோடு தான் அப்பெண்ணை ஏமாற்றியதாக இருக்கக்கூடாது என்ற நோக்கில் தன் சிங்கள நண்பனை ஹேமந்திக்கு திருமணம் செய்துவைத்ததாகவும் ராஜேந்திரன் சொன்னார். வேற்றினம் என்ற பெயரில் எத்தனை பேர்களின் காதல் இப்படி நசுக்கப்பட்டதோ என்று கவலைப் பட்டார்கள். இனத்தின் பெயரால் மதத்தின் பெயரால் எத்தனை காதலர்கள் பாதிக்கப்பட்டார்களோ?*

*அகல்யா தமிழர்களுடன் மட்டுமன்றி மற்ற இனத்தவர் களுடனும் அன்பாக கண் பார்வை குறைந்தவர்களுக்கு வாசித்துக் காட்டுவதிலிருந்து உதவி தேவைப்பட்டவர்களுக்கு தேவையான உதவிகள் செய்வதில் முன் நின்றாள். எல்லோருக்குமே அவளைப் பிடித்திருந்தது. தாயகத்தில் வித்யா என்ற பள்ளிச்சிறுமி பலரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட செய்தி அங்கிருந்தவர்கள் அனைவரையும் பெரிதாகப் பாதித்தது. ஒரு பாபமும் அறியாத அந்தச் சிறுமி எப்படியெல்லாம் துடிதுடித்திருப்பாளென பெண்கள் மட்டுமல்ல ஆண்களும் அந்தவேதனையை அனுபவித்தனர். போரின் போதும் அதற்குப் பின்னரும் பெண்கள் இத்தகைய துன்பத்தில் அல்லலுற்ற போதிலும் பள்ளிக்குச் சென்ற ஒரு சிறுமி எம் இனத்தவர்களாலேயே வன்புணர்ச்சிக்கு ஆளானது எல்லோ ராலும் ஜீரணிக்க முடியாமலிருந்தது. எல்லோருமே அன்று உணவு உட்கொள்ள முடியாமல் சிரித்துப் பேசமுடியாமல் மனப்பாரத்துடன் நடமாடினர். ராஜேந்திரன் தான் எழுதிய ஒரு கவிதையை அகல்யாவிடம் நீட்டினார். வாசிக்கும்போதே கண்கள் குளமாக விம்மிவிம்மி அழுதாள். 'இது நான் இலங்கையிலிருந்தபோது எழுதியது. எனக்குத் தெரிந்த ஒரு பிள்ளைக்கு நடந்த கொடுமை.'*

*தனியொருவன் வருவானா?*
*தவமிருந்து பெற்ற மகள்*
*தவித்தழுது கதறுகின்றாள்*
*தாயாக நானும் தவியாய்*

தவித்தழுது கதறுகிறேன்
தவிப்பு அடங்காதோ எம்
தவிப்பு அடங்காதோ

பாரினை உயர்த்திடவே ஈசன்
பரிசாக எமக்குத் தந்தானென்று
பலவாறு நாமும் மகிழ்ந்திருந்தோம்
பாவிகளை அனுப்பி எம்பரிசுத்த மாமலரை
பிய்த்தெறிய நீரும் பார்த்திருந்தீரோ
பரிசழித்த பாவிகளை அழிக்காது விட்டீரே

பட்டங்கள் பலவும் பெறுவாளென
பலப்பல கனவுகள் கண்டோமே
பத்துக் காமுகர்கள் கூட்டாய் சேர்ந்து
பரிதவிக்க என்மொட்டை கசக்கியெறிந்தனரே
பதைபதைத்து நாமும் நிற்கின்றோம்
பக்கத்துணையாக யாரும் வரவில்லையே

வாதங்கள்செய்து வக்கீலாய் வருவாளென்று
வார்த்தைக்குவார்த்தை பெருமிதப்பட்ட தந்தை
வாயடங்கி பேச முடியாமல் வெதும்பி நிற்க
வாரியணைத்து தேற்ற வகை யின்றி
வழியின்றித் தவிக்கின்றேன் நானிங்கு
வார்த்தைக்காகவேனும் துணைநிற்க யாருமில்லை

ஐ.நாவில் தமிழருக்காய் வாதாடுவாள் இவளென்று
ஐயமின்றிப் புகழ்ந்தனரே ஆசிரியர்கள்
ஐயகோ இன்று அழுது புலம்புகின்றோம்
ஐ.நாவுக்குச் செல்லவேண்டாம் எம்மகள்
ஐந்துவார்த்தை பேசினாலே அது போதும்
ஐயய்யோ என்பிள்ளை மீண்டுவந்தாலது போதும்

பதினாறு வயதினிலே பரிதவிக்க வைத்தனரே
பதில்கூறத்தெரியாமல் பரிதவித்து நிற்கின்றோம்

*பிரமை பிடித்த மகள் வாய் திறக்க மாட்டாளா?*
*பிரமனுக்கும் கண்ணில்லையோ பாதகரை*
*பிடித்தழிக்கத் திறனில்லையோ அவனுக்கு*
*பிரமனைத்துாற்றிடினும் நடந்ததுதான் மாறிடுமோ*

*வாதத்திறமையால் வக்கீலாய் வராவிடினும்*
*வார்த்தைகள் இழந்து வெறும் பொம்மையாய்*
*வாழ்ந்து முடிக்காமல் வடிவான என் மகள்*
*வாழ்வை எதிர்நோக்க எழும்பி வரவேண்டும்*
*வதைத்த காமுகரை பழிதீர்க்க என்றாலும்*
*வாய் பேசி எழுந்து விரைந்துவர வேண்டும்*
*வடித்த சிலையென வடிவான எம்மகளை*
*மடித்து கையால் வணங்கத் தோணலையே*
*கடித்துக்குதறி தின்று விட்டெறிந்தவரை இங்கு*
*அடித்துக் கொன்றெரிக்க மனிதரிலையே*
*பிடித்து வெஞ்சிறையில் அடைக்க யாருமில்லை*
*படித்து செய்தியினை பரப்பமட்டும் செய்கின்றார்*

*பூவாய் பூத்துக் குலுங்க வேண்டிய எம்மலர்*
*சாவாரைப்போல செத்தழிந்து நிற்கின்றாள்*
*போவோரும் வருவோரும் புதினமாய்ப்பார்க்க*
*யாவர்தான் என்மகளை மீட்டெடுத்துத் தருவாரோ*
*தன்நினைவு இல்லாமல் தடுமாறும் எம்மகளை*
*தட்டி உயிர்ப்பித்து வாழவைக்க என் செய்வேன்*

*தங்கள் காமவெறியடங்க வேண்டுமென்று*
*தங்கக்குழந்தைகளை சிதைத்து எறிகின்ற*
*தறிகெட்ட ஆண்களை யெல்லாம்*
*தண்டித்தழித்திடவே தனியொருவன்வருவானா*
*சிதைந்த பெண் சிற்பங்க ளெல்லாமே*
*சீறும்பாம்பாய் சிலிர்த்தெழும்பி வரவேண்டும்.*

*பேசமுடியாத அகல்யா அங்கிருந்து அகன்றாள். “பெண்களுக்கு நடப்பதே தாங்க முடியாமலிருக்கும்போது இப்படி சிறுமிகளுக்கு...*

*எங்கே மனிதகுலம் போய்க்கொண்டிருக்கிறது? பெண்குழந்தைகளை எங்கும் தனியே விடவே முடியாத ஒரு காலத்தில் வாழ்கிறோமே. பக்கத்து வீட்டுக்காரனும் பள்ளியாசிரியனும் அங்கிளையும்கூட நம்ப முடியாத காலமாயிருக்கிறதே"என்று பாலா கூறி வருத்தப்பட்டார்.*

*குறைந்த தகவல்கள் மட்டுமே தெரிந்து நிறைந்த வாழ்வு வாழ்ந்த காலம் எல்லாம் போய்விட்டது.நினைத்து நினைத்து மகிழக் கூடிய வாசமான வாழ்வு எங்கள் தலைமுறையுடன் முடிந்துவிட்டது. பெருமூச்சுடன் கூறினார் ராஜேந்திரன்.' முந்தின காலத்தில் எங்கள் காதல்கூட உயிரோட்டமாக இருந்தது.நிறைவேறினாலும் நிறைவேறாவிட்டாலும் அந்தக் காதல் எவ்வளவு புனிதமாக இருந்தது. பரிஸ்சில் நீங்கள் பார்த்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன். ஒரு வெட்னரி சேர்ஜன் ஃபிராகோனார்ட் 17ம் நூற்றாண்டில் தன் காதலி இறந்து அவளைப் புதைத்த பிறகு அந்த உடம்பை அவள் உறவினருக்குத் தெரியாமல் தோண்டியெடுத்து ஒரு ஸ்கெலிற்றன் சிலையாக்கியிருக்கிறார். ஒரு குதிரையில் அந்தப் பெண் உட்கார்ந்த தோற்றத்தில் செய்திருக்கிறார்.மருத்துவ ரீதியில் கெடாமல் குதிரையினதும், அப்பெண்ணினதும் தோல் நீக்கப்பட்டு வெகு அழகாக அந்தச்சிலை செய்யப்பட்டிருக்கிறது. அவரது காதல் எவ்வளவு ஆழமாய் இருந்திருந்தால் அவரால் அப்படியொரு அற்புதமான சிலையைச் செய்திருக்க முடியும். ஷாஜகான் பணத்தை அள்ளி இறைத்து எத்தனையோ ஆயிரக்கணக்கான வேலையாட்களைக் கொண்டு தாஜ்மகால் கட்டியது இதோடு ஒப்பிடும் போது ஒன்றுமே இல்லை'. என்றார் பாலா.'*

*எந்த இடம் அது. நான் பார்க்கவில்லை. ஒருமுறை போவோமா?' என்றார்.' மேஸன் அல்பேர்ட் என்ற பகுதியில். அதற்கென்ன ஒருமுறை போனால் போச்சு.' என்றார் பாலா.*

*நாட்கள் விரைந்தோடியது தெரியாமல் இரண்டு வருடங்கள் முடிவடைந்து 'வந்துவிட்டோம் அம்மா. நாளை கூட்டிப்போக வருகிறோம்'என்று விவேகா ஃபோன் பண்ணினாள்.*

எல்லோரிடமும் சொன்னபோது 'இன்னும் இரண்டு நாட்கள் தங்கிவிட்டுப் போங்கள்' என்று வேண்டுகோள் விடுத்தார்கள். அவர்கள் விருப்பப்படி நின்றுவிட்டு விடை பெற்றாள். கொஞ்சகாலம் என்றாலும் எல்லோருடனும் அவள் பழகிய முறையில் எல்லோருமே அவளைப் பிரிய மனமின்றி தவித்தார்கள். ராஜேந்திரனும் ஒரு சிறு பரிசுப் பொருளுடன் 'இந்த இரண்டு வருடமும் என் வாழ்வில் மறக்கமுடியாத நினைவுப் பொக்கிஷத்தைத் தந்ததற்கு நன்றிகள்" என்று கூறி கண்கள் கலங்க விடை கொடுத்தார். அந்த இல்லத் திலிருந்து அருமையான வாசமான நினைவுகளைச் சுமந்து கொண்டு மகளுடன் காரில் ஏறினாள் அகல்யா.

❑

# தவறுகள் மன்னிக்கப்படலாமா

**படுக்கையிலிருந்து** *எழும்ப மனமின்றி திரும்பித் திரும்பி படுத்தான் கௌதம். இன்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் அவசரமாக எழும்பத் தேவையில்லை. குளிர்காலத்தில் தன்னை மறைத்துக்கொண்டு பதுங்கியிருந்த சூரியன் கோடை வந்துவிட்டதென துள்ளிக்கொண்டு வெளிக் கிளம்பினான். அவனது அதீத மகிழ்ச்சி மக்களுக்கு நெருப்பாய் சுட்டது. கோடைகாலச் சூரியன் தன் அத்தனை கரங்களையும் வையகம் நோக்கிப் பரப்பி சுள்ளென அதிக சூட்டுடன் அவசர கதியுடன் ஐந்து மணிக்கே வெளிக்கிளம்பியிருந்தான். காலைச் சூரியனின் வெப்பமோ அவனது மனதைப்போல் கொதித்துக் கொண்டிருந்தது. யாரிடம் தன் கோபத்தைக் காட்டுவது என்பது அவனுக்குத் தெரியவில்லை. தவறு முழுவதும் தான் செய்துவிட்டுக் கோபத்தை யார் தலையிலும் கொட்டி தான் நிம்மதியாக இருக்கத் துடித்தான். தன்னுடைய வாழ்வின் முக்கியமான ஒரு கட்டத்தில் தான் நிற்பது அவனுக்கு விளங்கியது. நேற்று இரவு அப்பா, அம்மாவுடன் நீண்டநேரம் வாக்குவாதப்பட்டு படுத்ததால் நிம்மதியான நித்திரை கொள்ள முடியாமல் போய்விட்டது. "என்னை நிம்மதியாய் இருக்கவிடுங்கோ" என்று கத்த அப்பா "எங்களை நிம்மதியில்லாமல் பண்ணீற்று நீ நிம்மதியாய் இருக்கவிடச் சொல்கிறாயா? நாங்க நிம்மதி இழந்து எத்தனை நாளாயிட்டுது? அதைப்பற்றி யோசித்தாயா? அம்மா ஒழுங்காய் சாப் பிட்டு நித்திரை கொண்டு எத்தனை நாளாயிட்டுது? பார்த்தியா அவவுடைய கோலத்தை! ஒரேயொரு பிள்ளையென்று நினைத்ததெல்லாம் செய்ய விட்டது எவ்வளவு தப்பாய் போய்விட்டது. இனி என்ன செய்யப்போகிறாய் என்று சொன்னாலும் எங்களுக்கு கொஞ்சம் ஆறுதலாயிருக்கும்." வார்த்தைகள் கடுமையாக*

இல்லாவிடினும் மனத்தாக்கத்துடன் பேசியது கௌதமனைச் சுட்டது. ஆனாலும் அதற்கான பொறுப்பை எடுக்கவோ அதற்கொரு மாற்று யோசனை சொல்லவோ விருப்பமின்றி தன் கோபத்தை அவர்கள்மேல் திருப்பினான். வாக்குவாதம் முற்றுவதைக் கண்ட தாய் "போதும். வாங்க படுக்கலாம். நாளைக்கு கதைக்கலாம்" என்று பலதடவை கூறியும் இருவரும் நிறுத்துவதாகத் தெரியவில்லை.

"அப்பா பேசியது நியாயந்தான். ஆனால் இதற்கு என்ன செய்யலாமென்ற தீர்வு என்னிடமில்லையே" கூறிய கௌதமுக்கு ஆறுதலாக புரிய வைக்கும் நோக்குடன் பேசத் தொடங்கினாள் சுபா. செய்த தவறை ஏற்று ஏதாவது செய்யவேண்டும் என்று நினைக்கத் தோன்றவில்லை. "குடித்திருந்ததால் ஏதோ தப்பு நடந்துவிட்டது. அதற்காக அதையே நினைத்து அந்தப் பெண்ணைத் திருமணம் செய்ய முடியுமா? அவளைப்பற்றியே எனக்கு ஒன்றும் தெரியாது. எப்படிக் கல்யாணம் செய்ய முடியும். நெவர். என்னால் முடியாது" என்பதில் கௌதம் உறுதியாக இருந்தான். அந்தச் சம்பவத்தை மீண்டும் நினைக்கவோ அதற்காகப் பொறுப்பெடுக்கவோ அவன் தயாராயில்லை. "செய்த தவறுக்கு நீதான் காரணம் என்று பொறுப்பேற்றுக் கொள்ளாமல் யார் மேலும் தவறு சொன்னால் நீ திருந்தவோ திரும்பவும் இப்படி ஒரு தப்பு செய்யாமல் இருக்கவோ முடியாது. எப்ப தவறுக்கு நீதான் காரணமென்று பொறுப்பை உன் தலையில் போடுகிறாயோ அப்போதுதான் நீ திருந்த முடியும். யாரையும் குற்றம் சொல்லித் தப்பிக்க பார்க்கிறது நல்லதில்லை. இப்படியிருந்தால் நீ திருந்த வாய்ப்பேயில்லை "அம்மா சுபா மன வேதனையுடன் கூறியதை ஏற்கும் நிலையில் அவனில்லை. இப்ப அவனது ஒரே நினைவெல்லாம் அவனது காதலி காவ்யா இதை எப்படி எடுப்பாள் என்பது தான். படிப்பை முடித்துவிட்டு ஆறுமாதம் ஆங்கிலக் கல்வியில் தேர்ச்சி பெற அயர்லாந்து சென்றிருக்கும் காவ்யா வந்த வுடன் இடையில் நடந்த இந்த நிகழ்வுகளை அவளுக்குச் சொல்லலாமா அல்லது தேவையில்லை என்று மறைத்து

*விடலாமா என்பதுதான். "ஒரு சிறிய நேரத்துக்குள் நடந்து முடிந்த ஒரு நிகழ்வு அதற்கேன் இவ்வளவு முக்கியத்துவம் கொடுப்பான். அதைப்பெரிதுபடுத்தி அப்பா ஏன் இவ்வளவு கோபப்படுவான்? அம்மா சாப்பிடாமல் நித்திரையில்லாமல். சை. இதென்ன? இந்த நாட்டுக்காரருக்கு எல்லாம் இது ஒரு பெரிய விஷயமேயில்லை. இப்ப கொஞ்சம் சிக்கலானது அந்த போர்த்துக்கீஸ்க்காரி வீட்டை வந்து கதைத்ததுதான். அவள் குழந்தை தங்காமல் தான் மருந்தை எடுக்காமல் விட்டிட்டு இப்ப என்ரை கழுத்தை அறுக்கிறாள். அவளை எப்படி டீல் பண்றதென்று யோசிப்பம்" என்று நினைத்தான்.*

*அம்மா சொன்னா "பெண் பாவம் பொல்லாதது" அம்மா எந்தக் காலத்தில் வாழ்கிறீங்க. இது என்ன இலங்கையா?இது சுவிஸ்.இங்கு இது சாதாரணம். இதை நீங்கதான் பெரிதாய் எடுக்கிறீங்க. "சொல்லி முடிக்குமுன்னே அம்மாவுக்கு கோபம் வந்துவிட்டது."நீ செய்த தப்பை யோசித்து அதற்கு பரிகாரம் செய்கிறதை விட்டிட்டு. வேறு நாட்டுப் பெண்ணென் றால் அவ்வளவு இளக்காரமா?ஆம்பிளை என்ற திமிரா? தப்பு செய்ய முதல் புத்தி வேலை செய்யாதா? இன்னொரு பெண்ணை நீ காதலிக்கிறதாயிருந்தால் எப்படி இப்படி ஒரு தப்பை செய்யலாம்?எனக்கு விளங்கவில்லை. அப்போது நீ காவ்யாவை உண்மையாக நேசிக்கவில்லையா? நீ இப்ப அந்தப் பெண்ணுக்குமல்லவா சேர்த்துத் துரோகம் செய்திருக்கிறாய். "அப்பா கத்தியபோது விளங்காதது அம்மா எடுத்தச் சொன்னபோது எங்கேயோ இடித்தது. "என்னுடைய வளர்ப்பில்தான் பிழைபோல் இருக்கிறது. நீ செய்த இந்த வேலைக்கு நானும்தான் பொறுப்பேற்க வேண்டும். ஒழுக்கத்தைச் சொல்லிக் கொடுக்காமல் விட்டிட்டேனோ" என்று தலையில் அடித்து அழுதபோது தன்னுடைய தவறு அம்மாவை எவ்வளவு நோகடித்து விட்டதென்று விளங்கியது. "இதோ அடுத்த கிழமை காவ்யா வந்து விடுவாள். அவள் இதை சாதாரணமாய் எடுப்பாள் என்று நினைக் கிறாயா?" "அம்மாவின் கேள்வி மனக்கண்ணில் பூதாகாரமாக எழும்ப அவள் வந்தபிறகு பார்ப்பம்" என்று பிரச்சனையை*

தள்ளிப்போடவே எண்ணினான். பிரச்சனையைச் சந்திக்க சக்தியின்றி பிரச்சனையின் பின்னால் ஒளிந்து கொள்ளத்தான் நினைத்தான்.

அம்மா மேலும் தொடர்ந்தாள். "நீ செய்த இந்தப் பெரிய தப்பை காவ்யா பெரிதாக எடுக்காமல் தட்டிப் போட்டுவிட்டு உன்னைத் திருமணம் செய்வாளென்று நம்புகிறாயா?" அம்மா அவள் இங்கு பிறந்த பிள்ளை. இங்கு இது சாதாரணம். அவள் இதைப் பெரிதாக எடுக்க வாய்ப்பில்லை. நீங்க இதை எடுத்துக்காட்டி எங்களைப் பிரித்துவிடுவீங்க போலிருக்கிறது.

"ஏன் கௌதம் இப்படியெல்லாம் பேசுகிறாய்?. எங்களுக்கு ஒற்றைப்பிள்ளை நீ. கண்ணுக்குக் கண்ணாய் வளர்த்து நீ கஷ்டப்பட வேண்டுமென்று நினைப்போமா? நீ நல்லாயிருக்க வேண்டும் என்பதுதானே எங்கள் நினைவெல்லாம். உனக் கொரு தங்கை இல்லாததால் பெண்களைப் பற்றியோ அவர்களின் உணர்வுகள் பற்றியோ உனக்குத் தெரியாமல் போய்விட்டதென்று நினைக்கிறேன். கொஞ்சம் உன்னால் பாதிக்கப்பட்ட அந்த மிஷ்ஷாலைப் பற்றி யோசித்துப்பார்" கூறி முடிக்குமுன்னே "இங்கு இவர்களுக்கெல்லாம் இது பெரிய விஷயமே இல்லை. அவள் முன்னெச்சரிக்கையாக இல்லாமல் இருந்ததற்கு நான் எப்படி பொறுப்பாக முடியும்? அவள் முன்னேற்பாடாய் பாதுகாப்பு எடுத்திருந்தால் குழந்தை தங்கியிருக்காதே. இப்பவென்றாலும் அதை அழிக்கச் சொல்லாமல் என்னிடம் வந்து கத்துறீங்க. "துடித்துப்போய் விட்டாள் சுபா.. "ஒரு உயிரை அழிக்கிறதென்பது உனக்கொரு சின்ன விஷயமா? அது உன்னுடைய உயிரின் ஒரு அங்கம். உன் இரத்தமடா. நீங்க இரண்டுபேரும் குடிபோதையில் தப்பு செய்ததற்கு அந்தக் குழந்தை என்னடா பாவம் செய்தது? "அம்மா அவள் ஏதோ பிளான் போட்டுத்தான் காய் நகர்த்து கிறாள். அல்லது அந்தக் கருவை வளரவே விட மாட்டினம் இங்கத்தை பொம்பிளையள். என்னைவிட வயதில் பெரியவள். அதைவிட எனக்கு அவளைப்பற்றி எதுவுமே தெரியாது. என்ன படித்திருக்கிறாள்? எப்படிப்பட்டவள்? அவள்

குடும்பம் எப்படி? எதுவுமே தெரியாமல் அன்றைக்கு ஒருசில மணிநேரம் சேர்ந்து இருந்ததற்காக கல்யாணம் எல்லாம் செய்யமுடியுமா? நீங்களே உங்கடை பிள்ளையின் வாழ்க்கையை பாழடிச்சிடுவிங்க போலிருக்கே. மனதுக்குப் பிடித்த காவ்யாவைக் கல்யாணம் செய்து வாழுறதுதானே முறை. இது ஒரு அக்ஸிடென்ற். இதைப் பெரிதாக எடுக்கத் தேவையில்லை. இது உங்கடை பழைய காலமில்லை. இருபத்தோராம் நூற்றாண்டு. இதுக்கு என்ன செய்ய வேணுமோ நான் பார்த்துக் கொள்கிறேன். நீங்க தெரியாத மாதிரி இருங்கோ. அவள் இதைச் சாட்டி என்னிடம் காசு பறிக்க திட்டம் போடுகிறாள். அவள் இனிமேலும் இங்கு வந்தால் கௌதம்மோடு கதைக்கச் சொல்லுங்கோ. அந்தப் பார்ட்டியில் என்னுடைய ஃப்ரண்ட் அறிமுகப்படுத்தும்போது பெயர் மட்டுந்தான் தெரியும். எனக்கு அவளிடம் எந்த ஒரு ஈர்ப்புமில்லை. அதிகமாய் குடித்திருந்ததால் ஏதோ நடந்திட்டுது. எங்களை மறந்து ஏதோ நடந்துவிட்டது. அதற்கு நான் மட்டும் பொறுப்பில்லை "தன்னில் ஒரு பிழையுமில்லை என்பதை நிரூபிக்கவே வாதாடிக் கொண்டிருந்தான்.

இந்த நூற்றாண்டுக் கொள்கைகளை ஏற்கவும் முடியாமல் முந்தைய நூற்றாண்டு பழக்கங்களையும் பண்பாடு களையும் தூக்கி எறியவும் முடியாமல் சுபா தத்தளித்துக் கொண்டிருந்தாள். அதற்காக அந்தப் போர்த்துக்கீசியப் பெண்ணைத் தன் மகனுக்கு திருமணம் செய்து வைக்கவும் அவளுக்கு மனம் ஒப்பவில்லை. அவளுடன் பேசிய ஒரு சில மணித்தியாலயங்களுக்குள் அவளை எடை போட்டுவிட்டாள். ஆனாலும் ஒரு பெண்ணின் துன்பத்துக்கு தன் மகன் காரணமாயிருந்துவிடக் கூடாதே என்பதும் அவளுடைய மனதைக் கசக்கிப் பிழிந்தது. காவ்யா இதைப் பெரிதாக எடுக்காமல் மகனைத் திருமணம் செய்தால் நல்லாயிருக்குமே என்று அந்தத் தாய் மனது தவித்தது. அப்படி நினைப்பது எவ்வளவு பெரிய தப்பு என்று தெரிந்தும் தாய்மனம்

அங்கலாய்த்தது. அவளது மனம் குட்டி போட்ட பூனையாய் அந்த விடயத்தை விட்டு நகர மறுத்தது.

காவ்யா வந்துவிட்டதாக வாட்ஸ்அப்பில் மெசேஜ் போட்டிருந்தாள். பார்த்தவுடனே போனில் கதைத்தான் கௌதம். காவ்யாவின் குரலில் இருக்கும் உற்சாகமும் சந்தோஷமும் கௌதமின் குரலில் இல்லை. “என்ன கௌதம் டல்லாயிருக்கிறீர்” என்ற காவ்யாவின் கேள்விக்கு சமாளிக்கும் நோக்கில் ஏதோ பேச்சுப்பேசி சமாளித்தான். இன்னும் அவனுக்கு அந்த சம்பவத்தில் ஒரு தெளிவு ஏற்படவில்லை. இந்தக்கதைகள் காவ்யாவுக்கு சொல்ல வேணுமா பேசாமல் மறைத்திடுவோமா என்பதை மட்டுமே சிந்தித்துக் குழம்பி இருந்தான். “நான் சொல்லாவிடில் காவ்யாவுக்குத் தெரிவதற்கு சந்தர்ப்பம் இல்லை. நானே சொல்லி ஏன் வீண் குழப்பங்களை உண்டாக்குவான். பேசாமல் இருந்துவிடுவோம். தனக்கு சாதகமான முறையில் சிந்தித்து செயற்கையாக பேசிச் சிரித்தான்.அடுத்தடுத்த நாட்களில் சந்தித்தபோதும் மிகவும் கவனமாக அந்த விடயம் தன் வாயால் வந்துவிடாமல் மிக மிக அவதானத்துடன் இருந்தான். காவ்யாவுக்கு ஏதோ நெருடலாக இருந்த போதும் இந்த வெயில் அவனை சோம்பலாக காட்டுவதாக நினைத்தாள்.

கௌதம் எவ்வளவுதான் மூடி வைத்தாலும் அந்தச் செய்தி வெளிவந்து விடுமோ என்று எந்தநேரமும் தவித்தபடியே தானிருந்தான். அம்மாவுக்கு காவ்யா அதைப் பெரிதாக எடுக்க மாட்டாளென்று சொல்லியிருந்தாலும் எப்படி எடுப்பாளோ என்று அவனால் ஊசிமுனையில் நிற்பதுபோல தவிப்பாகவே யிருந்தது. ஒருமாதம் கடந்துவிட்டாலும் விஷயம் மறைந்து விட்டதென்று மறந்து இருக்க முடியவில்லை. ஒருநாள் திடீரென்று போன்பண்ணி வழக்கமாகச் சந்திக்கும் பெல்வி ஆற்றங்கரைக்கு வரச் சொன்னாள். மனக்கலக்கத்துடன் தான் போனான் கௌதம். அவளிடம் ஏதும் மாற்றம் தெரிகிறதா என்று உற்றுக் கவனித்தான். காவ்யாவின் முகத்திலிருந்து எதையும் கண்டுபிடிக்க முடியவில்லை. வழக்கம்போல

*பேசினாள். வழக்கமாக அங்கு நீந்திக் கொண்டிருக்கும் அன்னங்களுக்கு இருவருமாக உணவு அளிப்பார்கள். ஞாபகமாக இருவருமே வாங்கி வந்திருந்தார்கள். அங்குள்ள இருக்கையில் அமர்ந்தபடியே உணவை அன்னங்களுக்குப் போட்டார்கள். போடத் தொடங்கிய உடனேயே தொலைவிலிருந்த அன்னங்கள் கூட்டமாக விரைந்து வந்தன. அவை ஓடி வரும் அழகே அழகு. அந்த அழகை எப்போதுமே இருவரும் இரசிப்பார்கள். இன்று ஒருவித இயந்திரத்தனத்துடன் இருப்பதுபோல் இருவருக் குமே தோன்றியது. ஆனாலும் ஒரு திரைமறைவுக்குள் ஒளிந்து விளையாடுவது போல் ஒரு கண்ணாமூச்சி ஆட்டம் ஆடினார்கள். கௌதமைப் பார்ப்பதைத் தவிர்த்து அன்னங் களைப் பார்த்தபடியே காவ்யா பேச ஆரம்பித்தாள். "எனக்கு மிச்சம் ஏமாற்றமாயிருக்கிறது கௌதம். நீர் என்னிடம் எல்லா வற்றையும் ஷேர் பண்ணுவீரென்று நினைத்திருந்தேன். ஏமாற்றி விட்டீர். நீர் மறைத்த விஷயம் எனக்குத் தெரிந்துவிட்டது. என்னுடைய ஃப்ரண்டுக்கு மிஷ்ஷல் எல்லாம் சொல்லிவிட்டா. என்னால் இதை நம்பக் கூட ஏலாமலிருக்கிறது. கௌதமா இப்படி... குரல் உடைந்துபோக பேச்சை நிறுத்தினாள். என்னால் என்ன பேசுவது என்று தெரியவில்லை. இப்ப இரண்டு கிழமைக்கு முதல்தான் தெரிந்தது. அந்த சம்பவம் ஒரு கேவலமானது தான். ஆனால் அதை மறைத்தீர் பாரும் அதுதான் அதைவிட மிகமிகக் கேவலமாக இருக்கு. பேச்சைத் தொடர முடியாமல் நிறுத்தினாள். "பிளீஸ் காவ்யா மறைக்கிற எண்ணம் எனக்கில்லை. எப்படிச் சொல்றதென்று தெரியாமல் தவித்துக் கொண்டிருந்தன்" கூறியவாறு காவ்யாவின் கையைப் பற்றினான். வெடுக்கென்று கையை விடுவித்துக்கொண்ட காவ்யா "இப்ப என்ன சொல்லப் போகிறீர்?" கூறவும் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்ட குற்றவாளிபோல் கூனிக் குறுகிக் கூசிப்போய் நின்றான். குரலில் தெம்பை வரவழைத்துக் கொண்டு ஒரு குழந்தை பாடமாக்கியதை ஒப்பிப்பதுபோல் ஒப்பித்தான். அப்போதும் தன்னை இப்படி சிக்கலில் மாட்டி விட்டார்களென்று நண்பர்களையும் அந்தப் பெண்ணையும் குற்றவாளியாக்கினான். குடித்ததுதான் எல்லாப் பிரச்சனைக்கும்*

காரணம் என்று குற்றம் சுமத்தினான். “எனக்கு மறைக்கும் எண்ணமேயில்லை. எப்படிச் சொல்வது என்று புரியாமல் திணறிக் கொண்டிருந்தன்” என்றான்.

எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த காவ்யா நடுவில் எந்தக் கேள்வியுமே கேட்கவில்லை. முடிவில் “முடிந்ததா இன்னும் ஏதுமிருக்கிறதா? என்றாள். “என்ன காவ்யா என்னை விளங்கிக் கொண்டீரா?. குடித்திருந்ததால் ஏதோ தப்பு நடந்திட்டுது. பெரிய தப்புத் தான். இல்லையென்றில்லை. என்னை மன்னிக்க மாட்டீரா? சொல்லும் “உடைந்துபோய்க் கெஞ்சினான். “என்ன சொல்லவேண்டுமென்று எதிர்பார்க் கிறீர்? ஆரம்பித்து வைத்த நீர்தானே என்ன செய்யவேண்டு மென்பதையும் யோசிக்க வேண்டும். எனக்கு இதில் யோசிக்க எதுவுமேயில்லை. நீர் நன்றாக என்னை ஏமாற்றிவிட்டது மட்டும் புரிகிறது. இதற்குமேல் பேச என்ன இருக்கிறது? சப்ஜெக்ற் குளோஸ்ட். “கூறி முடிக்குமுன்னே “காவ்யா பிளீஸ் எனக்கு என்ன தண்டனை வேண்டும் என்றாலும் தாரும். ஆனால் என்னை விட்டுமட்டும் போயிடாதேம். நான் செத்திடுவன் காவ்யா. நான் தெரிந்து எந்தத் தப்பும் செய்யவில்லை காவ்யா. அந்த நிகழ்வு ஒரு அக்ஸிடென்ற். அவள் பிளான் பண்ணி என்னைக் கவிழ்த்திட்டாள். நான் அவளைக் கல்யாணம் செய்யப் போறதில்லை. எனக்கு அவளில் ஒரு காதலுமில்லை. நீர் ஒருக்கா அவளைப் போய்ப்பார்த்து அபோட் பண்ணிடச் சொல்லும். நான் கெம்பன்ஷேஷன் எவ்வளவென்றாலும் குடுத்திடுறன். சப்ஜெக்ற் குளோஸ். நாங்க மறி பண்ற நேரம் மறி பண்ணுவம். பிளீஸ் காவ்யா. என்னை விட்டுப் போறன் என்று மட்டும் சொல்லாதேம்.“ அவளது கையைப் பிடிக்கப் போனவனின் கையை உதறிவிட்டு “இது ஒரு அக்ஸிடென்ரா? நல்லாயிருக்கு உம்மடை கதை. நான் உம்முடைய மனதில் இருந் திருந்தால் இப்படி ஒன்று நடந்திருக்குமா? உமக்கு இது சாதாரண நிகழ்வா? என்னுடைய வாழ்க்கையை நீர் எப்படி முடிவெடுப்பீர்?சரமாரியாகக் கேள்வி கேட்டவள் “எல்லாம் ஓவர். ஃபினிஷ்ற். நல்லவன் என்று நினைத்து விரும்பியது

பிழையாய் போயிட்டுது. அதற்காக அந்தப் பிழையை ஒட்டுப் போட்டு வாழ நான் தயாராயில்லை. நீர் அவளைக் கல்யாணம் செய்கிறதோ செய்யாமல் விடுகிறதோ அது உம்மடை பிரச்சனை. எனக்கும் அதற்கும் ஒரு சம்மந்தமுமில்லை. இதே இது என்னுடைய வாழ்க்கையில் நடந்திருந்தால் அக்ஸிடென்ற் என்று சொல்லி என்னைக் கல்யாணம் செய்திருப்பீரா? சந்தேகந்தான். பொம்பிளையளுக்கு ஒரு நியாயம் ஆம்பிளையளுக்கு ஒரு நியாயமா? "பேசிக்கொண்டிருக்கும்போதே வானம் இருட்டிக் கொண்டு வந்தது.

மழைத்துளிகளைச் சுமந்துகொண்டு நிற்கும் முகில்களெல்லாம் எந்தத் துளிகளை எந்த மண்ணுக்கு அளிப்பதென்பதில் முரண் பட்டு ஒன்றோடு ஒன்று இடிக்குரலில் மோதி ஒருவரையொருவர் கீழே தள்ளிவிட துளிகளெல்லாம் மழையாக கீழே இறங்கி வந்தன. திடீரென சடசடவென மழைபெய்ததால் நனையா மலிருக்க ஒதுக்கிடம் தேடி எல்லோரும் ஓடினர். "வாரும். அங்கு கொஞ்சநேரம் நிற்பம். கோடை மழை இப்போது விட்டுவிடும் "கூறிய கௌதம் காவ்யாவின் கரம் பற்ற தடுத்த காவ்யா "மழையைச் சொல்கிறீரா? அல்லது எங்களைப் பற்றிச் சொல்கிறீரா? உடைந்த கண்ணாடி உடைந்ததுதான்.. நான் போகிறேன்" என்று விரைந்து நடந்தாள்.

ஒதுங்கிய இடத்தில் அவளைத் தொடர்ந்த கௌதம் பேச்சை ஆரம்பித்தான். "உம்முடைய முடிவை றிகென்சிடர் பண்ணும் காவ்யா. பிளீஸ் நீரில்லாமல் என்னால் வாழ முடியாது" கூறவும் பேச்சைத் தொடர வேண்டிய நிலை வந்தது. "நான் இந்த நாட்டில் பிறந்து வளர்ந்தாலும் தமிழ்ப்பெண்ணாய்த் தான் வாழுறன். குடிபோதையில் ஒரு பெண்ணுடன் உறவாடிவிட்டுத் தூக்கி எறிந்தவிட்டு வருகிற ஆணைத் திருமணம் செய்கிற அளவுக்கு நான் முன்னேற்றவாதியில்லை. அரும்பிலேயே ஒரு சின்னக்கருவை அழிக்கச் சொல்கிறவரை என்னுடைய கணவனாய் ஏற்க நான் தயாராயில்லை. செய்த தப்பு தப்புதான். அதை பெரிய விஷயமாய் எடுக்காமல் தனக்கு

*ஒரு வாழ்க்கையைத் தேர்ந்தெடுக்கிற சுயநலவாதி எனக்கு கணவனாய் வரத் தகுதியில்லாதவன். காலுக்குச் சரியில்லாத செருப்பை இப்போதே கழற்றி விட்டிட்டு போறதுதான் சரியான முடிவாயிருக்கும். இந்த ஐந்து நாளாக நன்றாக யோசித்து விட்டுத்தான் இன்று கதைக்க வந்தனான். எனக்கு இதற்குமேல் யோசிக்கத் தெரியவில்லை கூறி நிறுத்தினாள். "பிளீஸ் காவ்யா எங்கடை காதலை பிரேக் பண்ணிடாதேம். என்னால் தாங்க முடியுதில்லை. பிளீஸ் என்னை மன்னிக்கமாட்டீரா?" மன்னிப்பா?. என்னுடைய அம்மம்மா சொல்றது ஞாபகத்துக்கு வருகிறது. மன்னிப்பு என்ற வார்த்தை தமிழில் இடம் பெற்றிருக்க முடியாது. கால ஓட்டத்தில் இந்தச் சொல் வேறு மொழியிலிருந்து வந்து ஒட்டிக்கொண்டிருக்க வேண்டும். ஏனென்றால் தமிழரின் வரலாற்றில் எங்கள் இந்து சமயத்தில் எது செய்தாலும் அதற்குத் தண்டனை உண்டு. இந்தப் பிறவியிலோ அல்லது அடுத்த பிறவியிலோ அதற்கான தண்டனையை அனுபவிக்க வேண்டுமென்பதுதான் தாத்பர்யம். ஆரியர் வருகைக்குப் பின்னர்தான் பரிகாரம் என்று ஒன்று வந்து சேர்ந்தது என்று. ஆனபடியால் என்னிடம் மன்னிப்பு கேட்பதை விட்டுவிட்டு அதற்கான தண்டனையை அனுபவியும். உம்மைத் தண்டிக் கவோ மன்னிக்கவோ எனக்கு எந்த அதிகாரமுமில்லை. நாங்க இனி எந்தச் சந்தர்ப்பத்திலும் சந்திக்கின்ற நிலைமை வர வேண்டாம். நான் போகிறேன். திரும்பிப் பார்க்காமலேயே செல்லும் காவ்யாவை பார்த்து விக்கித்து நின்றான் கௌதம்.*

❑

# வீழ்வேனென்று நினைத்தாயோ?

**வினோத்** *மதிய இடைவேளையில் மீகிறோ றெஸ் ரோறன்ருக்கு உணவு உண்ணப்போவது வழக்கம். முன்பு இரு நண்பர்களுடன் போய் வருபவன் இப்போது ஒரு வாரமாக நண்பர்களைத் தவிர்த்து தனியே போகவே விரும்பினான். அங்கு உண்ண வரும் ஒரு பெண்பிள்ளை மேல் இவனுக்கு ஒரு ஈடுபாடு தோன்றியதே காரணமாகும். பிஞ்சு வெண்டைக்காய் போல மெல்லிய அழகான கரங்களும் சுவிஸ் மக்களுக்கே சொந்தமான அழகிய நீண்ட மூக்கும், நீலக்கண்களும். வாழைத்தண்டுக் கால்களும் தூக்கிப் போட்ட அளவான தலைமுடியும் அவனைப் பைத்திய மாக்கியது. மூன்று பொம்பிளைப் பிள்ளைகளாக அவர்கள் அங்கு வருவார்கள்.ஒரு பிள்ளை கிழக்கு ஐரோப்பாவைச் சேர்ந்தவளாக இருக்கலாம். மற்றவள் ஶ்ரீலங்கன். வினோத்தின் நாட்டைச் சேர்ந்தவள். அவளும் அடிக்கடி வினோத்தைப் பாத்தபடி இருந்தாள். ஆனால் வினோத்தின் ஒட்டுமொத்தப் பார்வையும் அந்த சுவிஸ் அழகி மேலேயே இருந்தது.எப்படியாவது அவளைத் தன் காதலியாக்கி விட வேண்டும் என்பதில் ஆர்வமாக இருந்தான். அந்த ஶ்ரீலங்கன் பிள்ளையிடம் உதவி கேட்கலாமா என்று நினைத்தான். நண்பர்களை அவன் தவிர்த்ததன் நோக்கமே அவர்கள் யாராவது அவளைக் கெரக்ட் பண்ணிவிட்டால் என்ன செய்வது என்பதுதான். தான் ஶ்ரீலங்கா பிள்ளையிடம் கதைக்க அவள் தன்னை விரும்புவதாக நினைத்து விட்டால். வேண்டாம் என்று அந்த நினைவைக் கைவிட்டான்.*

*அடுத்த இருநாட்கள் அவள் தனியாக வரவே அவள் அமர்ந்த மேசையில் தற்செயலாகத் தான் அமர்வது போல் சென்று அமர்ந்து பேச்சை ஆரம்பித்து*

அவளைப் பற்றிய சில விஷயங்களை அறிந்து கொண்டான். இருவரும் தங்களைப்பற்றிய அடிப்படை விஷயங்களை பரிமாறிக் கொண்டனர். அவள் கிளவ்டியா. தகப்பன் இத்தாலி. தாய் சுவிஸ். தனித்து வாழ்கிறாள். அவளுக்கு போய் ஃப்ரன்ட் இருக்கிறதா என்பதை எப்படி அறிகிறதென்று அவனுக்கு விளங்கவில்லை. சரி போகப்போக அறியலாம் என்று நினைத்தான். பின் தினமும் அவளை அங்கே சந்திக்கத் தொடங்கினான். அவளது மற்ற தோழிகளுடன் இவனும் அமர்ந்து சகஜமாகப் பேசிப் பழகத் தொடங்கினான். நால்வருமாகப் பழகத் தொடங்கியதில் ஒரு சிக்கல் தோன்றியது. மூவருமே வினோத் தங்களைக் காதலிப்பதாக எண்ணத் தொடங்கினர். அது அவனுக்கு காலம் கடந்தே விளங்கியது. இனியும் காலம் கடத்தக் கூடாதென்று கிளவ்டியாவிடம் காதலைத் தெரிவித்து வெற்றியும் கண்டான். அதைத் தெரிவிக்க ஒரு பிரபல றெஸ்ரோறன்ற் கூட்டிப்போய் தன் செலவில் ரீறீற் கொடுத்து கொண்டாடினான். மேகலாவுக்கும், எமிக்கும் இது ஏமாற்றமாக இருந்தாலும் வாழ்த்தினார்கள்.

ஆறு மாதக்காதல் கனிந்து கல்யாணத்தில் முடிந்ததில் இருவருக்குமே மகிழ்ச்சி. கல்யாணத்துக்குப் பின் விரைவுத் தொடருந்து போல் ஆறு வருடங்கள் ஓடிவிட வினோத் தங்கள் காதல் திசை மாறி வெவ்வேறு திசைகளில் போய் விடுமோ என்று யோசித்தான். நான்கு வருடங்கள் வெகு மகிழ்ச்சியாகத் தான் போனது. காதல் வெற்றி பெறவேண்டும் என்பதற்காக தான் சொன்ன திவ்யமான காதல் என்பது இப்போது சாயம் போன ஆடைபோல் பல்லிழித்தது. தன் பெற்றோர் சொன்ன காரணங்கள் அன்று சிறிய புள்ளியாக இருந்தன. இன்று அவையெல்லாம் தான் பூதாகரமாகத் தன் முன் நிற்பது விளங்கியது. தினமும் பாணும் சலட்டும், பஸ்ராவும் சாப்பிட்டு நாக்கு செத்துப்போனது. சிவப்பரிசிச் சோறு, மசாலா சேர்த்த கறி, குழம்பு, பிட்டு, வடை என்று முன்பு சாப்பிட்ட உணவுகளுக்கு நாக்கும், மனமும் ஏங்கியது. கடைசியில் நாக்கு வென்றுவிட்டதோ? சோறு சாப்பிடுவதற்காக இப்போதெல்லாம் கோயில் செல்வது அவனுக்கு அவமானமாக

இருந்தது. இரண்டு குழந்தைகள் வந்த பிறகுதான் நீறுபூத்த நெருப்பாக கனன்று கொண்டிருந்த தீ விளாசி எரியத் தொடங்கியது. தமிழைச் சொல்லிக் கொடுக்க வேண்டும், வீட்டில் தமிழ் பேச வேண்டும் என்பதில் முரண்பட்டு அடிக்கடி வாதம் செய்தனர். மூற்ற ஸ்பிறாகே என்றால் தாய்மொழி அவர்களுக்கு டொய்ச் தானே என்று வாதிட்டாள் கிளவ்டியா. அது சரிதானென்றாலும் தன் மொழி அங்கே புறந்தள்ளப் படுவது அவனுக்கு ஏற்றுக்கொள்ள முடியாமலிருந்தது. தன் பிள்ளைகள் தாயகத்தில் இருக்கும் தன் பெற்றோருடனும், அக்கா, குழந்தைகளுடனும் பேச முடியாமல் இருப்பது அவனுக்கு கஷ்டமாக இருந்தது.சுவிஸ் தவிர்ந்த மற்ற நாடு களிலுள்ள உறவுகளுடன் தன் பிள்ளைகள் பேசமுடியாமல் இருப்பது வேதனையாக இருந்தது. தன் மகள் சுவிஸ் கலாச்சாரத்துள் மூழ்கி தமிழ் பண்பாட்டை அறிந்து கொள்ளாமலே போய் விடுவாளோ என்று பயந்தான். மகனைப் பற்றி அவன் அவ்வளவாகக் கவலைப்படவில்லை. முன்பு பெற்றோர் சொன்ன காரணங்களெல்லாம் இன்று தன் முன்னே வந்து சிரிப்பது போல் தோன்றியது. தன் மகள் ஆண், பெண் வித்தியாசமின்றிப் பழகி திருமணத்துக்கு முதலே சிறிய வயதிலேயே தாயாகி விடுவாளோ என்ற பயம் ஏற்பட்டது. இதுவே அவனை தூக்கத்திலும் துரத்தியடிக்கத் தொடங்கியது. ஒருவிதமான மன உளைச்சலுக்கு ஆளானான். சுவிஸ் ஃப்ராவ்(மனைவி) விருப்பம். சுவிஸ் ரோக்ரர்(மகள்) விருப்பமில்லையா என்று கிளவ்டியா அடிக்கடி கேட்கத் தொடங்கினாள். நினைக்கத் தோன்றும் கடந்த காலத்தின் சில நினைவுகள்தான் தன் வசந்தகாலம் போலவும் இப்போது எந்த சந்தோஷமும் இல்லையென்றும் நினைக்கத் தலைப்பட்டான். தமிழ் மணம் அந்த வீட்டில் மணக்காமலே போய்விடுமோ என்று பயந்தான். இவன் அடிக்கடி சண்டை போடுவது கிளவ்டியாவாலும் தாங்கமுடியாமல் இருந்தது. இருவருமே அடிக்கடி சண்டை போடுவதும் என்சூலிடிகுங் (மன்னிப்பு) என்று பின் கொம்பிறமைஸ் ஆகிறதும் கிளவ்டியாவுக்கு அற்பத்தனமாக இருந்தது. தன் பெற்றோரும் பிரிந்து வாழ்ந்ததால் தான் ஸ்ரீலங்கனை மணந்தால் அவன் பிரிய மாட்டானென்று தான்

தப்புக்கணக்கு போட்டுவிட்டதாக அவளும் புலம்பத் தொடங்கினாள்.

இருவரதும் வாக்குவாதத்தினால் பிள்ளைகள் இருவருமே பாதிக்கப்படுவது இருவருக்கும் புரிந்தது. அந்த அடுக்குமாடிக் கட்டிடத்தில் அந்த பகல்பொழுதில் தன் சுதந்திரம் பறிபோவது தெரியாமல் தன் வெளிச்சத்தைப் பரப்பியபடி உள்ளே நுழைந்தது சூரியன். அன்றைய பொழுது அங்கு குமைந்துகொண்டு புழுங்கிக் கொண்டிருந்த இருவருக்கு விடுதலை கொடுக்கும் நாளென்று அதற்குத் தெரிந்து இருக்க ஞாயமில்லை. பிரிந்து போய்த் தான் தங்கள் பிரச்சனைக்கு முடிவு எடுக்க வேண்டுமென்று வினோத் கனவிலும் நினைக்கவில்லை. ஆனால் அன்றைய நிகழ்வு அப்படிப்பட்ட சூழ்நிலைக்கு கொண்டுசென்றுவிட்டது. அன்றைய வாக்குவாதம் எல்லை மீறிப்போக தன்னிலை மறந்த விவேக் கிளவ்டியா மீது தன் சீற்றத்தைக் காட்டி அடித்துவிட்டான். கிளவ்டியா நிலைகுலைந்து போனாள். அவள் பார்த்த பார்வையில் அவன் ஒரு புழுவானான். அவமானத்தால் சிறுத்துப்போன முகத்துடன் அறைக்குள் சென்றவள் கதவை படாரென அறைந்து சாத்தினாள். வினோத்துக்கும் அவமான மாக இருந்தது. ஆசிய பழக்கவழக்கம் தன்னுள் புகுந்து மிருகமாய் செயல்பட்டதில் அவன் அற்பப்புழுவானான். ஆனாலும் உடனே அவளிடத்தில் மன்னிப்பு கேட்க அதே ஈகோ இடங்கொடுக்கவில்லை.ஆசிய மனோபாவமான ஆண் என்ற அகம்பாவம் இரு பாலினமும் சமம் என்ற சுதந்திர ஐரோப்பிய மனோபாவத்தை தூக்கியெறிந்தது. அவளது நீண்ட மௌனம் அவனால் புரிந்து கொள்ள முடியாமலிருந்தது. மௌனத்தின் அர்த்தத்தை ஆராயாமல் தன் விருப்பப்படி அர்த்தப்படுத்திக்கொண்டு கோபம் தணியப் பேசுவாளென்று இருந்தது தப்பாகப் போய்விட்டது. அவனது ஈகோவின் விளைவு இரண்டுநாளில் தெரிந்தது. தன் உடமைகள் எல்லா வற்றையும் எடுத்துக்கொண்டு பிள்ளைகளையும் கூட்டிக் கொண்டு அவனைப் பிரிந்து சென்று விட்டாள் கிளவ்டியா. மகளில் உயிரையே வைத்திருந்த வினோத்தால் அவளைப் பிரிந்து வாழ்வதை நினைத்துப் பார்க்கவே முடியாமலிருந்தது.

வண்ண வண்ணக் கனவுகளுடன் போடப்பட்ட கோலம் கலைந்து அலங்கோலமானது. ஒரு சிறு கடிதத்துடன் அவர்கள் வாழ்வு முற்றுப் பெற்றது. என் பெற்றோர் பிரிந்ததுபோல் நான் பிரியவே கூடாது என்பதுதான் என் ஒரே ஆசையாக இருந்தது. நானும் எனது தங்கையும் இழந்த ஒற்றுமையான குடும்ப வாழ்வை என் பிள்ளைகளும் இழக்கவேண்டிய சூழ்நிலை வந்துவிட்டது. சந்தோஷம் அற்ற சூழல் நீடிக்க நான் விரும்பவில்லை. என் தன்மானம் சீண்டப்படும்போது நான் போவதைத் தவிர வேறு வழியில்லை. ஒரு ஆசியன் மனைவியை அடக்கத் தான் பார்ப்பான். அது அவர்கள் இரத்தத்தில் ஊறியிருக்கும். உன்னால் அப்படிப்பட்ட ஒருவனுடன் வாழ முடியும் என்று நம்புகிறாயா? என்று பப்பி நாங்கள் கல்யாணம் செய்ய முடிவெடுத்தபோது கேட்டார். வினோத் அப்படி இல்லை. அவன் ஒரு ஜென்டில்மென் என்று சொன்னேன். நான் சொன்னது பிழைத்துப்போனதில் எனக்கு மிகுந்த வருத்தமும் ஏமாற்றறமும்தான். எனது பிழையான சொய்ஸ்க்காக இன்று நான் வருத்தப்படுகிறேன் இனி எந்த கொம்றமைசும் இல்லை. சட்டப்படி பிரிவோம். ஷாவ்(போகிறேன்). சுருக்கமாய் டொய்ச்சில் எழுதியிருந்தாள். விலாசம் இல்லாததால் அவளைச் சந்திப் பதும் முடியாமலிருந்தது. பலதடவை ஃபோன் பண்ணியும் எடுக்கவில்லை. பியூறோக்கு போனபோது பார்க்க மறுத்து விட்டாள். அழகான வானவில் போல் நினைத்து செய்த திருமணம் அர்த்தமற்று பொய்யாய்ப் போனது.

பிள்ளைகளைப் பார்க்க முடியாமல் கிளவ்டியாவுடன் பேச முடியாமல் அவனுக்குப் பைத்தியம் பிடிப்பது போலிருந்தது. தன் வாழ்வில் இனிய இளவேனிற்காலம் முடிந்து இலையுதிர் காலம் தோன்றியது போலிருந்தது.எல்லாவற்றுக்கும் தானே காரணமாய் இருந்தது இன்னும் வேதனையைத் தந்தது. யார்மேல் கோபத்தைக் காட்டுவது என்று தெரியாமல் குடித்தான். ஐரோப்பியர் சந்தோஷத்துக்காக அளவோடு மது அருந்துவர். ஆனால் இந்த ஸ்ரீலங்கன்ஸ் குடித்தால் கண்மண் தெரியாமல் ஏன்தான் இப்படிக் குடிக்கிறாங்களோ? ஒரு ஸ்ரீலங்கன் சொல்லிக்கொண்டு போவது கேட்டது. இப்படிக்

குடிப்பவர்களை தான் பேசிய காலம் போய் தானே அந்த நிலைமைக்கு ஆளானது வெட்கமாக இருந்தது. அடுத்தடுத்த நாட்களில் அவனைத் தேடி வந்த நண்பன் தினேஷ் இதென்னடா என்ன நடந்ததென்று குடிக்கிறாய். நீ றோட்டில் குடித்துவிட்டு தள்ளாடிக்கொண்டு போனதாக ஒருவர் சொன்னதை என்னால் நம்பமுடியாமல்தான் பார்ப்பதற்கு உன் வீட்டுக்குப் போனேன். வீட்டில் இருந்துகொண்டு கதவைத் திறக்கவில்லை. என்னாச்சு? அதுதான் இங்கு பியூறோவுக்கு வந்தனான்; கேள்வி மேல் கேள்வி கேட்டான். நடந்ததைச் சொல்லி அழுதான். உனக்கு சுவிஸ் பிள்ளைகளைத் தெரியாதா என்ன? அடிக்கிறது எவ்வளவு பெரிய ஒஃபென்ஸ். யாரை என்றாலும். அதுவும் நீ. என்னடா. அவள் நல்லவளாய் இருக்கப் போய் பேசாமல் போயிட்டாள். பொலீசைக் கூப்பிட்டிருந்தால் நீ இப்ப உள்ளே இருந்திருப்பாய். தெரியாதா உனக்கு? அப்படியென்ன கோபம்? திருப்பித் திருப்பிக் கதைச்சாள். நான் என்னை அறியாமல் அடிச்சிட்டன்; ஒருத்தர் பேசும்போது றெஸ்போன்ட் பண்ண வேணுமே ஒழிய றியக்ற் பண்ணக் கூடாது என்ற விஷயம் உனக்குத் தெரியாதா? எங்கள் ஊர் பிள்ளை என்றால் போய் சமாதானம் கதைக்கலாம். இங்கத்தைப் பிள்ளைகளோடு கதைக்க முடியுமா? அவை அவசரப்படாயினம். முடிவெடுத்தால் மாற்ற முடியாது. இனி என்னடா செய்கிறது? ஒருமுறை தூக்கியெறிஞ்சிட்டா திரும்பக் கிடைக்காதடா. அவ்வளவு தான். தினேஷ் பேசப்பேச வினோத்துக்கு இன்னும் பயம் ஏற்பட்டது. எனக்காக ஒருமுறை போய்ப் பேசிப் பார்க்கிறாயா? பியூரோவில் போய்ப் பார். அவளுடைய ஃபோன் நம்பர் தாறன். நான் எத்தனையோ தரம் எடுத்து விட்டேன். முன்பு எடுக்காமல் இருந்தவள் பிறகு புளக் பண்ணிவிட்டாள். நீ எனக்காக ஒருமுறை போய்ப் பேசிப்பார்; நண்பனிடம் கெஞ்சினான்.

எந்தப் பேச்சுகளும், கெஞ்சல்களும் பயன்படாமல் கடைசியில் பிரிந்து போனார்கள். சனி, ஞாயிறு அவனிடம் பிள்ளைகள் வருவது வழக்கமானது. மகள் வளர வளர சுவிஸ் பண்பாட்டில் வளராமல் தமிழ் பண்பாட்டை ஊட்ட விரும்பினான். மகள்

*கிளாரா ஜனனியிடம் "பப்பியுடன் வந்து இருக்கிறாயா? பப்பிக்கு உன்னைவிட்டுத் தனிய இருக்க பிடிக்கவேயில்லை" என்று கூறி அழுதான். அடுத்து வந்த விடுமுறைக்கு வினோத்துடன் வந்து தங்கினாள் ஜனனி.தன்னுடன் இருந்தால் கிளாராவாக இல்லாமல் ஜனனியாக வளர்த்துவிடலாம் என்று அவனுக்கு நம்பிக்கை ஏற்பட்டது.அவள் அவனோடு கூட இருந்த அந்த இருவாரங்களும் மிகுந்த மகழ்ச்சியுடன் இருந்தான்.தானே உணவு செய்து நிறையக் கதைகள் பேசி வெளியில் கூட்டிச் சென்று தமிழ்க் கலாச்சாரம் பற்றிப் பேசி கொஞ்சம் தமிழ் சொல்லிக் கொடுத்து மகிழ்ச்சியாக இருந்தான். மம்மியிடம் சொல்லித் தன்னுடன் வந்திருக்குமாறு கெஞ்சி னான். தகப்பன் அழுததும் அவர் தன்மேல் உயிராயிருப் பதும் தெரிந்ததால் அவளுக்கும் கஷ்டமாக இருந்தது. இஃ ஸ்பிறாகே மிற் மம்மி. இஃ அவ் ஸ்வீறிக் பப்பி; (நான் மம்மியிடம் சொல்கிறேன். எனக்கும் இது கஷ்டமாயிருக்கு) என்று அவளும் அழுதாள், இப்போது அவனுக்கு சிந்திக்க நிறைய நேரம் கிடைத்தது. பிரிவு அவனுக்கு மனைவியின் அருமையை உணர்த்தியது. கிளவ்டியா அப்படி ஒன்றும் மோசமான பெண் இல்லை. கணவன், குழந்தைகளை நன்றாகவே கவனித்தவள். அன்பு, கண்டிப்பு என்று பிள்ளை களை நன்றாகவே வளர்த்தாள். வினோத் தானே தன் தலையில் மண்ணை அள்ளிக் கொட்டிக்கொண்டேனே என்று அரற்றுவான்.*

*கிளவ்டியா தானாகவே யோசித்து இருவருக்குமுள்ள நெருக்கத்தை உணர்ந்ததால் ஜனனியை அவனுடன் வாழ அனுமதித்தாள். சில விடுமுறைகளுக்கு ஜனனி தாயிடம் சென்று வந்தாள். இப்போது வினோத்துக்கு மனம் நிம்மதியாக இருந்தது. இப்படிப்பட்ட பெண்ணுடன் வாழத்தெரியாத முட்டாள் என்று நண்பர்கள் அவனைச் சாடினார்கள். எங்கள் தமிழ்ப்பிள்ளைகள் கூட இவ்வளவு புரிந்துணர்வுடன் நடக்க மாட்டினம். பிள்ளையை விடவே மாட்டினம். அவள் உன்னை எவ்வளவு நேசித்திருந்தால் உன் பக்கமாக நின்று யோசித் திருக்கிறாள். அருமையான வைஃப். இப்படி எல்லாவற்றையும்*

கவிழ்த்துக் கொட்டிவிட்டு நிற்கிறாயே என்று குற்றஞ்சாட்டி னார்கள். நிலத்தில் கொட்டிய பால் கொட்டியதுதான் என்பது புரிந்து என்ன பலன் கிடைத்த வாழ்க்கையை வாழத் தெரியாமல்? மகள் தன்னோடு வந்து இருப்பது அவனுக்கு கொஞ்சம் ஆறுதலாக இருந்தது. ஈஸ்டர் விடுமுறைக்கு தகப்பனும் பிள்ளைகளுமாக பரிஸ் போய் திரும்பி வரும்போது ட்ரெயினில் சங்கீதா என்ற பெண்ணைச் சந்தித்தார்கள். அவள் தனது ஆறு வயது மகளுடன் பயணம் மேற்கொண்டிருந் தாள். சாதாரணமான அறிமுகத்துடன் தொடங்கிய உரையாடல் இறங்கும்போது நல்ல நட்பாக மலர்ந்திருந்தது. வினோத் அவள் கணவனைப் பற்றிக் கேட்டதற்கு அவள் எதுவும் கூறாததில் இருந்து தன்னைப்போலத்தான் கணவனைப் பிரிந்தவளென்று நினைத்திருந்தான். இப்போது இதெல்லாம் சாதாரணம் தானே என்ற நினைவு மனதுக்குப் பிடித்ததாக இருந்தது. சங்கீதாவின் மகள் நிஷாவும் ஜனனி, ஸ்ரீவன்சும் கூட நல்ல நண்பர் களானார்கள். வினோத்தும் சங்கீதாவும் ஒருவருக்கு ஒருவர் ஃபோன் நம்பர்களைப் பரிமாறிக் கொண்டனர்.

மனைவியைப் பிரிந்து தனித்து தவித்துக் கொண்டிருந்த வினோத்துக்கு சங்கீதாவின் தோழமை இதமாக இருந்தது. அடிக்கடி போனில் அளவளாவிக் கொள்வர். அழகான புத்திசாலியான நல்ல வேலையில் அமர்ந்துள்ள சங்கீதாவைப் பற்றி மேலும் மேலும் அறிந்து கொள்ள ஆசைப்பட்டான். அவள் புத்திசாலியாகையால் இலகுவில் தன்னைப் பற்றி சொல்வதைத் தவிர்த்து வந்தாள். அதேநேரம் அவனது சொந்த விஷயங்களை அறிந்து கொள்வதில் ஆர்வம் காட்டியது மில்லை. அவள் ஒரு புத்தகப்பிரியை. நிறைய தமிழ் நூல்கள் பற்றி, பாரதியார் பற்றி, இலக்கியங்கள் பற்றிப் பேசினாள். அவனுக்கு கிளவ்டியாவுடன் இதற்கான சந்தர்ப பங்கள் இல்லாததால் அவனுக்கும் இவை பற்றி பேச நல்ல வாய்ப்பாக இருந்தது. நிறைய ஆன்மீகம் பற்றிப் பேசினாள். அவனுக்கு ஆன்மீகத்தில் நாட்டமில்லாவிட்டாலும் அவளுக் காக அதில் விருப்பம் இருப்பதுபோல் பாசாங்கு செய்தான். ஒருநாள் அவள் விலாசத்தை வாங்கியவனுக்கு திடீர்

*விசிட் அடித்திட வேண்டாம். சொல்லிப்போட்டு பிள்ளை களுடன் வாருங்கள்; என்று அழுத்திக் கூறினாள். ஏற்கனவே தான் மனைவியைப் பிரிந்து வாழ்வதை அவன் கூறியிருந்தான். மேலும் எந்த விபரங்களும் அவள் கேட்கவில்லை. ஆனால் பிள்ளைகளுடன் வாருங்கள் என்பதைக் கொஞ்சம் அழுத்தியே கூறினாள்.*

*அடுத்த வாரவிடுமுறையில் அவள் வீட்டுக்குச் சென்றபோது தான் வீட்டு ஹோலில் மாலையுடன் மாட்டியிருந்த படம் அவள் கணவனை இழந்தவள் என்பதைச் சொன்னது. அவனது பார்வை ஃபோட்டோவில் நிலைநின்றபோது நிஷாவின் அப்பா ஐந்து வருடங்களுக்கு முன் ஒரு கார் அக்ஸி டென்ரில் என்று நிறுத்தினாள். கதையை வளர்த்தாமல் கொஞ்சம் தண்ணீர் கிடைக்குமா? என்று திசை திருப்பினான். பின் பல விடயங்களைக் கதைத்து விடைபெற்றான். அதன் பின் அடிக்கடி ஃபோனில் உரையாடுவதும், இந்தப்பக்கம் ஒரு வேலையாக வந்தேன் என்று தனித்து வருவதும் அடிக்கடி நடைபெறலானது. இயல்பாகவே அவளின் சமையலறை புகுந்து வேண்டியதைப் போட்டு உண்ணும் அளவுக்கு அவர்கள் நட்பு இறுகியது. சங்கீதாவின் மனமும் கொஞ்சம் தடுமாறத் தொடங்குவது இருவருக்குமே விளங்கியது. எல்லாவற்றையும் இழந்துவிட்ட இந்த நிலையில் என் எதிர்காலம் நிஷாவைச் சுற்றி மட்டுமே இருக்கிறது; என்று அடிக்கடி அவனிடம் கூறித் தன்னை நிலைநாட்டிக் கொண்டாள். எந்தப் போராட்டமும் இல்லையென்றால் எந்த முன்னேற்றமும் இருக்காது. வாழ்க்கை என்ன சூரியனா முழுமையாகப் பிரகாசிக்க? நிலவைப்போல வளர்பிறை தேய்பிறை எல்லாமிருக்கும். ஒருநாள் காரணமின்றி மறைந்தும் போகும்; என்று தத்துவம் பேசினான். துன்பத்தில் துவளும்போது அருகில் நின்று அதெல்லாம் வென்றிடலாம் என்று நம்பிக்கை கொடுக்க உண்மையான ஒரு தோழமை கிடைத்தால் போதும் எதையும் சாதிக்கலாம்; என்றாள் சங்கீதா.*

*அவளின் தனிமை ஒரு ஆதரவுக்கு ஏங்கும் மனநிலை அவனுக்கு சாதகமான ஒரு உணர்வை ஏற்படுத்தியது. அடிக்கடி*

அவன் பேசும் தேனூறும் சொற்களில் அவள் கொஞ்சம் கொஞ்சமாக தன்னிலையிலிருந்து விலகுவது அவளுக்குத் தெரிந்தது. “ஒருமுறை கிழிக்கப்பட்ட பக்கங்கள் இனி ஒன்று சேர்ந்து புத்தகமாகப் போவது இல்லை. கிழிந்தது கிழிந்ததுதான் என் வாழ்க்கையும் அவ்வளவுதான்” என்றான். உங்களுக்கு பக்கங்கள் மட்டும் கிழிந்திருக்கலாம்.ஆனால் எனக்கு பக்கங்கள் எல்லாம் தொலைந்தே போய் விட்டனவே. இனித் தேடியே எடுக்க முடியாதபடிக்கு; அவளை இப்போதெல்லாம் உரிமை யுடன் சங்கி என்று அழைக்கத் தொடங்கி விட்டான். “சங்கி! எங்கள் வாழ்க்கை எங்கள் கையில்தானிருக்கிறது. நீங்க நினைத்தால் ஏன் வேறொரு வாழ்க்கையை தேடக் கூடாது. இது இருபத்தோராம் நூற்றாண்டு. பிடித்தபடி எப்படியும் வாழலாம்; என்று அவளுக்கு ஆரம்ப அடி எடுத்துக் கொடுத்தான். ஆனால் சங்கீதாவின் நினைவு கணவனைச் சுற்றி ஓடியது. என் கணவனோடு ஒன்றுசேர்ந்த உள்ளம். ஐந்து வருடங்கள் எங்கள் காதல். என்னில் உயிரே வைத்திருந்தார். ஒருநாளும் என்னைக் கண்கலங்க வைத்ததில்லை. அந்த அக்ஸிடென்ற்மட்டும்நடக்காதிருந்தால்? அடிக்கடி சொல்லுவார் திருக்குறள் ஈரடி போல நாங்க வாழ வேண்டுமென்று. தமிழும் குறளும் போல வாழவேணுமென்றுதான் அவர் எந்த மண மக்களையும் வாழ்த்துவது. திருக்குறளும் பெண்களும் ஒரே மாதிரி என்பார். ஏனென்று கேட்டால் இரண்டுமே சில இடங்களில் புரியாதென்பார். அதோடு குறள் இரண்டடியில் விளக்குவதுபோல் பெண்ணும் இரண்டுவரியில் எதையும் விளக்கிவிடுவார்கள் என்பார். விட்டுக்கொடுப்பு, அன்பு, பாசம், புரிதல் எல்லாவற்றையும் நான் அவரிடமிருந்தே கற்றுக் கொண்டேன். எனக்காக எதையும் விட்டுக்கொடுப்பார். அவருடனிருந்தால் எந்தநேரமும் ஏதும் ஜோக் சொல்லி சிரிக்க வைத்துக்கொண்டே இருப்பார். நான் முகத்தை தூக்கி வைத்திருப்பது அவருக்கு பிடிக்கவே பிடிக்காது. பூக்கள்தான் வாடும். எங்கேயாவது முகம் வாடுமா? என்று சொல்லி சிரிக்க வைத்து விட்டுத்தான் மறுவேலை பார்ப்பார். ஏதும் கீழே தவறிக் கொட்டிவிட்டாரென்றால் நான் மூளையிருக்கா உங்களுக்கு என்று பேசுவேன். உடனே எனக்கு மூளை

*இருக்கிறதுதான் என்று காட்டுவதற்காக தலையை உடைத்து மூளையைக் காட்டவா முடியும் என்று அவர் சொன்னவுடனே என் கோபம் எங்கே போனதென்று தெரியாமல் போய்விடும். ஜோக் சொல்லும்போது ஒரு சிரிப்பு கூட இருக்காது. அவரைப்போல ஒருத்தர் பிறந்துதான் வரவேண்டும். ஒருவரிடம் ஏதும் எனக்கு பிடிக்காதது இருந்தால் பட்டென்று சொல்லி விடுவேன். அந்தப் பழக்கத்தை விட்டிடும். ஒருத்தரையும் நோகடிக்கக்கூடாது என்று நெடுகச் சொல்வார். ஆனால் நானும் அந்தப் பழக்கத்தை விட்டபாடில்லை. குடித்துப்போட்டு ஒருத்தன் காரோட்டி வருவானென்று இவருக்கு எப்படித் தெரியும். அவருக்கு அக்ஸிடென்ற் நடந்த அன்று கூட மகளுக்கு உடுப்பும், எனக்கு றிஸ்ற்வோட்ச்சும் அவர் கையில் இருந்தது. காரில் அடிபட்டு விழுந்தபோது கூட அந்தப் பார்சலை கைவிடவே யில்லை. இதோ இதுதான். நான் இதைக் கைவிட்டுக் கழற்றுவதேயில்லை. ஏதோ அவரே என்னுடன் இருப்பதுபோல சொல்லிக்கொண்டே போனாள். அவளைத் திசை திருப்ப சங்கி! எனக்கு புட்டும் மீன் குழம்பும் வைக்கிறியா? சாப்பிட்டுவிட்டுப் போறன்; என்றான் உரிமையுடன். இப்போது எல்லாம் அவளிடம் தானாகவே உரிமையை எடுத்துக்கொண்டு விருப்பமான உணவைச் சொல்லி செய்வித்து சாப்பிட்டுவிட்டுப்போவது வழக்கமாகியது.*

*அவனது நடவடிக்கைகளைப் பார்த்த போது அவன் தன்னைத் திருமணம் செய்ய விரும்புகிறான். தான் அதை எப்படி எடுத்துக் கொள்வது என்று குழம்பினாள். கணவனை மறந்து இன்னொரு திருமணத்தில் இணைய தயக்கமாகவே இருந்தது. தன்னுடைய நண்பியிடம் இதுபற்றி விவாதித்தாள். இப்பதான் உனக்கு முப்பத்து இரண்டு வயது. இன்னும் எவ்வளவு காலத்திற்கு தனிய இருக்கப் போகிறாய். சரியான, உன்னைப் புரிந்து கொண்ட ஒரு துணை வரும்போது கல்யாணம் செய்வதில் ஒரு தப்பு மில்லை. அவரும் சட்டப்படி பிரிந்திருக்கிறார் என்பதால் ஒரு பிரச்சனையுமில்லை. கடந்தகால நினைவுகளுடனேயே வாழ்ந் திடலாம் என்று நீ நினைப்பது நீண்ட நாட்களுக்குச் சரி வராது. பிறகு நாற்பது வயதில் யோசிப்பதற்கு இப்படித்*

*தோதாக வந்தால் நீ கல்யாணம் செய்வது ஒரு தப்புமில்லை. யாரும் ஏதும் சொல்வார்களோ என்று யோசிப்பதில் அர்த்த மில்லை. உன் சோகத்தில் யாரும் சேர்ந்து நின்றார்களா? எல்லாச் சவால்களையும் நீ தனித்து நின்றுதானே முடித்தாய். சந்தர்ப்பம் ஒருமுறை தான் வந்து கதவைத் தட்டும்.தட்டும்போது பயன்படுத்திக்கொள்ள வேண்டும். என்று அவளுக்கு ஆதர வாகப்பேசினாள். கொஞ்சம் தயக்கம். அதோடு நான் ராஜனுக்கு துரோகம் செய்கிறேனோ என்று மனது கிடந்து தவிக்கிறது. அவருடன் வாழ்ந்த காலத்தை பொய்யாக்குகிறேனோ என்று குற்றவுணர்ச்சியாக இருக்கிறது.நான் அவருடன் வாழ்ந்த பூப்போன்ற நினைவுகள் இன்னும் மணம் போகாமல் இருக்கும் போது இன்னொரு வாழ்க்கையை நினைத்துப் பார்க்கவே முடியாமலிருக்கிறது. ஞாபகங்கள் எல்லாம் என்றும் மறைவ தில்லையே. உறவு நிரந்தரமில்லாமல் போனதற்காக எல்லா வற்றையும் மறந்து போயிட வேண்டுமா என்ன? இந்த நாடுகளில் தனித்து வாழ்வது என்பது ஒன்றும் சிரமமான விஷயமில்லையே. நான் தடம் மாறுகிறேனோ என்று தயக்கமாக இருக்கிறது. என் மகளுக்கு சரியான உதாரணமாக இல்லாமல் போயிடுவேனோ என்று குழப்பமாக இருக்கிறது. என்றாள் சங்கீதா. "இப்ப எத்தனை பேர் இங்கு திரும்ப திருமணம் செய்திருக்கினம்.செய்யாமல் கூட சேர்ந்து வாழ்கிறார்கள். அவரவர் கையில்தான் ஒவ்வொருத் தருடைய வாழ்க்கையும். அவரவர் விருப்பப்படி வாழ்ந்துவிட்டுப் போறது. விரும்பிய வாழ்க்கையை வாழ திரும்ப ஒருக்கா பிறந்தா வர முடியும்" நண்பியின் கூற்றை அவளால் ஏற்க கடினமாக இருந்தாலும் கென்சிடபண்றதில் தப்பில்லை யென்பது புரிந்தது.*

*வினோத் அன்பு அக்கறையுடன் நடந்து கொண்டாலும் அவளை எதுவுமே கேட்காது உதவி தேவைப்படும்போது கேட்காமலே செய்வது என்பவை அவனிடம் அவளை நெருங்கச் செய்தது. நிஷாவிடமும் அன்பு அக்கறையுடன் செயற்பட்டான். அவனுடைய ஃபோனுக்கு ஏங்குவதும் கோலிங் பெல் கேட்டாலே அவன்தானோ என்று பரபரப்பு அடைவதும்*

அவள் இன்னொரு புது வாழ்வுக்குத் தயாராவது புலனாகியது. ஒருநாள் ஏதோ யோசனையில் இருந்தவளைப் பார்த்து "என்ன ஒரு வீட்டையே விழுங்கின மாதிரி இருக்கிறாய்" இப்ப என்ன ஆகிப்போச்சு. கொஞ்சம் சிரித்த முகத்துடன் இருக் கலாமே; வினோத்தின் வாயிலிருந்து விழுந்த சொற்களைக் கேட்டு திகைத்துப் போனாள். என்ன என்ன சொன்னீங்க? ராஜன் சொல்றமாதிரி; கேட்டவளின் கரங்களைப் பற்றி "ஏன் என்னை ராஜனாக நினைக்கக் கூடாதா? கண்களில் காதலுடன் கூறியவனிடம் இருந்து கரங்களை விலக்கத் தோன்ற வில்லை. நெஞ்சு படபடக்க அவன் கண்களை ஏறிட்டு நோக் கினாள். அதில் தெரிந்தது காதலா? அன்றேல் காமமா?" வித்தியாசம் கண்டுபிடிக்க முடியாமல் திணறினாள். என்றாலும் அவசரப்படக் கூடாதென்று உள் உணர்வு எச்சரித்தது. அவளது உள்ளுணர்வு எப்போதும் சரியாகவே வழிகாட்டும் என்பதைத் திடமாக நம்பினாள். அன்றிரவு முழுவதும் அதைப் பற்றியே சிந்தித்த வண்ணம் கண் அயர்ந்தாள். இந்த விஷயத்தில் இமோஷனலாக முடிவு எடுக்கக்கூடாது. புத்திசாலித்தனமாக முடிவெடுக்க வேண்டும் என நினைத்தாள். பிறகு ஏதும் பிழைத்துவிட்டால் நண்பி சொன்னாள் அப்படி இப்படியென்று யார் மேலும் பழியைத் தூக்கிப்போடக்கூடாது. நின்று நிதானித்து முடிவெடுப்போம்.

யாரோ கடித்துவிட்டு எறிந்த அப்பிள் துண்டுபோல் ஆகாயத்தில் சந்திரன் தெரிந்தான்.அவள் கவிதை உள்ளம் ஒரு கவிதைக்காகப் பரபரத்தது.

தேய்ந்து தேய்ந்து உன்னைப்
புதுப்பித்து ஒளிசிந்தும்
வித்தையை மட்டும்
எனக்கு கற்றுத் தர
கீழிறங்கி வருவாயா?

மனதில் தோன்றிய கவிதையை வாய்க்குள் சொல்லிப்பார்த்தாள். நன்றாக இருக்கிறதா என்று யாரிடம் கேட்பது? ராஜன்

*இருந்திருந்தால் ஆகாஓகோ என்று பாராட்டியிருப்பார். என்ன நினைத்தாலும் ராஜனில் போய் முடிந்திருக்கும். இதமாக வீசும் காற்றுக்கூட அவளைத் தொடாமல் அவள் இதயத்தை தொட்டு அழுத்தியது. காற்றுக்கூட அவள் மனதில் என்ன இருக்கிறதென்று அறியத் துடித்ததோ? பல்கனியிலிருந்து அதையே பார்த்தவண்ணம் இருந்தவளுக்கு வினோத்தின் கார் வந்து நிற்பது தெரிந்தது. என்ன இந்த நேரத்தில் என்று நினைத்தவள் கதவைத் திறக்கலாமா வேண்டாமா என்று யோசித்தாள். வாசலில் கோலிங்பெல் சத்தம் சன்னமாகக் கேட்டது. பல்கனியிலிருந்து உள்ளே சென்றவள் அமைதியாக சோபாவில் அமர்ந்தாள்." அம்மா யாரோ பெல் அடிக்கினம்" சொன்ன மகளுக்கு பேசாமல் இருக்குமாறு சைகையால் கூறியவள்" ஃபோனை எடுத்து" போய்விட்டு பகலில் ஒருநாள் வாங்கோ"அவனைப்பேச விடாமல் போனை துண்டித்தாள். திரைச்சீலையை விலக்கிப் பார்த்ததில் அவன் காரைக் கிளப்பிக் கொண்டு போவது தெரிந்தது. போகும்போது வழியில் "நீ என்னை இன்சல்ட் பண்ணிவிட்டாய். நான் வழக்கம்போல் சாதாரணமாகத் தான் வந்தேன். நீ என்ன நினைத்தாயென்று தெரியவில்லை" அவன் குரலில் தடுமாற்றம் தெரிந்தது. குடித்திருக்கிறான் போலும். நல்லகாலம் திறக்காதது என்று நினைத்துக் கொண்டாள். சந்தர்ப்பம் கிடைத்தால் எல்லா ஆண்களும் தப்பு செய்வார்கள் என்பதில் அவளுக்கு மாற்றுக் கருத்தில்லை. ஒருத்தரையும் நம்ப முடியவில்லையே என்று குழம்பியதுடன் "கடவுளே! என்னைச் சரியாக வழிநடத்து" என்று வேண்டினாள்.*

*அடுத்தடுத்த நாட்கள் ஃபோன் பண்ணாது மௌனம் காத்தவன் சங்கீதாவின் ஃபோனுக்காக காத்திருந்து ஏமாந்தான். நான்கு நாட்களுக்கு மேல் தாக்குப்பிடிக்க முடியாமல் தானே எடுத்து சாதாரணமாகப் பேசினான். ஒரு ஞாயிற்றுக்கிழமை நிஷாவும் அவளும் பல்கனியில் உட்கார்ந்து தங்கள் வீட்டுக்கு முன்னா லுள்ள ஆற்றில் வெள்ளைத் தாமரைகள் போல் நீந்திவரும் அன்னங்களையும் நடுநடுவே கறுத்த குஞ்சுகளையும் பார்த்த வண்ணமிருந்தார்கள். நிஷா வெளியில் போவதற்கு*

*நச்சரித்தபடி இருந்தாள். வினோத் சிலவேளை வரலாமென்ற நினைவில் சிறிது நேரத்தில் போகலாமென்று சொல்லிக் கொண்டிருந்தாள் அவள் நினைத்தது பொய்க்கவில்லை. ஜனனியையும் அழைத்துக்கொண்டு வந்திருந்தான். "நாங்கள் அன்னம் பார்க்க போகட்டா? கேட்டாள் நிஷா. நிஷா! ஜனனி! கவனம் தண்ணீருக்குள் போக வேண்டாம்" என்றாள். இப்போதெல்லாம் நிஷாவுடன் பேசுவதால் விரைவில் ஜனனி தமிழ் பேசக் கற்றுவிட்டாள்.*

*"சங்கி! உன்னோடு கொஞ்சம் பேச வேணும். நாங்கள் ஏன் எங்கள் ஃப்ரன்ட்சிப்பை அடுத்த லெவலுக்கு கொண்டுபோகக் கூடாது?" "என்ன சொல்றீங்க. எனக்கு விளங்கேலை. ஃப்ரன்ட்சிப்புக்கு அடுத்த லெவல் ஒன்றிருக்கா?" அவள் நெஞ்சு படபடத்தது. அவளைக் கல்யாணம் செய்ய விரும்புவதாகக் கேட்கப் போகிறான் என்று ஒருபக்கம் மகிழ்ச்சியாக இருந்தாலும் ஏனோ படபடப்பாயிருந்தது." சங்கி! நாங்கள் ஏன் சேர்ந்து வாழக்கூடாது?" பட்டென்று போட்டுடைத்தான். "என்ன என்ன சொல்றீங்க?" கேட்டவளுக்கு நிதானமாகச் சொன்னான். லிவ்விங் ருகெதர் என்று ஏன் இருக்கக்கூடாது. நான் அங்கேயே இருக்கிறேன். நாங்க சேர்ந்து வாழ்வோம். உனக்கு புரிஞ்சிருக்குமென்று நினைக்கிறேன். இந்த நாடு களில் இதொன்றும் புதிதில்லையே" சொன்னது புரிந்ததுடன் அவளுக்கு கோபம் பற்றிக்கொண்டு வந்தது." சீ! இவ்வளவு கேவலமானவராக நீங்க இருப்பீர்களென்று நான் நினைக்க வில்லை. உங்களுடன் ஒரு தகாத உறவு வைத்துக் கொள்ளச் சொல்றீங்களா? எனக்கு அப்படிப்பட்ட ஒரு உறவு தேவை யில்லை. நான் நினைத்தேன். நாங்கள் திருமணம் செய்வோமா என்று நீங்க கேட்பீர்களென்று. அந்த நினைவுக்கே நான் எவ்வளவோ தயங்கினேன். இவ்வளவு கீழ்த்தரமாக நினைக்க உங்களுக்கு வெட்கமாயில்லை" இதில் வெட்கப்படுவதற்கு ஒன்றுமில்லை. சுவிசில் நடக்காததையா நான் கேட்டிட்டன். இருவருமே தனித்து இருக்கிறோம். அதைவிட நீ அழகா யிருக்கிறாய். எனக்கு ஒரு நல்ல கெம்பானியனாக இருப்பாய். எனக்கும் சந்தோஷம்.உனக்கும் சந்தோஷம். ஒரு அழகான*

பெண் தனித்து வாழுறது லேசில்லை. எனக்கு உன்னை மிகவும் பிடிக்குது. இரண்டு பேரின் ரசனைகளும் ஒத்துப் போகுது." சங்கீதாவுக்கு கோபம் வெடித்துக்கொண்டு வந்தது. "ஒரு பெண் தனிய வாழ்ந்தால் என்ன வேணும் என்றாலும் பேசலாமென்று நினைத்தீர்களா? என்னைக் காதலிக்கிறே னென்று சொல்லி இருந்தீர்களென்றால் உங்களை மதித் திருப்பேன். உங்களுக்குப் பிடித்தால் நான் சம்மதம் சொல்ல வேண்டுமா? இது கேவலமாக இல்லை உங்களுக்கு? திருட்டுத்தனமான ஒரு உறவு பேணவேண்டுமென்ற கட்டாயம் எனக்கில்லை. ஒரு பெண்ணின் தனிமையை உங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்தப் பார்க்கிறீங்களா? கண்களைத் தொலைத்து சித்திரம் வாங்கச் சொல்கிறீர்களா? ஒரு கள்ளக் காதலியாக மறைவான வாழ்க்கை வாழச் சொல்றீங்களா? நீ பிழையாக நினைக்கிறாய். நான் உன்னை எவ்வளவு லவ் பண்றேன் தெரியுமா? நீ எனக்கு வேணும் சங்கி; என்று கையைப் பிடித்தவனை உதறித் தள்ளினாள் சங்கீதா. சீ! எனக்கு அப்படிப்பட்ட அசிங்கமான உறவு தேவையில்லை. என்னையும் என் பிள்ளையையும் பாதுகாக்க இந்தச் சமூகத்தின் முன் கொண்டுபோய் நிறுத்தத் தைரியமில்லாத ஒரு கோழை யுடன் இருட்டில் வாழ நான் தயாராயில்லை. ஒருத்தரை இரண்டாவதாகத் திருமணம் செய்வது ஒன்றும் குற்றம் இல்லை. ஆனால் இரகசியமாக திருட்டுத்தனமாக ஒருவருடன் வாழ்வது கலாச்சாரக் கேடு. சலனமில்லாது என்பாட்டில் என் குழந்தைக்காகவே வாழ்ந்துகொண்டிருந்த என் வாழ்வில் ஒரு கல்லை எறிந்து சலனப்பட வைத்து விட்டீர்கள். இது எனக்கு வேணும். என் கணவனை மறந்து இன்னொருத்தனோடு பழகியதற்கு எனக்கு நல்ல தண்டனை. நல்ல காலம் இப்போதென்றாலும் உங்கள் சுயரூபம் தெரிந்ததே. அல்லது உங்கள் கபட எண்ணம் தெரியாமல் நான் என்னை இழந்திருந் தால் என்ன ஆகியிருக்கும்? நான் என்மகளுக்கு ஒரு உதாரண மாக வாழத்தான் விரும்புகிறேனே ஒழிய ஒரு கபட வாழ்க்கை வாழுவதற்கு உதாரணமாக இல்லை. எப்படியென் றாலும் வாழவேண்டுமென்ற எண்ணம் எனக்கில்லை. நான் எப்படி வாழவேண்டுமென்று நான் தான் முடிவெடுக்க வேணும்,

*போறவன் வாறவனெல்லாம் என்னுடைய வாழ்க்கையை முடிவு எடுக்க முடியாது. தயவுசெய்து போங்கோ, கோபத்துடன் ஆரம்பித்து அழுகையுடன் முடித்தாள்.*

*“சங்கி! நான் சொல்றதைக் கொஞ்சம் மனதில் வாங்கிக்கொள். நீயொரு மிடில்கிளாஸ் மென்ராலிற்றியுடன் பேசுகிறாய். இதொன்றும் தப்பே இல்லை. நாங்களொன்றும் உணர்ச்சி களற்ற ஜடங்களில்லை. என்னால் கிளவ்டியாவையும் உன்னால் உன் ராஜனையும் மறக்க முடியாது. பிரக்டிக்கலாக யோசித்தால் இது தப்பேயில்லை; “எனக்கு தப்பு சரி நீங்க சொல்லித் தரவேண்டாம். தப்பான ஆளுடன் ஃப்ரன்ட்சிப் வைத்தது என்னுடைய பிழை. நான் ஒரு லிமிட்டுடன் பழகியிருக்க வேண்டும். உங்களுக்கு உடலுக்கும் நாக்குக்கும் ருசியான உணவு தேவைப்பட்டதை உணராது இருந்துவிட்டேன் ஆம்பிளையள் எல்லோருமே தப்பானவர்கள் என்பதைத் தெரிந்து கொண்டேன். சந்தர்ப்பம் கிடைத்தால் அனுபவிப்பவனும், சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொண்டு அனுபவிப்பவனும் என்று எல்லோருமே கெட்டவர்கள்தான். பெண்ணென்றால் வெறும் சதைதான் எல்லா ஆண்களுக்குள் தெரியுமென்பதை நான் நினைக்காமல் விட்டது என் தப்பு. நட்பு, அன்பு என்ற அற்புத மான வார்த்தைகளை ஆயுதமாகத் தப்பாகப் பிரயோகித்து ஆளை விழுத்திவிடுகிற இந்த வித்தையை தயவுசெய்து யாரிடமும் பிரயோகித்துப் பார்க்காதீர்கள்.இனி இங்கு வர வேண்டாம்.பிளீஸ்.என்னை நிம்மதியாக இருக்க விடுங்கோ; கதவின் பக்கம் கையைக் காட்டியவள் தன் அறைக்குள் சென்று படீரெனக் கதவைச் சாத்திக் குமுறிக்குமுறி அழுதாள். தலைகுனிந்தபடி அவமானத்தால் சிவந்த முகத்துடன் வெளியேறினான் வினோத்.*

❑

# எது அடையாளம்?

**ஸ்வேதா** *காலையில் எழுந்து வேலைக்குப் போக மனமின்றி அங்குமிங்கும் நடந்தாள். யன்னல் திரைச் சீலையை உயர்த்தி வெளியே இரவு முழுவதும் கொட்டியிருந்த பனியைப் பார்த்தாள். முன்பென்றால் எவ்வளவுநேரமும் இக்காட்சியை இரசிப்பாள். அல்லது பனியில் ஒருமுறை போய் என்றாலும் வருவாள். அதுவும் கொட்டும்போது பனித்துளி முகத்தில் விழுவது அவளுக்குப் பிடித்த ஒன்று. இன்று மனம் அதில் லயிக்கவில்லை. வெள்ளைவெளேரென்று ரம்மியமான காட்சி மனதை ஈர்க்கவில்லை. மாறாய் மனதை என்னவோ செய்தது. சரியாக நித்திரை கொள்ளாததால் தலை கனத்தது. கணவன் சதீசைக் காணவில்லை. நேரத்தோடு எழும்பி வேலைக்குப் போயிருக்க வேண்டும். காலையில் மூன்று மணித்தியாலம் ஓரிடத்தில் வேலைக்குச் சேர்ந்திருக்கிறான். தனது படிப்புச்செலவில் கொஞ்சத்தை தானே கட்டிவிடுவான். ஒன்பது மணிக்கு படிக்கப்போனால் மாலை நான்குமணி மட்டும் படிப்பு. பிறகு வாரத்தில் மூன்று நாட்களுக்கு ஆறுமணியிலிருந்து ஒன்பது மணிவரை வேலை. கஷ்டப்படுகிறான்தான். அதற்காக என்னோடு அடிக்கடி சண்டை பிடிக்க வேண்டுமா என்று தன்னையே கேட்டுக்கொண்டாள். இரவு இருவருக்கும் நடந்த வாக்கு வாதத்தில் ஒருவரையொருவர் காயப்படுத்தியதுதான் மிச்சம். ஸ்வேதா இந்தத் திருமணத்தால் தான் ஏமாற்றப் பட்டுவிட்டதாக மனம் நொந்தாள். மீண்டும் மீண்டும் தங்கள் சண்டையை மீட்டுப் பார்க்க கேவலமாக இருந்தது. அப்பா அம்மா பேச்சைக் கேட்டு தாயகத் திலிருந்து வந்து இங்கு படித்துக் கொண்டிருந்தவனை திருமணம் செய்தது எவ்வளவு பெரிய முட்டாள்த் தனம் என்று மனம் இடித்துரைத்தது. அவளால் வேலைக்குப் போயும் வேலையில் ஒன்றிணைய*

முடியாதென்பது விளங்க தொலைபேசியை எடுத்து அலுவலகத்துடன் தொடர்பேற்படுத்தி வரமுடியாமைக்கு கிறங்(சுகவீனம்) என்று காரணங்காட்டி உரையாடலைத் துண்டித்தாள்.

சாப்பிடவும் பிடிக்கவில்லை. மத்தியானச் சாப்பாடு சமைக்கவும் பிடிக்கவில்லை. சதீசை நினைக்க கோபம் கோபமாய் வந்தது. இரவு நடந்த சண்டைக்கு காலையில் மன்னிப்புக் கேட்டு சமாதானப்படுத்தியிருந்தால் மனம் ஆறியிருக்கும். ஆனால் தான் ஆண் என்ற திமிருடன் நேரத்தோடேயே எழும்பி வெளியே சென்றுவிட்ட கணவனை அட்ஜஸ்ற் பண்ணி வாழுவது கஸ்டமான காரியம் என்றே விளங்கியது. இதுமுதல் முறையில்லை. திருமணமாகி இந்த ஆறுமாதத்தில் எத்தனையோ தடவை இப்படியாகிவிட்டது. ஒவ்வொருமுறையும் இவளே இறங்கிவர வேண்டிவரும். பெற்றவர்களிடம் சொன்னால் குடி, சிகரெட் இல்லை. நல்ல குடும்பம் படித்த பிள்ளை இங்கை படிச்சு கெதியில் முன்னுக்கு வரக்கூடிய கெட்டித்தனம் என்று அடுக்கிக்கொண்டு போவினம். அவைக்கு எங்கை விளங்கும் இந்தச் சண்டைகளெல்லாம். எதுக்கெடுத்தாலும் வாக்குவாதம் இரண்டு மூன்றுநாள் கதைக்காமலிருத்தல். முகத்தை தூக்கி வைத்தல் நான் இறங்கிப்போய் பேசுமட்டும் பேசாமலே இருத்தல். எப்ப பார்த்தாலும் நானே என் ஈகோவை விட்டுக் கெஞ்சவேணும். இதென்ன வாழ்க்கையென்றிருக்கு. கல்யாணம் என்றால் எப்பவும் சிரிச்சுக்கொண்டு ஜாலியாக ஊர்சுற்றலாம். ஒரு ஆண்துணையுடன் அதுவும் எல்லோரும் ஒப்புக்கொண்ட ஒருவனுடன் சுற்றுவது எவ்வளவு பெருமை என்று நினைத்த எனக்கு சரியான அடி.

தலைவலிக்கு இதமாக இஞ்சி, ஏலக்காய் போட்டு ஒரு நல்ல ரீ தயாரித்து எடுத்துக்கொண்டு சோபாவில் அமர்ந்தாள். ரீ குளிருக்கும், தலைவலிக்கும் இதமாக இருந்தது. ஆனால் மனம் திரும்பத்திரும்ப அடிக்கடி தங்களுக்குள் வரும் வாக்குவாதத்தையே நினைத்தது. அப்பா அம்மாவுடன் கெதியில் இதுபற்றிப் பேசி முடிவெடுக்கவேண்டும். இப்படியே காலந்தள்ள என்னால் முடியாது. ஒரு குழந்தை வரமுதல் பிரிந்திட வேணும்.

எப்ப பார்த்தாலும் குற்றம் கண்டுபிடிக்கிறது. பழக்கவழக்க மில்லாத காட்டுமிராண்டி. கல்யாணம் நிச்சயம் பண்ணியவுடன் நண்பிகளுக்கு சொன்னபோது "கவனம். ஊரிலையிருந்து வந்து கொஞ்சக்காலமென்றால் கவனம் ஸ்வே. இப்ப "காடு"க்காக கல்யாணம் செய்வாங்கள். நல்லவங்கள் போலையிருப்பாங்கள். பிறகு தங்கடை அடக்குமுறையைக் காட்டுவாங்கள். அடங்கிப் போய் காட்டிடாதை. பிறகு அவ்வளவுதான். யோசிச்சுச் செய் என்று எல்லோருமே அறிவுரை சொன்னார்கள். தாயகத்தில் பல்கலைக்கழகத்தில் படித்தவர் என்றபடியால் பரந்த அறிவுடன் இருப்பாரென்று நினைத்தது தப்பாய் போயிட்டுது. கோபம் வந்த வுடன் கீழ்த்தரமான வார்த்தைகள் பேசுவதும் எடி போட்டுப் பேசுவதும் அவளைக் கோபத்தின் உச்சிக்கு கொண்டு செல்லும். அவளும் டொய்ச்சில் கூடாத வார்த்தைகளில் பேசி விட்டு பிறகு அது பிழையென்று உணர்ந்து மன்னிப்பும் கேட்டுவிடுவாள். ஆனால் சதீஸ் என்றைக்குமே மன்னிப்பு கேட்டதில்லை. மன்னிப்புக் கேட்கவே தெரியாத குறுகின மனம். ஆண் என்ற அகம்பாவம். அது என்ன ஆம்பிளை என்றால் பெரிசா என்ன? எங்களைப்போல அவர்களும் ஒரு பால். அவ்வளவுதானே. அதில் என்ன உயர்வு. அவளுக்கு அது புரியவேயில்லை. நான் ஆம்பிளையடி. அப்படித்தான் சொல்லுவன். நீ பொம்பிளை அடங்கிப்போய்த்தான் ஆகணும். ஸ்வேதா கோபத்துடன் முறைப்பாக நின்றால் என்னடி சிலுப்பீற்று நிற்கிறாய் என்று. ஸ்வேதாவுக்கு அதன் அர்த்தம் விளங்குவதேயில்லை. ஏதோ தன்னைத் தரக்குறைவாகப் பேசுறான் என்பது மட்டும் விளங்கும். அதற்காக அவன் அன்பும் காதலும் இல்லாதவன் என்று சொல்வதற்கில்லை. அன்பாயிருப்பான். ஏன் காதல்வசனங்கள் கூடப் பேசுவான். கோபம் வந்தால் வாயில் நல்ல வார்த்தைகளே வராது. ஸ்வேதா தன்னுடன் படித்த ஆண் நண்பர்களைக் கண்டவுடன் கட்டியணைத்துப் பேசுவது தொட்டுத் தொட்டுப் பேசுவது அவனுக்குப் பிடிக்கவே பிடிக்காது. அதைப்பற்றிப் பேசினாலே கோபம் தலைக்கேறிவிடும் ஸ்வேதாவுக்கு. "பழக்கவழக்க மில்லாத பட்டிக்காடு சட்டெனச் சொல்லிவிடுவாள்." ஓம் நான் பட்டிக்காட்டான்தான். நீங்களெல்லாம் உரிஞ்சு போட்டு

*திரியிறனீங்க தானேடி. எவனோடையெல்லாம் திரிஞ்சியளோ? இப்பபத்தினி வேஷம் போடுறியா? என்பான். அவனிடமிருந்தே கற்றுக்கொண்ட தரக்குறைவான பேச்சையெல்லாம் அவளும் இப்ப அவனைப் பார்த்துக் கேட்கப் பழகிவிட்டாள். இப்ப யோசிக்கும்போது "நானும் அவனைப்போல மாறி விடுவேனோ? எங்களுக்குப் பிள்ளை ஒன்று பிறந்தால் ஐயோ நினைக்கவே பயமாயிருக்கு. அந்தக்குழந்தையும் இதே பேச்சுக்களைப் பழகி..." நினைக்கவே அருவருப்பாயிருந்தது. இவ்வளவுநாளும் பொறுத்தது போதும். இவற்றை அப்பா அம்மாவிடம் பேசக் கூச்சப்பட்டது போதும்.. இனி எல்லாவற்றையும் சொல்லிவிட வேண்டும். இந்தப் பேச்சுக்களெல்லாம் இனித் தாங்க ஏலாது. வேலைத்தலத்தில் கூட அந்த வார்த்தைகள் தன்னைத் துரத்தியடிப்பதை அவள் பலதடவை உணர்ந்திருக் கின்றாள். "இனி வேண்டாம் இந்த துன்பம்" என்று முடிவெடுத்தாள்.*

*வலி சுமந்த மனதுடன் தான் தனியாகப் பெற்றோரிடம் சென்றாள். இன்றைக்குத் தவறவிட்டால் பிறகு அவன் நல்லாய் நடந்தவுடன் சொல்லாமல் விட்டிடுவன். ஆனபடியால் சூட்டோடை இப்பவே கதைச்சிடவேணும் என்று அழுகையும் கோபமுமாகச் சென்றாள். "ஏதோ குடியில்லை, சிகரட் இல்லை, தங்கமான பெடியன் என்று பெரிசாய் அளந்தீங்க. இப்ப சொல்றன் கேட்டுக்கொள்ளுங்கோ. நான் இவ்வளவுநாளும் சொல்லாமல் இருந்ததுக்காக உங்கடை மருமகனுடைய குணங்கள் உங்களுக்குத் தெரியேல்லை. இனி என்னாலை பொறுக்க முடியாது. "ஏன் என்ன ஸ்வே சொல்றீர்" பதறினார் அம்மா. "நீங்களே என்னை ஒருநாளும் எங்கை போறீர்" என்று கேட்டதில்லை. அதுவும் நீ என்று ஒருநாளும் சொன்னதில்லை. சதீஸ் கோபம் வந்தவுடன் நீ என்கிறதும் எடி என்கிறதும் வெளிக்கிட்டுக்கொண்டு இருக்கும்போதே "எங்கை போகிறாய்" என்ற கேள்வி. எனக்குப் பத்திக் கொண்டு வரும். என்னில் நம்பிக்கையில்லை. சந்தேகம் என்ற படியால்தானே இந்தக் கேள்வி "சொல்லவும் அம்மா சொன்னா" நாங்க கேட்காததுதான் பிழை போல இருக்கு.*

அநேகமாய் நீர் சொல்லீற்றுத்தானே போறனீர். நீர் சொல்லாமல் இருந்தால் அவர் கேட்கிறதில் என்னபிழை? இரண்டுபேரும் சேர்ந்தே போற இடங்களுக்கு போங்களேன். தனியப் போறதென்றால் முதல்நாளே அதைப்பற்றி சொல்ல லாம்தானே" கூறி முடிக்குமுன்னே பட்டேன வெடித்தாள் ஸ்வேதா. "பெமிஷன் எடுக்கச் சொல்றீங்களா? நான் என்ன சின்னப்பிள்ளையா?" இவ்வளவு நேரமும் பேசாதிருந்த அப்பா சொன்னார் "நீர் வளர்ந்த சூழல் வேறு. அவர் வளர்ந்த சூழல் எப்படியோ. அவர் கேட்கிறதிலை ஒரு தப்புமில்லை. நீரே சொல்லிவிட்டால் எப்படிக் கேட்கலாம் என்ற கோபம் வராதில்லையா? "ஓம்தான் ஆனால் எனக்கு அப்படிப் பழக்க மில்லையே" யாரும் எல்லாமே பழகீற்றுப் பிறக்கிறதில்லை. பழகிக்கொள்ள வேண்டியதுதானே. கொஞ்சம் புருசனுக்காக விட்டுக் கொடுத்தால் ஒன்றும் குறைந்து போகாது. அப்பா கூறவும் "ஏனப்பா நான் மட்டுந்தான் விட்டுக்கொடுக்க வேணுமோ? அவர் விட்டுக்கொடுக்கக்கூடாதோ? என்றாள். "ஏன் ஸ்வே முதல் நீர் விட்டுக்குடும். பிறகு பாரும் அவர் எப்படி மாறுகிறாரென்று" அப்பா புத்தி சொன்னார். "நான் அவருடைய உடுப்பு விஷயத்தில் தலையிடுகிறேனா? அவர் சும்மா ரீசேர்ட் ரைற்றாய் போடுறாய். ஸ்லீவ்லெஸ் போட்டால் ஆபாசமாயிருக் கென்கிறார். எப்படி அவர் ஆபாசம் என்ற சொல்லைப் பாவிக் கலாம். சினிமாவில் அரைகுறை உடுப்பென்றால்தானே இந்தச் சொல் பாவிக்கிறவை. எனக்கு அவமானமாயிருக்கம்மா. எனக்கு அழகாயிருக்கு. என்னுடைய விருப்பம் போடுறன். அவர் அப்படியேன் சொல்லுவான்? அவள் சொல்லட்டுமென்று கேட்டுக்கொண்டிருந்த அப்பா இப்படிப் பேசுறதெல்லாம் சரியென்று நான் சொல்லேலையம்மா. தப்புத்தான். தப்பைக் கண்டு விட்டிட்டு ஓடிக்கொண்டிருந்தால் ஓடிக்கொண்டு தானிருக்க வேண்டும்.அவர் உம்மடை கணவன். திருத்த வேண்டியது உம்மடை கடமையில்லையா? என்றார்.

"அப்பா எப்படி எப்படியோ வளர்ந்தவர்களைத் திருத்துறது என்ரை வேலையில்லையப்பா. எனக்கு பிடிக்கேல்லை. விட்டிட்டுப் போயிட்டே இருக்கிறன். அவ்வளவுதான். என்றவளுக்கு சரியம்மா. அவரை விட்டிட்டு தனியவே வாழப்போறீரா? அல்லது

*பிடித்த இன்னொருத்தருடன் வாழப்போறீரா? "அதுபிறகு பார்க் கலாம். இப்ப நடக்கிறதைப் பார்ப்பம். எனக்கு சரியில்லாத வருடன் அட்ஜஸ்ற் பண்ணி வாழவேண்டுமென்கிறீர்களா? இதை விட்டு விலகி எனக்கு ஏற்ற பொருத்தமானவர் ஒருவர் வந்தால் திருமணம் செய்கிறது தப்பா அப்பா? "தப்பே இல்லை ஸ்வே. ஆனால் உங்கடை தேடல்கள் தொடர்ந்து கொண்டே யிருக்கும். உங்களோடு நூறு வீத ஒன்றுபட்ட குணம் கிடைக்காது. இருப்பதுபோல நினைத்து கல்யாணம் செய்வீங்க. பிறகு கொஞ்சநாளில் ஒத்துவரேல்லையென்று சொல்லி திரும்ப விலகுவீங்க. அதுதான் வேண்டாமென்கிறன். சரியில்லை சரியில்லையென்று எத்தனை தரந்தான் கல்யாணம் செய்வீங்க. பிள்ளைகள்பாடு என்னாகும். எத்தனைபேரை அப்பா என்று அவர்கள் ஏற்கமுடியும்? அதை விட்டு கல்யாணம் செய்தவனோடு கொஞ்சம் அட்ஜஸ்ற் பண்ணுங்க. பிறகு பாருங்கோ. எப்படி வாழுறீங்க என்று. ஒரு ஆறு மாதத்தில் என்ன புரிஞ்சுகொள்ள முடியும். உம்மடை அம்மாவையே எடுத்துக்கொள்ளும். நான் கல்யாணத்துக்கு முதல் குடிப்பன், புகைப்பன், சைற் அடிப்பன். எல்லாக் கெட்ட பழக்கமும் இருந்திச்சு. ஆனா உங்கடை அம்மா என்னை விட்டிட்டா போனா? திருத்தி உங்களுக்கொரு நல்ல அப்பாவைத் தரேல்லையா? இதிலை என்னுடைய கெட்டித்தனம் எதுவுமே இல்லை. எல்லாம் உங்கடை அம்மாவின் கெட்டித்தனம். அவ எனக்குத் தேவதை மாதிரி வந்து என்னை எல்லோரும் மதிக்கிற மனுசனாக்கேலையா? அம்மாவும் படிச்சவ. என்னை விட்டிட்டு வேறு யாரையும் கல்யாணம் செய்திருந்தால் நீங்க யாரோ ஒருத்தனை அப்பா என்றிருப்பீங்களா? "பதில் கூற முடியாமல் திணறினாள் ஸ்வேதா. பிறகு சொன்னாள்" நீங்க நல்லவரப்பா. அம்மாவை எங்களை நேசிச்சீங்க என்று சொல்லவும் "ஓம் சதீசும் மோசமானவர் இல்லை. என்னைவிட எவ்வளவோ நல்லவர். என்ன அவர் வாழ்ந்த ஊரின் சில பழக்கங்கள் ஒட்டியிருக்கு. அவ்வளவுதான். இது ஒரு சின்னப் பிரச்சனை. நீர் சொன்னமாதிரி அவர் சொல்ற அந்த வார்த்தைகள் சரியில்லை. எனக்கும் கோபம் வருகுது. என்ரை பிள்ளையை இப்படிச் சொன்னால் வெட்டிப் போடுற கோபம் வருகுது. அந்தப் பேச்சு வராமலே*

*பார்த்துக் கொள்றதுதான் கெட்டித்தனம். கொஞ்சக்காலம் அந்த வார்த்தைகள் பேசாவிட்டால் அவர் அதை மறந்திடுவார். ஆனபடியால் அப்படி ஒரு பேச்சு சொல்ல வேண்டிய சூழல் வராமல் பார்த்தால் போதும். எல்லாமே சரியாயிடும். அதோடு இன்னொரு ஆணோடு பேசுறது பிடிக்காமல் போவது பொஸஸிவ்னெஸ். அதொன்றும் பிழையில்லை ஏனப்பா எனக்கு அது விளங்கேல்லை. அதென்ன பொஸஸிவ்னெஸ். "ஓ அதுவா எனக்கு அதன் டொய்ச் சொல் தெரியேல்லை. அதிகமான அன்பு ஒருவரிடமிருந்தால் மற்றவர்களுடன் பேசினால் அன்பா யிருந்தால் பொறாமை வரும். அது ஒரு அன்பின் வெளிப்பாடு தான். கொஞ்சம் உளவியல் தெரிந்தால்போதும். இப்ப சாப்பிடும். "என்றார் அப்பா. "விட்டுக்கொடுக்கிறதில் கெட்டுப் போவது எதுவுமேயில்லை. விட்டுக்கொடுப்பவர்தான் வாழ்க்கை விளையாட்டில் வெற்றியாளர்" கூறிய அம்மாவை வியப்புடன் பார்த்தாள் ஸ்வேதா. இவ்வளவு காலமும் பார்த்த அம்மாவா யில்லாமல் வாழ்க்கை இரகசியம் தெரிந்த வாழ்வில் சாதித்த அம்மா வாழ்க்கை என்ற ஏணியின் உச்சத்தில் நிற்பது புரிந்தது.*

*"வாங்க எல்லோரும் சாப்பிடுவம்.இன்று முழுக்க என்ற்ஸ் பானனாய் (ஓய்வாக) இருந்திட்டு இரவும் சாப்பிட்டிட்டு வீட்டை போகலாம். நான் சதீசுக்கு போன் பண்ணி இங்கு வரச் சொல்றன் இப்ப சாப்பிட்டிட்டு போய்ப்படும். ரெஸ்ற் எடுத்த பிறகு மூளை வேலைசெய்யும். நான் சொன்னதுகளை நல்லாய் யோசியும். ஒரு அவசரமுமில்லை "பேசிக்கொண்டிருக்கும் போதே சதீசின் போன். "மாமா ஸ்வே அங்கு வந்தாவா? நான் வேலைக்குப் போகும்போது எழும்பேலை. இரண்டு மூன்றுதரம் போன் பண்ணீற்றன். எடுக்கேலை. பியூரோக்கு போன் பண்ணி னால் இன்று கிரங். வரேல்லை எண்டிச்சினம் "சொல்லவும்" பதறாதேம். இங்கைதான் வந்து படுத்திட்டா. இரவு சரியான நித்திரை இல்லையாம். தலைவலியாம். பின்னேரம் அப்படியே இங்கே வாரும். சாப்பிட்டிட்டு கூட்டிப்போகலாம் எதுவுமே தெரியாததுபோல் கதைத்து முடித்தார்.*

சாப்பிட்டுவிட்டுப் படுத்தவள் சிந்தித்தாள். அப்பா சொல்றது போல் என்னிடம் அன்பாயுமிருக்கிறார். சண்டையும் பிடிக்கிறார். நான் வேறு ஆண்களிடம் பேசுறது பிடிக்குதில்லை.அது அப்பா சொல்ற பொஸஸிவ்னெஸ் தானாக்கும். என்னுடைய ஆண் நண்பர்களைப் பிடிக்குதில்லை. அப்பா சொல்றது போல் தன்னைவிட அவர்கள் மேல் என்று நினைத்து அவர்கள்மேல் பொறாமை கொள்கிறார் போலை. அப்பா சொல்றது சரியாய்த் தான் இருக்கு. உடுப்புகளைக் கொஞ்சம் அவருக்குப் பிடித்த மாதிரி போட்டுப் பார்ப்பம். வீட்டுவேலைகளில் உதவுறார். ஆரம்பத்தில் இருந்த இடத்தில் எல்லாம் அவருக்குச் செய்ய வேணும். இப்ப அப்படியில்லை. நானும் களைச்சு வாறதை புரிஞ்சு கொள்றார். கொஞ்ச நாளைக்கு அப்பா சொல்ற மாதிரி அட்ஜஸ்ற் பண்ணிப் பார்ப்பம். அப்பா சொல்றதைக் கேட்க பயமாயிருக்கு. இப்படியே சரியில்லை சரியில்லை யென்று விட்டால் சுவிஸ்காரர்போல் நாற்பது வயதுக்குமேல் தனியத்தான் வாழவேணும். அதுவும் குழந்தையும் வந்திட்டால் எல்லாப்பொறுப்பும் என்மேல்தான். பார்ப்பம். எனக்கு மட்டும் விட்டிட்டுப் போறதுக்கு ஆசையா என்ன? பிரச்சனையை சரியான முறையில் அணுகினால் எல்லாம் சரியாயிடும் போல இருக்கே. மனந்தெளிந்து நித்திரையானாள்.

முன்புபோலில்லாமல் இப்போது அவனிடம் வெறுப்பு வரவில்லை. சமாளிக்கலாம். இதுவொன்றும் பெரிய பிரச்சனை யில்லை என்று மனம் எண்ணியது. அதற்கு உதவுவதுபோல் இருந்தது ஜெனியின் சந்திப்பு. ஒருநாள் அவளது சினேகிதி ஜெனியைக் கண்டபோது கவலை சூழ்ந்த முகத்துடன் காணப்பட்டாள். அவள் சுவிசில் பிறந்தவனையே திருமணம் செய்யவேண்டுமென்பதில் தீவிரமாக இருந்து அவ்வாறே காதலித்து திருமணம் செய்துகாட்டியவள். அவளுடைய திருமணம் சரியான கிராண்டாக நடந்தது. ஆனால் இந்த ஒரு வருடத்தில் சலிப்புற்று இருந்தது அதிசயமாக இருந்தது. காதலித்துச் செய்தவர்களெல்லாம் மிக சந்தோஷத்துடன் இருப்பர் என்று எல்லாரும் நினைப்பது தவறு போலிருக்கிறதே. ஆனாலும் எதுவுமே கேட்காமல் ஸ்வேதா கலகலப்பாகப்

பேசினாள். “ஸ்வே நீ புத்திசாலியடி. நல்ல கணவனைத் தெரிஞ்செடுத்திட்டாய். நான் ஐந்து வருடம் காதலித்து இப்ப ஒரு வருடத்தில் எல்லாமே பொய்யாயிட்டுது.எங்களுக்குள் ஒன்றுமே ஒத்துவரேல்லை. முந்தி நான் சொல்றதுக் கெல்லாம் தலையாட்டினவன் இப்ப சொல்றது எதுவும் கேட்கமாட்டான். நெடுக ஃப்ரண்சுடன் வெளியில் திரிகிறது. இரவு ஸ்பேற்றாய் (நேரங்கழித்து) வீடு வாறது. பிறகு வேலை. கதைக்கிறதே குறைவு. உமக்கெதுக்கு என்ரை ஹெல்ப். நீர்தான் எல்லாமே செய்வீரே என்று எதிலும் பட்டுக் கொள்றதில்லை. நெடுக வெளியில் சாப்பிடுறது. எனக்கு இப்ப குழந்தை பெற ஆசையாயிருக்கு. இப்ப வேண்டாமாம். நாங்க நெனீசன்(அனுபவிக்க) பண்ண ஏலாதென்கிறான். கனசெலவு வந்திடுமாம். நாங்க பிரிஞ்சிடலாமா என்று யோசிக்கிறம்.நான் அப்படிச் சொன்னவுடனேயே ஓகே. அது நல்லம் என்கிறான். வேண்டாமென்று சொல்வானென்று நினைச்சன். உழைக்கிற காசுகளெல்லாம் வீணாய்ப் போகுது. முந்தி நான் நினைச்சன் இலங்கையில் தாய் தகப்பன் இருந்தால் அவைக்கு காசு அனுப்பவேணும். இங்கையே பெற்றார் இருந்திட்டால் நல்லதென்று. ஆனால் சும்மா வீணாய் செலவழிக்கிறான். செலவழிக்கத்தானே காசு என்கிறான். சம்பளக்காசு தவிர கிரெடிட் கார்டிலையும் எடுக்கிறான். சரி அதை விடு. உன்னுடைய வாழ்க்கை எப்படிப் போகுது. ஃப்ரண்ட்ஸ் எல்லாம் உன்னைப்பற்றித்தான் கவலைப்பட்டம். தெரியாதவனைச் செய்கிறாள். என்ன கஷ்டப்படப்போறாளோ என்று. கடைசியில் பழகினவனோடையே வாழ முடியுதில்லை. உன்னைப் பார்த்தால் சந்தோஷமாயிருக்கிறாய் போலத் தெரியுது“ என்றாள். நண்பி கூறியதும் மழுப்பிச் சிரித்தாலும் ஜெனியை விடத் தன்னுடைய வாழ்க்கை பரவாயில்லைப்போல் தோன்றியது. அதோடு அப்பா கூறிய அறிவுரையை நண்பிக்குப் பரிந்துரைத்தாள். அவளும் இதைக்கேட்டதும் முகம் வெளிறி “ஓம்மென்ன. நாங்க இது எதுவுமே யோசிக்கிறேல்லை. அங்கிள் சொல்றதும் சரிதான். விட்டு விட்டிட்டு என்னதான் செய்யப் போறம். ஓம்மென்ன. எங்கடை அம்மாவையளும் விட்டு விட்டிட்டு இரண்டு மூன்று கல்யாணம் செய்திருந்தால் எங்களுக்கும்

*எத்தனை எத்தனை அப்பாக்கள வந்திருக்குமோ? நினைக்க சிரிப்பாயும் பயமாயுமிருக்கு. நாங்க விட்டுக்குடுக்க விரும்பி றேல்லை எங்கடை அடையாளம் தொலைஞ்சிடுமென்று. இப்ப நீ சொல்லும்போது நினைக்கிறன் எது அடையாளமென்று. ஒம் நான் கட்டாயம் அங்கிளிட்டை வரவேணும். எனக்கு சரியான வழி சொல்லுவார். எங்களுக்கு புரியாத பல விடயங் களை புரிய வைப்பினம். நாங்க பிழை பிழையாய் நினைத்துக் கொண்டிருக்கிறம் போலிருக்கு என்ன” என்றாள் “கட்டாயம் வா. முதலே சொன்னால் நானும் போய் நிற்பன். ஒளிவுமறை வில்லாமல் பிரச்சனை எல்லாவற்றையும் சொன்னால் அம்மா அப்பா இரண்டு பேருமே எங்களுக்கு வழிகாட்டுவினம். நீ வரும் போது ஜோய்லையும் கூட்டி வா. இரண்டு பேருக்குமே தெளிவு கிடைக்கும். நானும் உப்பிடித்தான் குழம்பியிருக்கிறன். அப்பா அம்மா சொன்ன பிறகுதான் தெளிந்து இப்ப கொஞ்சம் சண்டையில்லாமல் இருக்கிறம். நண்பிகள் இருவருக்குமே பனி உருகி நீராய் நிறைந்ததுபோல் மனம் தெளிந்த நீரோடையானது. தங்கடை அடையாளம் ஐடென்ரிற்றி என்று எதையோ நினைத்து வெறும் ஈகோவுடன் வாழ்ந்தது புரிந்தது.விட்டுக் கொடுப்பதால் தங்கள் அடையாளம் துலைந்திடாது என்பது புரிந்தது.*

**வெற்றிமணி 2017**
**ஜெர்மனி**

# போர்க்கால வடு

**நேசன்** *மனைவி பிள்ளைகளுடன் இலைதுளிர்கால இதமான காற்றை அனுபவிக்க மரங்களடர்ந்த பார்க்குக்கு வந்திருந்தான். இலேசான குளிர்காற்றும் உடலுக்கு இதமான வெயிலும் மனதை அமைதிப் படுத்தவே இல்லை. பிரான்சில் என்னதான் மகிழ்வான வாழ்க்கை வாழ்வதுபோல் இருந்தாலும் உள்ளுக்குள் உடைந்து போயிருந்தான். “அப்பா விளையாடுவம் வாங்க” கூப்பிட்ட மகளுக்கு “நீங்க இரண்டுபேரும் விளையாடுங்கோ. அப்பா இப்படி இருக்கிறன்” கூறி விட்டு புற்றரையில் அமர்ந்தான்.*

*நேசன் தாயகத்தை விட்டு பிரான்ஸ் வந்து ஆண்டு ஐந்தாகிவிட்டது. போர் உக்கிரம் பெற்ற நேரம். தாயகமக்கள் எப்படியோ போகட்டுமென்று சுயநலமாய் மனைவி பிள்ளைகளுடன் ஓடிவந்தது இன்னும் உறுத்திக் கொண்டேயிருக்கிறது. இப்படித் தினம் தினம் சாகிறதுக்கு அங்கேயே செத்து மடிஞ்சிருக்கலாம். இப்படி அவன் நினைக்காத நாளில்லை. என் தேசத்தின் புதல்வனாய் நான் கடமையைச் செய் யேலையே வானில் விமானம் பறக்கும் ஓசை எப்போது கேட்டாலும் நெஞ்சு படபடக்க தன்னுடைய மனதில் ஒட்டி எவ்வளவு முயன்றாலும் மறக்க முடியாமல் தவிக்கும் அந்தநிகழ்வை நினைத்து நினைத்து மறுகுவான். போராட்ட வீரனாயிருந்தும் வீரத்தைத் தொலைத்து கோழையாய் ஓடிற்றேனே. நினைவே அவனைக் கொன்றது. வேலை செய்யும் நேரம் தவிர்த்து படுக்க தலை சாய்க்கும்போதெல்லாம் நண்பன் அறிவழகனின் நீண்ட கைகள் கண்ணுக்குள் வந்து நித்திரையைப் போக்கடித்துவிடும்.*

*அறிவழகனும் நேசனும் ஒரே பாடசாலையில் ஒரே வகுப்பில் படித்தது மட்டுமில்லை இணைபிரியாத*

நண்பர்கள் கூட. ஒருவர் பள்ளி செல்லமுடியாத நிலை யேற்பட்டால் ஒருவருக்காக மற்றவன் நோட்ஸ் எழுதி வைப்பதும் படித்த பாடங்களைச் சொல்லிக்கொடுப்பதும் என்றைக்குமே நின்றதில்லை. அறிவழகனோடு யாரும் சண்டை பிடித்தால் நேசன் அவனை அடிப்பதும் நேசனுக்கு யாரும் அடித்தால் அறிவு அவனைத் துவைத்து எடுப்பதும் அந்த ஊருக்கே தெரியும். மண்மீட்புப் போராட்டம் நடந்துகொண்டிருந்த கால கட்டம். வீர இளைஞர்கள் மண்மீட்க வாருங்களென்ற கோஷத்தில் கவரப்பட்ட நூற்றுக்கணக்கான இளைஞர்கள் இணைந்த காலம் அது. ஆண்கள் மட்டுமல்ல பெண்களும் ஆர்வமுற்றவர்களாக இணைவதைப் பார்த்த இளையவர் களுக்குவீர உணர்ச்சி கிளர்ந்தெழுந்தது. நேசனும் வீட்டுக்குத் தெரியாமல் போய்ச்சேர முடிவெடுத்தவுடன் அறிவு தானும் சேரப்போவதாகச் சொன்னான். இரண்டு பேருமே ஒரு விடிகாலைப்பொழுதில் வீட்டிலிருந்து சொல்லாமல் கொள்ளாமல் மறைந்துவிட்டார்கள். வீட்டில் கேட்டால் போய் வா மகனேயென்று புறநானுற்றுத் தாயாய் வாழ்த்தி அனுப்பப்போவதில்லை என்று தெரியும். வீட்டுக்கொரு வீரன் என்ற கோஷத்தில் தன்வீட்டில் அண்ணா தம்பி இருப்பதால் தான் மண்மீட்புப் போரில் இணைய நேசன் தீவிரமாக இருந்தான். அறிவுக்கும் வீட்டில் சந்தோஷமாக அனுப்பமாட்டார்கள் என்ற நிலை. இருவருமே ஒரேநாளில் எழுதிவைத்துவிட்டுக் காணாமல் போய்விட்டார்கள். பயிற்சிக் காலம் முடிந்து பணியிலமர்ந்தபின் இடையிடையே வீட்டுக்குச் சென்றுவந்தனர் இருவரும்.

பாடசாலையில் நேசனுக்காக அறிவு எத்தனையோ தரம் ஆசிரியரிடம் அடி வாங்கியிருப்பான். ஆனால் சாகும்போது அவனுக்கு கைகொடுக்காமல் சாக விட்டிட்டனே என்று இப்போது நேசன் துடிதுடிக்கிறான். இரண்டுபேரும் வெவ்வேறு காவலரண்களில் கடமையாற்றினாலும் இடையிடையே சந்தித்து தம் நட்பைப் புதுப்பித்துக் கொள்வார்கள். அறிவு மகிழினியைக் காதலித்ததும் அதற்குத்தான் செய்த உதவிகளும் அவர்களைச் சேர்த்து வைக்க தான்பட்ட பாடும் நினைவுக்கு வந்தது. போராட்ட வீரனுக்கு தங்கள் மகளைத் திருமணம் செய்துகொடுக்க

மகிழினியின் பெற்றோர் மறுத்துவிட்டார்கள். வெளிநாட்டு மாப்பிள்ளை பார்த்து திருமணம் நிச்சயம் செய்தது அறிந்து அறிவு துடிதுடித்துப்போனான். நண்பனின் துடிப்பில் மனங் கலங்கிப்போனான் நேசன். மகிழினிக்கு இரகசியமாக செய்தி அனுப்பி அவளைப் போய் கூட்டிவந்து அறிவுக்கு திருமணம் செய்து வைத்ததில் மற்ற நண்பர்களைவிட நேசனின் பங்கே பெரிதாக இருந்தது. பிள்ளைகளும் மனைவியும் வரவே நேசனின் நினைவுகள் தடைபட்டன.

பிரான்ஸ் வந்து இரண்டு வருடங்கள் எதுவுமே செய்ய முடியாத நிலைமையிலிருந்தார்கள். கொஞ்சம் கொஞ்சமாக மொழி படித்து வேலைக்குப் போகத் தொடங்கியதும் மகிழினி குழந்தைகளைப் பற்றி விசாரித்தும் அறிந்துகொள்ள முடிய வில்லை. ஊரிலிருக்கும் நண்பர்களுடனும் தொடர்புகொள்ள முடியவில்லை. முன்னாள் போராளிகளுடன் உறவைப்பேண யாருமே தயாராயில்லை. இவர்களால் தங்களுக்கும் பிரச்சனை வரலாமென்று பயந்தார்கள். "என்னுடைய பிள்ளைகளின் வயதுதானே அந்தப்பிள்ளைகளுக்கும். என்ன என்ன கஷ்டப் படுகிறார்களோ அதுவும் இரண்டும் பொம்பிளைப்பிள்ளைகள். நான் ஒருத்தன் உயிரோடு இருக்கிறன். என்ன பிரயோசனம் "எதை யோசித்தாலும் ஒரு வட்டம் ஒரு புள்ளியில் ஆரம்பித்து அந்தப்புள்ளியிலேயே முடிவடைவதுபோல கடைசியில் அறிவழகனின் நினைவில்தான் அது முடிவடையும். நேசனின் மனைவி தேவிகா அவனது வேதனையைப் புரிந்துகொண்டு அதை மாற்ற எவ்வளவோ முயற்சிகள் எடுத்தும் அவளால் அவனை அதற்குள்ளிருந்து மீட்டெடுக்க முடியவில்லை. விரைவில் அவன் ஒரு மனநோயாளியாகி விடுவானோ என்று பயந்தாள். டொக்ரிட்டைச் சொல்லி கவுன்சிலிங் செய்யலா மென்றாலும் இங்கு மொழி ஒரு தடைக்கல்லாக இருந்தது. வேலை செய்யுமிடங்களில் சமாளிக்க அரைகுறை பிரெஞ் உதவியதேயொழிய இவர்களின் கவலைகளை பிரச்சனைகளை சொல்லி அவர்களிடம் ஆறுதல் பெற முடியாமலேயிருந்தது. வளர்ந்த இந்த நாடுகளில் எவ்வளவோ வசதிகளிருந்தும் அதனைப் பெற்று முழுவதுமாகப் பயனடைய முடியாமலே யிருந்தது.

*போர் உக்கிரமடைந்த நேரத்தில் அறிவழகனும் நேசனும் ஒரிடத்தில் சந்தித்தது குண்டுமழைக்குள் வீரத்துடன் போராடியது அந்த நிகழ்ச்சி எல்லாமே நேசனைத் துரத்தித்துரத்தி அலைக்கழித்தது. சுற்றிச்சுற்றி சுழற்றி அடிக்கும் வேதனை நிகழ்வு இதயத்தை அப்படியே வெளியில் எடுத்துப்போட்டது போலிருக்கும். சாவைக்கண்டு பயந்தோடாமல் வீரத்துடன் போராடினாலும் மழையாகப் பொழியும் குண்டுகளிடமிருந்து தப்ப முடியவில்லை. இருவரும் ஒரேயிடத்தில் நின்றபோதே அறிவழகனின்மேல் வானிலிருந்து கொட்டிய குண்டுமழை தாக்கி ஓடமுடியாமல் உடல் முழுவதும் காயங்களுடன் காலில் பெரிய குண்டடிபட்டு காலை எடுத்து வைக்க முடியாமல் நேசனை நோக்கித் தன் கைகளை நீட்டினான். நீட்டிய அந்தக் கைகளைப்பற்றித் தூக்கிக்கொண்டு போகாமல் முண்டியடித்து வந்த சுயநலத்துக்குப் பலியாகிய கேவலம் அவனை வாட்டி வதைத்தது. எவ்வளவு கேவலமாக அற்பத்தனமாய் நடந்திட்டன் என்று குற்றஉணர்ச்சி நெஞ்சை வாளால் அறுக்க இன்றுவரை அதிலிருந்து மீளமுடியாமல் துடித்து துவள்கின்றான். துடிதுடித்த உற்ற நண்பனைக் கைவிட்டு ஓடியது இத்தனை வருடங்களாயும் மறக்க முடியவில்லை. காட்டிக்கொடுத்தல் மட்டும் துரோகமில்லை. இதுவும் ஒரு துரோகந்தான். எவ்வளவுதான் நியாயம் கற்பித்தாலும் மனசாட்சி அவனைக் கொல்லாமல் கொன்றது.*

*அந்தநேரத்தில் தனக்கேற்பட்டது தன் குடும்பத்தின் மேலுள்ள பாசம் தானென்று தன்னைத்தானே ஏமாற்றுவதாக அடிக்கடி கூறினாலும் தானே தன்னை ஏமாற்றுகிறோமோ என்று நினைத்துக் கொள்வான். காரணம் எதுவாயிருந்தாலும் நண்பனைத் தவிக்கவிட்டு ஓடிவந்தது மன்னிக்க முடியாத குற்றந்தான். மனைவி தேவிகா பலமுறை சொல்லிவிட்டாள். அந்தநேரத்தில் நீங்க எடுத்தது சரியான முடிவு. தூக்கிவந்தும் காப்பாற்றவே முடியாத நண்பனுக்காக நீங்களும் சேர்ந்து சாவதால் என்ன பயன். நீங்க தப்பி வந்ததில் அறிவு அண்ணாவின் குடும்பத்தைத் தேடி உதவி செய்யலாம். நீங்களும் சேர்ந்து செத்திருந்தால் என்ன பிரயோசனம்?*

*நாங்களும் அறிவுஅண்ணாவின் குடும்பமும் சேர்ந்து கஷ்டப்பட்டுக்கொண்டு இருந்திருப்பம். அறிவு அதை ஒப்புக் கொண்டாலும் மனம் ஏற்றுக்கொள்ள மறுத்துக்கொண்டே யிருக்கிறது. அறிவழகன் போராளி. சேர்ந்த அன்றே இறப்பு நிச்சயமென்பது தெரியும். வீரமரணம் அடைந்தான். சரி. ஆனால் அவன் மனைவி பிள்ளைகளைத்தேடிஅழைத்து வந்திருக்க வேண்டும். மன்னிக்கவே முடியாத துரோகம் செய்துவிட்டு வெளிநாடு வசதியான வாழ்க்கைவென்று வாழ்வது முறைதானா என்று மனதுக்குள்ளிருந்து ஒரு குரல் கேட்டவண்ணமே இருக்கும். நேசன் இப்பிடிச் செய்திட்டியேடா. உன்னை என் உயிர் நண்பனாய் நினைத்தேனேடா என்று நண்பன் நேருக்குநேர் கேட்பது போலிருக்கும். கடைசி என் மனைவி குழந்தைகளை யென்றாலும் தேடிக் காப்பாற்றினாயா என்று நண்பன் கேட்பது போலவே தோன்றி துடிதுடித்துப்போவான். என்னுடைய இடத்தில் அறிவு இருந்திருந்தால் என்னையும் தூக்கிக் கொண்டுதான் ஓடியிருப்பான். பின்விளைவுகள் எதையும் யோசித்திருக்கமாட்டான். அத்துடன் அதனால் தன்னுயிர் போயிருந்தாலும் கவலைப்பட்டிருக்க மாட்டான். அல்லது எனக்கொரு ஆபத்து வந்து நான் உயிழந்திருந்தாலும் என் மனைவி பிள்ளைகளை அவன் காப்பாற்றியிருப்பான். அப்படிப்பட்டநண்பனின் குடும்பம் இப்ப எங்கையிருந்து சீரழியுதோ பொம்பிளைப்பிள்ளைகள் என்ன பாடுபடுதுகளோ. போராளிக்குடும்பம் என்றதால் எப்படியும் சித்திரவதைப் பட்டிருப்பார்கள். மகிழினியும் இளம்பெண். அழகியும்கூட. என்னென்ன ஆபத்துகளெல்லாம் வந்திச்சோ எப்படி அதனைத் தாண்டினார்களோ. அல்லது இன்னும் கஷ்டப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறார்களோ. நெஞ்சு விம்மித் தணிந்தது. இதிலிருந்து தான் எப்படி மீளப்போகிறேனோ என்று எண்ணி எண்ணித் தவித்தான்.*

*நாட்கள் நகர அவனது நண்பர்களில் ஒருவனிடமிருந்து மகிழினியையும் பிள்ளைகளையும் பற்றிய செய்தி ஒன்று வந்தது. வாழவழியின்றி ஒரு தட்டி வீட்டுக்குள் பட்டினியுடன் பிள்ளைகளுடன் அல்லாடுவது அறிந்து இனி என்ன செய்து அவர்களின் வாழ்வை செம்மைப்படுத்தலாமென்று யோசிக்க*

லானான். அறிவின் பிள்ளைகள் இனி என் பிள்ளைகள். எனக்கு இனி நான்கு பிள்ளைகள். மகிழினி என் தங்கை. அவர்களை எப்படியாவது எவ்வளவு பணம் செலவழித்தாவது இங்கு கூப்பிடவேணும் அப்படி முடியாவிட்டால் அங்கிருந்தே அவர்கள் படித்து முன்னுக்கு வரச்செய்ய வேணும். முடிவெடுத்தவுடனேயே தன் மனப்பாரம் குறைவதாக அவனுக்குத் தோன்றியது.

அந்த வார விடுமுறையில் தொலைபேசியில் மகிழினியுடன் தொடர்புகொண்டபோது அவள் கண்ணாடியாய் உடைந்து நொறுங்கினாள். "நேசனண்ணா உங்கடை நண்பன் மண்ணுக் குள் விதையாய் போயிட்டாரண்ணா. நீங்க பக்கத்திலிருந் திருந்தால் எப்படியும் காப்பாற்றி இருப்பீங்க. எங்களுக்கு அதுக்கு குடுத்துவைக்கேலையண்ணா. பிள்ளைகள் அப்பா என்ற உறவைத் தெரியாமலே வாழவேணுமென்ற விதியாக்கும். மகிழினியின் ஒவ்வொரு வார்த்தையும் நெஞ்சைக் கீறி எடுத்தது. நாங்க படாதபாடு படுகிறமண்ணா. நீங்க உயிரோடு இருந்திருந்தால் எப்பவோ எங்களுடன் கதைச்சிருப்பீங்களென்று அடிக்கடி நினைப்பன். நல்லகாலம் உங்களுக்கு ஒன்றும் நடக்காமல் தப்பினது. அதுமட்டுமில்லை வெளிநாடு போனது. அல்லது என்னைப்பிடித்து சித்திரவதை செய்ததுபோல் நீங்களும் அகப்பட்டு உள்ளேயே செத்திருப்பீங்க. நீங்க இருக்கிறீங்க என்று கேள்விப்பட்டபோது எவ்வளவு சந்தோசப் பட்டன். தேவி எப்படி இருக்கிறா. பிள்ளைகள் எப்பிடியிருக் கினம். பிள்ளைகள் எங்களை மறந்திருப்பினம். ஐந்து வருஷமாயிட்டுது. அப்ப உங்கடை நவீனுக்கு 4 வயதிருக்கு மென்ன. தேவி சின்னக்குட்டியை வயிற்றில் வைத்திருந்தா. அது என்ன குழந்தையண்ணா. நீங்க விரும்பினமாதிரி பொம்பிளைக் குழந்தைதானே. படபடவென்று பேசிய மகிழினி யின் பேச்சால் மனம் இலேசாகிப் போனது போலிருந்தது.

உங்களைப் பிடித்தார்களா? கொடுமைப்படுத்தினார்களா? எப்ப விட்டார்கள்? அடுக்கடுக்காய் கேட்ட கேள்விகளுக்கு அழுதபடி பதிலளித்தாள். இரண்டு வருஷம் உள்ளை வைத்திருந்தார்

களண்ணா. பிள்ளைகள் வெளியிலிருந்து எவ்வளவு கேவலப்பட ஏலுமோ அவ்வளவு கேவலப்பட்டிட்டுதுகள். உயிரைக் கையிலை பிடிச்சுக்கொண்டு நின்ற என் பிள்ளைகளை உறவுகளும் திரும்பிப் பார்க்காமல் யாரோ ஒரு புண்ணியவான் சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் சேர்த்து விட்டிருக்கினம். நல்ல காலம் வெளியிலிருந்து சீரழியாமல் அந்தமட்டுக்குத் தப்பீற்றினம். உள்ளுக்குள் நான் பட்ட சித்திரவதை கொஞ்சநஞ்சமில்லை. இப்படியும் ஆண்களால் பெண்களைக் கேவலப்படுத்த முடியும் என்று அப்பொதுதான் விளங்கியது. அவர்களும் ஒரு தாய்க்குப் பிறந்து அக்கா தங்கைகளுடன் வாழ்ந்து மகள்களுக்கு தகப்பனாய் இருப்பவர்கள்தானே. ஆண் என்ற வார்த்தையைக் கேட்டாலே உடம்பெல்லாம் பற்றி எரியுதண்ணா. அடைத்து வைச்சு பெண்களைக் கேவலப்படுத்துவது எவ்வளவு கீழ்த்தர மானது கேவலமானது. நான் மட்டுமில்லையண்ணா என்னைப் போல பிடிக்கப்பட்ட எல்லாப் பெண்களுமே சித்திரவதை அனுபவித்தம். அவளுடைய மனதில் உள்ளதையெல்லாம் காட்டித் தீர்த்துவிட்டாள். நேசனும் கவலை எல்லாம் கொட்டித் தீர்த்துவிடட்டுமென்று கேட்டுக் கொண்டிருந்தான்.

கடைசியில் தங்கச்சி உங்களைக் கண்டுபிடிக்குமட்டும் நான் எப்படிப்பட்ட மனஉளைச்சில் இருந்தன் தெரியுமா? இனிக் கவலைப்பட வேண்டாம். பிள்ளைகளுக்குச் சொல்லவும் மாமா நானிருக்கிறனென்று. இங்கு கூப்பிடப் பார்க்கிறன். முடியாட்டால் நான் மாதாமாதம் பணம் அனுப்புவன். பிள்ளைகளை நல்லாய் படிப்பிச்சிடும். அது ஒன்றுதான் தங்களை நிலைநாட்ட ஒரேவழி. எல்லாவற்றுக்கும் நான் இருக்கிறன். இந்த அண்ணா பக்க பலமாயிருப்பன். கவலையைவிட்டிடுங்கோ. அறிவு செய்ய வேண்டியதெல்லாம் நான் செய்வன். பிள்ளைகளைக் கடிதம் எழுதச் சொல்லுங்கோ பேசிமுடித்தவுடன் நெஞ்சுப்பார மெல்லாம் இறங்கி செய்யத்தவறிய கடமைக்கு பரிகாரம் செய்யக் கிடைத்த சந்தர்ப்பத்துக்கு நன்றி கூறினான். கணவனின் முகத்திலேற்பட்ட தெளிவையும் வெளிச்சத்தையும் பார்த்து நிம்மதிப் பெருமூச்சு விட்டாள் தேவிகா.

**வணக்கம் (சுவிஸ்) 2018)**

# பசுமையை நோக்கி

**இலட்சக்கணக்கான** பஞ்சுப்பொதிகள் வானில்கொட்டிக் கிடக்கும் அழகை இரசித்தவன் மனது சஞ்சலத்துடன் அமைதியற்றிருந்தது. கோகுலுக்குத் தெரியும் தான் செல்லும் பாதையிலுள்ள இடையூறுகள். வளங்கொழிக் கும் உல்லாசபுரி அமெரிக்காவில் வாழ்ந்த வாழ்க்கையை உதறிவிட்டு கரடுமுரடான பாதையில்தான் பயணிக்கப் போவது தனக்கு மகிழ்ச்சியைத் தந்தாலும் காதல் மனைவி, பிள்ளைகள், தாய்தந்தை, எல்லோரையும் நினைத்துப் பார்த்தான். வான்பரப்பில் விமானம் பறந்து கொண்டிருந்தது. பக்கத்திலிருந்த மனைவி அபிநயா கண்களைமூடி உட்கார்ந்திருந்தாள். நித்திரை கொள்கி றாளா அல்லது தெரிந்தே ஒரு மோசமான பாதையைத் தேர்ந்தெடுத்த கணவனுடன் எப்படிப் பயணிப்பது என்று சிந்திக்கிறாளா தெரியவில்லை குழப்பமனமின்றி கோகுல் தன் சிந்தனையை ஓடவிட்டான். விமானப் பயணத்தைப்போல சிந்திக்க ஏதுவான இடம் வேறெங்கு மிருப்பதாக அவன் நினைக்கவில்லை.

பத்துவருட சுகபோகவாழ்க்கையை உதறித்தள்ளி விட்டுத் தாயகம் செல்கின்றான். “என்னுடைய இலட்சியம் சரி. அதையடைய நான் எவ்வளவு கஷ்டத்தையும் தாங்கலாம். ஆனால் அபிநயாவை வலிந்து இதில் இழுத்தது மனதைச் சங்கடப்படுத்து கிறதே. ஆயிரம் தடவை அபிநயாவிடம் மன்னிப்பு கேட்டுவிட்டேன். ஆனால் இன்னும் மனதின் ஒரு ஓரத்தில் வலிக்குதே “மெல்ல அபிநயாவின் கையை வருடினான். அவள் நித்திரை போலும். கணவன் தோளில் தலைசாய்த்து நிம்மதியாக உறங்கிக்கொண்டிருக் கிறாள். கோகுலுக்கு அவளது இந்த நிம்மதி நிலைக்க வேண்டுமேயென்று மனம் உறுத்தியது. “இன்னும்

அப்பா அம்மாக்குத் தெரியாது நான் ஒரேயடியாய் அமெரிக்காவை விட்டுவருவது. ஏதோ விடுமுறைக்கு வருவதாக நினைத்து சந்தோஷப்படுகிறார்கள். இனி அப்பா என்ன சொல்லப்போகிறாரோ? முடிவெடுத்தாச்சு கிளம்பியும் வந்தாச்சு. இனி எல்லாவற்றையும் எப்படிச் சமாளிக்கிறதென்று தான் யோசிக்கவேணும்“

அமெரிக்காவில் பட்டம், பதவி, அந்தஸ்து, பங்களா என்று வசதியுடன் வாழ்ந்தாலும் தான் தன் கடமையைத் தன் தாய்நாட்டுக்குச் செய்யவில்லையே என்று மனந்தடுமாறிக் கொண்டேயிருந்தான். விவசாயப்படிப்பில் பட்டம் வாங்கிய போது இரசாயனக்கலப்பற்ற நல்ல விவசாயத்தை தன் நாட்டுமக்களுக்கு அறிமுகப்படுத்தி யாவருமே ஆரோக்கிய வாழ்வு வாழவேண்டுமென்றே எண்ணியிருந்தான். ஆனால் நாட்டுச்சூழல் உயிர்ப்பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாய் அமைய எல்லாக்கனவுகளும் தடம்புரள அமெரிக்கா கைநீட்டி அழைக்க விரைந்தான் அன்று. ஆனால் இந்தப் பத்து வருடங்களும் குற்ற உணர்ச்சியுடனே தான் அவனால் வாழ முடிந்தது. தாயக உறவுகள் தவிக்கதான் மட்டும் ஓடோடி வந்தது தப்பாய் அவனுக்குத் தோன்றியது. தாய்நாடு தந்த கல்வி அங்கு பயன்படாமல் ஏதோ ஒரு பணக்காரநாட்டுக்குப் பயன்படுவது சரியாக அவனுக்குத் தோன்றவில்லை. வசதி ஆடம்பரமென்று தானும் மற்றவர்களைப்போல மயங்கிவிட்டேனோ என்று அடிக்கடி தன்னைக் கேட்டுக்கொள்வான். போர் முடிவுற்று இப்போதுள்ள சூழலில் விவசாயத்தை மேம்படுத்துவது தன்னைப் போன்றவர்களின் கடமையென்பதை உணர்ந்தான். தம் தொழிலுக்காய் செயற்கைப் புன்னகையை இதழ்களில் படரவிட்டு “வுட் யு லைக் எ ரீ ஓ கொஃபி“ கேட்டவண்ணம் அருகில் வந்த விமானப்பணிப்பெண்ணை நோக்கி “நோ தாங்ஸ்” என்று மெல்லிய குரலில் கூறிவிட்டு சிந்தனையைத் தொடர்ந்தான் கோகுல்.

முதலில் பக்குவமாய் அப்பாக்கு விளங்கப்படுத்த வேணும். எங்கடை நாடு பசுமையை இழந்து இரசாயன அழுக்குகளால்

*நிரப்பப்பட்டுத் தன் பொலிவைத் தேடிஅழுகிறது. அம்மா விளங்கிக்கொள்வார். அவர்தான் என்னை மரங்களை நேசிக்கப் பழக்கியவர். நான் சிறுவனாயிருந்தபோது அம்மா முருங்கை மரத்திலிருந்து முருங்கைக்காய் பறிக்கப்போய் அது நேராக வந்து அம்மாவின் கண்ணைப் பதம் பார்த்தது. பள்ளியால் வந்து அம்மாவைப் பார்த்து துடிதுடித்துப் போனது இன்னுமே மறக்கவில்லை. இதன்பிறகு நான் முருங்கைக்காய் சாப்பிடுவதையே விட்டுவிட்டேன். அது அறிந்த அம்மா "காய் கீழே வரும்போது பார்த்துக் கொண்டிருந்தது என்ரை பிழை. பிடுங்கினவுடன் நான் குனிந்திருக்க வேண்டும். அல்லது தள்ளி நின்றிருக்க வேண்டும. இப்படி ஓரறிவு, ஈரறிவு உள்ள புல், பூண்டு, மரங்களோடையோ கோவிக்கிறது எந்தவிதத்தில் ஞாயம்? பயிர்பச்சைகளை ஒருநாளும் வெறுக்கக்கூடாது. எங்கடை உணவுகள் அவை. இயற்கையை நேசிக்கவேணும். மரங்கள் இல்லையென்றால் மழை ஏது? விளைச்சல் ஏது? காய்கறிச்செடிகள் எல்லாம் கடவுள் மாதிரி என்று கூறி என் தப்பெண்ணத்தை மாற்றியவர் அம்மா. செடிகளிலிருந்து ஓர் இலையைக்கூட வீணாக ஒடிக்க விடமாட்டார். சிவபுராணம் சொல்லிக்கொண்டு தான் செடி களுக்கு தண்ணீர் விடுவா. செடிகளும் தளதளவென்று வளர்ந் திடும். வீட்டுப் பின்பக்கத்தில் காய்கறித்தோட்டம் வைச்சு எங்களையும் தண்ணீர் ஊற்றப் பண்ணி காய்த்துத் தொங்கும் வெண்டிக்காய், கத்தரிக்காய், தக்காளி, மிளகாய் என்று எவ்வளவு மகிழ்ச்சியுடன் பறித்து சமைக்க குடுப்போம்.*

*அம்மா மரஞ்செடிகளை எவ்வளவு நேசித்தார் என்பது பிள்ளைகள் எங்கள் எல்லோருக்கும் தெரியும். எங்கடை அம்மா வுக்கும் பெரியம்மாவுக்கும் ஒரு பெரிய காணியை அவையின் பெற்றோர் கொடுத்திருந்தார்கள். அம்மாவுக்கு பதின்மூன்று வயதாயிருந்தபோதே தாயும் அடுத்த வருடமே தந்தையும் இறக்க பாட்டாவின் துணையில் வாழ்ந்தார்கள். நாங்க சிறியவர் களாயிருந்தபோது பெரியம்மாவை வேறிடத்தில் வாழ்ந்து வந்தார்கள். எப்பவாவது ஒருமுறை வந்து ஓரிரு நாட்கள் நின்று விட்டுப்போவார்கள். ஒருமுறை வந்தபோது பெரியப்பா*

எங்கள் பின்புறத்தில் வளர்ந்து மணம் பரப்பிக்கொண்டிருந்த மற்றாஸ் மல்லிகைச்செடிகளையும், தேர்போன்று பூக்கும் தேர்ச் செடிகைளையும் முற்றாக வெட்டிக் கொட்டிவிட்டு அந்த இடத்தில் மரவள்ளியும், வாழையும் வைக்கப்போறன் என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார். அன்று முழுக்க அம்மா சாப்பிட வேயில்லை. அந்தச் செடிகளை நினைத்துக் கண்கலங்கிக் கொண்டேயிருந்தார். "பாட்டா வைத்த செடிகளவை. இவ்வளவு காலமும் பூத்துச் சிரித்து பாட்டா என்னோடு இருப்பதுபோலவே இருந்தது" என்று சொல்லிச் சொல்லிக்ள கவலைப்பட்டா. வெட்டியெறியப்பட்ட செடிகளைத் தொட்டுத் தொட்டுக் கண் கலங்கினா. பூக்களோடு செடிகளை ஒருநாளும் வெட்டக்கூடா தென்ற மென்மையான உணர்வு அம்மாவுக்கு. எங்களுக்கும் மற்றாஸ் மல்லிகை என்றால் மிகவும் பிடிக்கும். அதன் வாசனை வீடு தாண்டி அடுத்த வீடெல்லாம் மணக்கும். ஒரே கொத்தாக நிறைய பூக்கள். அந்தச் செடி பலரும் ஆசைப்பட்டு கொண்டுபோய் வைத்த போதும் உண்டாக்கவே முடியவில்லை. அந்தச் செடிக்கும் அம்மாவுக்கும் பிரிக்க முடியாத ஒரு உறவு. எங்களுக்கும் கவலையாக இருந்தது. இப்படிச் சொல்லாமல் கொள்ளாமல் எல்லாச் செடியையும் அழிச்சிட்டாரே. தெரிந்திருந்தால் வேரோடு சில செடிகளைப் பெயர்த்தெடுத்து வேறிடத்தில் வைத்திருக்கலாம். அந்த இடத்தில் பெரியப்பா வைத்த வாழைக்கன்றுகளும் காய்க்க வில்லை. மரவள்ளிக்கிழங்கும் வரவில்லை. அக்கா சொன்னா மற்றாஸ் மல்லிகை சாபம் போட்டிருக்குமென்று. அப்படி செடிகளை நேசித்த அம்மா என்னைப் புரிந்து கொள்ளுவா. மனம் சமாதானப்பட்டது.

அப்பாவும் என் உணர்வுகளைப் புரிந்து கொள்வார். ஆனால் நான் இந்தப் புது முயற்சியில் வெற்றிபெறுவேனா கஷ்டப்ப டுவேனா என்று கவலைப்படுவார். பிள்ளைகளின் படிப்பு எதிர்காலம் என்பதைப் பற்றித்தான் கோகுலுக்கு கொஞ்சம் யோசனையாக இருந்தது. அபிநயா கவலைப்படுவதெல்லாம் சொகுசு வாழ்க்கைக்கு வழக்கப்பட்ட தங்கள் பிள்ளைகள் யாழ்ப்பாணத்தில் எப்படி சமாளிப்பார்கள் என்பதுதான்.

*சிறுவயதென்றால் பழகிவிடுவார்கள். இது இரண்டுங்கெட்டான் வயது. மகன் சரணுக்கு பதின்மூன்று வயது. மகள் சரண்யா பதினொரு வயதில் இருந்தாள். எப்படிச் சமாளிப்பார்களோ தெரியவில்லை. என்னுடைய முடிவைச் சொன்னவுடன் முதல் எதிர்த்தவன் சரண்தான். "வை யூஸ்பொயில் அவர் ஃவியூச்சர்" என்று போர்க்கொடி தூக்கியவன் எத்தனையோ நாட்களின் விவாதங்களின் பின் தந்தையின் கருத்துக்களை ஏற்றுக்கொண்டான். சரண்யா அப்பா பிள்ளை. "யுவர் விஷ் அப்பா" என்று அப்பா எது செய்தாலும் தப்பு இருக்காது என்று நம்புபவள். அவளின் நம்பிக்கைக்கு பாதகம் வராமல் என்னால் என்னுடைய ஆசையை நிறைவேற்றுவதோடு அவர் களுக்கு நல்ல எதிர்காலத்தையும் ஏற்படுத்திக் கொடுக்க முடியுமா? மனம் சிலநேரங்களில் தடுமாறினாலும் "நான் எடுத்தது சரியான முடிவு. பிள்ளைகளுக்கு என்னால் நல்ல எதிர் காலத்தை தர முடியும். ஒரு காலத்தில் என் முடிவை அவர்கள் பாராட்டுவார்கள் அப்பா சரியான நேரத்தில் சரியான முடிவுதான் எடுத்திருக்கிறாரென்று" என்று மனதைத் தேற்றினான்.*

கோகுலின் மனம் திட்டங்கள் வகுப்பதிலீடுபட்டது. நீண்டநேர விமானப்பயணம் திட்டங்கள் போடுவதற்கு ஏற்றதாகவே இருந்தது. முதலில் தனக்கும் அபிநயாவுக்கும் விவசாயத் துறையில் வேலை எடுத்துவிட வேண்டும். அவர்கள் தகுதிக்கு வேலை எடுப்பது சிரமமாக இருக்காது என்று நம்பினான். அதன் வழியாகத்தான் விவசாய நிலங்களில் தன் திட்டங் களைச் செயலாற்ற முடியும். இரசாயனக்கலவை கலக்காத பயிர்களை பயிரிட்டு நல்ல காய்கறிகளைப் பெறச் செய்வதோடு அதனால் அவஉகள் இலாபமீட்டவும் வழி செய்ய வேண்டும். எடுத்தவுடன் விவசாயிகளைத் தன் பக்கம் திருப்புவது கடினமாயிருக்கும் என்பதைப் புரிந்துகொண்டான். அமெரிக்கா வில் கணினித்துறையில் வேலை பார்த்த ஒரு இந்தியன் அதை விட்டுவிட்டு இந்தியா சென்று ஒரு கிராமம் முழுவதும் இயற்கை உணவு தயாரிப்பு அக்கிராமப் பெண்களுக்கு கணினிப்படிப்பு என்று எவ்வளவோ சாதித்திருப்பதை கேள்விப் பட்ட பிறகே கோகுலுக்கு இந்த ஆசை வந்தது. தன்னுடைய

கனவுகளை எடுத்துச்செல்ல வழி தெரியாமல் நின்ற கோகுலுக்கு அச்செய்தி ஒளி சிந்தி வழிகாட்டியது. நெஞ்சு நிறைய நம்பிக்கையுடன் விமானத்திலிருந்து இறங்கினான்.

இரசாயனக்குண்டுகளும் நச்சு வாயுக்களும் கலந்த எம் மண்ணை முதலில் சுத்தமாக்க வேண்டும். நச்சு நிலத்தில் நல்ல விவசாயத்தைச் செய்ய முடியாது. முதலில் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு கொண்டு வருவதுடன் அவர்களுக்கு விவசாயக்கடனுதவிக்கு வழி செய்ய வேண்டும். மிகப்பெரிய சவால்களெல்லாம் தன் முன்னால் விரிந்திருப்பதை அவனால் உணர முடிந்தது. பிள்ளைகளின் ஆங்கிலக்கல்விக்கு முதலில் வழி செய்ய வேண்டும். ஆங்கிலக் கல்வியை விடுத்து இந்த வயதில் தமிழில் படிப்பது கடினமாகவேயிருக்கும். அமெரிக்கா விலும் அவர்கள் தமிழைப் புறந்தள்ளாமல் படித்து வந்தது இப்போது உதவியாக இருக்கப் போகிறது என்று பெருமிதம் கொண்டான். எம்மின மக்களின் மனங்களைப் புரிந்து கொள்ளவும் அவர்களோடு சேர்ந்து வாழவும் தன் பிள்ளை களுக்கு ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கப் போவதையெண்ணி அவனுக்கு மகிழ்ச்சியாகவே இருந்தது. அதுமட்டுமல்லாமல் தன் பெற்றோரும் அபிநயாவின் பெற்றோரும் தங்கள் முதுமைக்காலத்தில் பேரப்பிள்ளை களுடன் கழிக்கக்கூடிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கவும் முடியுதே. அவர்கள் மட்டும் மகிழ்வாக இருப்பார்களென்று சொல்லமுடியாது. தன்னுடைய பிள்ளைகளும் அவர்களிட மிருந்துஎத்தனையோவாழ்க்கைப்பாடங்களைஅனுபவரீதியாகப் பெறத்தான் போகிறார்கள். “எனக்கு கொடுத்து வைக்கவில்லை. பேரன் பேத்திகளுடன் வாழுவதற்கு. பிள்ளைகளுக்கென்றாலும் இந்தச் சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறதே. ஆரம்பத்தில் என் மேல் கோபப்பட்டாலும் போகப் போக நான் செய்ததைப் பாராட்டவே செய்வார்கள்” என்று திருப்திப்பட்டான்.

அவன் எதிர்பார்த்தது போலவே தந்தை முதலில் அதிருப்திப்பட்டாலும் இரண்டொரு நாளில் “உன்னுடைய இலட்சியம் நல்லதுதான் மகன். இங்கு படித்த பிள்ளைகள்

*இந்த நாட்டுக்குச் செய்யாமல் வேறு யார் செய்கிறது? வேறு நாட்டுக்காரனா வந்து செய்யப் போகிறான்? ஆரம்பத்தில் எல்லாம் கொஞ்சம் கடினந்தான். போகப்போக எல்லாமே சரியாகி எங்கடை மக்கள் நல்ல உணவுகளை உண்ண வழி வகுக்கும். அதோடை பிள்ளைகளும் அமெரிக்க கலாச சாரத்திலை சீரழிந்திடாமல் நீ எடுத்த முடிவு சரிதான் மகன். பிள்ளைகளும் உறவுகள் சேர்ந்து வாழ்தலின் அன்னியோன்னியம் எல்லாம் பழகுவினம். தாங்கள் என்று தனித்து வாழாமல் உறவுகள் மக்களின் கஷ்டங்கள் எல்லாம் பார்த்து உணர்வினம். நீ சொன்னவுடன் எனக்குப் பிடிக்கேலைத்தான். பிறகு அம்மாவும் எடுத்துச் சொன்னா.அம்மாக்கு பிள்ளைகள் கிட்ட வந்தது பெரிய சந்தோஷம். அக்காவும் இலன்டனோடை போயிட்டா. இருந்திட்டு வாறதோடு சரி. உன்னுடைய பிள்ளைகளும் எங்களைத் தூரமாக்கித் தள்ளி நிற்காமல் ஒட்டி உறவாடினம். அன்பான குழந்தைகள். இந்தச் சந்தோஷங்களையெல்லாம் நாங்க இழந்திருப்பம். இப்ப நீ வந்தது நாட்டுக்கும் நல்லம். வீட்டுக்கும் நல்லம். என்று திருப்திப்பட்டார். நண்பர்கள் சிலரால் அவனது வருகையும் நாட்டிலேயே இருக்க நினைத்த முடிவும் ஜீரணித்துக்கொள்ளவே முடியாமலிருந்தது. எங்கடா வெளிநாடு போவம் அதுவும் அமெரிக்கா அதை விட்டிட்டு. இங்கு எத்தனை பேர் வெளிநாடு போகவேண்டும் என்ற கனவில் இருக்கிறார் கள். நீங்க என்னடாவென்றால் எல்லாவற்றையும் உதறித் தள்ளிப்போட்டு மண்ணைக் காக்க ஓடோடி வந்திருக்கிறீங்க. எப்படியடா உன்ரை மனைவி சம்மதித்தா? என்று கேள்விகேட்டு துளைத்துவிட்டார்கள். சில நண்பர்கள் தங்களுக்கும் இந்த மண் பாழாகின்றதே என்ற மனஉளைச்சல் இருந்ததாகவும் வழி தெரியாமல் வெறுமையாகப் புலம்பிக் கொண்டிருந்ததாகவும் கூறினார்கள். அவர்கள் தங்கள் ஒத்துழைப்பைத் தருவதாக வாக்குறுதியளித்தது கோகுலுக்கு பெரும் பலத்தை அளித்தது.*

*வெகுவிரைவிலேயே கோகுலுக்கும் மனைவி அபிநயாவுக்கும் நல்ல வேலை கிடைத்தது. பிள்ளைகளிள் கல்வியை உத்தேசித்து அபிநயா யாழ்ப்பாணத்திலும், கோகுல் வவுனியா விலும் வேலைக்கமர்ந்தார்கள். கோகுலின் அப்பா வங்கி*

*மேலதிகாரியாக இருந்து சமீபத்தில்தான ஒய்வு பெற்ற படியால் அவருக்குத் தன் நண்பர்கள் மூலம் வங்கியில் கடன் வசதிகள் செய்து கொடுப்பது இலகுவாக இருந்தது. அபிநயாவின் தந்தையும் விவசாயத்துறை இலாகாவில் உயர்பதவி யிலிருப்பது அவர்களுக்குப் பலவகையிலும் உதவியாகவே இருந்தது. அவர்களது இலட்சியப் பயணம் முன்னோக்கிச் செல்ல பெரியவர்களின் உதவியும் ஆசீர்வாதமும் துணை புரிந்தன. வளம் இழந்து தன் பொலிவை இழந்து கொண்டிருக்கும் மண் புதுப்புது இயற்கை முறைகளினால் பொலிவு பெற்று ஆ ரோக்கியமான உணவுப் பயிர்களைப் பயிரிட ஏதுவாக மாறத் தொடங்கியது. எவ்வளவோ சிரமத்தின் மத்தியில் பகுதி பகுதியாகத் தம் வேலைத்திட்டத்தை ஆரம்பித்து பிறந்த பொன்னாட்டுக்கு சேவையாற்றினர் கோகுல் தம்பதியினர். அங்கு படிக்கும் இளையவர்களும் ஒத்துழைப்பு நல்கியது அவர்கள் கடமையாற்ற பெரிதும் உதவியாக இருந்தது. ஈழமண் பசுமையை நோக்கி தன் கரங்களை விரிக்கத் தொடங்கியது.*

**தாய்மடி (பிரான்ஸ்) 2019**

# கல்யாணக் கனவுகள்

**நடுப்பகலில்** *சூரியனின் அதீத ஒளி பெல்வி ஆற்றில் பட்டு வைரங்களாக ஜொலிக்கின்றன. இரவில் வானத்தை குத்தகைக்கு எடுத்து உலா வரும் அத்தனை நட்சத்திரங்களும் ஆற்றுக்குள் குடி புகுந்து விட்டனவோ எனத் தோன்றியது. அலைகளூடே ஜொலிக்கும் சூரிய ஒளி கண்ணைப் பறித்தது சூரியனின் மாயக்கரங்களால் மட்டுமே இப்படியொரு அற்புதத்தை நிகழ்த்த முடிகிறது போலும். வேறு இடங்களிலென்றால் ஆறு இருளில் மூழ்கி நிற்கும் வேளைகளில் வெறும் அலை ஓசைகளே அதன் இருப்பை பறைசாற்றிக் கொண்டு இருந்திருக்கும். ஆனால் சுவிசில் ஆறுகள் எப்போதுமே இரவோ பகலோ மிக அமைதியாக எந்தவித ஓசையுமின்றி கட்டுப்பாடாக வளர்க்கப்பட்ட கன்னிப்பெண்போல ஓடிக்கொணடிருக்கும். சலசலப்பு சத்தம் இல்லாமல் ஆற்றுநீர் தன்மேல் நீந்தும் அன்னங்களை மெதுவாகத் தாலாட்டிக் கொண்டிருந்தது. தூரத்தில் தெரிகிற மலைகள் சூரியஒளியில் நிமிர்ந்து நின்றன. இந்த அற்புத அழகை இரசித்த முகுந்தன் நாளைக்கு வரப்போகும் தன் வருங்கால மனைவியை நினைத்து மகிழ்ந்தான். நாளைக்கு இந்தநேரம் வந்துவிடுவா. இனிமேல் நான் ஜோடியில்லாமல் தனிமையில் இந்த பெல்வியில் சுற்றத் தேவையில்லை. நான் இரசிப்பவற்றை கூறி மகிழ ஒரு துணை எனக்கே எனக்கென்று வந்து விடுவாள். அம்மா கூறியதை நினைத்து தனக்குத்தானே சிரித்தான். அவ இன்னும் பழைய காலத்திலேயே இருக்கிறா. கல்யாணம் நடக்குமட்டும் அக்கா வீட்டில் கொண்டு போய் விடு. அங்கே நிற்கட்டும் என்றா. இந்தக் காலத்தில் எல்லாம் வந்தவுடனேயே மாப்பிள்ளை வீட்டில்தான் நிற்கிறது. ஏயார்போர்ட்டிலிருந்து நேரே என்வீட்டுக்கேயே கூட்டிப் போயிட வேண்டும். அதற்காக எங்கள் பண்பாடு தெரியா–*

மல் நடந்த கொள்வேனா? எனக்கு வரப்போகிற மனைவியை எப்படி கௌரவமாக நடத்த வேண்டு மென்று தெரியாதா எனக்கு? அக்கா என் சொந்த அக்கா இல்லை. பெரியம்மாவின் மகள்.வீணாக ஏன் அவர்களுக்கு கஷ்டம் கொடுப்பான். கூடிய வாடகைக்கு வசதியான வீடு எடுத்தது எதற்கு? போட்டோவில் பார்த்த மாதிரி அழகாக இருப்பாவோ? அம்மா சொன்னா நல்ல குடும்பப் பாங்கான வசீகரமான பிள்ளை. நல்லபடியாக நீங்க இரண்டுபேரும் வாழ்ந்தால் போதும்.

மதுரா பெயரே எவ்வளவு இனிமை. சொல்லச் சொல்ல இனிக்கிறதே. கல்யாணம் முற்றான நாளிலிருந்து ரெலி போனில் கதைத்துக் கதைத்து பலகாலம் பழகியது போல ஒரு உணர்வு. எப்படியெல்லாம் வாழவேண்டும் என எவ்வளவு பேசிக்கொண்டோம். என்னுடைய விருப்பங்கள் அவவுக்கும் அவவுடைய விருப்பங்கள் எனக்கும் எப்படியெல்லாம் பரிமாறிக் கொண்டோம். எங்கள் கற்பனையெல்லாம் நிஜமாகிற நாள் வந்து விட்டது. எப்படி மனைவியை வைத்திருக்க வேண்டும். பலப்பல நினைவுகள் முட்டி மோதின. இவ்வளவுநாள் காத்திருந்தது பெரிசில்லை. இந்த ஒருநாள் போவது எவ்வளவு கஷ்டமாக இருக்கிறது. மதுராவைக் கூப்பிடுவதற்கு ஸ்பொன்சர் லெட்டர் மற்றும் தேவையான எல்லாம் அனுப்பி விசா கிடைக்க எடுத்த ஆறுமாதமும் பெரிதாகத் தெரியவில்லை அடிக்கடி கதைப்பதால் ஏதோ பக்கத்தில் இருப்பதுபோல் பிரமை. ரெலிபோன் காசு நிறையப் போனாலும் அது ஒரு பொருட்டாகவே தோன்றவில்லை. இனி எல்லா விடயங்களுக்கும் தனியாக யோசிக்கத் தேவையில்லை. எனக்கே எனக்கானவள் வரப் போகிறாள். எனது நண்பர்களைப்போல நானும் இனி ஜோடியாக சுற்றலாம். இனிக்கும் நினைவுகளுடன் பெல்வியிலிருந்து திரும்பினான்.

அடுத்தநாள் வழக்கத்தைவிட நேரத்திற்கே எழுந்தவன் வீட்டைக் கொஞ்சம் அழகாக ஒழுங்குபடுத்திவிட்டு பால், முட்டை போன்ற அத்தியாவசியப் பொருட்கள் வாங்கும்போது மதுரா தனக்கு சீஸ் விருப்பம் என்று கூறியது ஞாபகதிற்கு

வரவே இரண்டு மூன்றுவிதமான சீஸ்வகைகளை வாங்கினான். மதுராவுக்காக அலுமாரியில் வாங்கி அடுக்கி வைத்திருக்கும் ஆடைகளை ஒருமுறை நோட்டம் விட்டான். வந்த இரண்டு கிழமைக்குப் பிறகு டொய்ச் கிளாசில் சேர்த்துவிட வேண்டும். கெதியாய் பாஷை பிடித்துவிட்டால் ட்ரைவிங் கிளாசுக்கு அனுப்பி ட்ரைவிங் லைசென்ஸ் எடுத்துவிட வேண்டும். கெதியில் ஒரு சின்னக் கார் வாங்கிக் கொடுத்துவிட வேண்டும். அதற்காகவே இலங்கையில் ட்ரைவிங் படிக்கச் சொன்னான். வேலைக்கு விரும்பினால் போகட்டும். அல்லது வீட்டிலேயே சுகமாக இருக்கட்டும். எல்லாமே மதுராவின் விருப்பம்.பூப்போல மதுராவை நான் வைத்திருக்க வேண்டும். கல்யாணம் முற்றான நாள் தொடக்கம் மதுராவுக்குப் பணம் அனுப்பத் தவறியதே இல்லை.

அவசரமாகக் குளித்து பிளேன் வருவதற்கு ஒருமணி நேரத்திற்கு முன்பாகவே எயார்போர்ட் சென்றுவிட்டான். அங்கும் இருப்புக் கொள்ளாமல் அங்குமிங்கும் நடந்தவன் எத்தனை மணித்தியாலம் பிளேனுக்குள் இருந்துவிட்டு வருபவளுக்கு தண்ணீர் தேவைப்படுமென்று நினைத்து தண்ணீர் போத்தலும். ஒரு ஒறேன்ஜ் டிரிங்கும் வாங்கிக் கொண்டான். அறிவிப்புப் பலகையை அடிக்கடி பார்த்தவன் லான்டட் என்றதைப் பார்த்து பரபரப்பு அடைந்தான். கடைசியில் அவனதுரென்ஷனுக்குமுற்றுப்புள்ளிவைப்பதுபோல் மதுரா தன் லகேஜைத் தள்ளிக்கொண்டு வந்து சேர்ந்தாள். அவள் போட்டோவில் இருந்த அழகோடு இருக்கவில்லை என்றாலும் எனக்கானவள் என்பதில் மகிழ்ந்து அவளிடமிருந்து லகேஜைத் தான் வாங்கித் தள்ளிக் கொண்டு; “எப்படி பயண மெல்லாம்? வெல்கம் ரூ சுவிற்சலன்ட்; என்று அவளை மகிழ் வுடன் வரவேற்றான். அவளது பார்வை அங்குமிங்கும் அலை பாய்வதைப் பார்த்து “யாரையும் தேடுகிறீரா?” ஓம் ஒரு சின்ன பார்சல் தந்துவிட்டவை. கொடுக்க வேணும். அதுதான் பார்க்கிறேன். என்றவளை “உமக்கு ஆளைத் தெரியுமா? அல்லது எப்படிக் கண்டுபிடிக்கப் போகிறீரர்?” சொல்லி முடிக்குமுன்பே விறுவிறெனச் சென்றவள் ஒரு சிறிய பார்சலை கைப்

பையிலிருந்து எடுத்து ஒரு இளைஞனிடம் கொடுத்துவிட்டுத் திரும்பினாள். அவனும் வேகமாக திரும்பி விட்டான். என்ன மதுரா? நாங்க இன்ரடியூஸ் ஆகியிருக்கலாமல்லா? அவசரமாய் அனுப்பிவிட்டீர். பதில் பேசாது சிரித்தாள். முகுந்தன் வாரும் என:று கூறியவண்ணம் கார் தரிப்பிடத்துக்கு அழைத்துச் சென்றான். காரில் கூட்டிவரும் வழியிலெல்லாம் இடங்களைப் பற்றிச் சொல்லிக்கொண்டும் சுவிஸ் வாழ்க்கைமுறை பற்றியும் கூறிக்கொண்டே வந்தான்.

மதுரா கொஞ்சம் பதட்டத்துடன் இருப்பதுபோல் தெரியவே "ஒன்றும் பயப்படாதேம். நானிருக்கிறன். எதென்றாலும் கூச்சப்படாமல் என்னிடம் கேளும்" மதுராவின் பதட்டத்தைக் குறைக்க முற்பட்டான். ஏன் உங்கடை அக்கா வரவில்லை? அவ வீட்டுக்குத்தானே போகிறோம்.உங்கடை அம்மா சொன்னா. முதல் அக்கா வீட்டுக்குப்போய் கல்யாணத்துக்குப் பிறகுதான் உங்கள் வீட்டுக்குப் போறதென்று. என்ன! என்னைப் பார்த்து பயப்படுகிறீரா அவ என் சொந்த அக்கா இல்லை. ஒன்றுவிட்ட அக்கா. வீணாக ஏன் அவர்களுக்குச் சிரமம் கொடுப்பான்? இன்றைக்குப் புதன்கிழமை. ஞாயிற்றுக்கிழமை முருகன் கோயிலில் தாலி கட்டுறம். திங்கட்கிழமை றிஜீஸ்ரேஷன். ஒரு கொஞ்சப் பேருக்குத்தான் கல்யாணத்துக்கு சொன்னது. பிறகு ஒரு மாதத்துக்குப் பிறகுதான் ஹோல் கிடைச்சிருக்கு. அப்ப ரிசப்ஷன் வைப்பம். அம்மா தாலிக்கொடி தந்துவிட்டவதானே. அங்கு பொன்னுருக்கித் தாலி செய்தாச்சு தானே. இங்கு ஒரு வேலையுமில்லை. சாறியும் அம்மா உம்மிடம் கொடுத்து விடுகிறன் என்றவ. நாளைக்கு வேணு மென்றால் உமக்கு விரும்பிய சாறி ஏதும் வாங்குவம். நான் ஏற்கெனவே உமக்கு நிறைய உடுப்பு வாங்கி வைத்திருக்கிறேன். பார்த்துச் சொல்லும். தேவையானதை நாளைக்கோ நாளையின்றைக்கோ நாங்க வாங்கிடலாம். அம்மா அக்கா வீட்டில்தான் விடச் சொன்னா. ஆனால் நான் கேட்டபோது அவர்களும் தங்களுக்கு வேலை. இந்தக்காலத்தில் இந்த நாடுகளில் இதென்ன புதுமையா? எல்லாரும் தங்கடை வீடுகளில்தானே வைத்திருந்து பிறகு கல்யாணம் செய்கினம்.

பேசாமல் வீட்டுக்குக் கூட்டிப்போம் என்றார்கள். என்ன என்னுடன் தனிய இருக்க பயமாயிருக்கா? ஒரு மூன்றுநாள் தானே. என்னை நம்பமாட்டீரா? சின்னச் சிரிப்புடன் கூறியவன் முகத்தைப் பார்க்காது ம் என்றாள்.

வீட்டை அடைந்து குளித்து உடை மாற்றியபின் அவன் வாங்கி வைத்திருந்த உணவை சூடுகாட்டிக் கொடுக்க உண்டபின் அறைக்குள் அழைத்துச் சென்று வாங்கி வைத்திருக்கும் உடைகள். நகைகளைக் காட்டிப் பிடித்திருக்கிறதா என வினவினான். தலையாட்டியவள் "நான் போன் பண்ண வேணும்; என்றாள். இலங்கைக்கென்றால் காட் தாறன் கதையும். இங்கையென்றால் சும்மா டயல் பண்ணலாம்; சொல்லிவிட்டு காட்டைப் கொடுத்தான். தாயிடம் கனநேரம் கதைப்பதைப் பார்த்து சோபாவில் அமர்ந்து அவள் தலையாட்டி ஆட்டிப் பேசும் அழகை ரசித்தான்.போன் பேசி முடித்தபின் "சரியான களைப்பாக இருக்கிறது. நான் றூமில் படுக்கிறன். நீங்கள் ஹோலில் படுங்கோ என்று அவசரமாகக் கூறிவிட்டு விறுவிறென அறைக்குள் சென்று கதவைப் பூட்டினாள். அவளது செய்கை அவனுக்கு முகத்தில் அறைந்தது போலிருந்தாலும் பொறுத்துக் கொண்டான். கொஞ்சம் மனேர்ஸ் தெரியாதவளாக இருக்கிறாள். எல்லாம் பழக்கியெடுக்க வேண்டும் போலிருக்கிறது.கொஞ்ச நேரம் பேசிவிட்டு இங்கிதமாகச் சொல்லிவிட்டுப் படுக்கப் போயிருக் கலாம். நான் என்ன நாகரீகம் தெரியாதவனா? கல்யாணத் துக்கு முதல் பண்பாகப் பழக மாட்டேனா? நினைத்தவன் சரி எனக்கென்று வந்தாச்சு. பழக்கியெடுப்போம்; என்று நினைத்துக்கொண்டு படுத்தான்.

றூமுக்குள் கனநேரம் லைற் எரிந்தது. ஓ! வந்தவுடனே உடுப்புகளை எல்லாம் எடுத்து வைக்கிறா போலை. சரி நாளைக்கு ஆசைதீர. இல்லை ஏன் ஆசை தீர வேண்டும். வேண்டியமட்டுக்கும் பேசுவம். நினைத்தபடியே தூங்கிப் போனான். சம்மர் காலமாகையால் சூரியன் சுள்ளென்று சுடவும் சட்டென எழுந்தான். புது இடம். இங்கு எலெக்ரிக் அடுப்பு.பாவிக்கத் தெரியுமோ தெரியாது. நான் நேரம் காலம்

தெரியாமல் தூங்கீற்றன். பாவம். நினைத்தவண்ணம் அவசரமாக குளியலறைக்குப் போனான். அங்கு அவள் குளித்ததற்கான அடையாளம் தெரிந்தது. சுறுசுறுப்பானவள் தான் போல இருக்கிறது. அல்லது நேர வித்தியாசமாயிருக்கும். மதுரா! என்றழைத்தவன் சமையலறையில் குக்கர் பாவிக்கும் முறையைச் சொல்லிக் கொடுத்து விட்டு மேல் கப்பேட்டில் ரீ பக்கற். கோப்பித்தூள் எல்லாமே இருக்கு. விருப்பமானதைப் போடும். இலங்கைக் கோப்பியும் இருக்கு. நெஸ்கபேயும் இருக்கு. எனக்கு எங்கடை சுக்குக் கோப்பி. உமக்கு விருப்ப மானதைப் போடும். கூறிவிட்டு அவள் பதில் உரைக்காததால் ஏன் வெட்கமா? போனில் நல்லாய்க் கதைப்பீர். இப்ப என்ன? என்னைப் பார்த்து ஏதும் பிடிக்காமல் இருக்கா? கவலையுடன் கேட்டான். இல்லை. ஒன்றுமில்லை. கூறியபடி கோப்பி போட்டுக் கொடுத்தாள். நீர் போட்ட கோப்பி ரொம்ப நல்லாயிருக்கு. இவ்வளவுநாளும் நானே போட்டு. அலுப்பாயிருக்கும். இனி எனக்கென்ன கவலை. கிச்சின் பொறுப்பு உம்மோடை. சொல்ற சாமானை வாங்கித் தாறது தான் என்னுடைய வேலை; உற்சாகமாகக் கூறினான். "காலமை என்ன சாப்பிடப் போறீர்? இங்கு எல்லாரும் சீரியல் தான் சாப்பிடுறது. உமக்கு என்ன வேணுமோ சொல்லும். சீரியலோ. எனக்கு விளங்கேலை. சீரியல் என்றால் ரிவியில் போகிற நாடகங்களெல்லோ? ஓ! அது எஸ் வரும். சாப்பிடுகிற சீரியலுக்கு சீ வரும். இரண்டெழுத்து வித்தியாசம். இங்கு ஆங்கிலச் சொற்கள் தெரியாவிட்டால் பரவாயில்லை. டொய்ச் சொற்களை பழகிடும். இலங்கையில் டொய்ச் கிளாஸ் போனீர்தானே. கெதியாய் பிடிச்சிடலாம். இங்கும் கிளாசில் சேர்த்து விடுகிறன்.ஒன்றும் பயப்படாதேம்.

ஹோலில் இருவரும் பேசிக் கொண்டிருக்கும் போதே வாசலில் கோலிங் பெல் அடிக்கும் சத்தம் கேட்டதும் மதுரா பரபரப்பானாள். முகுந்தன் யார் அக்காவாயிருக்கும் என்று கூறிக்கொண்டு கதவைத் திறந்தான். முதல்நாள் எயார்போர்ட்டில் பார்சல் வாங்கிய இளைஞன் நின்றான். வாங்க என்று கூறி வரவேற்றான். அவசரமாக உள்ளே சென்ற மதுரா தன் சூட்கேசுகளுடன் வெளியே வந்தாள். தன்னோடு நிற்க

*கூச்சப்பட்டு மதுரா யார் வீட்டிலேயோ நிற்கப்போகிறாளோ ஒன்றும் புரியாமல் "என்ன மதுரா! எங்கே போகப் போகிறீர்? சூட்கேசுடன் கிளம்பிவிட்டீர்; கேட்ட முகுந்தனுக்கு சூட்கேசை வைத்துவிட்டு "வாங்கோ ராகவ்" அவனது கையைப் பிடித்துக் கொண்டு "எங்களை மன்னிச்சிடுங்கோ அண்ணா. முதலில் எங்களை ஆசீர்வதிங்க அண்ணா. எங்களுக்கு வேறு வழி தெரியவில்லை." இருவருமாக அவன் காலில் விழுந்தார்கள். ஒன்றுமே புரியாமல் முகுந்தனுக்கு தலையே சுற்றியது. எழும்புங்க எனக்கு ஒன்றும் புரியவில்லை. மதுரா தலைகுனிந்து நிற்க ராகவ் சொன்னான். நான் இங்கு வந்து இரண்டு வருஷம். என்னால் மதுராவை ஸ்பொன்சர் பண்ண முடியாது. நாங்க நான்கு வருடமாகக் காதலிக்கிறோம். எங்களுக்கு வேறு வழி தெரியேல்லை. உங்களை ஏமாற்றியதற்கு மன்னித்துக் கொள்ளுங்கோ கூறிவிட்டு பதிலை எதிர்பார்க்காமலேயே சூட்கேசைத் தூக்கிக்கொண்டு வெளியே போனான். மதுராவும் "சொறி" என்ற ஒற்றைச் சொல்லுடன் ராகவ்வை பின் தொடர்ந்து வெளியேறினாள்.*

*திக்பிரமை பிடித்து தொப்பென சோபாவில் விழுந்தான். பிறந்தபோது இருந்த குழந்தையாய் மொழிமறந்து ஊமையாய் விக்கித்துப்போய் நின்றான். ஆசைகள் எண்ணங்கள் எல்லாம் மழை விடும்போது சொட்டுச் சொட்டாய் இறங்கும் மழைத்துளி போல் மெல்லென இறங்க பிரமை பிடித்த நிலையில் சில நிமிடங்கள் நின்றான். நிலைமை புரிய அவனுக்கு நீண்ட நேரம் பிடித்தது. ஏமாற்றப்பட்டேனா? ஏமாளியானேனா? தலையில் கை வைத்துக்கொண்டு அழுதான். தலையில் அடித்தடித்து அழுதான். ஏமாந்திட்டேனே ஏமாந்திட்டேனே. யாருக்கு என்ன பாவம் செய்தேன். சொல்லிச் சொல்லி அரற்றினான். திடீரென யோசித்தவன் அறைக்குள் ஓடிப்போய் அலமாரியைத் திறந்தான். அது வெறிச்சோடிக் கிடந்தது. அவன் வாங்கி அடுக்கிய உடைகள். நகைகள் எல்லாமே அவள் எடுத்துச் சென்றுவிட கல்யாணம் என்ற பெயரில் தான் ஏமாளியாய் ஏமாற்றப்பட்டு கையாலாகாதவனாய் வெறும் அலுமாரியை வெறிச்சோடிய விழிகளால் பார்த்தபடி வெறுமையானான்.*

# தோழமைக்கு நிழல் கொடுப்போம்

**யாழ்ப்பாணத்தின்** தொல்புரத்தில் பவலூாம் என்ற நெசவுத்தொழிற்சாலை ஒருகாலத்தில் மிக நன்றாக நடந்து இப்போது தொழிற்படாமல் வெறுமையாக இருந்தது. இப்போது தொழில் நடைபெறாததால் ஆட்கள் நடமாட்டமும் குறைவு. அந்த இடத்தில் நாங்கள் செழித்து வளர்ந்து நிற்கிறோம். பச்சைப் பசேலென்று எம் கிளைகளைப் பரப்பி விஸ்தாரமான நிலத்தில் நாங்கள் பலர் கூட்டாக வாழ்கின்றோம். எங்களுக்கு மனிதனைப்போல பொருள் சேர்க்க வேண்டும் என்ற எந்தக் கவலையுமில்லை. வானம் பொழியும் மழையும் இந்த மண்ணும் காற்றும் எமக்குப் போதும். சுகந்தமான காற்றை எங்கணும் வீசி மகிழ்வோடு இருப்பதுமன்றி மக்களுக்கு நிழலும் நல்லகாற்றும் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இயற்கையின் அரவணைப்பில் எல்லாச் செடிகளும் ஒன்றையொன்று கட்டித்தழுவிப் பின்னிப் பிணைந்து நிற்கின்றோம். இதே ஒற்றுமை ஏன் எங்கள் தமிழர்களிடம் இல்லாமல் போய்விட்டது என்று தெரியவில்லை.இயற்கையைப் பார்த்துக் கற்றிட எவ்வளவு விஷயங்கள் இருக்கின்றன என்பதை மறந்து விடுகிறார்கள். தனிமையில் இனிமை கண்ட எங்களின் இனிமை நீடிக்கவில்லை. ஒருநாள் திடீரென்று எம் பக்கத்திலுள்ள அந்த பவலூாமை கந்தரோடையைச் சேர்ந்தவரும் புளொரிடா அமெரிக்கா வில் வசிப்பவருமான கிருஷ்ணர் பாலச்சந்திரன் என்பவர் வாங்கினார். அமெரிக்காவை விட்டு இங்கு குடியேறப் போகிறாரோ என்று நினைத்தோம். ஆனால் அந்த நல்லவர் அந்த பவலூாமை முதியோர் இல்லம் அமைப்பதற்காக சமூகசேவையாளர் ஆறு திருமுருகன் அவர்களிடம் ஒப்படைத்தார். இப்படிப்பட்ட நல்லவர்கள் இருப்பது பார்ப்பதற்கு மகிழ்ச்சியாக இருந்தது. அந்த நல்ல மனிதரை உற்சாகப்படுத்தும்

*நோக்கத்துடன் நாங்கள் எங்கள் இலைகளை அசைத்து ஆரவாரம் செய்தோம். மூன்று முதியவர்கள் அந்த இல்லத்திற்கு வாழ்வதற்காய் வந்தார்கள். மனித நடமாட்டமே இல்லாத அந்த இல்லத்தையே பார்த்துக் கொண்டிருந்த எங்களுக்கு அவர்கள் வருகை மகிழ்வையே தந்தது.*

*இதயத்திற்கு இனிமை தரும் இயற்கையின் அசைவுகளை இனிமேல் பலர் இரசிக்கப் போகிறார்கள் என்பது எங்களுக்கு மகிழ்ச்சியைத் தந்தது.கம்பீரமாய் நிற்கும் எங்களுடன் பேசப் பலர் வரப்போகிறார்கள்.அவர்களை வரவேற்க எங்களில் சிலர் பூத்துக் குலுங்கினர்.எங்கள் பூக்களெல்லாம் புன்னகைத்தன. இந்தப் போர்க்காலங்களில் எல்லாம் தனித்து இந்த வெறும் கட்டிடத்தையே பார்த்து சலித்துக் கொண்டிருந்த எமக்கு 2007ல் இந்த இல்லம் இயங்கத் தொடங்கியது ஆறுதலாக இருந்தது. தத்தம் குடும்பங்களுக்காக ஓடியோடி உழைத்தவர் கள் இரத்தம் சுண்டி வலுவிழக்கும் போது உங்களுக்காக நாங்கள் இருக்கிறோம் என்று தோழமைக்கரம் நீட்டிய திருமுருகன் ஐயா கடவுளாகவே தெரிந்தார். நாங்கள் இங்கு எத்தனை வருடங்களாக வாழ்கிறோம். இப்போதுதான் இப்படி வயதானவர்களுக்கு ஒரு இல்லம் தேவைப்படும் என்பதை அறிகிறோம். முன்பு பிள்ளைகள் தங்கள் தங்கள் பெற்றோர் களை வீடுகளிலேயே வைத்துப் பராமரித்தார்கள். 1995 இடப்பெயர்வின் போதுகூட எவ்வளவு பேரைப் பார்த்தோம். சைக்கிள்களில் ஏற்றியோ ரைக்டர்களில் ஏற்றியோ தங்கள் தங்கள் வீட்டு முதியவர்களை தங்களோடு கூட்டிச்சென்றார்கள். ஏழெட்டு வருடத்தில் எல்லாமே தலைகீழாக மாறிவிட்டது. மெழுகுதிரியாய் உருகியுருகி வெளிச்சம் கொடுத்தவர்கள் நரம்பு தளர்ந்தபோது ஒதுங்கி நின்று ஏங்கிப் பார்ப்பது எவ்வளவு கொடுமை. பால் வற்றிய பசுக்கள் போல முதுமையடைந்த பெரியவர்கள் இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் வாழவே தகுதி அற்றவர்கள்போல் கருதப்படுவது எவ்வளவு கேவல மானது. தமது குடும்பத்தை மேம்படச் செய்வதற்காக தமது வருவாயை, அறிவாற்றலை ஆர்வத்தோடு முதலீடு செய்து விட்டு வயதாகிப்போன முதுமையில் தமது மக்களாலேயே*

அலட்சியமாக ஒதுக்கப்படுவது இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில்தான் பெருமளவில் நடைபெறுகிறது. ஐரோப்பிய நாடுகள், யப்பான் போன்றவை மூத்த தலை முறையினருக்கு உரிய மதிப்புத் தந்து பராமரிக்கிறார்கள். வயது முதிர்ந்த முதியவர்களை எல்லாம் இப்படி ஓரிடத்தில் வாழவைப்பது புதுமையாக இருந்தது. நல்லகாலம். நாங்கள் முதுமையடைவது இவர்களுக்குத் தெரிவதில்லை. அல்லது எங்களை என்ன செய்வார்களோ எனக்கு பக்கத்தில் நிற்கும் மரம் கூறியது.அது சொல்வது சரியாகத்தானிருக்கிறது.

படிப்படியாக மூவர் பதின்மர் ஆகி இப்போது எழுபது வயோதிபர்கள் அங்கு பராமரிக்கப்பட்டு வருகிறார்கள். அவர் களுக்கு எல்லாமே இலவசமாக கிடைப்பது ஆச்சரியமாக எங்களுக்கு இருக்கிறது. இந்தக் கலியுகத்தில் மற்றவர் களுக்காக வாழுகிறவர்களும் வாழ்கிறார்களே. பார்க்க யாருமேயில்லாத பென்ஷன் எடுப்பவர்களும் தங்கள் பென்ஷன் பணத்தைக் கொடுத்துவிட்டு அங்கு வாழ்கிறார்கள் என்பது சிலர் எங்களுக்கு கீழிருந்து பேசும்போது புரிந்து கொண்டோம். யாருமே இல்லையென்று விம்மி வெதும்பி நிற்கும் நேரத்தில் இப்படி ஒரு நிழல் கிடைப்பது எவ்வளவு பெரிய விஷயம். வெளிநாட்டில் வாழும் பிள்ளைகள் அங்கு அழைத்து வைத்துப் பராமரிக்க முடியாத பிள்ளைகள் இப்படியான இடங்களில் தங்கள் பெற்றோரை விட்டுப் பராமரிப்பது அவர்களுக்கு நிம்மதியைத் தரக் கூடியது அல்லவா.ஆனால் இங்கு வசதியற்றவர்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்பட்டார்கள். எங்களுக்கு கீழ் இலைதழை சாப்பிட வரும் சில ஆடுகள் நல்லகாலம் நாங்கள் மனிதராகப் பிறக்கவில்லை. அப்படிப் பிறந்து இருந்தால் இந்த நோய்களுக்குப் பயந்து நாங்களும் வயதுபோன நேரத்தில் அல்லல்பட்டு இருப்போம் என்றது. அதற்கு மற்ற ஆடு பதில் கூறியது. 'புத்தியில்லாத ஆடே! எங்களை அதுவரை எங்கே மனிதன் விட்டு வைப்பான்? தங்கள் வயிற்றுக்குள் சமாதி ஆக்கிவிடுவானே'.

இப்பொழுது எங்களுக்கு நன்றாகப் பொழுது போகிறது. இந்த இல்லத்தில் இருக்கும் சிலர் எங்களின் கீழ் வந்து

உட்கார்ந்து ஓடியோடி உழைத்த தங்கள் கால்களை இளைப்பாற அனுமதித்து பழங்கதைகள் கதைப்பார்கள். தங்களின் இளமைக்கால நினைவுகளை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வார்கள். தங்களின் காதல் தோல்விக்கதைகள், போர்க்கால கதைகள், இழப்புகள், பாடசாலை நாட்களில் விளையாடிய விளையாட்டுக்கள், சிறுவயதுக் குழப்படிகள், ரியூஷன் போறதென்று சொல்லிவிட்டு களவாக கிரவுண்ஸ்க்கு விளையாடப் போனது, அப்பா அம்மாவிடம் வாங்கிய அடிகள் என்று பலதரப்பட்ட கதைகள் கதைப்பார்கள். நினைவுகளை மீட்டுவதில் அப்படி ஒரு ஆனந்தம்.பெண்கள் தான் பெரும்பாலும் சோகக்கதைகள் பேசுவது. ஆண்கள் பெரும்பாலும் அரசியல் பற்றியோ, நகைச்சுவையாகவோ பேசுவார்கள். ஒருவர் கூறினார்' என் காதலிக்கு கடிதங்கள் எழுதி என் வகுப்புத் தோழியைப் புறாவாக அனுப்பியது பெரிய தப்பாகப் போய்விட்டது. காலங்கடந்து தான் தெரிந்தது அது அவளிடம் போய்ச் சேரவேயில்லையென்று' எப்படியென்று கேட்டவர்களுக்கு 'அந்தத் தோழிதானே எனக்கு மனைவியானாள். என்னுடைய கடிதங்களுக்கு பதில் எழுதியதே அவள் தான்' சிரித்துக் கொண்டே பழைய நினைவுகளில் மூழ்கினார். இன்னொருவர் சொன்னார்' அடுத்த வீட்டு யன்னலில் காதலி தெரிவாளா என்று நாங்கள் தவமிருந்த காலம். இப்ப கணிணியில் வின்டோவைத் திறந்து வைத்துக் கொண்டு தவமிருக்கிறார்கள். யன்னலில் அவளைக் கண்டதும் வான மீதில் நீந்தியோடும் வெண்ணிலாவே பாட்டு பிச்சுக் கொண்டு வரும்.' எங்கும் சிரிப்பலை பரவியது. மற்றொருவர் சொன்னார்' முன்பு கோயில் திருவிழாக்களில் கோயில் சுவர்களில் அமர்ந்து கொண்டு போகும் பெண்களைப் பார்த்து ஏரிக்கரையின் மேலே போறவளே பொன்மயிலே என்றும், அமுதைப் பொழியும் நிலவே, மலரோடு தனியாக ஏனிங்கு நின்றேன் என்று பாடிக் கிண்டலடித்துக் கொண்டும் எவ்வளவு ஆனந்தமான நாட்கள்'.காதல் தோல்வியில் விரக்தியுடன் இருப்பவர்களுக்கு காதலிலே தோல்வியுற்றான் காளையொருவன் என்றும், நினைக்கத் தெரிந்த மனமே மறக்கத் தெரியாதா என்றும் பாடி அவர்களை வெறுப்பேற்றி நாங்கள் மகிழ்ந்ததெல்லாம் ஒரு

காலம். பழையனவற்றை ஒரு லயிப்புடன் அசை போட்டார்கள். இன்னொருவர் கூறினார். 'முன்பு வசதியில்லாதவர்கள்தான் கிழிந்த உடுப்பு போடுவார்கள். இப்போ பணக்காரர்கள்தானே கிழிந்த காற்சட்டை போடுவது ஃபஷன்.' உண்மைதான். இன்னொருவர் கூறினார்." முன்பெல்லாம் மனைவிமார் கணவர் சாப்பிடும்போது பக்கத்தில் நின்று வயிறார உண்ண வைப்பார்கள். இப்போது நல்லாய்ச் சாப்பிட்டு விடுவோமோ என்று கண்காணிக்கத்தான் பக்கத்தில் வந்து நிற்பார்கள். மிகப் பெரிய உண்மைகளை அநாயசமாகக் கூறுகிறார்கள். வெளிநாடெல்லாம் போய் வந்த பெரியவர் அடிக்கடி இந்த இல்லத்திலிருக்கும் நண்பனைப் பார்க்க வருவார்.' அவர் வெளிநாட்டுக்கதை எல்லாம் சுவைபடச் சொல்வார். அவர் வந்தால் பலர் அவருடன் எங்களுக்கு கீழ் வந்து அமர்ந்து விடுவார்கள். அவர் சொன்னார். 'முந்தி குடிசையில் இருப்பவன் பெரிய வீடு கிடைத்தால் நல்லாயிருக்குமென்று ஆசைப்பட்டான். இப்போது பெரிய வீடுகளிலுள்ளவர்கள் நிம்மதியைத் தேடி கொட்டேஜ் என்ற குடிசைக்குப் போகிறார்கள். முன்பு கழிவறை வெளியே உணவு உண்பது உள்ளே. இப்போ கழிவறை உள்ளே உணவு உண்பது வெளியே. "மிகவும் நல்லாயிருக்கே. நன்றாக யோசித்துச் சொல்கிறாய்" இது நான் சொந்தமாய்ச் சொல்லேலை எங்கேயோ படித்தது. இன்னொருவர் கூறினார் ஒரு ஆசிரியர் ஒரு மாணவனை இரண்டில் இரண்டு போனால் மிச்சம் எவ்வளவு என்று கேட்டார். மாணவன் எனக்குப் புரியவில்லை.திரும்பச் சொல்லுங்கோ என்றான். உன்னிடம் இரண்டு தோசை இருக்கிறது. இரண்டையும் சாப்பிட்டால் மிச்சம் என்ன இருக்கு என்றார். அவன் சொன்னான் சம்பல். எல்லோரும் சிரித்தபடி இப்போது பிள்ளைகள் படு புத்திசாலிகள். அவர்களிடம் பேச்சுக்கொடுத்து வெல்ல முடியாது என்றார்கள்.

'நான் அல்ப்ஸ் மலையைப் பார்த்துக்கொண்டு பல்கனி யிலிருந்து ரீ குடிப்பன் என்று கனவில் என்றாலும் நினைத் திருப்பேனோ? அற்லசில் கையால் தொட்டுப் பார்த்த இடங் களையெல்லாம் மிதிக்கும்போது மகிழ்ச்சி தாங்க முடியேலை.

*எங்கும் பனி படர்ந்திருக்க ரொப் ஒவ் யுரோப்பாவில் நிற்கும்போது இப்படித்தானே கயிலாயமலை இருக்கும் என்று நினைத்தேன். பனிச்சிகரத்தில் சிவன் இருப்பதுபோல ஒரு தோற்றம்.' அவர் கூறவும் வாயைப் பிளந்துகொண்டு கேட்ட வர்கள் 'மலையுச்சிக்கு எப்படிப் போனீர்கள்?' என்றார்கள். **3300**மீற்றர் **11**ஆயிரத்துச் சொச்சம் அடி உயரம். எப்படிப் போக முடியும? கேபிள் கார் என்றிருக்கும். அது அப்படியே கேபிள் வயரில் வானத்தில் பறக்கும். திறந்தபடி சோஃபா மாதிரி ஒன்றில் ஏறி அமரவேண்டியது அது பனிச்சிகரத்துக்கு கொண்டுபோய் இறக்கி விடும். அதைச் செய்தவர்களை யோசித்துப் பாருங்கோ. எவ்வளவு புத்திசாலிகளாக இருக்க வேண்டும். எப்போதும் அடிக்கடி சரி பார்த்தே மேலே விடுவார்கள். விழுந்திச்சு உடம்பில் எதுவுமே மிஞ்சாது' அவரின் அனுபவங்கள் எல்லாம் அவர்களுக்கு கதைகளில் வரும் மாயஜாலக்காட்சிகள் போலிருக்கும். அப்பிடி பறக்கேக்கை பயமாயிருக்காதா?' 'அதெப்படி பயம் வராது? ஒரு சோஃபாவில் ஐந்துபேர்தான் இருக்கலாம். ஏறினவுடன் பட்டென்று கதவு மூட என்னுடைய பேத்தியைத் தூக்கிக்கொண்டு மருமகன் ஏற படாரென்று கதவு மூட பேத்தியின் கால் அதற்குள் மாட்டிக் கொண்டது. பறக்கத்தொடங்கினதை இறக்கவா முடியும். மூன்றுவயதுக் குழந்தை வீரிட்டு அழ எல்வோரும் முருகா முருகா என்று கத்தியபடி மெதுவாகக் காலை விடுவித்தோம். அந்தப் பயத்தில் இந்தப்பயம் போயிட்டுது. பறக்கத் தொடங்கின பிறகு மூச்சை இழுத்துவிட்டு மிக ஆனந்தமாக இருந்தது. அந்தரத்தில் பறப்பது எவ்வளவு ஒரு புது அனுபவம். அடுத்தமுறை வரும்போது ஃபோட்டோ காட்டுகிறேன்'என்றார்.*

*அத்தோடு விட்டாரா?" இதைக் கேட்டு அதிசயித்தால் எப்படி? இதையும் கேளுங்கோ. யுங்ஃபிராஃவ் ஜொஃக் மலை **4158** மீற்றர் **13640**அடி உயரம். இதுதான் உண்மையான ரொப் ஒஃப் யுரோப். இதற்கு ஒரு ஸ்பெஷல் ரெயின் இருக்கிறது. உச்சியில் போனால் சொர்க்கத்துக்கு பக்கத்தில் வந்து விட்டதுபோல் வெள்ளைமயமான பனியும் அந்த சுத்தமான காற்றும் இதெல்லாம் பார்க்கவைத்த கடவுளுக்கு நன்றி*

சொல்லத் தோன்றும். வெள்ளிப்பனிமலை மீதுலாவுவோம் என்ற பாரதியார் பாட்டு நினைவுவரும். பார்க்காமலே பாடிய அவர் மட்டும் இங்கு வந்திருந்தால் எங்களுக்கு இன்னும் எவ்வளவு அழகான கவிதைகள் கிடைத்திருக்கும். அதோடு அங்கெல்லாம் பனியில் சறுக்கி விளையாடுவது முக்கியமான பொழுதுபோக்கு. அவர்களுக்கு பணத்தை அள்ளிக் கொட்டிக் கொண்டிருப்பது இந்தச் சுற்றுலாத்துறைதான். உலகெங்கிலுமுள்ள பணக்காரர்கள் பனிச்சறுக்கல் விளையாட்டிற்காக வருடம் தோறும் வருவார்கள். நானும் பனிச்சறுக்கலில் சந்தோஷப்பட்டிருக்கிறேன். அங்கு ஒருவரும் வயது வித்தியாசம் பார்ப்பதில்லை. இளையவர்களுடன் முதியவர்களும் எல்லாவற்றையும் அனுபவித்து சந்தோஷமாக இருப்பார்கள். இங்கெல்லாம் மற்றவன் என்ன நினைப்பானோ என்று நினைக்கிறதும், மற்றவனுக்காகவே வாழ்வதுபோல் பயப்படுவதும் என்ன வாழ்க்கை இது. நாங்கள் விளக்கில் மாட்டிக்கொண்டு உயிரை விடும் விட்டில் பூச்சிகள் போல் தேவையில்லாத மதம், சாதி, ஸ்ரேற்றஸ், மற்றவர்களைப்பற்றிப் பேசுவது என்று அந்த நெருப்புக்குள் விழுந்து வெந்து சாகிறோம்.” இவற்றைப் பற்றிச் சொல்லும் போது அவர்கள் மட்டுமல்ல நாங்களும் உறைந்து போனோம். எங்களுக்கும் கேட்க அதிசயமாக இருந்தது. எப்படிப்பட்ட அதிசயங்கள் எல்லாம் உலகத்தில் இருக்கிறதென்பது எங்களுக்கு இப்போது தானே தெரிகிறது. அந்தப் பனிப்பிரதேசத்தில் எங்களைப் போல மரங்கள் இருக்கிறதா என்று கேட்க ஆசைப்பட்டோம். இலைகளை அசைத்து எங்கள் மொழியில் கேட்டோம். அது அவர்களுக்கு எங்கே புரிந்தது? என் நண்பன் சொன்னான். அடுத்த பிறவியில் என்றாலும் அங்கு மரமாகப் பிறப்போம் என்று நான் சொன்னேன். அவர் சொல்வதைப் பார்த்தால் பனிப்பிரதேசத்தில் நாங்கள் வளர முடியாது. ஏன் மனிதராகப் பிறந்து அவற்றைப் பார்க்கலாமே. உடனே மறுத்தது என் நண்பன். மனிதர்கள் செய்யும் அட்டுழியங்களைப் பார்த்த பின்பும் நான் மனிதனாகப் பிறக்க ஆசைப்படுவேனா? வேண்டாமப்பா. ஓ! அதுவும் நியாயந்தான். மீண்டும் மரமாகவே பிறக்க கடவுள் அருளட்டும்.

*சிலநேரங்களில் எங்கள் நிழலில் அமர்ந்தபடி சோகக்கதை களைப் பரிமாறிக் கொள்வர். அநேகமாகப் பெண்களே தங்கள் சுமைகளை இன்னொருத்தரிடம் கொட்டி ஆறுதல் தேடிக் கொள்வார்கள். ஆறுதல் வார்த்தைக்கு ஏங்கும் உள்ளங்கள். எங்களுக்கு வாயில்லாததால் எங்கள் கவலைகளை எமக் குள்ளேயே புதைத்தபடி வெறும் மரமாக நிற்கின்றோம். குழந்தைகளில்லாமல் இத்தனை வருடங்களைக் கடந்தும் தன்னை மலடியென்று பழித்தவர்களை நினைவு கூர்ந்து கவலைப்படுவார். நாங்களும் விதிவிலக்கல்ல. எங்களைக்கூட பழங்கள் தராத சில மரங்களென்று தூற்றி வெட்டுகிறார்களே. எத்தனையோ வருடத்திற்கு முன் யாரோ தங்களிடம் எறிந்த வார்த்தைகளை காயப்பட்ட பறவையாய் இன்னும் அந்த வடுவைத் தாங்கி நிற்கிறார்களே. வார்த்தைகளுக்கு அவ்வளவு சக்தி இருக்கிறதா என்ன? இன்பமான ஞாபகங்கள் மட்டுமல்ல காயங்களும் இன்னும் மறையாமல் இருக்கின்றதே. அந்தக் கணவனும் மனைவியுடனே அந்த இல்லத்திலேதான் தங்கியிருக்கின்றார். அவர்கள் இருவரும் பலநாட்கள் வார்த்தைகள் இழந்த வெற்றுப் பார்வையால் ஒருவரை யொருவர் கைபிடித்து ஸ்பரித்துச் செல்வது அவர்களின் மாறான பிரியத்தைக் காட்டும். கொடுங்காற்று வீசினாலும் ஒருவர் கையை ஒருவர் பிடித்தபடி அணையாது விளக்கை ஏந்திச் செல்வது போல மெதுவாக நடந்து செல்வார்கள். இருவரையும் என்றுமே நாங்கள் தனித்துப் பார்த்ததில்லை. என்னுடைய நண்பனுக்கு அடிக்கடி ஒரு கவலை வரும். ஒருவர் முதல் இறந்துவிட்டால் எப்படி அதனைத் தாங்கிக் கொள்வார்கள் என்று. குழந்தைகளும் இல்லாமல் ஒருவரையொருவர் சார்ந்தே வாழ்ந்து பழகி விட்டார்கள். அவர்கள் சேர்ந்தே இறக்க வேண்டுமென்று நாங்கள் வேண்டிக் கொள்வதுண்டு. போகும்வழியெல்லாம் அன்பை விதைத்துக் கொண்டு செல்லும் திருமுருகன் ஐயா. அவர் விதைத்த அன்பையெல்லாம் அறுவடை செய்தபடி இன்னுமொரு திருமுருகன் வரும்வரை இந்தத திருமுருகன் ஐயா வாழ வேண்டும் என்றும் நாங்கள் முருகனை வேண்டுவதுண்டு.*

திருமுருகன் ஐயா முதியவர்களுக்கான இல்லம் மட்டு மல்லாது மனவளர்ச்சி குன்றிவர்களுக்காக கோண்டாவில், கிளிநொச்சி கனகபுரம், திருக்கோணேஸ்வர் ஆலய நிலம் என்று மூன்று இடங்களில் இல்லம் நடத்துவது எவ்வளவு பெரிய விஷயம். இவர்களால் ஒன்றுமே முடியாது. உண்டு உறங்கி ஓரிடத்தில் இருந்து விட்டுப் போகட்டுமென்று பெற்றவர்களாலேயே அறைக்குள் பூட்டி வைக்கப்பட்ட பிள்ளைகள் பிரத்தியேகமான இவர்களுக்கான சர்வதேச ஒலிம்பிக் போட்டியில் வெங்கலப் பதக்கமும் வெள்ளிப் பதக்கமும் பெற்றார்கள் என்றால் எவ்வளவு பாராட்டப்பட வேண்டியவிஷயம். எங்களாலும் முடியும் என்ற தன்னம்பிக்கையை ஆற்றலை ஏற்படுத்தி சாதிக்க வைத்த அந்த ஆசிரியர்களுக்கு என்ன கொடுத்தாலும் தகும். பணிபுரியும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் ஐயாவின் நல்லெண்ண முமே இவர்களின் சாதனைகளுக்கு முக்கிய காரணிகள். கலிஃபோர்னியாவில் பதக்கம் பெறச்சென்றபோது முன்னாள் அமெரிக்க அதிபர் ஒபாமாவின் மனைவி மிஷேல் விமான நிலையத்துக்கே வந்து அழைத்துச் சென்றாராம். இது எப்படியாப் பட்ட மரியாதை. பெரியவர்கள் இதுபற்றிப் பேசும்போது எங்கள் உடல் சிலிர்த்தது. மகிழ்ச்சியைக் காட்டாமல் இருக்க முடிய வில்லை. இலைகளை அசைத்து ஆரவாரித்தோம். அவர்கள் புரிந்து கொள்ளாவிட்டாலும் எங்களுக்கு ஒரு ஆத்ம திருப்தி. பேச முடியாமல் இருந்த பிள்ளைகளும், திக்கித்திக்கி பேசினவர் களும், தங்கள் அன்றாடக் கடமைகளுக்கு மற்றவர்களை எதிர்பார்த்தவர்களும் இன்று இவர்களாலன்றோ நிமிர்ந்து நிற்கின்றார்கள். முதன்முதலாக ஆக்கபூர்வமாக சமூகத் தொண்டாற்றும் நல்ல ஒரு மனிதனாகப் பிறக்கவில்லையே என்று கவலைப்பட்டேன்.

கோடை வெயில் முகத்தில் அறைவதுபோல் அகோரமாக இருந்தது. அன்பர்களின் உதவியால் கிடைக்கப்பெற்ற வோக்கர் களின் உதவியுடன் பலர் எங்களை வலம் வந்தனர்.நடுங்கும் கைகளுடன்,தடுமாறும்கால்களுடன்தோல்சுருங்கியும்முகத்தில் கோடுகள் கோடுகளாய் முதுமையின் அடையாளத்துடன் மெதுவாக நடந்தனர். அவர்களின் வெப்பத்தைக் குறைக்கும்

நோக்கத்துடன் மெதுவாக இலைகளை அசைத்தோம். ஆனால் எங்களைப் புரிந்து கொள்ளாமல் அனல் காற்றுத்தானே வீசுகிறது. இந்த மரங்களாலும் பயனில்லை என்று பேசிக்கொண்டு சென்றார்கள். முந்தைய காலத்தில் மரங்களைப் புரிந்து கொண்ட மாமனிதர்கள் வாழ்ந்ததாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். இப்போதுள்ளவர்கள் தங்கள் குடும்பத்தினரையே புரிந்து கொள்ளமுடியாதவர்கள் எங்கே எங்களைப் புரிந்துகொள்ளப் போகிறார்கள்?

அன்று அங்கு ஒரு முதிய பெண்மணி இறப்பு என்ற மீளா நித்திரைக்குப் போய்விட்டார். அவருக்கு உறவினர் யாருமே இல்லாததால் திருமுருகன் ஐயாவே கொள்ளி வைத்தல் என்ற கடைசிக் கிரியையை செய்யப் போகிறார். அவர் இதுவரை எத்தனையோ முதியவர்களுக்கு இறுதிக்கடன் செய்திருக்கிறார். அங்கு உள்ளவர்களுக்கெல்லாம் அவர்தான் மகன். மாலை யுடன் கிடத்தியிருந்த அந்த மூதாட்டி உலகத் துன்பங் களிலிருந்தெல்லாம் விடுபட்டு மீளா நித்திரையில் ஆழ்ந்திருந் தார். மரணம் என்ற கொடியவன் சத்தம் போடாமல் கையில் விளக்கு வெளிச்சமின்றி மெதுவாக நடந்துவந்து அந்த உடம்பின் மேலேறி உரிமையுடன் உட்கார்ந்திருக்கிறது. சுவாசம் விடுவதை அவர் நிறுத்தியவுடன் அவரின் பெயர் மறைந்து எப்போது பிரேதம் எடுக்கிறார்கள் என்று அஃறிணையாக மாறிவிட்டார். எப்பேர்ப்பட்ட அறிவாளியும் கடைசியில் அஃ றிணையாகவே எரிக்கப்படுகிறார்கள். பார்த்துக்கொண்டு இருந்தவர்களின் கண்களுக்கு வெறும் அர்த்தம் அற்றுப் போயிருந்தார். அந்த மரண சம்பவம் அந்தச் சுவர்களில் கசிந்து கொண்டிருந்தது. அவரைவிட முதியவர்கள் அடுத்ததாகத் தாங்கள்தானோ என்ற பயப்பிராந்தி படர இருந்தார்கள். நாங்களும் சோகம் கலந்த உணர்வுடன் கொஞ்சம் இலைகளை உதிர்த்து அஞ்சலி செலுத்தினோம். எங்களின் பழுத்த இலைகள் கூட நினைத்த போது உதிர்வதில்லை. அழைத்துச்செல்ல காற்று வரும்வரை கடைசி மூச்சை இழுத்துக் கொண்டுதான் இருக்கின்றன.ம ற்றவர்களின் மனத் தாக்கத்தைப் போக்க நாளைக்கு மனநல மருத்துவர் வந்து ஆற்றுப்படுத்துவார்.

*அத்தோடு இன்று இரவு நகைச்சுவைப் படம் ஏதாவது போடுவார்கள். எல்லோரும் உட்கார்ந்து பார்த்து ரசித்து துன்ப நினைவுகளில் இருந்து விடுபடுவார்கள். இறந்தவரின் சினேகிதனோ சினேகிதியோ கொஞ்ச நாட்களுக்கு அவரைப் பற்றியே பேசியவண்ணம் இருப்பார்கள். பிறகு சகஜ நிலைக்கு வந்து விடுவார்கள். அவர்களின் இத்தனை காலவாழ்க்கையில் எத்தனை இழப்புக்களைச் சந்தித்து இருப்பார்கள். ஒரு முதியவர் கூறினார்" காலம் ஓட எம் வீட்டிலிருந்து எம்மைத் துரத்த யமதூதர்கள் வருவார்கள். நாங்கள் போக மறுக்க முடியுமா? இது வாடகை வீடுதானே. வீட்டுக்காரன் கேட்டால் உடமைகளைவிட்டுவிட்டுவெறுங்கைகளுடன்போகவேண்டியது தான். பின் அவன் தரும் வீட்டில் குடிபுக வேண்டியதுதான்." எவ்வளவு உண்மை!*

*ஈழப்பகுதிகள் முழுவதும் தமிழரின் அடையாளச்சின்னங்கள் அழிக்கப்பட்டன. அதுபோலவே இறந்தவர்களுக்கு ஈமக் கிரியைகள் செய்யும் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த கீரிமலை யிலும் பதினொரு மடங்கள் அழிக்கப்பட்டு அலங்கோலமான நிலையில் இருந்தன.வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன் என்று வள்ளலார் சுவாமிகள் வாடியதுபோல் எங்கள் ஐயாவும் வாடி, அவற்றை செம்மையாக்கி பல மடங் களை உருவாக்கியுள்ளார். அங்கு பசித்தவர்களுக்கு அன்ன தானமும் நடைபெற்று வருகிறதாம். அங்கு சென்றுவந்து எங்கள் கிளைகளில் இளைப்பாறும் காகங்கள் சொன்னவை தான் இவை. விஸ்வநாதன் பிள்ளை என்பவர் கொடுத்த மடத்தை யாத்திரீகர் மடமாக்கியுள்ளனர். பலரும் வந்து தங்கிச் செல்கிறார்கள். மேல் தளத்தில் ஒரு கலைக்களஞ்சியமும் இருக்கிறதாம். எமது மூதாதையர் உபயோகித்த தற்போது பாவனையில் இல்லாத பொருட்களைச் சேகரித்துக்கொண்டிருக் கிறார்களாம். யாரென்றாலும் தங்களிடம் இருக்கும் அப்படிப் பட்ட அரும் பொருட்களைக் கொடுக்கலாமே என்று எங்கள் முதியவர்கள் பேசிக்கொண்டார்கள். அவர்களில் பலர் அப்படிக் கொடுத்தும் இருக்கிறார்களாம். எழுபதுகளுக்கு முன்பிருந்த கீரிமலையாக களைகட்டி நிற்கிறதாம்.குப்பிளான் என்ற*

*இடத்திலும் ஞான ஆச்சிரமம் ஒன்று அமைத்து 108 சித்தர்கள் வழிபாடு நடக்கிறதாம். அங்கு மனக்கஷ்டத்தில் உள்ளவர்களுக்கான ஆலோசனைகள், பயிற்சிகள் என்று தகுதியானவர்களினால் செய்யப்பட்டு வருகிறதாம். எங்களுக் கென்ன தெரியும்? போய்வந்தவர்கள் அதைப் பற்றிப் புகழுவதைக் கேட்டிருக்கிறோம்.*

*சில நேரங்களில் இந்த முதியவர்கள் காரசாரமாக விவாதிப் பதும் உண்டு. ஒரு ஓய்வுபெற்ற தமிழாசிரியர் இருக்கிறார். அவரைப் போலவே ஓய்வுபெற்ற ஒரு தமிழ் ஆசிரியையும் இருக்கிறார். அவர்களிருவரும் சந்தித்துக் கொண்டால் எங்களுக்கு கொண்டாட்டந்தான். தெரியாத எத்தனையோ விடயங்களைக் கிரகித்துக் கொள்வோம். தொல்காப்பியரின் 'நிறைமொழி மாந்தர் ஆணையில் கிளர்ந்த மறைமொழி தானே மந்திரம்' என்பதற்கு விளக்கம் சொன்னார் ஆசிரியர். இயற்கையான மொழி அதுதான் நிறைமொழி என்று சொல்லப் பட்டது. அது தமிழ் என்றும் மறை மொழி என்பது வடமொழி என்ற சமஸ்கிருதம் என்றார். சம என்றால் சமைத்தல் செய்தல் என்றார். ஆசிரியை வடமொழிச்சொற்கள் தமிழில் கலப்பது தப்பே யில்லையென்று வாதிப்பார். லத்தீன் சொற்கள் எத்தனை ஆங்கிலத்தில் கலந்ததால் ஆங்கிலம் அழகு பெற்றதே ஒழிய ஒன்றும் குறைந்துவிடவில்லை.தமிழிலிருந்துதான் வடமொழிச் சொற்கள் வந்தன. அவை தமிழுக்கு அழகு தருவனவே தவிர வேறில்லையென்று வாதிடுவார். பல முதியவர்களுக்கு இந்த வாதம் புரிவதில்லை எங்களைப்போல. ஆனாலும் பார்வை யாளர்களாகப் பார்த்துக் கொண்டிருப்போம்.' இப்போது தமிழர் புலம் பெயர்ந்ததால் ஆங்கிலம், பிரென்ஞ், டொய்ச், டெனிஷ், சுவீடிஷ் இன்னும் எத்தனை மொழிகள் தமிழில் கலக்கப் போகிறது. அவற்றையெல்லாம் ஏற்றுக்கொள்ளத் தானே போகிறோம். வடசொற்கள் கலப்பதால் தமிழ் தரந்தாழ்ந்து போகாது என்றார். இப்ப சென்னையில் ஓட்டோக்காரனிடம் இடதுபக்கம் திரும்பு என்று சொல்லிப் பாருங்கோ. தமிழில் சொல்லம்மா என்பான். லெஃப்ற் என்று சொன்னால் அப்படித் தமிழில் சொல்லும்மா. இடது என்று இங்கிலீஷ்சில் சொன்னா*

என்னம்மா புரியும் என்பான். அப்படி லெஃப்ற், றைட் என்பது தமிழ்ச்சொல் என்று நினைத்துக்கொண்டிருக்கும்போது சூரியன், லக்ஷூமி, விஷம், ஸ்ரீ, ஜென்மம், ஜீவன், ஜீவாதாரம் இந்த அழகான சொற்களை ஏன் நாம் புறந்தள்ள வேண்டும்' என்று வாதிப்பார். மாஸ்ரருக்கு செந்தமிழில் பேசப் பிடிக்கும். 'உங்களையே எல்லாரும் மாஸ்ரர் என்றுதானே கூப்பிடுகினம். யாரும் ஆசிரியர் என்று கூப்பிடுவதில்லையே' என்று ரீச்சர் ஒரு பிடிபிடிப்பார். அவரின் வாதத் திறமைக்கு முன்னால் யாரும் நிற்கவே முடியாது.

ஒரு பாட்டி எந்நேரமும் தன் பேரப்பிள்ளைகளைப் பற்றியே பேசிக்கொண்டு இருப்பார். யாரும் வந்து பார்ப்பதில்லை. சிலநேரங்களில் ஏதும் விசேஷம் என்று சொக்லேற்,ஏதும் சிற்றுண்டி கொடுத்தால் அதைத் தான் சாப்பிடாமல் தன் பேரப் பீளைகளுக்கென்று பெட்டியில் வைத்துப் பூட்டி வைத்து விடுவார். பின் ஒருநாள் எறும்பு மொய்ப்பதாகத் தேடி இதைக் கண்டு பிடித்து எங்களுக்கு கீழ் கொண்டு வந்து வீசினார்கள். நாங்கள் என்ன உண்ணவா முடியும். அப்போதும் எறும்புகள் காகங்கள் தான் உண்ணும். ஆனால் எங்களைத் தாங்கி நிற்கும் வேர்கள் சிலவற்றை உள்வாங்கி நாம் வளரத் தேவையான ஊட்டச்சத்தாக மாற்றிவிடும். இப்போது எல்லாம் அவர் பெட்டியில் பூட்டி வைப்பதை உடனேயே கண்டுபிடித்து விடுவார்கள். அப்போது இந்தப் பாட்டியின் முகம் சுண்டிவிடும். பராமரிப்பவர்கள் 'உங்களுக்குத்தானே தருகிறோம். நீங்க சாப்பிடுவதுதானே. அவர்கள் உங்களை நினைப்பதே இல்லை.' என்று சொன்னாலும்' நேரமில்லையாக்கும். அவர் களும் அவர்கள் பாட்டைப் பார்க்க வேண்டுமே. ஒருநாள் வரும் போது நான் என்னத்தைக் குடுக்கிறது. அதுதான் வைச்சிருக் கிறன். சொறி என்பா. ஆனால் திரும்பவும் அதேதான் செய்வா. திரும்பவும் 'நான் செய்தது தப்புத்தான். மன்னித்துக் கொள்ளுங்க' என்று சொல்வா. இப்படி அடிக்கடி சொல்லும் அவரிடம் 'நாங்கள் என்ன சேர்ச் ஃபாதரா எங்களிடம் ஏன் மன்னிப்பு கேட்கிறீங்க. வீணாக நீங்களும் சாப்பிடாமல் இப்படி வீணாக்குகிறீங்க என்றுதான் சொல்றம். வேறு ஒன்று

*மில்லை' என்பார்கள். சில நேரங்களில் பராமரிக்கும் பிள்ளைகள் வேலைக்களைப்பில் ஏதும் சொல்லி விட்டால் அந்த மூதாளர்கள் முகம் சுண்டிவிடும். அந்த ரீச்சர் அவர்களிடம் சொல்வா' வயதான குழந்தைகளைக் காயப்படுத்தாதீர்கள். சிறுகுழந்தைகளுக்கு வார்த்தைகளின் தாக்கம் புரியாது. எங்களுக்குப் புரியும். இயலாமையால் துவண்டு போயிருக்கும் நாங்கள் கடும் வார்த்தைகளால் நொருங்கிப் போய்விடுவோம்' என்று.*

*ஒருநாள் இதமான வருடுவதுபோல் நாங்கள் வீசும் சுகந்தக் காற்றை அனுபவித்த வண்ணம் இருந்த ஒருவருக்கு திடீரென ஒரு சந்தேகம் வந்தது. ஈகைக்கும் ஒப்புரவுக்கும் என்ன வித்தியாசம் என்று. எங்களுக்குப் புரியவில்லை. ஆனாலும் காது கொடுத்துக் கேட்டோம். 'மாஸ்ரரிடம் கேட்டால் புரிந்துவிடும்" சொல்லிக்கொண்டிருக்கும்போதே மாஸ்ரர் அவ்விடம் வந்து விட்டார். உடனேயே இருவரும் கேட்டார்கள். ஔவையார் ஈகை ஒழுகு என்று சொல்லாமல் ஏன் ஒப்புர வொழுகு என்று கூறினாரென்று. மாஸ்ரர் புரிய வைத்தார். நம்மை நாடி வந்து உதவி கேட்பவர்களுக்கு கொடுப்பது ஈகை. முன்பு அரசர்கள் அதுதான் செய்தார்கள். ஆனால் தம்மைப் புகழ வேண்டுமென்று எதிர் பார்த்தார்கள். ஒப்புரவு என்பது காற்று, மழை, போல தெரிந்தவர் தெரியாதவர் எல்லோருக்கும் கொடுப்பது. நன்றியை எதிர் பார்க்காதது.'ஆகா தமிழில் எவ்வளவு சிறப்பு என்று அவர்கள் வியந்ததுபோல் நாங்களும் வியந்து நின்றோம்.இவ்வளவு மேன்மை வாய்ந்த தமிழை நாங்கள் கேட்க அந்த பாலச்சந்திரன் ஐயாவும், திருமுருகன் ஐயாவுந்தான் காரணம் என்று அவர்கள் நீண்ட ஆயுளுக்காய் மனதார வேண்டினோம்.*

*இந்த மூதாளர்களிடமிருந்து நாங்கள் நிறையப் பழமொழிகள் கற்றுக்கொண்டோம். எல்லாவற்றுக்கும் ஏதோ பழமொழிகள் சொல்வார்கள்.ஆனால் இந்தப் பழமொழிகளும் அவர்களைப் போலவே இல்லாமல் போகப் போகிறதே என்று கவலையாக இருந்தது. இளையவர்கள் இதனை எங்கே தெரிந்து*

வைத்திருக்கப் போகிறார்கள். இவர்கள் அடிக்கடி சொல்வார் கள் எங்களைப் போலவே பழமொழிகளும் வழக்கொழிந்து போகப்போகிறதேயென்று. அந்த ஆசிரியர் சொல்வார் ஒரு வீட்டில் எப்போது பழமெழிகள் மறக்கடிக்கப்படுகிறதோ அப்போது மொழி வறுமைப்பட்டுப் போகுமென்று. எங்கே ஒரு நூலகம் திறக்கப்படுகிறதோ அங்கு ஒரு சிறைச்சாலை மூடப்படுமென்று. இந்த முதியவர்கள் ஞாபக மறதியாக இருப்பது எங்களுக்கு வாய்ப்பாகப் போனது. ஏன் என்றால் அடிக்கடி சொன்னவற்றைத் திரும்பத் திரும்ப சொல்லுவார்கள். நாம் அவற்றை உள்வாங்க வசதியாக இருக்கும்.

காற்றிடம் இரகசியம் பேசும் எங்களின் சலசலப்பையும் சிறு செடிகளின் கிசு கிசுப்பையும், வாசத்துடன் விரியும் மலர் களையும், குருவிகளின் கீச்கீச் ஒலியையும், சில்லென்ற காற்றையும் அனுபவிக்க ஒரு முதியவர் எங்களின் கீழ் அமர்ந்து தியானம் செய்வார். பேச்சுக்களிலிருந்து ஒதுங்கி மௌனமே மொழியாக தனக்குள்ளேயே மூழ்கிப் போவார். ஒருநாள் ஒரு மூதாட்டி ‘எனக்கும் தியானம் சொல்லித் தருவீர்களா?’ என்று அவரைக் கேட்டார். அவரும் ஒப்புக் கொண்டதுடன் ‘முதலில் இயற்கையின் இரகசியத்தை அறிந்து கொள்ளுங்கள்’ என்றார். அவர் எங்களைப் பற்றித்தான் நிறையப் பேசினார். எங்களுக்கு அப்பேச்சு வியப்பாகவும் பெருமையாகவும் இருந்தது. என்னைக் காட்டி ‘இந்த மாமரம் ஒரு விதையிலிருந்து முளைத்து வளரத் தொடங்குகிறது. அந்த வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பது மண்ணும், நீரும் தான். மண்ணிலிருந்து கிரகிக்கும் சக்தி இந்த மரத்திலுள்ள உணர்வுகளின் விளைவுகளால்தான் உருவாகிறது. இது தாவர இனங்களுக்கே உள்ள ஒழுங்கமைப்பாகும். பாருங்கள் இதனருகில் வளர்ந்த மற்ற மரம் இதன் பக்கத்தில் தன் கிளைகளைப் பரப்ப முடியாததால் தன்னுணர்வுகளின் ஒழுங்கு அமைப்பால் வளைந்து தன் திசையை மாற்றி வளர்கிறது. எதுவாக நாங்கள் உணர்கிறோமோ அதுவாக நாங்கள் வர முடியும். தியானம் என்பது நாங்கள் எங்களுக்குள்ளேயே கடவுளைத் தேடுவது, அதை அனுபவிப்பது. அதோடு நேரம் மிக முக்கியம். ஒவ்வொருநாளும் ஒவ்வொரு நேரத்துக்கு

அமரக்கூடாது. ஒரே நேரத்தில் இங்கு வந்து முதலில் இயற்கையை அனுபவிக்கப் பழகுங்கள். பறவைகளின் ஒலியையும் ஏன் காற்றின் ஓசையையும் கூடக் கேட்டு ஒன்றிணையுங்கள். அமைதியான காலைப்பொழுதில் இயற்கை யின் எல்லா ஓசைகளும் நமக்கு இறைவனை உணரச் செய்யும். முதலில் அந்த இனிமையான ஓசையில் மூழ்குவோம். அப்போதுதான் எங்களுக்குள்ளே கிளர்ந்தெழும் கடவுள் பற்றிய எண்ணங்களை உணர்ந்து கொள்ள முடியும். ஒருவாரம் காலையில் இங்கு வந்து இயற்கையோடு சேர்ந்து அந்த இன்பத்தை அனுபவியுங்கள். பிறகு மெல்ல மெல்ல மனதை ஒரு நிலைப்படுத்த ஆரம்பிக்கலாம்' என்றார். கண்ணை மூடி மனதை ஒரு நிலைப்படுத்து என்றுதான் பலர் சொல்வதைக் கேட்டிருக்கிறோம். இவர் புதிய வழியில் இயற்கையுடன் இணைந்து மனதை ஒருநிலைப்படுத்த வழி காட்டினார்.' இது பலனளிக்கக் கூடிய இலகுவான வழிபோல் தோன்றுகிறது' என்று அப்பெண் கூறியதுடன் 'நாளைக்கே அப்படிச் செய்கிறேன்' என்று உறுதிபூண்டார். எங்களுக்கும் கொஞ்சம் தற்பெருமை ஏற்பட்டது.

ஒருநாள் அவர்கள் பேசும்போது ஒருவர் கேட்டார். அண்ணா, தம்பி வழக்கமாகச் சொல்வது. ஆனால் உங்களையேன் தம்பியண்ணா என்கிறார்கள்? நியாயமான கேள்வி. நாங்களும் அப்படி நினைப்போம்." அதுவா நான் கதிர்காமத்தம்பி. அதுதான் சுருக்கி தம்பியோடு மரியாதைக்கான அண்ணாவை யும் சேர்த்துக்கூப்பிடுகிறார்கள்" என்று விளக்கினார் கதிர் காமக்கந்தனின் நினைவாக கதிர்காமத்தம்பி சரி. நல்லூரான் நினைவாய் ஒருத்தரும் நல்லூர்த்தம்பி என்று பெயர் வைத்த தில்லை என்ன என்று ஒருவர் கேள்வி எழுப்ப எல்லோரும் "ம். நாங்க அதை நினைத்ததும் இல்லை. இந்தப்போர் எங்கள் சிந்தனை ஆற்றலை வலுவிழக்கச் செய்துவிட்டதே. சதா பொம்மர், ஷெல்லடி என்று பயந்து பயந்து எத்தனையை நினைக்கவோ ஆராயவோ மறந்திட்டம்" என்றார்கள்.

இப்போது வெளிநாட்டிலுள்ள பல அன்பர்கள் உதவிக் கொண்டிருக்கிறார்கள். அடுத்த தலைமுறை எங்கள்

மண்ணைத் திரும்பிப் பார்ப்பார்களா என்று எங்களைப் போலவே திருமுருகன் ஐயாவும் கவலைப்பட்டார் போலும். அதற்கு வேண்டியவற்றை இப்போதே செய்யவேண்டுமென்ற தூரநோக்குப் பார்வையுடன் பல செயல்திட்டங்களைச் செய்தார். கேட்டுக் கொண்டிருந்த எங்களுக்கும் மகிழ்ச்சி யாகவே இருந்தது. சுழிபுரத்தில் 200 பரப்புக் காணியில் பயன் தரக்கூடிய எங்கள் உறவினர்களான தென்னைகளை நட்டு இப்போது அவை பலன் தரத் தொடங்கிவிட்டன. பளையில் 100 பரப்பில் நெற்பயிர்சசெய்கையும் இயக்கச்சியில் பஞ்சாமிர்தத் தோட்டம் என்ற பெயரில் பலவிதமான பழமரங்கள் நடப்பட்டும் நாவற்குளியில் செவ்விளநீர் மரங்களை நடப்பட்டும் இருக்கிறது. எங்களின் அருமை தெரிந்து எங்களை வளர்ப்பது எங்களுக்கு எவ்வளவு ஆனந்தத்தை தருகிறது. இதோடு அவர் ஓய்ந்துவிடவில்லை.மேலும் மேலும் உயிரோட்டமான செயல்களைச் செய்து கொண்டுதானிருக்கிறார். அவரோடு அவரது அன்பர்கள், பணியாளர்களும் எமது வேர்கள்போல் கண்ணுக்குத் தெரியாமல் பணி செய்து கொண்டிருக்கிறார்கள்.

அவரது நற்பணிகளில் எல்லாம் சிகரம் வைத்ததுபோல் நாவற்குளியில் திருவாசக அரண்மனை நிறுவப்பட்டுள்ளது. ஒஸ்திரேலியாவில் இருதயசிகிச்சை நிபுணராக கடமையாற்றும் வைரமுத்து மனமோகன் என்பவர் அன்பளிப்பாகக் கொடுத்த நிலத்தில் திருவாசக அரண்மனை அமைக்கப்பட்டிருக்கிறதாம் யாழ்ப்பாண நுழைவாயிலில் இதை அழகுற அமைத்திருக் கிறார்களாம். அங்கு கருங்கல்லில் 108சிவலிங்கங்களும் அவற்றையொட்டி 108 மணிகளும் 658 திருவாசகப் பாடல்கள் கருங்கல்களிலே பதிக்கப்பட்டிருப்பது பற்றியும் எல்லோரும் பேசுவதைப் பார்க்கும்போது அவற்றைப் பார்க்க எமக்கு கொடுத்து வைக்கவில்லையே என்றிருந்தது. திருவாசகப் பாடல்களைக் கருங்கல்லில் பதிக்க வேண்டுமென்ற எண்ணம் ஒரு சித்தராலேயே தனக்கு வந்ததாக திருமுருகன் ஐயா கூறியிருக்கிறார். தன்னுடைய ஆசையை ஐயா மூலம் செயலாக்கிய செய்தி எம்மை சிலிர்க்கச் செய்கிறது. ஈழம் என்ற இலங்கைக்கு முன்பு சிவபூமி என்று பெயர் இருந்ததாக அந்தச் சித்தர் கூறியிருக்கிறார். 21 அடி உயரமான கருங்கல்

*தேரும் அமைத்திருக்கிறார்களாம். அடிக்கடி நமது கோயில்கள் அழிக்கப்படுவதால் இறைவனே கருங்கல்லில் செய்யுமாறு ஆணையிட்டிருக்கிறார் போலும். இதை எப்படி அழிப்பார்கள் என்று சவால் விடுவதுபோல் அமைக்கப்பட்டிருக்கிறது. எரிக்கப்பட்ட யாழ் நூலகத்திலிருந்து தப்பி பிழைத்த பக்தி இலக்கியமான தேன் என்று அழைக்கப்படும் திருவாசகம் 11 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு அங்கு பாதுகாக்கப் படுகிறது. ஆங்கிலம், சிங்களம், யப்பான், சீன, பிரென்ஞ், டொய்ச், கன்னட, உருது, தெலுங்கு, ஹிந்தி போன்ற மொழி களில் மொழிபெயர்க்கப்பட்டிருப்பது சைவர்களுக்கு எவ்வளவு பெருமை. அதோடு திருவாசகம் தொடர்பான ஆராய்ச்சி நிலையமும் அமைத்திருக்கிறார். சிவபுராணம் பாடிய மாணிக்க வாசகரையும் மறக்காது அவருக்கும் அங்கு இடமளித் திருக்கிறார். சிறுகுறுகிய காலப்பகுதியில் இவ்வளவெல்லாம் சாதிக்க முடிந்தது கடவுள் அருளில்லாமல் வேறெதுமில்லை.*

*ஒருநாள் பிள்ளைகள் இல்லாத அந்த முதிய தம்பதியரில் அந்த மனைவி திரும்ப வரமுடியாத மீளா உறக்கத்துக்குச் சென்றுவிட்டா.' நெஞ்சு அடைக்குது. சூடாக குடிக்க ஏதும் தாங்கோ" என்று கேட்டாவாம். கணவன்தான் எடுத்துப்போய் குடுத்துப் பருக்கி விட்டிருக்கிறார். கணவனின் கையைப் பிடித்தபடியே உயிர் பிரிந்துவிட்டது. எங்களிடமிருந்து பழங்கள் எங்களுக்கு நோகாமல் கழன்று விழுவதுபோல் அந்த உயிரும் பிரிந்திருக்கிறது. அது தெரியாமலே அவர் தலையைத் தடவி விட்டுக் கொண்டிருந்திருக்கிறார். ஐயா வந்து பார்த்தபோது தான் தெரிந்தது. உடனே அவருக்கு சொல்லவில்லை. அந்த அதிர்ச்சியைத் தாங்குகிற சக்தி அவருக்கு இருக்காது என்பது எல்லாருக்கும் தெரியும். எங்களுக்குத் தெரிந்தபோது உடைந்து போய்விட்டோம். இனி எப்படி அந்தக் கணவர் இருக்கப் போகிறார். கவலையாக இருந்தது. யதார்த்தம் புரிந்தாலும் எல்லோரும் உயிரற்ற அந்த வெற்றுடலைப் பார்த்தபடி மௌனமாக இருந்தார்கள். மௌனத்தை விதைத்துவிட்டு மரணங்கள் முடிந்து போகின்றன. இருவரும் ஒன்றாய் இறக்க வேண்டுமென்ற எங்கள் வேண்டுதல் பொய்யாகிப்*

போனது. எங்கள் பூக்கும் செடிகளிலிருந்து பூக்களைப் பறித்து எல்லோரும் அஞ்சலி செலுத்தினார்கள். அந்தக்கணவன் மனைவியின் பக்கத்தில் உட்கார்ந்து மௌனமாக அழுது கொண்டிருந்தார்.சுருங்கிய கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது. அவர் எப்போதுமே பேசுவது குறைவு. ஆமை தன் தலையை ஓட்டுக்குள் இழுப்பதுபோல் ஒடுங்கிப்போய் உட்கார்ந்திருந்தார். அந்த சோகத்தைச் சுமந்து அன்று வானமும் அழுதது. குழந்தைகளில்லாத அந்தத் தாய்க்கு இறுதி அஞ்சலி செலுத்த வானமாதா அனுப்பிய காணிக்கை போலும் அந்த மழை. நாங்களும் அந்தக் கணவரைப்போல மௌனமாகக் கண்ணீர் சிந்தினோம். அக்கண்ணீர் அவரின் கணவருக்காக.தளர்ந்த நடையுடன் இனித் தனித்து எம்மிடம் அவர் வரப் போகும் காட்சி எங்கள் கண்களில் விரிந்தது. கடைசி அஞ்சலி முடிந்து உடலைத் தூக்கும்போது விரைவில் வானுலகில் சந்திப் போமென்று மௌனமொழியில் அவர் பேசுவது போல் இருந்தது. திரும்ப வரமுடியாத அவர் பயணம். பாரமான நெஞ்சங்களுடன் மற்றவர்கள்.

அந்த முதியவர் அதன்பின் கன நாட்கள் உயிர் வாழவில்லை. மனைவியின் சேலையைப் படுக்கை விரிப்பாக மாற்றியதுடன் அவரின் சேலையை வைத்துக்கொண்டு படுப்பதாகவும் பேசிக் கொண்டார்கள். மனைவியன் மூச்சுக் காற்றை அந்தச் சேலையில் உணர்ந்தார் போலும். தாய்க்குப் பின் தாரம் என்பது உண்மைதான் போலும். மனைவி தாயாய் மாறுவது எங்கள் சமூகத்தில் மட்டுந்தானா? தெரியவில்லை. வாய்விட்டுப் பேசாத தால் அவரின் துன்பம் கரையவேயில்லை. மனைவியின் சினேகிதி சொன்னார்.' அவருக்கு தன் கணவரைப் பற்றித்தான் கவலை. தன்னை விட்டு ஒரு நாளும் இருந்தது இல்லை.தான் முந்திவிட்டால் என்ன செய்வாரோ'என்று அடிக்கடி கூறுவார். கீரிமலைக்கடலில் சாம்பல் கரைக்கப் போனபோது நீண்டநேரம் கடலில் சோக நுரை ததும்பும் அலைப்பூக்களைப் பார்த்தபடி இருந்தாரென்று மற்றவர்கள் பேசியதைக் கேட்டபோது எங்களுக்கும் வேதனையாக இருந்தது.

வெளிநாட்டிலிருந்து ஒரு பெரியவரின் பேத்தியும் பேரனும் எங்கள் மரத்தடிக்கு வந்தார்கள்.சுட்டிக்குழந்தைகள். மொழு மொழு என்று அழகான குழந்தைகள். பேரன் எங்களில் பூத்திருந்த மலர்களைப் பறித்து பிய்த்து விளையாடினான். அப்போது அங்கு வந்த ஆசிரியை 'தமபீ! பூக்களை இப்படிப் பிய்க்கக் கூடாது. இந்தச் செடிகளின் குழந்தைகள் இந்த மலர்கள். செடியோடு பார்த்து இரசிக்க வேண்டும் என்றார்.' சுவிசில் பப்ளிக் தோட்டங்களில் பூக்களைப் பறிக்கக்கூடாது. இங்கு எல்லோரும் பறிப்பதைப் பார்த்து தானும் பறித்துவிட்டான். என்ஷூல்டிகுங் சொல்லுங்கோ' என்று அப்பா கூறினார். அவனும் கூற 'மன்னிக்கவும் என்று தமிழில் சொல்லிப் பழக்குங்கோ' என்றார் அங்கு வந்த ஆசிரியர்.' பார்த்தீர்களா இனி எங்கள் குழந்தைகள் எத்தனை மொழிகளைக் கலந்து கதைக்கப் போகிறார்கள் என்று.தம்பிக்கு என்ன பெயர்?'என்று கேட்டார். "கவிஷ்" என்றான். 'என்ன அர்த்தம். புதுசாயிருக்கு பெயர் என்றார் ஆசிரியை. அப்பா சொன்னார் 'நான் பிரகாஷ். அவ கவிதா. அதுதான் இரண்டு பெயரிலும் பாதி பாதி வைத்து பெயர் வைத்து இருக்கிறோம்.'' ஓ! அப்போது மகளின் பெயர் 'பிரதா' ஆசிரியை புத்திசாலி. சரியாக கேட்டார். ஓமோம். அவர் பெருமையாகக் கூறினார். ஆசிரியையின் வாய் சும்மா இருக்காது. 'ஓ இனி அடுத்த குழந்தை பிறந்தால் பாதிப்பெயருக்கு யாரிடம் போவீர்கள்?' என்று கூறிவிட்டுத் தொடர்ந்தார். அர்த்தமுள்ள பெயர்களை வையுங்கோ. சொற்களுக்கு சக்தி இருக்கிறது. நல்ல வைபிறேஷன் தரக்கூடிய பெயர்களை வையுங்கோ. உங்கள் வாழ்க்கை பிரகாசமாய் இருக்க வேண்டுமென்று தான் பிரகாஷ் என்று உங்கள் பெற்றோர் வைத்திருக்கிறார்கள். உங்கள் மனைவிக்கு கூட கவிதை பாடுபவள் என்று கவிதா என்று வைத்திருக்கலாம். அல்லது தாங்கள் இருவருமாகச் செய்த கவிதை என்ற பொருளிலும் வைத்திருக்கலாம்.அதை நீங்க கொச்சைப்படுத்துறீங்களே' அவரின் முகம் சுருங்கி விட்டது. இந்த வெளிநாட்டில் வாழுகிற சில தமிழருக்கு நல்ல பதில் கூறியதில் எங்களுக்கு நல்ல மகிழ்ச்சி.

ஆசிரியர் சொன்னார் பிள்ளைகளுக்கு தாய்நாட்டைக் காட்ட வந்திருக்கிறீர்கள். சிவபூமி அருங்காட்சியகம், குப்பிளான் ஞான ஆச்சிரமம், எங்கள் தென்னந் தோட்டங்கள், பழத்தோட்டங்கள், நெல் வயல்கள், கீரிமலை மடங்கள் எல்லாவற்றையும் கூட்டிக் கொண்டுபோய்க் காட்டுங்கோ. தாய்நாட்டைப்பற்றி அவர்கள் அறியவேண்டும். திருவாசக அரண்மனை நீங்கள் கட்டாயம் பார்க்க வேண்டும். திருவாசகத்தைப் பற்றி பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுக்க வேண்டும் திருவாசக அரண்மனை பற்றியும் அருங்காட்சியகம் பற்றியும் அந்த ஆசிரியர் புகழ்ந்ததைப் பார்த்து கட்டாயம் நாளைக்கே போவம். நீங்களும் வாங்கோ மாஸ்ரர் என்று அவரையும் அதைத்தார்.

நாங்கள் இலைகளை உதிர்ப்பதும் துளிர்ப்பதுமாய் எங்கள் வாழ்க்கை ஓடிக் கொண்டிருக்கிறது. அங்கு வாழ்பவர்கள் மனதிலுள்ள சோகங்கள் மறைந்தும் மறையாமலும் வாழுவது போல் நாங்களும் எல்லாவற்றுக்கும் சாட்சியாய் வெறுமனே மரங்களாய் நிற்கின்றோம். இன்று எங்களுக்குப் பக்கத்தில் வந்த ஆண் மதர் தெரேசாவான திருமுருகன் ஐயாவை கட்டித் தழுவி வாழ்த்த முடியாமல் போனதற்காக முதன்முதலாக வருந்தி வெறும் மரங்களாக நின்றோம். வாழுங்காலத்திலேயே ஒருவரின் சேவையைப் பாராட்டிப்புகழ்ந்து கௌரவிக்கிறது தான் அவர்களுக்கு நாம் செய்யும் நன்றிக்கடன் என்பது மரங்களாகிய எங்கள் எல்லோரினதும் ஏகோபித்த கருத்து. எங்களைவிட அறிவில் சிறந்த உங்களுக்கு இது தெரியாமலா இருக்கும்? மற்றவர்களுக்காகவே வாழும் எங்களைப் போலவே ஐயாவும் சந்தனமாய் தேய்ந்து கொண்டிருக்கின்றார். பச்சை மரங்களெல்லாம் சிலிர்த்து இலைகளை அசைக்க பழுத்த இலைகள் காத்திருக்கின்றன அழைத்து செல்ல காற்று வரும்வரை. எங்கள் மேலிருந்து படபடத்துப் பறக்கும் பறவைகளை தூக்கிக்கொண்டு வானம் மெதுவாக நகர்ந்து கொண்டிருக்கிறது.

❑

# துன்பம் நேர்கையில்

**உலக** வரைபடத்தில் உள்ளங்கை போல் தோன்றும் ஜேர்மனிக்கும், கழுத்தை நீட்டி ஒருபக்கம் சாய்வாகப் பார்க்கும் முகம் போன்ற ஃபிரான்சுக்கும், கருப்பையில் கால்நீட்டி உட்கார்ந்திருக்கும் குழந்தை போன்ற ஒஸ்ரியாவுக்கும், நீட்டிய கை போன்ற இத்தாலிக்கும் நடுவே அமைதி பேணும் குட்டி நாடான சுவிற்சர்லாந்தில் கடந்த காலங்களைப்போல இந்த வருடம் பூம்பனி கொட்டவில்லை. பனி காலம் முடியும் தறுவாயில் இரண்டுமுறை அதுவும் ஒருமணிநேரம் மாதிரிக்கு கொட்டி விட்டு போய் விட்டது. அல்ப்ஸ் மலைத்தொடர் பகுதியில் பனிப்பொழிவு நன்றாகத்தான் இருந்தது. ஆனால் சூரிச் நகரத்துக்குள்ளும் பல நகரங்களிலும் பனிப்பொழிவு சொல்லும் படியாக இருக்கவில்லை. ராதிகா வேலையால் வரும்போது நினைத்துக் கொண்டே வந்தாள். எங்கும் பூம்பனி கொட்டியிருப்பது எவ்வளவு கவலை இருந்தாலும் மனதை மகிழ்விக்கும். வீதிகள், மலைகள், குன்றுகள் எல்லாமே வெள்ளை வெளேரென்று காட்சியளிப்பது மனதுக்கு இதமாக இருக்கும். வேதனைகள் மனதை அரிக்கும்போதெல்லாம் அக்காட்சிகள் மனப்பதட்டத்தைக் குறைப்பதை அவள் அனுபவத்தில் உணர்ந்து இருக்கிறாள்.

பனி கொட்டாதிருந்த பனிகாலம் ஓடி மறைந்தது. ராதிகாவின் வாழ்விலும் பனிமூட்டம் கண்டது. அன்பான கணவன், இரு குழந்தைகள் என்று இருந்த வாழ்வு இப்போது தடம் புரண்டு வருவது வேதனையாக இருந்தது. நான் பிறக்காமலே விட்டிருக்கலாம்" என்றோ, தற்கொலை செய்துவிடலாமென்றோ இப்போதெல்லாம் அடிக்கடி நினைத்துக்கொள்கிறாள். விரக்தியாக இருக்கும். அவளுக்கு கணவனிடம் தன் கவலையைப்

*பகிர்வது முடியாத காரியம் போல் இருந்தது.பத்து வயதும் ஆறு வயதுமான குழந்தைகளை நினைத்து நினைத்து மறுகுகிறாள்.' கடவுள் ஏன் எனக்கு இப்படியான வாழ்க்கையைத் தந்தார்' ஒரு நாளைக்கு முப்பது தரமென்றாலும் இப்படி நினைக்கத் தவறுவதில்லை. ராதிகாவின் மாற்றத்தைக் கவனித்த ராகுலன்' ஏன் ஒருமாதிரி இருக்கிறீர். உடம்பு சரியில்லையா? டொக்ரரிடம் போறதுதானே' என்று பலதடவை கேட்டுவிட்டான்.' ஒன்று மில்லையே. நான் நல்லாய்த்தானே இருக்கிறேன்' கூறிச் சமாளித்துக்கொண்டு வருகிறாள்.*

*நேற்று டொக்ரரிடம் போனபோது அடுத்த முறை கணவனையும் கூட்டி வருமாறு கூறிவிட்டார். எவ்வளவு நாள் மறைக்கலா மென்று ராதிகாவிற்குத் தெரியவில்லை. டொக்ரர் கூறிய ஒரேயொரு வார்த்தை உள்ளத்துள் நேராகப் புகுந்து ஆழமான வேதனையைத் தோற்றுவித்தது.மொத்த சந்தோஷத்தையும் அள்ளி வாரிச் சுருட்டிக்கொண்டு உள்ளத்தின் ஏதோ ஒரு மூலையில் சுருண்டு உட்கார்ந்து விட்டது. அவ்வப்போது அந்த வார்த்தையை வெளியே எடுத்து அதன் அர்த்தம் புரிந்ததும் மீண்டும் உள்ளே தள்ளி உட்கார வைத்து விடுகிறாள். சீக்கிரத்தில் வைத்தியம் ஆரம்பிப்பது குணமடைவதற்கு உதவுமென்று டொக்கர் கூறியதிலிருந்து ஒவ்வொரு நாளும் கணவனிடம் பேச்சை ஆரம்பிக்க வேண்டும் என்று நினைப்பாளே தவிர ஆரம்பிக்க தைரியம் வரவில்லை. தன் சோகத்தை இடம் மாற்றி அவன் தோள்களில் ஏற்றிவிடத் தயங்கினாள். தனக்கு ஏதும் ஆகிவிட்டால் பிள்ளைகளை வைத்துக் கொண்டு அவர் எப்படி சமாளிப்பார் என்பதே அவளது கவலை. இதோ இலைதுளிர் காலமும் எட்டிப் பார்க்கிறது.மொட்டை மரங்களெல்லாம் துளிர்க்க ஆரம்பிக்கின்றன. மொட்டுக்கள் மெதுவாக இதழ்களை விரித்து மலர்கின்றன. வேறு சில மரங்கள் மெல்லெனத் துளிர்க்கின்றன. விரிந்த மலர்களும், பச்சை இலைகளும் வீசும் மெல்லிய காற்றில் தம் தலைகளை அங்குமிங்கும் அசைத்துக் கொண்டிருந்தன.*

ராதிகாவுக்கு நோய் அச்சம் வாட்டி எடுத்தது. மிச்சமிருக்கும் தன் வாழ்நாளை அங்குலம் அங்குலமாய் அனுபவித்திட என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்வோம் என்று நினைத்த மறுகணமே ஏன் இதற்குள்ளிருந்து நான் பிழைத்துவர வேண்டும் என்று நினைப்போமே". ராதிகாவின் தந்தை அடிக்கடி கூறுவது ஞாபகத்தில் வந்துவந்து மோதியது.' எல்லா வற்றையும் கடவுளிடம் ஒப்படைத்துவிடு. அவர் உன்னை வழிநடத்துவார்'. அதைவிட வேறு வழியேயில்லை. ராதிகா தன் சிந்தனையில் தன்னைத் தொலைத்துக் கொண்டு இருந்தாள். அவளது மூச்சு மட்டுமே மெல்லிய சத்தத்துடன் அலையடிப்பது போல் அடித்துக் கொண்டிருந்தது. மனதை வேறு திசையில் திருப்ப எண்ணி பிள்ளைகளுக்கு கதை கூறினாள். மகன் கேட்டான் "அம்மா!அப்பா சொல்கிறார் நாங்கள் பெரியவர் களாகும்போது கார் எல்லாம் இருக்காதாம். வீதிகளில் நடக்கவே தேவை வராதாம். நாங்கள் எஸ்கலேற்ரரில் போவதுபோல் போகலாமாம். அப்படியா?'' இருக்கலாம். விஞ்ஞானம் போகிற அசுர வேகத்தைப் பார்த்தால் அப்படித்தான் வரும் போலிருக் கிறது.' என்றாள். அங்கே வந்த ராகுல்'என்னடா நான் சொல்வதில் நம்பிக்கையில்லயா?அம்மா சொன்னால்தான் நம்புவீங்களோ? விளையாட்டாகக் கேட்க ராதிகாவின் மனம் எங்கேயோ தாவியது. நானில்லாமல் என்ன செய்வார்கள் என் பிள்ளைகள்?' திடுக்குற்ற மனதை மாற்றி விளையாடினாள். பொய்யாகச் சிரித்தாள். மகள் சொன்னாள். அதோடு அப்பா இன்னொன்றும் சொன்னார். காலம் போகப்போக சமைக்கவே தேவையில்லையாம். எல்லாச் சத்தும் ரொனிக் மாதிரி போத்தலில் அடைத்து வந்திடுமாம். அப்படியே வாங்கிக் குடிக்க வேண்டியதுதான்."ஓ. அப்பா பெரிய தீர்க்கதரிசி. அவர் சொல்றது எல்லாம் நடந்திடுமா?"அவர்களுடன் இணைந்த கணவன் ராகுல் பொய்யான அவள் சிரிப்பைப் புரிந்து கொண்டதுபோல் பக்கத்தில் வந்து அமர்ந்தான்.ராதிகாவின் கரங்களைப் பற்றி எதுவுமே பேசாமல் மிருதுவாகத் தடவி அழுத்தினான்.அந்த ஸ்பரிசத்தில் உடைந்து போனாள் ராதிகா. அன்பு பொங்கி வழிந்து கொண்டிருந்த ராகுலின் அண்மையில் பேச்சிழந்து நெகிழ்ந்து

*போனாள். அங்கே இரண்டு இதயங்கள் வார்த்தைகளின்றி மௌனமாக ஒன்றோடொன்று பேசிக் கொண்டன. புதிய உணர்வு அவளது உடலைத் தொட்டு தெம்பூட்டியது. சக்தி வாய்ந்த அந்த உணர்வு அவளை ஆறுதல்படுத்தி ஒன்றுமே யில்லை என்பதுபோல் ஆசுவாசப்படுத்தியது. அப்போதைக்கு தன் கவலைகளைக் கொஞ்சமாகத் தள்ளிப் போட்டாள். "உடம்பு சரியில்லையா?" கனிவான அவன் பேச்சு தற்காலிகமான ஆறுதல் என்றாலும் அவளுக்கு சுகமாக இருந்தது.*

*இரவு முழுவதும் உயிரோடு இருத்தல்,உயிரோடு இல்லாதிருத்தல் என்ற இரு நிலைகளையும் மனதில் ஆராய்ந்தபடியே இருந்தாள்.இத்தகைய எண்ணங்கள் இரவையும் தாண்டி வைகறைப் பொழுது வரை ஓடிக் கொண்டேயிருந்ததில் தூக்கம் இழந்தவள் அதன்பின் இலேசாகக் கண் அயர்ந்தவள் மகள் அபி-ராமி 'அப்பா! தம்பியைப் பாருங்கோ' என்ற கத்தலில் திடுக்குற்று விழித்தாள். ராகுல் அபிராமியை அதட்டுவது கேட்டது.' அம்மா நித்திரை. சத்தம் போட்டு எழுப்ப வேண்டாம்'குரலில் இருந்த அக்கறை கண்ணில் கண்ணீரை வரவழைத்தது.' இதெல்லாவற்றையும் நான் அனுபவிக்காமல் சீக்கிரம் போயிடப் போகிறேனே'கணவன் அருகில் வரும் ஓசை கேட்கவும் அவசரமாகக் கண்ணீரைத் துடைத்தபடி திரும்பிப் படுக்கிறாள். அவளது அசைவைப் பார்த்த ராகுல் பக்கத்தில் வந்தமர்ந்து தலையைத் தடவியபடி 'நான் சமைத்து விட்டேன். நீர் தூங்கும். இன்று ஞாயிற்றுக்கிழமைதானே. ஒரு அவசரமும் இல்லை. றெஸ்ற் எடும். உடம்புக்கு முடியாவிடில் நாளைக்கு டொக்ரரிடம் போம். வேணுமென்றால் நானும் வாறன்' மென்மையாக மயிலிறகால் தடவுவது போல் சொல்லிவிட்டு போர்வையை இழுத்துப் போர்த்திவிட்டு நகர்ந்தான்.*

*ராதிகா தன் தோழி தாரணியிடம் தன் நோயைப்பற்றிக் கூறிய போது அவள் உடனே ராகுலிடம் கூறி உடனடி சிகிச்சையை ஆரம்பிக்குமாறு வற்புறுத்தினாள்.நாட்களைக் கடத்துவது நல்லதற்கில்லை.முற்றாக நோய் மாற வழியிருக்கும்போது வீணாகக் கவலைப்படாமல் இருக்குமாறு அறிவுரை கூறி-*

*னாள்.” தாரணி!எனக்கு மனஅழுத்தம் வரும்போலிருக்கிறது. சமீபத்தில் ஒரு பெண் தன் குழந்தையைக் கொலை செய்து விட்டுத் தானும் தற்கொலை செய்தமாதிரி நானும் ஏதும் செய்துவிடுவேனோ என்று பயமாயிருக்கு” என்று கூறி அழுதாள். தோழியை அரவணைத்த தாரணி ராதிகா! அப்படி எதுவும் நடக்க நாங்க யாரும் விடமாட்டோம்.நீ முதல் ஒரு சைக்கோலஜிஸ்ற் இடம் கௌன்சிலிங் போ.உனக்கு தைரியம் வரும்.இப்போதைக்கு பிள்ளைகளிடம் எதுவும் சொல்ல வேண்டாம். உன் கணவரிடம் நான் வேணுமென்றாலும் பேசுகிறேன். ஆனால் நீயே சொல்வதுதான் நல்லது. கவலையேபட வேண்டாம். இங்கு முதல்தரமான சிகிச்சைகள் இருக்கிறது. நம்பிக்கையோடு இரு” ஆறுதல் கூறினாள்.*

*அன்றே தைரியத்தை வரவழைத்து ராகுலிடம் சொல்லிவிட்டாள். அவன் இடிந்துபோய் விட்டான்.சில நிமிடங்கள் மௌனமாக இருந்தவன் பின் அவள் தலையைத் தடவி ‘கவலை வேண்டாம். நான் பக்கத்தில் இருக்கிறேன். வென்று வருவோம்’ என்று கூறியது அவளுக்கு கனவுபோல இருந்தது. ராதிகா உடைந்து போய்விடக்கூடாது என்பதற்காக துக்கத்தை மென்று விழுங்கினான். ராகுல் கவலைப்படக் கூடாதென்று ராதிகாவும் ராதிகா கவலைப்படக் கூடாது என்பதற்காக ராகுலும் தங்கள் தங்கள் கவலைகளை மனதுக்குள் போட்டு புதைத்தார்கள். அடுத்தடுத்த நாட்கள் மெதுவாக ஊர்ந்தது போலிருந்தாலும் வைத்தியசாலை, வைத்தியர், வைத்திய சிகிச்சை என்று எல்லாம் துரித வேகத்தில் நடந்தது. தாரணி பிள்ளைகளைப் பார்ப்பதில் ஒரு தாய் போல் இருந்து உதவினாள். சிகிச்சைக்கு முன்பே ராதிகா, ராகுல் இருவருமே கௌன்சிலிங் சென்றதில் மனம் தெளிவாகியது. பயத்தை நீக்கி வெற்றி உறுதி என்பதை இருவர் மனதிலும் ஆழப்பதித்தார் அந்த மனநல மருத்துவர். மனம் எதை நம்புகிறதோ அது வாழ்வில் உண்மையாக நடை பெறத் தொடங்கும் என்றும் பயம் நம்பிக்கையைப் போக்கிவிடும் என்றும் கூறினார். மனதில் பாரமான எண்ணங்கள் எழுந்து அழுத்தம் கொடுத்து சுமைகளாகும்போது எண்ணங்களைச்*

சுமக்க முடியாமல் தடுமாறிக் குழம்புவதே மனக்குழப்பத்தில் கொண்டுபோய்விடும். மனம் எதை நம்புகிறதோ அது வாழ்வில் உண்மையாக நடைபெறத் தொடங்கும். சுகம் வருமென்று தீவிரமாக நம்ப வேண்டும் என்று அவர் கூறியது ராதிகாவுக்கு கொஞ்சம் தெம்பூட்டுவதாக இருந்தது அவர் கூறிய ஒரு குட்டிக்கதை ராதிகாவை மட்டுமன்றி ராகுலுக்கும் ஒரு தெம்பைத் தந்தது.

இரண்டு தவளைகள் பால் நிரம்பிய வாளிக்குள் தவறி விழுந்து விட்டனவாம்.ஒரு தவளை நான் செத்தேன்.எப்படித் தப்பப் பே–ாகிறேன் என்று நினைத்துப் புலம்பியது. அதன் கை கால்கள் இந்த நினைவினால் சக்தி இழந்தன. மெதுமெதுவாக இறந்தது.ஆனால் மற்றத் தவளையோ எப்படியாவது இதற்குள் இருந்து தப்ப வேண்டுமென்று கைகால்களை உதைத்துக் கொண்டேயிருந்தது. தவளை உதைக்க உதைக்க பால் நன்றாகக் கடையப்பட்டு அதிலிருந்து வெண்ணெய் மிதக்கத் தொடங்கியது. தவளை அந்த வெண்ணெய்மேல் உட்கார்ந்து எம்பிக் குதித்து வெளியே வந்தது.நம்பிக்கை திடமாக இருந்தால் எதையும் சாதிக்கலாம் என்றார். ‘முதலில் நீங்கள் சுகமாவீர்களென்று நம்புங்கள். அடுத்ததாக உங்கள் டொக்ரரிடம் நம்பிக்கை வையுங்கள்’ என்றார். அவர் வார்த்தைகளை கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள் ராதிகா. டொக்ரரையும்,கடவுளையும் முழுதாக நம்பினாள்.

அதோடு தாரணியின் மகள் சந்தியா மனநல வைத்தியத்துறையில் படித்துக் கொண்டு இருந்ததால் அவ்வப்போது ராதிகாவ–ின் மனதுக்கு மருந்தாக இருந்தாள். ராதிகா தளர்வுற்றிருந்த போதெல்லாம் ராகுல் சந்தியாவுக்கு ஃபோன் பண்ணி விடுவான். அவளும் பக்கத்தில் வந்தமர்ந்து “சித்தி! அபிராமியின் கல்யாணத்தை எப்படி எல்லாம் நடத்தப் போறீங்க? அவள் லவ் பண்ணினால் செய்யவிடுவீங்களா? அல்லது தடுப்பீங்களா? என்று வருங்காலக் கற்பனையில் மூழ்க விடுவாள்.அது ராதிகாவுக்கு பிடித்திருந்ததுடன் தற்போதைய வேதனையின் வலியை அந்த நினைவுகள் மாற்ற வழி செய்தன. பிள்ளைகளைப்

பற்றிய கற்பனைகள் இனிமையாக இருந்தன. சந்தியா சொன்ன படி எண்ணங்களை ஒரு படமாக மீண்டும் மீண்டும் மனதில் பதியவைத்து ஆழ்மனதுக்கு அனுப்பிக் கொண்டிருந்தாள். ராதிகாவுக்குப் பிடித்த பாடல்கள் பற்றிக் கேட்டுவிட்டு அவற்றைத் தேடிப் பிடித்து ரேப் பண்ணி எடுத்து வந்தபோது ராதிகா அந்த அன்பில் அப்படியே நெகிழ்ந்து போனாள்.தாரணி சித்தி என்று ஒரு உறவைச் சொல்லி வைத்ததற்கு உண்மையாகவே ஒரு மகள் போலவே ஆயினாள் சந்தியா."அபிராமி வயிற்றிலிருந்தபோதும் பிறக்கும்போதும் எவ்வளவு கனவுகளைச் சுமந்தீர்களோ அதையெல்லாம் மீண்டும் நினைத்துப் பாருங்கோ. எங்கள் நினைவுகள்தான் வாழ்க்கையில் நடந்தேறுகின்றன. ஆனபடி யால் நல்ல எண்ணங்களை மட்டும் மனதில் படரவிடுங்கோ. மனத்தோட்டத்தில் எதை விதைக்கிறோமோ அது கிடைக்கும். அந்தச் சின்னப் பெண்ணின் மந்திர வார்த்தைகள் அவளுக்கு வேதவாக்காக இருந்து மனதில் ஆழமாகப் பதிந்தன. சந்தியா பன்னிரெண்டாம் வகுப்புவரை தமிழும் படித்தவள் ஆகையால் வெகு அழகாகத் தமிழில் புரிய வைத்தாள். அந்தச் சின்னப்பெண்ணின் புத்திக்கூர்மையும் நோயாளியின் குணங் களுக்கேற்ற மாதிரி பேசும் ஆற்றலும் ராதிகாவை வியக்க வைத்து சீக்கிரத்திலேயே குணமடைய முடிந்தது.

அபிராமிக்கு கல்யாணம் செய்து குழந்தை பிறக்குமட்டும் தான் அவளுடன் இருப்பேனென்றும் மகன் அகரன் படித்து முடித்து அவனுக்கு ஒரு கல்யாணம் செய்வதுவரை நினைக்கத் தொடங்கினாள். சிகிச்சை பயனளித்து மெதுமெதுவாக நோயிலிருந்து மீண்டெழுந்து வந்தாள். ராகுலின் அரவணைப் பும் தோழி தாரணியின் ஒத்துழைப்பும் தாரணியின் மகள் சந்தியாவின் மனநலக்குறிப்புகளும் ராதிகாவை நோயில் இருந்து மீட்க உதவின.வீட்டுக்கு வந்த பின்பும் தாரணி உடனிருந்து பார்த்துக்கொண்டாள். டொக்ரர் இனிப்பயப்படத் தேவையில்லை என்றும் சநதோஷமாக இருந்து வெகுசீக்கிரத்தில் பழைய நிலைக்கு வந்துவிட வேண்டும் என்றும் வாழ்த்தினார். நம்பிக்கை எதையும் சாதிக்க வல்லது என்பதை ராதிகா மட்டுமல்ல தாரணியும் புரிந்து கொண்டாள்.

தாரணி மூன்று பிள்ளைகளுடன் கணவனை இழந்து தனித்துப் போராடி வாழ்க்கையில் முன்னுக்கு வந்தவள்.பிள்ளைகளை நல்லபடியாக வளர்த்து மூத்த மகனுக்கு தாயகத்திலிருந்து தன் சொந்தக்காரப் பிள்ளையை திருமணம் செய்து வைத்தாள். ஆரம்பத்தில் நல்ல பிள்ளையாக இருந்த மருமகள் நாளடைவில் ஆடம்பரத்தில் மோகங் கொண்டதுடன் சுயநலமுள்ளவளாகவும் மாறிவிட்டாள். தாரணி மகன் வருத்தப்படுவானென்று எதையும் காட்டிக் கொள்வதில்லை.மற்ற பிள்ளைகளையும் அனுசரித்துப் போகுமாறு கூறுவாள்.தாரணியின் மகள் சுவிஸ் இளைஞனை லவ் பண்ணத் தொடங்கியிருந்தாள்.தாரணி தன் பிள்ளைகளின் விருப்பத்தை மதிப்பவள்.படிப்பு முடிய கல்யாணம் செய்ய முடிவெடுத்திருந்தார்கள். கடைசி மகன் பள்ளிப்படிப்பு படித்துக் கொண்டிருந்தான்.பிள்ளைகள் மூவரும் தாயில் அன்பும் அக்கறையும் கொண்டிருந்தார்கள். பிள்ளைகளை வளரத்துப் படிப்பிக்க வேண்டியது பெற்றோர் கடமை.அதற்குமேல் அவர்களிடம் எதையும் எதிர்பார்க்கக் கூடாது என்று கூறுவாள். ராதிகாவுக்கு தாரணிதான் ரோல்மொடல். தாரணி ராதிகாவுக்கு ஒரு அக்காவாய்,தாயாய்,தோழியாய்,ஏன் எல்லாமுமாய் இருந்தாள்.தாரணியின் பிள்ளைகள் வளர்ந்தவர்கள் ஆனதால் ராதிகா சிகிச்சை பெற்றபோது வீட்டோடு நின்று உதவிபுரிந்தாள். ராதிகாவும்,ராகுலனும் தாரணிக்கும், சந்தியாவுக்கும் பிரதிபல-னாக என்ன செய்யலாமென்று குழம்பினார்கள்.

அவள் மீண்டுவரும் காலத்தில் ஊஹானில் பிறந்து சீனாவையே முடக்கி ஆட்டம் போட்ட கொரோனா வைரஸ் மெல்ல மெல்ல அண்டை நாடுகள் எங்கும் தன் கொடிய கரத்தை நீட்டி ஆக்கிரமிக்கத் தொடங்கியது.ஆரம்பத்தில் சீனாவைக் கேலி செய்து வேடிக்கை பார்த்த வல்லரசுநாடுகள் உறைந்து போய் நின்றன.கண்ணுக்குத் தெரியாமல் விஸ்வரூபம் எடுத்து உலகையே வலம் வந்தது அந்த வைரஸ்.விழி பிதுங்கி நின்ற வல்லரசு நாடுகளெல்லாம் சீனாவைக் குற்றவாளியாக்கி புரட்டி எடுத்தன.மனிதனால் செய்ய முடியாதது எதுவுமேயில்லை என்ற மனிதனின் அகங்காரத்துக்கு விழுந்த அசுரஅடி. கடவுளால் மட்டுமே ஆக்கவும் அழிக்கவும் முடியுமென்று மனிதனுக்கு சாட்டையால் தலையிலடித்துச் சொன்ன செய்தியிது. அதனை

*விரட்டவோ, அழிக்கவோ வழிதெரியாமல் வல்லரசு நாடுகள் வெட்கித் தலைகுனிந்து நின்றன. ஒவ்வொருத்தர் தலையிலும் ஓங்கி அடித்து மரணத்தை ஞாபகப்படுத்தியது. கடவுள் என்று ஒருவர் இல்லவேயில்லை எல்லாவற்றுக்கும் அதிபர் மனிதனே என்று முழங்கிய மனிதருக்கு நீங்கள் வெறும் பூஜ்யம்தான். முன்னால் நிற்கும் எண் நான் தானென்று கடவுள் சத்தம் போடாமல் உணர்த்திய தருணம் இது.சத்தம் போடாமல் சரிந்த பங்குச்சந்தைகளும் சல்லியாய்ப்போன மில்லியன்களும், கொரோனோவைப் பார்த்து பயந்து மிரண்டு நின்றன. வாகனப் போக்குவரத்து குறைந்து வெறிச்சோடிய வீதிகள்,முடக்கப்பட்ட அலுவலகங்கள், அடைக்கப்பட்ட வியாபாரஸ்தாபனங்கள், சிறுவர்களின் கலகலவென்ற சிரிப்புச் சத்தம் கேட்காத பள்ளிகள், பூங்காக்கள்,பயம் கவிந்த மனித முகங்கள். எங்குமே மயான அமைதி. முகக் கவசத்துக்குள் தம்மை மறைத்துக்கொண்டு அங்கொன்றும் இங்கொன்றுமாக நடமாடும் முகமூடி மனிதர்கள். அன்ராரிக்கா தவிர்ந்த முழு உலகமுமே விசித்திர மயான அமைதியுடன் வீடுகளுக்குள் முடங்கிக் கிடந்தது. உலகம் இயங்குகிறதா என்றதே தெரியாமல் இயங்கிக் கொண்டிருந்தது. சுத்தம் முன்னிறுத்தப்பட்டு கடைகளில் வாங்கும் பொருட்கள் யாவுமே சோப்பால் கழுவி சுத்தமாக்கப்பட்டே வீட்டுக்குள் எடுக்கப்பட்டன. காலணிகள் வீட்டு வாசலிலே கழற்றப்பட்டன. ஒருவரையொருவர் அணைப்பது நிறுத்தப்பட்டு தமிழர் கலாச்சாரமான வணக்கம் சொல்லுதல் நடைமுறைப்படுத்தப் பட்டது. தமிழருக்கு அதிலொரு சின்னப் பெருமை.தமிழரின் குடிநீர் வகைகள், மஞ்சள் போன்றவை பிரசித்தமாயின.*

*வானவெளியில் பறந்து திரிந்த விமானங்கள் ஓய்வெடுக்க வானமண்டலம் சுத்திகரிக்கப்பட்டது. ஓசோன் ஓட்டைகள் அடைபட்டன.உலகம் மாசடைதல் குறையத் தொடங்கியது. மானிடரெல்லாம் வீடுகளுக்குள் முடங்க மிருகங்களும், பறவைகளும் பயமின்றி உலவித் திரிந்தன. உலகம் முழுவதும் லொக்டவுன் என்று முடங்க பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டாலும் இயற்கை தன்னைத் தானே புதுப்பித்துக் கொண்டது.கடல் தூய்மையனது. வீட்டுக்குள் முடக்கப்பட்ட மக்கள் பலர் மனக் குழப்பம்,மனத்தளர்ச்சி என்று ஒரு புது வலைக்குள் சிக்குண்டு*

*தவித்தார்கள். குடும்ப வன்முறைகளும்,என்ன செய்கிறோம் என்று உணராமல் பிள்ளைகளைக் கொலை செய்துவிட்டு தாம் தற்கொலை செய்வதும் தொடர்ந்தது.எல்லா இனத்தவரும் இப்படியொரு சிக்கல்களுக்குள் சிக்குண்டு தவித்தார்கள்.அதுவும் தமிழ் சமூகம் கூடியளவில் பாதிக்கப்பட்டது போலிருந்தது. ராதிகாவும் இதனைப்பற்றி தீவிரமாக ஆராய்ந்தாள்.தன் நோய் கொஞ்ச மாதங்கள் முந்தியதால் தான் மீண்டு விட்டதாகக் கடவுளுக்கு நன்றி தெரிவித்தாள்.தாரணியின் மகள் சந்தியாவிடம் அது பற்றி பல விடயங்களைக் கேட்டு அறிந்து கொண்டாள்.*

*சந்தியா சொன்னாள்" சித்தி! உடம்புரீதியான நோய்க்கு மருத்துவரைப் பார்த்து மருந்துகள் எடுக்கலாம். பசியும் வலியும் உடல்ரீதியானவை. வாழ்வைப்பற்றிய பயமும், இதற்குள்ளால் மீள முடியுமா என்ற சந்தேகமும் மேல் மனதில் தோன்றி மனதின் ஆழத்தில் பதியப்படுகிறது. அதோடு கணவனால் மனைவியோ, அன்றில் மனைவியால் கணவனாலோ வீசியெறியப் படும் வார்த்தைகளினாலும் வெகுவாகக் காயம் பட்டு பாதிக்கப்படுகிறார்கள். அந்த வார்த்தையின் தாக்கம் சொன்னவர்களுக்கு புரியாது. எல்லோரும் யோசிக்காதை என்றுதான் சொல்வார்களே தவிர அவர்கள் கவலைக்கு தீர்வு சொல்ல மாட்டார்கள். அதோடு பிரச்சனைகளை சமாளிக்க வழி சொல்வார்களே அன்றி அதை முற்றாகத் தீர்ப்பதற்கு சொல்லிக் கொடுக்க மாட்டார்கள்." என்றாள். தற்கொலை நினைவு சடுதியில் வந்து சடுதியில் மறைந்துவிடும் என்ற செய்தி தாரணிக்கும் ராகுலுக்கும் ஆச்சரியமாக இருந்தது. காதல் தோல்வியால் தற்கொலை செய்வதும், வேலை இழந்ததால் தற்கொலை செய்வதும் மனநோய்தான். அந்த நேரத்தில் அவர்கள் யாரிடமாவது மனம் விட்டுக் கதைக்க வேண்டுமென்றும் அல்லது அந்த எண்ணத்தை,அதற்கான காரணகரத்தாவைப் பேசியோ ஒரு தாளில் எழுதியோ அதைச் சுக்குநூறாகக் கிழித்தெறிவதும் ஒரு நல்ல முயற்சியென்று கூறினாள் சந்தியா. தொல்காப்பியர் சைக்கோலஜி பற்றி எழுதியிருப்பதாக ராகுல் சொன்னவுடன் சந்தியா அந்நூல் எங்கு கிடைக்குமென்று ஆவலாகக் கேட்டாள். '16ம் நூற்றாண்டில்தான் இங்கெல்லாம் சைக்கோலஜி பற்றித் தெரிந்து கொண்டார்கள்.நீங்கள்*

*சொல்வதைப் பார்த்தால் தமிழர் எப்போதோ தெரிந்து வைத்திருக்கிறார்களே' சந்தியாவின் ஆச்சரியம் நியாய மானதாகவே இருந்தது.*

*தற்கொலைகளுக்கு முக்கிய காரணம் சின்னச் சறுக்கல் களைப் பெரிய வீழ்ச்சியாக நினைப்பது, ஒருவரையொருவர் புரிந்துகொள்ள நேரம் ஒதுக்காதது, ஒருவரின் கவலையையோ, பிரச்சனையையோ மற்றவர்கள் காது கொடுத்துக் கேட்காதது பெரிய பிழை என்று அம்மா சொல்லுவா. எங்களை இரவில் எப்போதும் சாப்பிட்டபிறகு ஒருவரோடு ஒருத்தர் தங்கள் பிரச்சனைகளைச் சொல்லச் சொல்லுவா என்றாள் சந்தியா.'ஓம். அதொரு நல்ல பழக்கந்தான். உம்மடை அம்மா எனக்கும் சொல்லுவா கவலை என்பது நினைக்க நினைக்க கூடும். கவலையை நாங்கதான் எப்பவும் நினைத்து நினைத்து தண்ணீர் ஊற்றி வளர்த்துப் பயிர் ஆக்குகிறோம் என்று. அது முற்றிலும் உண்மை.ராதிகா கூறவும் ஆன்மீக அறிவு இப்போது இல்லாததும் ஒரு காரணம்.கடவுள் பார்த்துப்பார் என்ற நம்பிக்கை இபபோது யாருக்கு இருக்கிறது" என்றான் ராகுல்.' கஷ்டம் வரும் நேரத்தில் பற்றிக் கொள்ளத்தான் இந்த ஆன்மீகம் தேவைப்படும்.'என்றாள் ராதிகா.' கோயிலில் அர்ச்சனை செய்வதும், உண்டியலில் காசு போடுவதும் சரியென்கிறீர்களா சித்தி?' கேட்டாள் சந்தியா.' அதைச் சொல்லவில்லை. பிரார்த்தனைக்கு சக்தியிருக்கிறது. எங்களுக்காக நாங்கள் வருந்திப் பிரார்த்திப்பதை விட்டுக் காசு கொடுத்து யாரையோ செய்யச் சொல்வது சரியில்லையென்று தான் எனக்குத் தோன்றுகிறது' என்றாள் துன்பம் நேர்கையில் கடவுள் வழிபாடு கை கொடுக்கும் என்பது என் நம்பிக்கை. நீங்க சின்னப்பிள்ளைகள்.அறிவுபூர்வமாகவே எல்லாம் சிந்திப் பீர்கள், ஆனால் அறிவுக்கு அப்பாற்பட்ட ஒன்று இருப்பதை ஏற்றுக் கொண்டு வாழுங்கள். மூடநம்பிக்கையோடு கூடிய வழக்கங்களை பின்பற்றச் சொல்லவில்லை. முறையான ஆன்மீகத்தைக் கை விட்டிடாதேங்கோ.அடுத்த சந்ததிக்கு ஆன்மீக அறிவைக் கொண்டு செல்லப் போகிறவர்கள் நீங்கள் தான். தமிழர் பண்பாட்டுடன் கடவுள் நம்பிக்கையையும் கைவிட்டி டாமல் எடுத்துச் செல்லுங்கோ'கூறி முடித்தாள் ராதிகா.*

❑

# மூழ்கடிக்கப்படும் ஓடங்கள்

**சரோஜினி** *வேலையால் வந்தவுடன் மகன் ஆதித் வந்துவிட்டானா என்று பார்த்தாள். அவனைப்பற்றி இப்போதெல்லாம் சரோஜினிக்கு கவலையாக இருந்தது. கணவன் பார்த்திபன்"சும்மா நீர் ஓவராகக் கவலைப்படுகிறீர். இந்த வயதுப் பெடியன்கள் அதுவும் இந்த நாடுகளில் கொஞ்சம் அப்படியிப்படித்தான் இருப்பார்கள். கொஞ்சம் விட்டுப் பிடிக்க வேண்டும்" என்பான். சரோஜினியால் அப்படி இருக்க முடியவில்லை. பதினாறு வயது. படிப்பிலும் கொஞ்சம் குறைவாகவே இருந்தான்.அதுபற்றிக் கதைத்தால் சட்டென்று கோபப்படுகிறான். புரியாத பாடங்களைப் படிப்பதற்காக ரியூஷன் ஏற்படுத்தினால் மாஸ்ரர் சரியில்லை சரியாக விளங்கப்படுத்துகிறார் இல்லை என்று ஒவ்வொரு காரணம் சொல்லி நின்றுவிடுகிறான். கடந்த ஆண்டில் சரியான புள்ளிகள் எடுக்காததால் லேரே (வேலைக்கான படிப்பு) கிடைக்கவில்லை. இந்த ஆண்டும் அவன் எடுக்கும் முயற்சி குறைவாகவே இருக்கிறது. வீட்டில் தங்கும் நேரம் குறைந்து கொண்டே வருகிறது. கேட்டால் ஒவ்வொருநாளும் ஒவ்வொரு காரணம் சொல்கிறான். அவனது நடவடிக்கைகள் சந்தேகத்தை ஏற்படுத்துவதாகவே இருக்கிறது. பார்த்திபனுக்கு மகனில் உள்ள பாசம், குறையை ஏற்றுக்கொள்ளத் தடுக்கிறது. சரோஜினியும் பார்த்திபனும் ஒரே பிள்ளையென்று அதீத செல்லம் கொடுத்துவிட்டார்கள். கேட்பதெல்லாம் வாங்கிக் கொடுப்பதுதான் பிள்ளை வளர்ப்பின் முக்கிய விடயம் என்று நினைத்தார்கள். சிறுவயதில் தாங்கள் வறுமையால் பட்ட துன்பம் மகன் படக்கூடாது என்று நினைத்தார்களே ஒழிய பணத்தின் அருமையையோ அதை சம்பாதிக்க தாங்கள் படும் கஷ்டத்தையோ உணர்த்தத் தவறிவிட்டார்கள்.*

*சரோஜினி களைத்து வந்திருந்தாலும் ஏதும் குடிக்கிற மனநிலை இல்லாமல் தவித்தாள். ஆதித் பிறந்து ஒரு வயதிலேயே காப்பகத்தில் விட்டுவிட்டு வேலைக்குப் போனது இப்போது பெரிய தவறாகத் தெரிந்தது.அப்போது இருந்த சூழல் இருவர் பக்கங்களிலும் இருந்த பணத்தேவை எல்லாம் பிடித்துத் தள்ள ஆதித்துக்குக் குழந்தைக் காப்பகமே தாயானது. இப்போதுதான் அதன் தாக்கம் தெரிகிறது. டொய்ச்சே அவனுக்கு பரிச்சயமான மொழியாயிற்று. தமிழ்ப்பள்ளிக்கு அழைத்துச் செல்ல நேரமில்லையென்று தவிர்த்தது எவ்வளவு பெரிய பிழை என்று விளங்குகிறது. தமிழ் நண்பர்களில்லாமல் அல்பானிஷ் இத்தாலிய நண்பார்கள். சுவிஸ் பிள்ளைகள் நண்பார்களாகக் கிடைத்திருந்தாலும் பரவாயில்லை. கல்வியின் முக்கியத்துவம் தெரியாதவர்களுடன் பழகி பெற்றோரை தூக்கியெறிந்து பேசும் பழக்கம்.இதெல்லாம் எங்கே போய் முடியப்போகின்றதோ என்ற கவலை.ஆனால் அவனுக்கு விளங்கப்படுத்துவதற்கு சரோஜினிக்கோ பார்த்திபனுக்கோ டொய்ச் அவ்வளவு வராது. ஏதோ வேலையில் சமாளித்துக் கொண்டிருக்கிறார்கள். கேட்டதெல்லாம் வாங்கிக் கொடுத்து பணத்தின் அருமையே அவனுக்குத் தெரியவில்லை.பெற்றோரை வெறும் ஏரிஎம் மெஷினாகவே பார்க்கிறான். முன்பு பணம் தேவையென்றால் குழைவாகப் பேசியவன் இப்போது ஏன் எதற்கு என்று கேட்டால் முறைத்துப் பேசவோ கத்தவோ செய்கிறான். சில நேரங்களில் தன் கைப்பையில் பணம் குறைவதும் சரி மகன்தானே எடுத்தான் என்று பாரதுாரமாக எடுக்காததது இபபோது இந்தளவில் முடிந்திருக்கிறது. அறிவைப் பின்னுக்குத் தள்ளி பாசத்தை கண் மூடித்தனமாக வைத்ததன் விளைவை இப்போது அனுபவிக்கின்றனர்.*

*ஒழுங்காகப் பாடசாலை செல்லாததும் ஆடைகளில் கவனம் இல்லாமலிருப்பதும் உறைத்தது.அவனிடமிருந்து ஒருவிதமான விரும்பத்தகாத மணம் வருவதை ஒரு நாள் உணர்ந்தாள். அப்போது மகன் குடிக்கிறானோ என்று யோசித்தாலும் சிகரெட் பத்திறான் போல இருக்கிறது. இங்கு கன பிள்ளைகள் பத்தினந்*

*தானே என்று நினைத்தாள். அவளும் சரி பார்த்திபனும் சரி அவ்வளவாகப் படிக்காததால் அவனுடைய உண்மையான நிலையைப் புரிந்து கொள்ளவில்லை. நண்பர்களிடம் கேட்போமோ என்று பார்த்திபன் கேட்டதற்கு “எல்லாருக்கும் தெரிந்தால் வெட்கம். எங்கடை பிள்ளையை பழிப்பினம” என்று அறியாமையால் மகனைப் பற்றி அறியத் தவறிவிட்டார்கள். பயந்து பயந்து காலத்தைக் கடத்தினார்கள். நாட்கள் போகப் போக வேறு ஏதோ தப்பு இருப்பதாக நினைத்தாள். கேட்டவுடன் பணம் கொடுக்காவிட்டால் கத்துவதும் மேசையில் கையை பலமாகத் தட்டுவதும் கதிரையைக் காலால் எட்டி உதைவதும் சரோஜினிக்கு அவனைச் சமாளிப்பது கஷ்டமாக இருந்தது. ஒருநாள் காசு தரமாட்டேன் என்று தகப்பன் கூறியதற்கு தகப்பனை அடிப்பதற்கு கை ஓங்கிக் கொண்டு போனதைப் பார்த்து உறைந்து போனாள். அதீத செல்லம் எங்கேயோ கொண்டு போய்விட்டது தெரிந்தது. அவனை எப்படித் திருத்துவது எங்கே போவது எதுவும் புரியவில்லை. அவனில்லாத நேரத்தில் அவனது அறையைத் திறந்து பார்த்தபோது ஏதோ ஊசிகளும், மாத்திரைக் கவர்களும் இருந்தன வாசித்து விளங்கத் தெரியவில்லை.ஒன்றும் புரியவில்லை.அறை ஒரே குப்பையாக இருந்தது.அறையை சுத்தம் செய்ய தான் வரும்போது எல்லாம் “விடுங்கோ.நான் செய்கிறேன்” என்று கூறியதன் அர்த்தம் இப்போதுதான் புரிந்தது. குடிப்பழக்கம் என்றால் போத்தல்கள் இருக்குமே என்று யோசித்தாள். அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்து அழுதாள். அப்போது அங்கு வந்த பார்த்திபன் “என்ன!என்ன!” என்று பதட்டத்துடன் கேட்க அவள் பேச முடியாமல் என்னவென்று விளங்கேலை. ஏதோ பெரிய கெட்ட பழக்கம் இருக்கும் போலிருக்கிறது. அறை கிடந்த கோலம் அவனுக்கு கொஞ்சம் விளங்கியது. ‘இங்கை பானஃவ் ஸ்ராறேசில் கட்டு அடிச்சிட்டு இருப்பாங்கள். அதைப்போல இருக்கு.இப்ப என்ன செய்கிறது’விக்கித்துப் போய் கேட்டான் பார்த்திபன். தலையில் கைவைத்த படி இருவரும் அழுது தீர்த்தார்கள்” என்ன இப்ப செய்கிறது?” சரோஜினி தான் முதல் வாயைத் திறந்தாள்.*

யாரிடம் போவது ஒன்றும் புரியாமல் மற்றவர்களிடம் கேட்டால் தங்களைக் கேவலமாக நினைப்பார்கள் என்று நினைத்தார்களே தவிர செய்ய வேண்டியதைச் செய்ய தாமதித்தார்கள். அவர்களின் நல்ல காலம் வீதியில் முன்பு ஆதித்துக்கு தமிழ் படிப்பித்த ஆசிரியை பாமினியைக் கண்டாள் சரோஜினி. ஆதித்தைப் பற்றி விசாரித்த போது கடகடவென்று பிரச்சனையை கூறி அழுதுவிட்டாள். உடனேயே சரோஜினியுடன் வீட்டுக்கு வந்து முழு விபரங்களையும் திரட்டி என்ன செய்ய வேண்டுமென்பதை விளங்கப்படுத்தினார்.மொழி தெரியாதவர்களுக்கு உதவும் முகமாக இருக்கும் பணியகத்தைப் பற்றிச் சொன்ன போது அப்படி ஒன்று இருப்பதே அவர்களுக்குத் தெரியவில்லை.' இப்போ விளங்கிறதா?எங்கே பிழை விட்டீர்களென்று. பணம் ஒன்றே குறியாக ஓடியோடி உழைத்ததை விட எதுவுமே தெரியாமல் இருந்திருக்கிறீர்கள்.' என்றவர் அடுத்தநாள் அந்தப் பணியகத் துக்கு கூட்டிச் சென்றதுடன் அந்தப் பதவியில் இருக்கும் தமிழ்ப்பெண்ணிடம் எல்லாம் விபரமாகக் கூறி விடைபெற்றார். கணவன் மனைவி இருவருமாக அழுதழுது எல்லாவற்றையும் கூறியதுடன் கையோடு எடுத்துச் சென்ற சிரின்ஞ்சையும் காட்டினார்கள். பார்த்தவுடனேயே புரிந்து கொண்டார்.' இப்போது தான் நீங்க அவதானமாக இருக்கவேண்டும். எப்படியாவது உங்கள் ஹவுஸ் ஆர்ட்ஸிடம் (குடும்ப வைத்தியர்)கூட்டிபோக வேண்டும்.உங்கள் மகன் போதைப் பழக்கத்திற்கு அடிமையாகி இருக்கிறார்.அவரை அதற்குள்ளிருந்து மீட்பதென்றால் நீங்கள் முதலில் பொறுமையாக இருக்க வேண்டும்.'அவர்களின் குடும்ப வைத்தியருடன் தொலை பேசியில் தொடர்பு கொண்டு எல்லாவற்றையும் விளக்கினார். அடுத்து வந்த நாட்கள் விரைவாக நகர மகன் ஆதித் தற்போது போதைப்பழக்கங்களில் இருந்து மீளும் சிகிச்சை நிலையத்தில் சேர்க்கப்பட்டு உள்ளான். அல்ப்ஸ் மலையருகே அமைதியான இடத்தில் அமைந்திருந்த அந்த நிலையத்தில் பலதரப்பட்ட வயதினரும் சிகிச்சை எடுத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் வைத்தியரிடம் கூட்டிப்போக அவர்கள் பட்டபாடு கொஞ்சமில்லை. கெஞ்சியும், சரோஜினி தான் சாகப்போவதாக மிரட்டியும அவனை சம்மதிக்க

வைத்தார்கள். இப்போது பார்த்திபன்,சரோஜினிக்கு நம்பிக்கை துளிர் விட்டிருந்தது. மகன் தேறி இந்த சமூகத்திற்கு தீங்கு விளைவிக்காத ஒரு நல்லவனாக வாழ்ந்திடுவானென்று.

சரோஜினி இதேமாதிரி பழக்கத்துக்கு அடிமையாக இருந்த ஆதித்தின் நண்பனின் தாயிடம் பேசி அவனையும் அங்கு அனுப்ப உதவி செய்தார். அவனும் முடியாது என்று வீட்டைவிட்டோடி தேடித்திரிந்து அவனைக் கூட்டிவந்து பாமினி ரீச்சரும் வந்து எல்லோருமாக கட்டாயப்படுத்தி அங்கு கொண்டு போய் சேர்த்து விட்டார்கள். அந்தப் பெண் மங்களா இவர்களுக்கு நன்றி கூறியதுடன் இப்போது இருவரும் நண்பிகள் ஆனார்கள். மங்களா கூறினார் 'நான் தமிழ்பள்ளிக்கு அனுப்பியும் அவன் சைசே தமிழ் என்று சொல்லிச்சொல்லி போக மாட்டன் என்றிட்டான். அங்கு போயிருந்தால் என்றாலும் கொஞ்சம் விளக்கங்கள்,எங்கள் தமிழின் பெருமை அறிந்திருப்பான். எங்களுக்கும் அவர்களுக்கு விளங்கப்படுத்தி அனுப்புகிற கெட்டித்தனமில்லை. ஆக கத்துறது, பேசுகிறது, சொல்லுக்கேட்பது இல்லை என்று மற்றவர்களுக்குச் சொல்லிப் புலம்புறது, எல்லாமே எங்கடை கையை விட்டுப் போயிட்டுதுகள். என்ரை புருசன் ஒழுங்காயிருந்தால் ஏனிப்படி பிள்ளை போகுது. மனிசனே புகைக்கிறதும், குடியும், நெடுக வீட்டில் சண்டையும். மனிசனின் கோபத்தை சின்னனாயிருக்கும் அவனில்தான் காட்டுறது. எடுத்ததுக்கு எல்லாம் அவனைப் போட்டு அடிக்கிறது அப்பனைப்போல உருப்படாமல் வரப்போகிறாய் என்று எந்தநேரமும் பேசுறது. எல்லாத்துக்கும் நான்தான் பொறுப்பு' காலங்கடந்து அந்தத் தாய் உணர்ந்தார்.' இப்ப கூட தானும் இதற்கு காரணம் என்று நினைக்காமல் பிள்ளையை வளர்க்கத் தெரியாதென்று என்னைத் தான் பேசுறார். எப்ப புருசன் சரியில்லையோ அப்பவே விட்டுத் தொலைச்சிட்டு தனிய இருந்திருந்தால் ஒழுங்காய் வளர்த்திருக்கலாம்.இந்த நாடுகளில் எவ்வளவு வசதி. தனித்து பிள்ளை வளர்ப்பது ஒரு பிரச்சனையே இல்லை. எல்லாத்துக்கும் பயம், தைரியமில்லை. ஊரில் கட்டுப்பெட்டியாய் வளர்ந்து சரியாகப் படிக்காமல்' பெருமூச்சுவிட்டபடி கூறினார்.காலங்கடந்து உணர்கிறார்கள்.

ஆசிரியை பாமினி அடிக்கடி ஃபோனில் ஆதித்தைப்பற்றி விசாரித்து ஆறுதல் கூறுவது மட்டுமன்றி தரம் வாய்ந்த நல்ல அறிவுரைகளும் கூறினார்.அடிக்கடி வீட்டுக்கு வந்து நொந்த அவர்கள் உள்ளத்துக்கு மருந்தாக இருந்தார். அவரோடு பேசும்போதுதான் விளங்கியது குழந்தை வளர்ப்பு என்பது மிகப்பெரிய கலை என்பது.'மாயமானாகிய பணத்தை தேடி பெற்றோர் இரவுபகலென்று பாராது உடம்பு வலிக்க ஓடுவது தான் பிழை. பிள்ளைகளுக்கு பணத்தை விட அன்பு தான் தேவையென்பதை உணரத் தவறி விட்டீர்கள்.அவர்களோடு சிரித்துப் பேசி பெற்றோருக்கும் பிள்ளைக்குமிடையே ஒரு புரிந்துணர்வுடன் இருந்தால் எத்தனையோ பிரச்சனைகளைத் தவிர்த்திருக்கலாம்.ரீன்ஏஜ் பிரச்சனை என்று ஒன்று இருப்பதே பல பெற்றோருக்குத் தெரிவதில்லை.கடலில் சில பருவத்தில் மட்டுமே காற்றழுத்த தாழ்வுமண்டலம் உருவாகி புயல் வீசும். ஆனால் பருவவயது மாணவர்களிடம் பருவக்கோளாறு என்ற புயல் வீசும்போது பெற்றோர் புரிந்து கொள்ள வேண்டும். பெற்றோரும் இந்த வயதைக் கடந்து வந்தவர்கள் தானே. காலம் கொஞ்சம் வித்தியாசப்படலாம். ஆனால் உணர்வுகள் அப்படியே தானிருக்கிறது. அந்தக்காலத்தில் பெற்றோர் அது பற்றித் தெரிந்திருக்காவிட்டாலும் ஆரம்பத்திலேயே ஒழுக்கம், பண்பு, உண்மை பேசுதல் என்பவை பெற்றோரலும், ஆசிரியர்களாலும் ஊட்டப்பட்டிருந்தன. இதைப் புரிந்து கொள்ளத் தற்காலப் பெற்றோர் தவறுவதனாலேயே பிள்ளைகள் தடம் மாறுகிறார்கள்.இளம் பருவந்தான் எதையும் எளிமை யாகப் புகுத்தக் கூடிய பருவம். பத்து பதினொரு வயதில் ஒழுக்கம், பண்பு என்ற நல்லவற்றைப் புகுத்தி அத்திவாரம் போட்டு விட்டால் அதன்மேல் எத்தகைய கட்டிடத்தையும் அமைத்துக் கொள்ளலாம். தாயும் தந்தையும் நல்ல நண்பர்களாகப் பழக வேண்டிய தருணம் அதுதான். பணத்தால் சாதிக்க முடியாததை இந்தத் தோழமை சாதித்துவிடும். முடிந்தது முடிந்ததுதான். இனியென்றாலும் அவன் திருந்தி வரும்போது பழையனவற்றைப் பற்றிப் பேசுவதையோ,குத்திக் காட்டுவதையோ தவிர்த்து தோழமையுடன் பழக வேண்டும்.

அன்பும் ஆதரவும் மட்டுமே அவனைப் புதியவனாக்கும். புதுச்சூழல்தான் அவனைக் கடந்த காலத்தை மறக்கடிக்கச் செய்யும். நீங்கள் வீடு மாறுவதுகூட நல்லது. இப்பவே அதற்கான வேலைகளைச் செய்து மாறப் பாருங்கோ'.

'கடந்த மாதம் தாயகம் போயிருந்தேன். அங்கும் இந்தப் பழக்கம் பரவிப் பிள்ளைகள் சீரழிகிறார்கள். அதற்கு காரணம் இருக்கிறது. தமிழ் மக்களுக்கு காவலரண்களாக இருந்த வீர வேங்கைகள் இல்லாதது தான் அங்கு பிள்ளைகள் சீரழிவதற்கு காரணம். ஆனால் இங்கு சகல வசதிகளும் இருந்தும் பிள்ளைகள் கெட்டுப் போக விடலாமா?இந்தக் கலாச்சார சீரழிவு எங்கள் இனத்தைக் குழிதோண்டிப் புதைக்கிறது. ஒரு இனத்தை அழிக்க வேண்டும் என்றால் அவர்கள் பண்பாட்டைச் சீரழிக்க வேண்டுமென்று சொல்வார்கள். திட்டமிட்டுச்செய்கிறார்கள். அதற்கு எங்கள் இனத்தைச் சேர்ந்தவர்களே துணைபோவதுதான் வேதனையாக இருக்கிறது. அங்கு பொம்பிளைப் பிள்ளைகளும் சீரழிகிறார்கள். பாடசாலை மாணவிகள் கர்ப்பம் ஆவதும் போதைப் பழக்கத்திற்கு அடிமையாவதும் எங்கள் இனம் என்ன ஆகப்போகிறதென்று கவலையாக இருக்கிறது.'அடுத்த தலை முறையினரைப் பற்றிய அவரது கரிசனம், எதையும் எதிர்பார்க்காத அவருடைய நல்ல உள்ளத்தைக் காட்டுகிறது என்று பார்த்திபன் சொன்னார். அவருடன் கதைப்பதே மனதுக்கு பெரிய ஆறுதலாக இருக்கும். கொஞ்சநாள் அவரிடம் படித்தாலும் அவனின் எதிர்காலத்தில் அக்கறைப்பட்டு வந்து பேசியதற்கு பார்த்திபனும், சரோஜினியும் நன்றி தெரிவித்தார்கள். என்ன உதவி வேண்டும் என்றாலும் தன்னிடம் கேட்கும்படி கூறிவிட்டுச் சென்றார். ஆசிரியை வரும் நாட்களில் மங்களாவும் வந்து நின்று அறிவுரைகளைக் கேட்பது வழக்கம் ஆயிற்று. இருவருமே முன்பே பாமினி ரீச்சருடன் தொடர்பில் இல்லாமல் போனோமே என்று கவலைப்பட்டார்கள். ஆசிரியை போனபின்பும் அவர் கூறிய வார்த்தைகள் அவர்கள் மனதில் முட்டி மோதின.உலகிலேயே மிக சக்திவாய்ந்த ஆயுதம் அன்புதான். எப்படியாப்பட்ட ஆளையும் விழுத்திவிடும். அன்பைக் கருவியாக்கி எதையும் செய்விக்கலாம். இமோஷனல்

பிளெக்மெயில் அதாவது அழுதோ, வெருட்டியோ செய்வது. அது ஒரு தாயால் நிசசயம் முடியும். தான் அதிலிருந்து தவறியது சரோஜினிக்கு வெட்கமாக இருந்தது. சீ. இப்படிப்பட்ட நல்லவர்களுடன் நட்பாய் இல்லாமல் காசுக்குப்பின்னால் ஓடியதை நினைத்து வெட்கப்பட்டாள்.அடுத்த தடவை பாமினி ரீச்சர் சரோஜினி வீட்டுக்கு வரும்போது மங்களா தன் தங்கை மிதுளாவைக் கூட்டி வந்தாள். அவள் தாய்மையுற்று இருந்தாள். அவளைப் பார்த்ததும் பாமினி ரீச்சர் ஒரு குழந்தையை சுமக்கும் ஒரு தாய் எப்படி இருக்க வேண்டுமென்று ஒரு பெரிய லெக்சரே அடித்துவிட்டார்.' வயிற்றிலிருக்கும் குழந்தை தாயின் இதயத் துடிப்பை, எண்ணங்களை, உணர்ச்சிகளை, குரலை அந்த ஒன்பது மாதமும் உணர்ந்து இருக்கும்.வயிற்றிலிருக்கும் போதே அதன் தந்தை குழந்தையுடன் பேசினால் மட்டுமே வெளியே வந்த பின்பு தந்தையின் குரலைக் கேட்டு ஓ! கேட்ட குரல் இது என்று அடையாளம் காணும். அதை விட்டு கேட்டபோதெல்லாம் பணம் கொடுப்பதால் ஒரு தந்தையிடம் பாசம் வந்துவிடாது. இப்போதே இவற்றில் கவனம் எடுக்குமாறு கூறினார். அதோடு வயிற்றிலிருக்கும் போதே குழந்தை அறிவாற்றலைப் பெற முடியும். தாய் நிறைய நல்லவற்றைப் படித்து, நல்லதை சிந்தித்து இருக்க குழந்தை நல்லவனாகவோ நல்லவளாகவோ தான் வரும். அதில் எந்தச் சந்தேகமும் இல்லை. உங்கள் குழந்தை எப்படி வரவேண்டுமோ அதற்கு நீங்களே கருவிலிருக்கும் குழந்தையைத் தயார்படுத்துங்கள்.' கேட்ட இவர்களுக்கு இதுநாள் வரை இந்தச் சங்கதி தெரியாமல் இருந்துவிட்டோமே என்று இருந்தது. பிள்ளைகளின் தவறுகளுக்கெல்லாம் தாங்களே காரண கர்த்தாக்களாயிருந்தது உறைத்தது. மிதுளாவுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. நல்ல நேரத்தில் அவரது அறிமுகம் கிடைத்தது பற்றி.

மிதுளாவின் நண்பி ஒருத்தி படிப்பையும் குழப்பி ஒழுக்கத்தை மறந்து தகாத உறவுகளால் சீரழிந்து கொண்டிருக்கிறாள். போகும்போது கேட்டாள் 'அக்கா! பாமினி ரீச்சரிடம் அவள் சாதனாவைச் சேர்த்துவிடுவோமா? ரீச்சர் கதைத்து அவளைத் திருத்திவிடுவா என்று நம்பிக்கையாக இருக்கிறது' என்றாள்.'

ஓம் முதல் அவளின் அம்மவுடன் கதை. பிறகு அவைக்கு விருப்பமென்றால் சேர்த்து விடலாம். அந்தப் பிள்ளை குடிக்கிறதுமெல்லோ?' என்றாள்.' ஓ குடிமட்டுமில்லை. வேலைக்கும் போறதில்லை. தாய் தகப்பனுக்கு இவளால் பெரிய கரைச்சல், அவமானம். யார் என்றாலும பிள்ளை திருந்தினால் சரி என்றுதான் நினைப்பார்கள்.கேட்டுப் பார்ப்பம்.'ரீச்சர் சொல்றதால் திருந்திவிடுவாள் என்று நினைக்கிறாயா?' 'முயற்சி செய்வம்.திருந்தலாம்.அதற்கான இடத்தில் சேர்ந்து கௌன்சிலிங் மூலம் திருந்த நிறைய வாய்ப்பு இருக்கெல்லோ?' என்றாள் மிதுளா.

சாதனாவுடன் கதைத்து பாமினி ரீச்சர் அங்கு போனபோது அவர் விளங்கிக் கொண்டார் ஏன் சாதனா இப்படியாகினா ரென்று. படிப்பில் நல்ல கெட்டிக்காரி என்றும் சேர்க்கை சரியில்லாததால்தான் இப்படியாகி விட்டாளென்றும் கூறினார்கள். வீட்டில் ஒரு வேலையும் தாங்கள் செய்விப்ப தில்லை என்றும் வலு செல்லமாக வளர்த்தும் இப்படியாகி விட்டாள் என்றும் கூறினார்கள். ரீச்சருக்குப் புரிந்தது எங்கே அவர்கள் கோட்டை விட்டிருக்னிறார்களென்று. செல்லம் என்ற பெயரில் தாய் எதுவுமே செய்யவிடாமல் ரீ கப் கையில் வைத்திருந்தாலே மகளின் கை வலிக்க போகிறதென்று வாங்கும்போது அந்தப் பிள்ளையை எப்படி வளர்த்திருப்பார்கள் என்று ரீச்சருக்கு விளங்கியது. ரீச்சர் மனோதத்துவமும், கௌன்சிலிங்கும் தாயகத்தில் படித்ததினால் அவருக்கு எப்படி அவர்கள் பிரச்சனையைக் கையாள வேண்டுமென்பது புரிந்தது. சுவிசிலும் அந்தப் படிப்பு படித்தாலும் டொய்ச் மொழி தேர்ச்சி அப்படிப்புக்கு போதாமலிருந்ததால் அவரால் அத்துறையில் செல்ல முடியாமல் இருந்தது.' சிறுவயதிலிருந்தே எந்தப் பொறுப்பும் செய்யாத ஒரு குழந்தையால் வளர்ந்த பிறகு எப்படி பொறுப்பை ஏற்க முடியும். தன்னம்பிக்கை இன்மை,பயம் என்பது ஏற்படுவது சாத்தியமே. சிறு சிறு வேலைகள் செய்ய சிறுவர்களாக இருக்கும்போதே பயிற்றப்படுவதும் சின்னச் சின்ன பாராட்டுக்களும் மட்டுமே தன்னால் எதுவும் செய்ய முடியும்

*என்ற தன்னம்பிக்கையை தோற்றுவிக்கும் .இந்த ரீ கப்பைக் கூட அவளைக் கழுவ நீங்கள் அனுமதிக்காவிடில் அவளுக்கு தான் வேலைக்குப் போய் சம்பாதிக்க முடியும் என்ற நம்பிக்கை எப்படி வரும்?' என்று கேட்டார். சாதனா பெரியவர்களை மதிக்கும் குணமின்றி எடுத்தெறிந்து பேசுபவளாக இருந்தாள். தனக்கு எல்லாம் தெரியும் என்ற ஆணவத்துடன் கொஞ்சம் திமிராகவே நடந்தாள். பாமினிக்குப் புரிந்தது அவளைத் திருத்துவது இலகுவானது இல்லை என்று.'எதற்கு கஷ்டப்பட வேண்டும். அம்மா, அப்பாவை உழைத்து வைத்திருப்பது எல்லாம் எனக்குத்தானே.வீடும் இருக்கிறது. பிறகு எதுக்கு நானும் வேலைக்குப் போகவேணும்? வாழ்க்கையை அனுபவிக்க வேணும்' என்றாள். 'ஒழுக்கத்தை எப்படி சொல்லிக் கொடுக்கிற தென்று தெரியேலை'என்றார் தாய்.' ஒழுக்கம் சொல்லிக் கொடுக்கப்படுவதில்லை. நாங்கள் வாழ்ந்து காட்டுவதில்தான் இருக்கிறது.உடைகள் பார்ப்பவர் கண்ணை உறுத்தாமல் இருக்க வேண்டுமென்று சொல்லி வரவேண்டும். உலகம் எவ்வளவுதான் நாகரீகமடைந்தாலும் அன்பு, இரக்கம், ஒழுக்கம், உண்மை பேசுதல், மற்றவர்களை மதித்தல் என்ற பண்புகளுக்கு காலக்கெடு இல்லைத் தானே. மனிதர்களிடம் என்றென்றும் நிலைத்து இருக்க வேண்டியவைதானே' என்றார் ரீச்சர். தனிமையில் அவளுடன் பேசுவது தான் சரியாக இருக்குமென்று நினைத்த ரீச்சர் தன் வீட்டுக்கு வரும்படி அழைத்தார்.*

*அடுத்தடுத்த நாட்களில் ரீச்சர் வீட்டுக்கு வந்த சாதனாவிடம் மெல்லப் பேச்சை ஆரம்பித்தார். பொதுவான விடயங்களைப் பேசியபின்' திருமணம், குழந்தைகள் உமக்கு விருப்பமில்லையா?' கண்கள் கலங்க அந்த இருபத்திநான்கு வயதுக் குழந்தை உச் கொட்டினாள். 'எல்லாம் இருந்தது ஒரு காலம். காதலித்தேன். ஒரு வேலைக்குப் போகவேணுமென்று படித்தேன். ஒருநாள் ஒன்றுமே தேவையில்லை என்று போயிட்டுது.'' ஏன் எனக்கு சொல்லலாம் என்றால் சொல்லும்'ஆதரவுடன் அணைத்து கைகளைத் தன் கைக்குள் வைத்தபடி கேட்டார். அந்த அன்பில் அப்படியே கரைந்து அவர் மடியில் சரிந்து குமுறிக்குமுறி அழுதாள்.*

தலையைத் தடவியபடி அழுகை நிற்கும் வரை காத்திருந்தார். அவளே கண்ணீரைத் துடைத்தபடி ஆரம்பித்தாள். 'நான் ராகேஷைக் காதலித்தேன்.அவனும் என்னை விரும்பினான். பதினாலு வயதில் காதலிக்கத் தொடங்கி இருபது வயதில் அவன் சாதி குறைவென்று அப்பா வேண்டாமென்றிட்டார். எனக்கு இந்த சாதி எல்லாம் தெரியாது.எங்களை சொந்தக்காரர் சேர்க்க மாட்டினம் என்று என்னென்னவோ சொல்லி அவனையும் பேசி அவமானப்படுத்தி விட்டார்கள். பிறகு நான் போக அவன் 'வேண்டாம் நீ. எங்களைக் கேவலப்படுத்துவீங்க. உங்கடை சாதியும் நீங்களும் போங்கடி' என்று என்னை கழற்றிவிட்டான். அதோடு எனக்கு எல்லாமே வெறுத்துவிட்டது. அதற்குப் பிறகுதான் குடிக்கப் பழகினேன். ஆண்களோடு திரிவேன். அவ்வளவுதான். என்னை ஒருத்தன் சீப்பாக கழட்டிவிடும்போது எனக்கும் ஆட்கள் இருக்கினமென்று காட்டவேணும் போலிருந்தது. இப்படியே போகுது. அப்பா அம்மாவிடமும் வெறுப்பு வந்தது.''அவர்களை வெறுப்பேற்ற அவர்களுக்குப் பிடிக்காததை செய்கிறேன் என்று உம்முடைய வாழ்க்கையை அல்லவா பாழ்படுத்துகிறீர். இது உமக்கு விளங்குகிறதா?'ரீச்சர் கேட்டா. அதோடு ராகேஷ் உம்மை உண்மையாக விரும்பி யிருந்தால் இப்படி தூக்கியெறிந்திருப்பானா? உங்களுக்கு ஏற்பட்டிருந்தது வெறும் பாலினக்கவர்ச்சி. காதல் இல்லை. நீங்கள் இரண்டையும் குழப்புகிறீர்கள்.' எனக்கு விளங்கேலை. அது என்ன பாலினக்கவர்ச்சி 'எநசடநைடிவாநவை.அது வெறும் உடல்சார்ந்த ஒரு கவர்ச்சி. காதல் என்றது மனம் சார்ந்தது. அது ஒருகாலமும் மாறாது. மாற்றவும் முடியாது. ஆனபடியால் நீர் கவலைப்படாதேம். உண்மையான அன்புள்ளவர் ஒருவர் வருவார்'என்று விளக்கினார்.

தலையைத் தடவி விட்டுக் கொண்டே' சரி போனது போகட்டும். பிறகு அதுபற்றி யோசிப்பம். அடுத்த மாதம் நான் ஸ்ரீலங்கா போகிறேன். என்னோடு வாரும். அங்கு நிறைய வேலை களிருக்கு. எங்களைவிட துன்பப்படுகின்ற எவ்வளவோ பேர் இருக்கினம். எங்களால் முடிந்ததைச் செய்யலாம். என்னுடைய

மகளும், இன்னும் ஐந்து பிள்ளைகள் வருகிறார்கள். உமக்குத் துணையாக இருக்கும். உம்முடைய பெற்றோரிடம் அனுமதி வாங்கி என்னோடு வாரும்.' கூறியதுடன் 'புதுச்சூழல் பிள்ளைக்குத் தென்பைக் கொடுக்கும். என்னோடு அனுப்புங்கள்'என்று அனுமதியும் பெற்றார். சின்னச் சின்ன ஏமாற்றங்களைத் தாங்க முடியாமல் இளையவர்கள் எவ்வளவு துவண்டு போகிறார்கள் என்று கவலைப்பட்டார்.ஒரு காதல் தோல்வி அவர்களை எப்படி திசை மாற்றுகிறது? அதன்பின் சாதனா அடிக்கடி ரீச்சரிடம் வரத் தொடங்கினாள். இருவரும் நிறையப் பேசினார்கள். பிள்ளைகளின் பிரச்சனைகளை அணுகத் தெரியாமல் பெற்றோர் தவறிழைத்து விட்டு பிள்ளைகள் தவறிப் போகிறார்களென்று பிள்ளைகள் மீது குற்றம் சுமத்துவது எவ்வளவு கொடுமை.

ஶ்ரீலங்கா போகும்போதே அவர் மகள் ஜனனியும்,மற்றப் பிள்ளைகள் ஆதிரையும் அக்ஷயாவும், ஆதர்ஷயாவும், இந்துஷனும்,சாதனாவுடன் நண்பர்களாகி விட்டார்கள். சாதனாவுக்கு குடிக்காமல் கஷ்டமாக இருந்தது. விமானத்தில் குடித்தாள். பின் கொழும்பில் ஹொட்டலில் குடிக்கும்போது பாமினி ரீச்சர் சொன்னா.இனி நாங்கள் யாழ்ப்பாணம் போகப்போகிறோம். அங்கு குடிப்பது அவ்வளவு நல்லாயிருக்காது கொஞ்சம் கட்டுப்படுத்திக் கொள்ளும். ரீச்சருக்குத் தெரியும் ஒரேயடியாக வேண்டாமென்று சொன்னால் நிச்சயம் குடிப்பாள் என்று. ஆகவே சாதனாவின் போக்கிலேயே போய் திருத்த வேண்டும் என நினைத்தார்.முதலில் ஆறுதிருமுருகனால் குப்பிளானில் நடாத்தப்படும் ஞானாச்சிரமத்துக்கு போனார்கள். அங்கு இருந்த அமைதியும் சித்தர்கள் வழிபாட்டு முறையும் மனதுக்கு ஆறுதலைத் தந்தது. இந்துஷன், ஜனனி, ஆதிரை, அக்ஷயா, ஆதர்ஷயா எல்லோரும் நடப்பதைப் பார்த்து சாதனாவும் நடந்து கொண்டாள். ரீச்சர் ஆச்சரியப்பட்டார். சாதனாவைத் திருத்துவது பெரிய விஷயமேயில்லைப் போலிருந்தது. பெற்றோர் அவளைத் தவறாகக் கையாண்டதன் விளைவுதான் அவளது கெட்ட பழக்கங்களுக்கு காரணமானது. குடிப்பதைக் கொஞ்சம் மறந்தாலும் புகைப் பிடிப்பதை அவளால் கட்டுப்படுத்த முடியவில்லை.அங்கிருந்த பயிற்சியாளர்களிடம் பத்துநாள்

விட்டுவிட்டு இவர்கள் மனவளர்ச்சி குன்றியவர்களுடன் சில நாட்களை செலவிட்டார்கள். அத்துடன் விழிப்புலனற்ற வாழ்வகத்துக்கும் தாங்கள் கொண்டு சென்ற பிரெய்லி தட்டச்சுகளை ஒப்படைத்து மீண்டும் வந்து சாதனாவையும் அழைத்துக் கொண்டு கிளிநொச்சி பரந்தன், மன்னார், திருகோணமலை என்று அங்குள்ள புனர்வாழ்வுத் திட்டங்கள் பலவற்றில் பங்குபற்றினார்கள்.

போரினால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்க்கும்போதும், பாதிப்படைந்த குடும்பங்களுக்கு உதவும்போதும் சாதனாவுக்கு துயரத்தின் இன்னொரு பக்கம் தெரிந்தது.முதலில் உதட்டிலிருந்து புன்னகை வரலாமா வேண்டாமா என்று தயங்கியது. கணவனை இழந்த தனித்த தாய்மார் வலி சுமந்த மனதுடன் படும் கஷ்டங்களைப் பார்க்கும் போதும், ஜனனியும், ஆதிரை மற்றவர்களும் எந்தவித வேறுபாடுமின்றி அவர்களிடம் பேசி அவர்களின் தேவைகளை அறிந்தபோதும் தானும் அவர்களுடன் சேர்ந்து உரையாடத் தொடங்கினாள். இன்னொருவர் துன்பத்தில் பங்கெடுக்கும்போது தன் பிரச்சனைகள் எதுவுமேயில்லை என்பதைப் புரிந்து கொண்டாள். ஜனனியும், ஆதிரையும,அக்ஷயாவும் தங்கள் உழைப்பின் ஒரு பகுதியை இப்படி அறம் சார்ந்த வழியில் கொடுக்கும்போது தான் தன் காலத்தை வீணாக்கிவிட்டது உறைத்தது. ஆதர்ஷயா அக்ஷயாவின் தங்கை. ஸ்கூல் படிக்கும் சிறியவள். பாமினி ரீச்சர் பேசியதைவிட ஜனனி அக்ஷயாவைப் பார்த்தே சாதனா தன்னை மாற்றினாள்.சின்னப் பிள்ளையான ஆதர்ஷ்யா ஓடியோடி மற்றவர்களுக்கு உதவுவதைப் பார்த்தபோது தான் வாழ்ந்த வாழ்க்கையை நினைத்து வெட்கப்பட்டாள். ரீச்சரிடம் சொன்னாள் ‘அடுத்த வருடம் நீங்க வரும்போது நானும் வருகிறேன். போனவுடன் ஒரு வேலை எடுத்து அந்தப் பணத்தில் ஒரு பகுதியை இப்படியானவர்களுக்கு கொடுக்கப் போகிறேன். எனக்கு ஜனனி, அக்ஷயா என்று மற்றவர்களைப் பார்க்கும்போது பொறாமையாக இருக்கிறது. அவர்களுக்கு கிடைத்ததுபோல் எனக்கு பெற்றோர் அமையவில்லை’ என்றாள்.’அப்படிச் சொல்லாதேம்.அவர்களுக்கு அன்பு காட்டத்

*தெரிந்தஅளவுக்கு தவறும்போது வழி காட்டத் தெரியவில்லை. பரவாயில்லை. இன்னும் காலம் கடந்துவிடவில்லை. இப்போது புரிந்திருப்பீர். பொருட்களை வாங்கி வாங்கிச் சேர்ப்பதல்ல வாழ்க்கை.கொடுத்து மற்றவரை உயர்த்துவதுதான் ஆத்ம திருப்தி தரும் வாழ்க்கை. நீர் நல்ல பழக்கங்களுடன் வேலைக்குப் போய் சம்பாதியும். உமக்கான வாழ்வு உமக்கு கிடைக்கும்' என்று நம்பிக்கையூட்டினார்.*

*தங்கள் வயதொத்த பெண்பிள்ளைகள் பலர் திருமணமாகாமலே தாயாகி வாழ்வோடு போராடுவது கவலையாக இருந்தது.இவர்கள் ஐவருமாகச் சேர்ந்து சில பாடசாலை அதிபர்களுடன் உரையாடி அனுமதி பெற்றனர். பெண் பிள்ளைகள் எவ்வாறு தங்களை ஆண்களிடமிருந்து பாதுகாத்துக் கொள்வது என்பது பற்றி விளக்கினார்கள். தவறான நோக்கத்துடன் ஆண்கள் தங்களை அணுகும்போது எவ்வாறு நடந்து கொள்ளவேண்டுமென்பது முக்கிய விடயமாக கையாளப்பட்டது. வயது முதிந்தவர்கள் கூட பதின்ம வயதுப் பெண் குழந்தைகளைச் சீரழிப்பது அறுவருக்கும் கோபத்தை மூட்டியது. இந்துஷன் பெண்பிள்ளைகளை விடுத்து சிறுவர்களின் பக்கம் கவனம் செலுத்தினான். விழிப்புணர்வு ஒன்றுகூடல்கள் பல நிகழ்த்தினார்கள். மூழ்கடிக்கப்படும் ஓடங்களாக அங்கு தத்தளித்துக் கொண்டிருக்கும் சிறுவர், சிறுமிகளுக்கு இவர்கள் உதவிக் கரம் நீட்டுவது ரீச்சருக்கு பெருமையாகவே இருந்தது. பாலியல் வன்முறை அங்கே தலை விரித்து ஆடியது. உறவினர்களாலேயே கெடுக்கப்படுவதும் பல இடங்களில் தந்தையே தன் மகளை வல்லுறவு செய்வதும் அண்ணன் தங்கையிடம் தவறாக நடப்பதும் மிகவும் கொடுமையாக இருந்தது. ஒரு கீழ்த்தரமான ஒரு சமுதாயம் அங்கு உருவாகிக் கொண்டிருப்பது தெரிந்து வாளா இருப்பது ஒரு சமூக அநீதி என்று கொந்தளித்தார்கள்.*

*பல பாடசாலைகளில் அவர்களுக்கு நல்ல வரவேற்பு இருந்ததால் அங்கு நின்ற ஒரு மாதமும் சிறுமிகளுக்கு விழிப்புணர்வைக் கொண்டு வருவதற்காகப் பெற்றோர்களையும் அழைத்து விளக்கினார்கள்.ஆபாசப் படங்களைக் காட்டுதல், பிள்ளைகளை*

ஆபாசமாகப் படம் எடுத்தல் இவைகூட பாலியல் துஷ்பிரயோகம் தான் என்பதை அவர்களுக்கு விளக்க வேண்டியதாக இருந்தது. அந்தரங்கமான உறுப்புக்களைத் தொட யாரையும் அனுமதிக்கக் கூடாது என்றும் முறையற்ற அணைப்புகளுக்கு இடம் கொடுக்கக்கூடாதென்பதையும் ஜனனி விளக்கினாள். அங்கு சிறுமிகள் மட்டுமன்றி பெற்றோரும் அறியாமையில்தான் இருந்தார்கள். வீட்டில் அன்பு கிடைக்காத, அன்புக்கு ஏங்கும் சிறுமிகள், அமைதியான கீழ்ப்படியும் குணமுடையவர்கள் தான் இலகுவில் இதற்குள் மாட்டுப்படுகிறார்கள் என்பதைப் புரிய வைத்தார்கள். குடிக்கும் கணவர்களிடமிருந்து தங்கள் சிறுமிகளைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு தாய்மாருக்கு உள்ளது என்பதை ரீச்சர் வலியுறுத்தினார். ஒரு வளர்ந்தவரிடம் ஒருநாளும் பிள்ளைகளை விட்டுச்செல்ல வேண்டாம் என்பதையும் ஒரு ஆணையும் நம்பக் கூடாதென்பதையும் கொஞ்சம் கடுமையாகவே சொன்னார். யாரும் பரிசுப்பொருள் கொடுத்தாலோ, கிட்டஅழைத்து பேசினாலோ கவனமாக இருக்க வேண்டுமென்பதையும் சொல்லிக் கொடுத்தார். அத்துடன் சிறுமிகளிடம் சொன்னார்கள் ‘உங்களுக்குத் தெரிந்த பிற சிறுமிகளுக்கும் தங்களைத் தற்காத்துக் கொள்வது எப்படியென்று சொல்லிக் கொடுங்கள்’ என்று. பெரியவர்களை விட இந்த இளையவர்களால் அவர்களைத் தம் பக்கம் இழுக்க முடிந்தது.

பாமினி ரீச்சர் பெற்றோரிடம் பேசும்போது பெண்பிள்ளைகளை ஒவ்வொரு விஷயத்திலும் கவனித்து வளர்க்க வேண்டியது தாய்மாரின் பொறுப்பு என்றும் தாத்தா, மாமா, சித்தப்பா என்று எந்த ஆணும் உங்கள் பிள்ளைகளை நெருங்காமல் காக்க வேணும் என்பதையும் கூறினார். பிள்ளைகளுடன் ஒரு தோழமையை வைத்திருந்தால் மட்டுமே இப்படியான பிரச்சனைகள் தமக்கு ஏற்பட்டால் சொல்லுவார்கள் என்றும் அப்படியேதும் கூறினால் கலவரப்படாமல் முழுவதையும் கேட்டு கோபப்படாமல் எப்படித் தங்களை காப்பதென்று சொல்ல வேண்டுமென்பதையும் கூறினார். பாலியல் சேஷ்டை செய்யும்

ஆண்கள் இது ஒரு விஷயமில்லை.இதொரு விளையாட்டு. வீட்டில் சொல்ல வேண்டாமென்றுதான் சொல்வார்கள். தாய் அன்பாயிருந்தால் மகள் உடனேயே அதைத் தாயி- டம் சொல்லிவிடுவதால் விழிப்படைந்து காப்பாற்ற முடியும். அல்லது விஷயம் முற்றியபிறகே தெரிந்துகொள்வதால் பிள்ளைகளைக் காப்பாற்ற முடியாமல் போய்விடும் என்பதை வலியுறுத்தினார்.இப்படியேதும் நடந்து பிள்ளைகள் சொல்லப் பயந்து மறைத்தால் எப்படி அதைக் கண்டுபிடிப்பதென்று ஒரு தாய் கேட்டார்.படிப்பில் குறைபாடு,உற்சாகக்குறைவு,அடிக்கடி கோபப்படுதல்,மன அழுத்தம்,தனிமையை நாடுதல் போன்றவை ஏற்பட்டால் அவர்களிடம அன்பாகப் பொறுமையாக பேசி அறிந்து கொள்ளலாமென்று கூறினார்.அவற்றைக் கண்டு கொள்ளாமல் விடுவது பின்னர் அவர்கள் மணவாழ்க்கையைக் கூடப் பாதிக்கும் என்பதையும் விளக்கினார். இந்தப் பயனுள்ள அறிவுரைகளுக்காக பெற்றோரும், ஆசிரியர்களும் மிகுந்த நன்றி பாராட்டினார்கள்.

இவர்கள் அங்கு சென்ற பின் லண்டனிலிருந்து இந்துஷனின் நண்பன் அமர்,பரிசில் இருந்து சுடர் வந்து சேர்ந்தார்கள். அவர்கள் வந்தது இந்துஷனுக்கு தெம்பாக இருந்தது. அல்லது பெண்பிள்ளைகளுடன் தான் ஒருவன் ஆணாக இருந்தது சங்கடமாக இருந்தது.சிறுவர்களை இந்த ஃ போன் சாத்தான்களிடம் இருந்து காப்பாற்ற சுடரும்,இந்துஷ னும்,அமரும் போராடினார்கள்.அது இலகுவானதாகத் தெரியவில்லை.ஃபோன் மூலமே ஆபாசப்படங்கள்,இன்னும் கலாச்சார சீர்கேடுகள் பரவுவதை நேரடியாகக் கண்டனர்.சில தாய்மாரே கடன் வாங்கியென்றாலும் பிள்ளைகளுக்கு இந்த ஃபோன் சாத்தான்களையும்,மோட்டார் சைக்கிள்களையும் வாங்கிக் கொடுப்பதைக் காண முடிந்தது.தொடர்பாடலுக்கு மட்டுமே பயன் படுத்தாமல் இந்த ஐஃபோன் வலைக்குள் எல்லோருமே விழுந்து கிடப்பது புரிந்தது.வெளிநாடுகளில் என்னென்னவோ வேலைகளெல்லாம் செய்து அனுப்பும் பணமும் இவ்வாறு அள்ளி வீசப்படுவது வேதனையை

*அளித்தது. அவர்கள் மனம் தளர்ந்த போதெல்லாம் 'இதெல்லாம சீக்கிரத்தில் மாற்ற முடியாது. அவர்கள் அறியாமைக்குள் மூழ்கிப் போயிருக்கிறார்கள். பெற்றோருக்கும் அறிவாற்றல் குறைவாக–வே இருப்பதால் அடுத்தடுத்த வருடங்களில் இதன் வெற்றியைக் காணலாம் என்று ரீச்சரும்,சுடரும் உற்சாகமூட்டினார்கள். அந்த ஏழு பிள்ளைகளினதும் முயற்சியும் தொண்டாற்றும் தி–றனும் அடுத்த தலைமுறை சாதித்துவிடுமென்ற நம்பிக்கையை பாமினி ரீச்சருக்கும் சுடருக்கும் ஏற்படுத்தியது. சுடர் போராட்ட காலத்தில் எவ்வளவோ பொதுத் தொண்டுகள் செய்தவர்.நச்சுக் குண்டுகளால் நசுக்குண்ட முள்ளிவாய்க்காலில் கடைசி வரை நின்றவர். கருகிப் போன உடல்களையும், மொட்டு விரியுமுன்னே கிள்ளியெறியப்பட்டகுருத்துக்களின் அவலங்களையும், யுத்தத்தின் கோர முகம் முழுவதுமாயும் அணுஅணு–வாக அனுபவித்தவர். தாயக மண்ணுடன் ஆத்மார்ந்த தொடர்பில் இருப்பவர். அவரால் இளையவர்களுக்கு சர–ியான தகவல்களையும்,செய்யவேண்டிய திட்டங்களையும் சொல்ல முடிந்தது. ஓரிடத்திலிருந்து ஒரு இடத்துக்குப் பயணம் செல்கையில் விண்வெளியிலிருந்து பறந்து வந்து வீசப்பட்ட அக்கினிக்குண்டுகள் பற்றியும், செஞ்சோலையில் குண்டுகள் வீசப்பட்டு கருகிப்போன குருத்துகள் பற்றியும் உல–கமே மௌனமாக வெறும் பார்வையாளர்களாக இருந்தது பற்றியும் நிறையக் கூறிக்கொண்டே இருப்பார். சோகமான நினைவுகளிலிருந்து அவர்களை மீட்பதற்காக தன் வாழ்வில் நடந்த சில நகைச்சுவை நிகழ்ச்சிகளையும் சொல்லுவார். தான் சிறுவனாக இருந்தபோது நெல் அறுவடை செய்து கொட்டியிருந்த நெற்குவியலில் தாங்கள் விளையாடும்போது தன் அண்ணாவின் காதுக்குள் நெல் போய்விட்ட தாகவும்,அம்மா அலறியடித்துக்கொண்டு வைத்தியசாலைக்கு ஓட தான் ஏன் தங்கச்சியைக் கூட்டப்போகவில்லையென்று கேட்க அவள் ஏன் போக வேண்டுமென்று மற்றவர்கள் கேட்கத் தான் தங்கச்சியின் காதுக்குள் நெல்லைப் போட்டதாகக் கூற தன்னைப் பெரியவர் ஒருவர் துரத்தித் துரத்தி அடித்ததாகவும் சொன்னார். எல்லோரும் சிரித்தார்கள். சாதனா கேட்டாள் 'அதெப்படி இன்னொருத்தர் உங்களை அடிக்கலாம்?' என்று.*

அந்தக்காலத்தில் தப்பு செய்தால் அந்த ஊரிலிருப்பவர் யாரென் றாலும் கண்டிப்பார்கள். அதுதான் நாங்கள் கெட்டுப்போகாமல் நல்லவர்களாக வளர்ந்தது'.சாதனாவுக்குப் புரிந்தது தன்னை யாரும் அப்படிக் கண்டிக்கவில்லையே என்று. தாயகம் கருகுவதையோ, உருகி உருகி அழிவதையோ புலம்பெயர் அடுத்த சந்ததியினர் பார்த்துக் கொண்டிருக்க மாட்டார்கள் என்பதை நிரூபித்துவிட்டீர்கள் என்று அவர்களை எல்லோருமே பாராட்டினார்கள். அடுத்த வருடம் இந்த எண்மருடன் இன்னும் பலர் சேவைக்கு வந்தால் எவ்வளவு பேரை மாற்றிவிடலாம் என்று எல்லோரும் கணக்குப் போட்டனர்.

ஆண்கள் பாடசாலைக்குச் சென்ற சுடர், அமர், மிதுலனும் அவர்கள் பெண்களை எவ்வாறு மதிக்க வேண்டுமென்பதையும், சிறுமிகளின் அறியாமையைத் தப்பாகப் பயன்படுத்தக் கூடாதென் பதையும் எடுத்துக் கூறினார்கள்.கல்வி ஒன்றே நம்மை உயர்த்தி விடும் என்பதை ஆணித்தரமாக எடுத்துரைத்தார்கள். போதைப் பொருளுக்கு அடிமையாகி வாழ்க்கையை இழக்காமல் அதற்கெதிராகப் போராடும் வல்லமையை வளர்த்துக் கொள்ளச் சொன்னார்கள். பெண்களிடம் மரியாதையாகப் பேசவும், பழகவும் வேண்டிய முறையைச் சொல்லிக் கொடுத்தார்கள். மரியாதை, அன்பு என்பவை கொடுத்து வாங்கப்படும் செயல் களென்பதை விளக்கினார்கள். அடுத்த தலைமுறை அறிவாளி களாக, பல சாதனைகள் புரிபவர்களாக வருவதற்கு அவர்களால் முடிந்தவரை பாடுபடவேண்டுமென்பதை அவர்கள் புத்தியில் உறைக்குமாறு சொன்னார்கள். பாடசாலை தவிர்ந்த ஓய்வுநேரங்களில் வீண் பொழுதுபோக்காமல் விவசாயத்தில் நாட்டங் கொள்ள ஊக்குவித்தார்கள். காய்கறித்தோட்டம், ஆடு அல்லது பசு வளர்த்தல் போன்ற ஆக்கபூர்வமான வேலைகளைச் செய்யுமாறும் அதற்கு வேண்டிய உதவிகளைத் தாங்கள் செய்வதாகவும் உறுதியளித்தார்கள். எல்லோரும் கேட்டார்கள் ஆனால் எவ்வளவு பேர் செயலில் இறங்குவார்களென்பது தெரியவில்லை.' ஒரேநாளில் எதுவும் நடைபெறவேண்டுமென்று நாங்கள் நினைக்க முடியாது. நடக்கும். அவர்களை செதுக்கலாம்'என்று சுடர் நம்பிக்கை கொடுத்தார்.

*மன்னாரிலிருக்கும் திருப்புமனை கத்தோலிக்க நிலையத்தில் சாதனா ஒரு வாரம் தங்கினாள். இன்னும் ஒரு மாதம் தங்கினால் பூரணமாக அவள் எல்லாக் கெட்ட பழக்கங்களினின்றும் விடுபட்டு விடுவாள் என்று நம்பிக்கை தெரிவித்தனர். பாமினி ரீச்சர் சாதனாவின் பெற்றோருடன் தொடர்பு கொண்டு அதற்கு அனுமதி வாங்கியதுடன் அவர்களில் ஒருவரை வருமாறும் அழைப்பு விடுத்தார்.அவர்களும் சாதனாவுடன் பேசியதில் தெரிந்த மாற்றத்தை உணர்ந்து தாயகம் வருவதாக வாக்குறுதி அளித்தனர்.*

*அவர்கள் எல்லோரும் விருப்பம் தெரிவித்ததால் வற்றாப்பளை அம்மன் ஆலயத்துக்கும்,நந்திக் கடலுக்கும் போய்வர நினைத்தார்கள்.போர்த்துக்கேயத் தளபதி நெவில் இக்கோயிலை அழிக்க முற்பட்டபோது பன்னிச்சை மரம் தன் காய்களை வீசி ஆலயத்தை அழிக்க விடாது காத்ததாக பன்னிச்சை ஆடிய பாடல் சிந்து கூறுகிறது.அம்மன் ஆலய தரிசனம் எல்லோருக்கும் மனநிறைவைத் தந்தது.அந்த ஆலயத்தில் கடல்நீரை எடுத்து விளக்கேற்றலாம் என்று கூறினார்கள்.அது இவர்களுக்கு ஆச்சரியத்தை அளித்தது.2009 இறுதி யுத்தத்தில் வெறும் ஊமை சாட்சியாக இருந்த நந்திக்கடலுக்குப் போக விரும்பினார்கள். சுடர் உணர்ச்சிக் கொந்தளிப்பில் மௌனமாக இறுகிப்போய் உட்கார்ந்திருந்தது ரீச்சருக்குப் புரிந்தது.*

*யுத்தநேரத்தில் உலகத்தால் அலட்சியப்படுத்தப்பட்டு நந்திக் கடல் அருகே அழுத அவலக் குரல்களெல்லாம் இப்போதும் கேட்பதுபோலிருந்தது. முல்லைத்தீவை சென்றடைந்ததும் சுடரின் மனம் வயற்காணிகள் விவசாயம் என்று செழிப்பாக இருந்த முந்தைய மண்ணை நினைத்து ஊமையாக அழுதது. இயற்கை எழில் கொஞ்சும் மரங்களும் பாலைமரச் சோலைகளும் நிறைந்து இயற்கையின் அத்தனை அற்புதங் களையும் தனதாக்கியிருந்த மண் இன்றிருக்கும் நிலை நெஞ்சைக் கசக்கியது. தென்னைகளும் பனைகளும் அசைந்தாடி யாவருக்கும் இன்பத்தையும், வீரத்தையும் ஊட்டிய மண்,*

பறவைகளின் இனிய கீதங்கள் கேட்ட மண். இன்று சகலத்தையும் இழந்து வெறுமையாய்.சுடர் கண்ணீரை மறைக்க முயன்றான். காவியநாயகர்களாய் போற்றப்பட வேண்டிய ஆயிரமாயிரம் வீரர்களெல்லாம் ஓரிரு நாட்களில் உருத்தெரியாமல் போன அவலம். நந்திக்கடல் ஆயிரமாயிரம் உயிரற்ற உடல்களைத் தன்னகத்தே அடக்கி நின்றதை மறந்து வெண்நுரைப்பூக்களை அள்ளியள்ளி கரையொதுக்கியது. கொட்டிவிட்ட நுரைப் பூக்களெல்லாம் அடுத்த நொடியே மறைந்தன. சுடர் தன்னிலை மறந்து அடக்கி வைத்திருந்த உணர்வுகள் எல்லாம் பீரிட்டுக் கொண்டுவர மண்ணில் விழுந்து நீரைக் கைகளில் துளாவி பெருங்குரலெடுத்துக் கதறினான். அவனருகில் சென்ற இந்துஷனையும், மற்றவர்களையும் ரீச்சர் தடுத்தார். அவர் சோகம் தீருமட்டும் அழட்டும். மாறாத துன்பத்துக்கு வடிகால் இந்தக் கண்ணீர் மட்டுந்தான். தானே ஓயுமட்டும் அவரைத் தொந்தரவு செய்ய வேண்டாமென்றார். அவரைப் பார்த்த மற்றவர்களும் மணலில் அமர்ந்து நந்திக்கடலில் சங்கமமான மக்களுக்காக அழுதார்கள். வல்லரசு நாடுகளின் வஞ்சகத்தால் ஆயிரக்கணக் கானவர்களின் இரத்தத்தையும், கண்ணீரையும் கலந்து தன்னுள் அடக்கிய நந்திக்கடல் இன்று எதுவுமே தெரியாததுபோல் சலனமின்றி ஓடிக் கொண்டிருந்தது.

யாழ்பாணத்தில் அவர்கள் சந்தித்த ஒரு பாட்டி எல்லோர் நினைவிலும் வலு ஆழமாக வேருன்றிவிட்டார். எல்லோரையும் நேசிக்கும் பண்பும், தன்னந்தனிய அந்தப் பெரிய வீட்டில் மகிழ்ச்சியாக வாழும் குணமும் எல்லோரையும் ஆச்சரியப்பட வைத்தது. வேதாத்ரி மகரிஷியின் வழியில் ஆன்மீக வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கிறார். மகரிஷியின் உடற்பயிற்சிகள் முதல் அவரது அருளுரைகள் என்று பாமினி ரீச்சருக்கு அவரிடம் மிகவும் பற்றுதல் உண்டானது. மனம் உருகாமல் ஒருவர் தியானம் செய்ய முடியாதென்றும் எல்லோரிடமும் அன்பு காட்டத் தெரியாத ஒருவரால் கடவுளை நேசிக்க முடியாது என்றும் அவர் கூறியது பாமினிரீச்சரின் மனதில்

*ஆணியடித்ததுபோல் பதிந்தது. உடற்பயிற்சி முடிவில் ஒவ்வொரு உடலுறுப்புகளுடனும் அமைதியாகப் பேசி தடவிக் கொடுப்பார்.' நான் வாழுங்காலம் வரைக்கும் என்னோடு நட்பாக இருந்து என்னோடு சுகமாக வாழ்வாய்' என்று வாழ்த்துவது பிள்ளைகளுக்கு வினோதமாக இருந்தது. ஆனால் பாமினி ரீச்சர் அதிலிருக்கும் உண்மையை உணர்ந்து தானும் அதுபோலவே செய்ய வேண்டுமென்று தீர்மானம் எடுத்தார். சுவிஸ், நோர்வே, டென்மார்க், கனடா என்று நான்கு நாடுகளிலும் இருந்து மாறிமாறிவரும் பிள்ளைகளுக்காக காத்திருப்பதாகச் சொன்னார்.அவரது பெரிய கவலை எல்லா நாட்டிலிருந்து வரும் பேரப்பிள்ளைகளும் ஒருத்தரோடு ஒருத்தர் பேச முடியாமல் ஏன் தன்னோடும் பேச முடியாமல் பிள்ளைகளை வளர்த்து இருப்பது பற்றித்தான்.அந்தந்த நாட்டு மொழிகளே பேசும் தன் பத்து பேரப்பிள்ளைகளுக்காக விதம்விதமாய் பலகாரங்கள் செய்து வைத்தாலும் அவற்றை அவர்கள் திரும்பியும் பார்க்காமல் வேறு உணவுகளுக்கு அலைவது அவருக்கு கவலையாக இருக்குமாம். இவர்களைப் பார்த்து 'நீங்கள் என்ன மாதிரி தமிழ் பேசுறீங்க. என்னுடைய பிள்ளைகள் தங்கள் பிள்ளைகளுக்குத் தாய் மொழியை ஊட்ட மறந்துவிட்டார்களே' என்று அங்கலாய்த்தார். போரில் இறந்த தன் ஒரு மகன் நினைவாகப் பல தர்மப் பணிகள் செய்துவருகிறார். அந்த மகனுடன் பேசிக்கொண்டே இருப்பார். பார்ப்பவர்களுக்கு உண்மையில் யாரோ அங்கு இருப்பதாகத் தோன்றும். தான் செய்தவற்றை 'என்ன எழிலன் நான் செய்தது சரிதானே.என்ன பிள்ளை நான் சொல்றன். பேசாமலிருக்கிறாய். என்று பக்கத்தில் இருக்கும் மகனுடன் பேசுவதுபோல் மானசீகமாக அந்த மகனுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார். மாலை போட்ட அந்த மகனின் படமோ அல்லது மகனில்லாத உணர்வு தரக்கூடிய எதுவுமே அந்த வீட்டில் இல்லை. எல்லாப் பிள்ளைகளின் படங்களும்போல் எழிலனின் படமும் மாட்டியிருந்தது. போரின் பெயரால் அந்தத் தாயிடமிருந்து மகனைப் பிரித்ததில் மரணம் தோல்வியே கண்டது.ஆச்சரியப்பட்ட ரீச்சர் எப்படி உங்களால் இது முடியுது? ஏனென்று கேட்டதற்கு*

*எளிமையான ஒரு பதில் கூறினார்.' என் மற்றப் பிள்ளைகள் ஒவ்வொரு நாட்டிலிருப்பதுபோல் இவனையும் நினைத்துக் கொள்வேன. அவ்வளவுதான். சுவாமி இராமகிருஷ்ணர் சொல்வது போல் இறப்பு என்பது இந்தச் சட்டையைக் கழற்றிவிட்டு இன்னொரு சட்டையுடன் அடுத்த வீட்டுக்குப் போவதுதான்.இதற்கு ஏன் கலங்குவான்?' அந்தத்தாய் மகனுடன் வாழ்ந்துகொண்டேயிருக்கிறார். எல்லோரையும்விட சாதனா அந்தப் பாட்டியுடன் மிகவும் ஒட்டிக் கொண்டாள்.' அடுத்தமுறை நான் வரும்போது உங்களுடன் நிற்கலாமா பாட்டி?' கேட்ட சாதனாவுக்கு 'நீயும் எனக்கு பேத்தி தான். தாராளமாக எவ்வளவு நாளென்றாலும் நிற்கலாம். எப்போதும் இந்தக் கதவுகள் உங்கள் எல்லோருக்கும் திறந்திருக்கும்'எல்லோரும் அவரிடம் விடை பெற்றார்கள்.*

*வேதனையின் வடுக்களை மட்டுமல்ல நல்ல நினைவுகளையும் தாங்கிய வண்ணம் மீண்டும் அடுத்தவருடம் வருவதாக வாக்களித்துவிட்டு எல்லோரும் விடைபெற்றார்கள்.' அடுத்த வருடம் நீங்கள் வரும்போது எங்கள் ஊர்கள் மாறி முன்னேற்றப் பாதையில் சென்றிருப்போம்' என்று பலர் வாக்குறுதியளித்தது மனதுக்கு நிறைவைத் தந்தது.*

❑



